www.padippakam.com

# அவா



எஸ்.பொன்னுத்துரை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

எஸ். பொ.

□

# அவா

□

இலக்கியத்தில்
சப்த
ஜாலங்கள் :

சுவடு
ஆகுதி
சில நேரங்களில் ...
ADIEU
சுழி
யானைக் கதை
அவா

□

மித்ரவின்
மூன்றாம்
வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

எஸ். பொ. வின்

# அவா

மித்ர வெளியீடு
375-10 ஆற்காடு சாலை
சென்னை 600 024 இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு: செப்ரெம்பர் 1993
மித்ர : 3
உரிமைப் பதிவு
விலை ரூ :

AVAH
A COLLECTION OF STORIES
in Tamil Language
by
S. PONNUTHURAI

First Edition:
15th September 1993

Publisher:
© MITHRA Publications
375-10, Arcot Road
Madras-600 024 INDIA

Printer:
Kokila Sree Printers
Madras-600 094

Price:

Cover Design by:
T. Sounther (United Kingdom)
and
Nick Williams (Australia)

Pages
24 + 280 = 304

Published by:
Dr. Pon. Anura

அமைப்பு: இளம்பிறை எம். ஏ. ரஹ்மான்

படிப்பகம்

www.padippakam.com



*Philippa McIntosh*

**In great appreciation of her dedicated service to refugees**

படிப்பகம்

www.padippakam.com



அகதிகள் மீது - ஓர்
அன்னை போல
அருள் பெய்து
அவள் இயற்றும்
சமூக சேவையைச்
சங்கை செய்யவும்.

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

சிந்தனையின் வேகங்களை நடைமுறைச் சிரமங்கள் சில தாமதப்படுத்தும் என்பது நிதர்சனமாகியுள்ளது. வேகம் மெதுவாகிய போதிலும், பணியின் நோக்கம் திசை திரும்பவில்லை என்பது ஆறுதல். நமது பிரசுரப் பணிகள் மந்தமடைந்த இடைக்காலத்தில், இலக்கிய உபாசகர்களுடைய இனிய தொடர்புகள் பல வாய்த்துள்ளதுடன், அவர்களுடைய ஆதரவுகள் கணிசமான அளவு பெருகியுள்ளதும் நமக்குத் திருப்தியைத் தருகின்றது. அவுஸ்ரேலியாவின் பிற மாநிலங்களிலே மட்டுமன்றி, கனடாவிலும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் நமது பிரசுர பணிகளை முன்னெடுத்துச் செல்ல உதவும் இலக்கிய ஆர்வலரின் எண்ணிக்கை பெருகியுள்ளது. தமிழ்நாட்டின் முதிய எழுத்தாளர்களுடைய ஆசிகளும் நமது பணியிலே சங்கமித்துள்ளது. இவற்றையும் இணைத்து, இனி வரும் ஆண்டுகளிலே, மித்ர வெளியீடு சர்வதேசிய ரீதியான தமிழ் இலக்கியப் பரிவர்த்தனைக்கு உருபு வாய்ந்த களமாக வளர்ச்சி பெறும் என்கிற நம்பிக்கை வலுப்பெறுதல் தமிழின் சுகுணமே.

நமது மூன்றாவது வெளியீடாக எஸ்.பொ வின் வித்தியாசமான சில கதைகளைத் தொகுத்து 'அவா' என்கிற மகுடத்தில் வெளியிடுகின்றோம் அவர் கதைக் கலையை அணுகிய பிறிதொரு பரிமாணத்தினை இக் கதைகள் வெளிப்படுத்தும். என் தந்தையின் எழுத்துகளுக்குத் தமிழ் இலக்கியச் சுவைஞர்கள் மத்தியிலே எப்பொழுதும் ஆதரவு உண்டு. எனவே, முதன் முதலிலே நூலுருப்பெறும் அவருடைய 'அவா' என்னும் இக்கதைக் கோவையையும் ஆதரித்து வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன்.

அன்புடன்

டாக்டர் பொன். அநுர

சிட்னி
அவுஸ்ரேலியா
15 - 09 - 1993

www.padippakam.com

# ESPO

*[The following are extracts from a paper which was presented by Ms. Philippa McIntosh on the 19th December 1992 at Macquarie University (Sydney, Australia), on the occasion of the launch of 'Vee' and 'Nanavidai Thoithal' at the 60th birthday celebration of Espo.]*

I am honoured to share this 60th birthday celebration of the life of Mr. Sanmugam Ponnuthurai, or ESPO, as he is more widely known.

Espo has expressed to me the firm conviction that writers should "defend freedom of expression at all costs," and he has certainly paid a price for this ... He is known for his novels, novellas, short stories, a narrative poem, dramas, essays, satire and literary criticism. In Sri Lanka, Nigeria and now in Australia, his gifts have brought pleasure to others.

He was described, early in his career, as "an author who is unique and stands pre-eminent in the Tamil World. As producer of plays he is superb." "He is accepted as the best Tamil creative writer both by Tamil literary connoisseurs in Ceylon and literary critics in India." The Head of Department of Tamil at the University of Ceylon called Espo "a leading writer and author whose contributions have earned him a permanent place in Modern Sri Lankan literature." The Chairman of Sri Lanka National Film Corporation called him "a man of many talents, a well-known writer in Tamil medium, a lecturer and public speaker."

In Nigeria, where he lived and taught during the 1980s, he was Secretary of the Tamil Cultural

படிப்பகம்

www.padippakam.com

Association, which sought to preserve a cultural identity among Tamils in Nigeria, Espo recognised an inevitable need of many displaced Eelam Tamils around the world for preserving their identity. This recognition led to the creation in 1991 of the "Akkini Kunchu", the International Cultural and Literary monthly of Displaced Eelam Tamils, behind which Espo was the driving force. He continues to be its chief literary Advisor. However, by its nature the magazine could not meet the need to preserve the tradition of the performing arts. Accepting this, Espo pioneered the formation of Sydney Performing Arts + Literary Academy, which is now raising awareness among young Tamils of their rich heritage.

Espo has carried with him, from Sri Lanka to Nigeria and to Australia, his vision of a cultural identity among Tamils which crosses borders and oceans to reach a world wide Tamil community.

This is a landmark occasion because it is the first time that a writer's two books, written in Tamil language, have been launched in Australia. It is an exciting development in Australian cultural life. A writer of great prominence has made his home here and the Tamil community here is enriched by this, as are we Australians who know him ......

Camperdown
NSW-2050
AUSTRALIA.

படிப்பகம்

www.padippakam.com

*Espo*

## 25 years ago

S. Ponnuthurai who has been in the forefront for nearly two decades, is perhaps the most controversial figure in the Ceylon Tamil literary field.

Born at Nallur on June 4th 1932, he had his early education at St. Patrick's and Parameshwara, Jaffna. Thereafter he proceeded to Madras University where he graduated, Since graduation he has served on the tutorial staff of leading educational institutions.

Writing has be n and is his first love. He has written short stories, novels, plays, poems and literary criticisms, some of which have appeared in reputed South Indian Journals. It is not merely the volume of his work which impresses one; his virtuosity sweeps one off one's feet. His output is so stimulating and provoking that is has left its impress on contemporary Ceylon Tamil writing. He is also an excellent speaker and fine debater.

Critics may be divided in their assessment of his work but they are all agreed that he is a stylist without peer. His fine command of the language is his greatest strength and, occasionally, his weakness.

It would not be untrue to say that his work has certainly earned him a permanent place in Ceylon Tamil letters.

A. J. CANAGARATNA
- 'ILAMPIRAI' - September 1968

படிப்பகம்

www.padippakam.com



# முன்னுரை

**ஈழத்து இலக்கிய உலகத்தில் ஒரு தனிச் சிறப்புடையவர் எஸ். பொன்னுத்துரை.**

எஸ். பொ. என்று அறியப்பட்டுள்ள அவர் தனது சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், விமர்சனங்கள், கட்டுரைகளால் தனக்கென சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறார். தனது இலக்கியக் கொள்கைகளினாலும், கண்டன விமர்சனங்களினாலும் 'பிரச்னைக்குரிய ஒரு எழுத்தாளர்' ஆகவும் எஸ்.பொ. கருதப்படுகிறார்.

இந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில், நண்பர் விஜயபாஸ்கரன் ஆரம்பித்து நடத்திய 'சரஸ்வதி' இலக்கிய இதழ் மூலம் தமிழகத்துக்கு அறிமுகமான ஈழத்து எழுத்தாளர்களில் எஸ். பொன்னுத்துரையும் ஒருவர் ஆவார்.

அந்தச் சமயம் அவர் வெளியிட்ட 'தீ' என்ற நாவல் பாலியல் உண்மைகளின் அடிப்படையில் எழுதப்பெற்ற படைப்பு ஆகும். அது மிகுந்த பாராட்டுதலுக்கும் கடுமையான விமர்சனத்துக்கும் இலக்காயிற்று. அது புதுமையானதும் புரட்சிகரமானதாகவும் மதிக்கப்பட்டது.

எஸ்.பொ, கரு, உத்தி, நடை, கற்பனை முதலியவைகளில் புதுமையும் புரட்சியும் கலந்து சிறுகதைகளும் குறுநாவல்களும் எழுதினார். கதைகளுக்குப் பெயர் வைப்பதிலும் அவர் புதுமையைக் கையாண்டார் — ஒரு எழுத்திலும், இரண்டு எழுத்துக்களிலும் சுருக்கமான பெயர்கள் சூட்டுபவர். தீ,வீ,தேர், கணை,மறு போன்றவை அவரது கதைகளின் தலைப்புகள்.

www.padippakam.com



'என் எழுத்துப்பணி போரே. இது தொற்றித் தேவையான தேடலும். எழுத்து ஊழியந்தான் என்ன? சௌந்தர்ய உபாசனையா? கலை ஆராதனையா? அழகுணர்ச்சி சலனங்களின் ஊற்று. பிரேமை என்கிற அன்பும் உணர்ச்சிகளின் அழகே. ஊற்றின் உதைப்பு ஆக்கம். கலை ஆக்க வெளிப்பாடே. கலா நிறைவு ஆனந்தம்; இன்பம். சத்திய எழுத்தின் சரஸ் விடுதலை வெறியே. வெறியின் அம்ஸம் ஆவேசம், அடக்குமுறை, அட்டூழியம், அக்கிரமம், அநியாயம், அதர்மம், அழிவு எனப் புழுத்துப்பெருகும். ஊழல்களைக் கண்டு ஆவேசம். அவற்றிலிருந்து மனிதம் விடுதலை சுகிக்க வேண்டும் என்கிற வெறி. சத்தியத்தினதும் தர்மத்தினதும் பரிபாலனம் விடுதலைக்கான உத்தரவாதம். இவையே மானுஷீகத்தின் ஆதாரம்' என்று எஸ். பொ. கூறுகிறார். ('மக்கத்துச் சால்வை'—எஸ். எல். எம். ஹனிபா சிறுகதைகள் 'முன்னீடு')

இந்த 'மானுஷீகத்தின் ஆதாரம்' எஸ். பொன்னுத்துரை கதைகளில் ஒலி செய்வதை அவருடைய கதைத் தொகுப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. 'அவா' என்ற இத்தொகுப்பில் உள்ள குறுநாவல்களிலும் சிறுகதைகளிலும் அது உயிர்ப்புடன் விளங்குகிறது.

வித்தியாசமானகதைக்கருக்களை, மாறுபட்ட முறையில்—தனக்கெனத் தான் தேர்ந்து கொண்ட தனி வழியில்—கலை நயத்துடன், மிடுக்கும் அழகும் சிந்தனைக்கனமும் பொதிந்த நடையில், தத்துவ உண்மைகளும் தர்க்க நியாயங்களும் நிறைந்த தன்மையோடு எஸ். பொ. கதைகளை படைத்திருக்கிறார்.

துறவு நிலையில் ஈடுபடுத்தப்பட்ட ஒருவன் காமக் கணிகை ஒருத்தியிடம் மையல் கொண்டு, அவளுடன் இன்பம் அனுபவிக்க ஏக்கம் கொண்டு அலைவதையும், அவன் புத்தர் பற்றி கற்பனை செய்வதையும், அவனுடைய

XI

உணர்ச்சிகளையும் அனுபவங்களையும், அவற்றின் விளைவாக அவன் துறவைத் துறந்து இல்வாழ்வில் ஈடுபட முனைந்ததையும் 'சுவடு' குறுநாவல் சுவையோடு கூறுகிறது. தனது திருமணத்துக்கு முன்னர், திருமண அழைப்பிதழை கையில் வைத்துக் கொண்டு, தனக்கு சிற்றின்ப ஞானம் கற்பித்த 'குருத்தினி'யை நினைவு கூர்ந்து அவன் தன் அனுபவங்களை அசைபோடும் விதத்தில் எஸ். பொ. இக் குறுநாவலை ஆக்கியிருக்கிறார்.

அதே போல, 'அவா' எனும் குறுநாவலும் அவாக்களிலே மிதந்து அல்லலுறும் ஆத்மாக்களின் அனுபவங்களை திறமையாக விவரிக்கிறது. ஆணவம் மிகுந்த ஒரு குரு, அவனது சீடனாகி. தத்துவ விசாரங்களில் சிக்கி சொந்த அவா தணியாமலே இறந்துபோன ஒரு சீடன். 'சிற்றின்ப விவகாரத்தில் ஒரேயொரு தடவையாவது சுகித்து, இன்புற்று, அனுபவிக்க விரும்பி' அமைதியின்றித் திரியும் அவன் ஆத்மா, குருவின் உள்ளுணர்வால் இயக்கப்பட்டு, கூடு விட்டுக் கூடு பாய்ந்து பெண்ணின்பம்பெற முயலும் அனுபவங்கள். ஆத்மாவின் துர் அவாக்கள் நிறைவேறாது போவதும், பின் நிகழ்வுகளும் இக் குறுநாவலில் புதுமையாகவும் புரட்சிகரமாகவும் பின்னப்பட்டிருக்கின்றன. அதீதமான கற்பனை. எனினும் தத்துவ விசாரம், தர்க்கங்கள், சிந்தனை ஓட்டம், வாழ்க்கை உண்மைகள் துளும்புகிற இப் படைப்பு எஸ்.பொ.வின் ஆற்றலுக்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

துறவு பூண்டு, அமைதியையும் ஆனந்தத்தையும் போற்றுவதாகப் பெருமைப்படும் மதவாதிகளின் உண்மைத் தன்மையை வெளிச்சப்படுத்தும் மற்றுமொரு கதை ஆகுதி. புத்த துறவியாகக் காட்டிக் கொண்டு, அதிகாரவெறி, ஆணவத் திமிர், கொலைபாதகங்களுக்கு அஞ்சாமை, சூழ்ச்சித் திறன் முதலியன கொண்டு மன்னர்களை ஆக்கியும் அழித்தும் தன் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயலும்

www.padippakam.com



ஒருவனின் செயல்களை சித்திரிக்கிறது 'ஆகுதி'. இலங்கை வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு எஸ். பொ. இக் குறுநாவலை திறமையாகப் படைத்திருக்கிறார்.

'விதிகளை அறிந்தவனே அவற்றை உடைக்கும் அதிகாரத்தைப் பெறுகிறான். விதிகளுக்கு இசைந் தொழுகுபவன் சாமான்யனாக வரலாற்றினால் மறக்கப் படுகின்றான். பொய்யைச் சொல்லி, அதுதான் உண்மை என்று பத்துச் சாட்சியங்களைச் சோடித்து, அதனை வாய்மையின் திருத்தவிசுக்கு ஏற்றும் வல்லபம், ஆட்சியாளனுக்குச் சுகமும் நயமுந்தரும் ஒன்றினைப் பொது நலத்தின் மகாதிருத்தொண்டு என்று நிறுவும் வித்தாரம், சாந்தி - சாந்தி என்று உதடுகள் சதா பாராயணஞ் செய்து கொண்டிருக்க ஆயிரம் கொலை களைச் செய்ய திட்டமிடும் திட்பம், மக்கள் சொல்லே மகேசன் ஆணை என்று சொல்லிக் கொண்டே மக்கள் அனைவரையும் பேசாமடந்தையாக வைத்திருக்கும் சாதுர் யம்—இவற்றைக் கலையாகப் பயிலக்கூடிய ஒருவன், ஆயிரத்துள் ஒருவனாய் ஆட்சியிலே சாதனைகளைச் சாதிப் பான்.' இப்படி மகாநாயக்க தேரர் என்ற பாத்திரத்தின் மூலம் 'யுகதர்ம'மாக போற்றப்படுகிற வாழ்க்கை உண்மையை எஸ்.பொ. விளக்குகிறார். இத்தகைய சிந்தனை வீச்சுக்கள் பொன்னுத்துரையின் கதைகளில் சுடர் தெறிப்பதை சகஜமாய் காணலாம்.

வரலாற்றின் கொடுமையான நிகழ்வுகள்— இனவாத அட்டூழியங்களின் விளைவுகள்—காரணமாக இலங்கைத் தமிழர்களில் மிகப் பலர் தாய் நாட்டை விட்டு வெளியேறி, உலகின் பல பகுதிகளிலும் வசிக்க நேர்ந்துள்ளது. அவர் களில் பலரது தற்காலப் போக்குகளை எண்ணி மனக்கசப் புடன் ஒரு பாத்திரம் பேசுவதாக எஸ்.பொ. ADIEU என்ற கதையை எழுதியிருக்கிறார்.

www.padippakam.com

XIII

'சிங்களவனோட அண்டலிக்க ஏலாது எண்டு சொல்லிக் கொண்டு தானே எங்களில் பல பேர் வெள்ளைக்காரர் நாடு களில் குடியேறி வாழ்றம்? ஆனால் அந்த எளிய தமிழன்கள் இப்ப தமிழை மறந்து, மண்ணை மறந்து, தங்கள் வேர் களை மறந்து, தங்களையும் தங்கள் சுய கௌரவங்களையும் இழந்து, எக்காலத்திலும் வெள்ளையராக முடியாத, புதிய பறங்கிக் கூட்டம் ஒன்றை உருவாக்கும் கிலிசகேட்டில் இறங்கியிருக்கிறம்...? என்று கூறும் ஒருவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்புகிறார். பயணம் கிளம்பும் முன், விமான தளத்தில், ஒரு நண்பனிடம் தன் அனுபவங்களையும் மனக்கசப்பையும் வெளியிடுவதாக இக்கதை அமைந் துள்ளது. இதில் அந்தப் பாத்திரத்தின் மனநிலை, விமான தளச் சூழ்நிலை முதலியன அருமையாக விவரிக்கப் பட்டுள்ளன.

கதைப் பொருளுக்கும், கதை மாந்தரின் தன்மை களுக்கும் ஏற்ப-கதைக்குக் கதை- வெவ்வேறு விதமான நடையை எடுத்தாள்வது எஸ்.பொ.வின் சிறப்புகளில் ஒன்று. இத்தொகுப்பில் உள்ள படைப்புகள் அனைத்திலும் இத்தன்மை அழகோடும் ஜீவனோடும் மிளிர்வதை உணர முடியும்.

ஒரு தமிழ் ஆசிரியரின் இயல்புகளையும் போக்கையும் சித்திரிக்க விரும்பிய எஸ்.பொ., அதன் ஆரம்ப கட்டம் போல் எழுதிய சிறு நடைச்சித்திரம் 'சுழி' என்ற பெயரில் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. தமிழ் ஆசிரியரின் செயல்களை விவரிக்கும் இப்பகுதி, ஒரே நீண்ட, முடிவற்ற வாக்கியமாக, ஐந்தரைப் பக்கங்களுக்கு வளர்ந்துள்ளது. இவ்விதமும் எஸ்.பொ. சொற்களை வைத்து விளையாடி மகிழ்வது உண்டு என்பதற்கு வேறு சான்றுகளும் அவரு டைய கதைத் தொகுப்புகளில் கிடைக்கும்.

www.padippakam.com

## XIV

இத்தொகுதியில் உள்ள 'யானைக் கதை' முற்றிலும் வித்தியாசமான ஒரு கற்பனை. அறிவு ஜீவிகள் என்று பெயர் பண்ணி வெளிச்சமிடுபவர்களையும் அரசியல் வாதிகளின் 'கோல்மால்'களையும் நையாண்டி பண்ணுகிற ஒரு ரசமான படைப்பு.

'சில நேரங்களில் சில தோழர்கள்' மாறுபட்ட ஒரு உத்தியில் வளர்க்கப்பட்டுள்ள கதை. அரசியலில் ஈடுபட்டு, பல்வேறு திறமைகளால் தங்களை வளர்த்து, வாழ்வில் முன்னேறுகிற சுயம்பிரகாசிகளின் உண்மைத்தன்மையை இது அம்பலப்படுத்துகிறது.

இவ்விதம், எஸ்.பொன்னுத்துரையின் பன்முக ஆற்றலை நிரூபிக்கும் படைப்புகள் 'அவா' எனும் தொகுதியை அணி செய்கின்றன. படித்துச் சுவைத்து—மீண்டும் மீண்டும் படித்து—இன்புறத் தகுந்த படைப்புகள். வளரும் தற்காலத் தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் நற்படைப்புகள் எஸ்.பொ.வின் எழுத்துக்கள். அவருக்கு என் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

—வல்லிக்கண்ணன்

10, வள்ளலார் பிளாட்ஸ்,
புதுத்தெரு, லாயிட்ஸ் ரோடு,
சென்னை-5

படிப்பகம்

www.padippakam.com

# ... மதம்

'அவா' என்னும் கதைத் தொகுதி. அதன் படைப்பாளி என்பது என் சம்பந்தம். படைப்பாளி என்று உரிமை பாராட்ட வசதி வாய்த்த இலக்கியவாதி.

இலக்கியவாதி என்பவன் தன் வல்லபத்தை அன்றேல் மேதைமையைப் பாலிக்கப் புறப்பட்ட புத்திஜீவி என்று காமம் செப்புவதில் எனக்கு ஒப்பில்லை. அவ்வாறு கூத்தாடுபவர்களுக்கு ஐயக்கோ! இலக்கியவாதியும் சாமான்ய மனிதனே. இந்தச் சாமான்யத்தின் உதைப்புத் தான் அவன் பலம். மானுஷீகம் மகா சாமான்யமானது; அதே சமயம் மகா அற்புதமானது! மனிதனிடம் இருள் திட்டு களாக சாத்தானும் வாழ்கின்றான்; ஒளிக்கீற்றுகளாக தெய்வீகமும் ஜொலிக்கின்றது. மானுஷீகத்தின் ஒளிக் கீற்றுகளைத் தரிசிக்க நடத்தும் இடைவிடாத தேடலும் இலக்கியவாதியின் பணியாகின்றது. சாத்தானின் சங்கார மும்; தெய்வீக ஆராதனையும்! இரண்டும் வேறல்ல. ஒரே தேடலின் இரு முகங்கள். ஒன்றின்றி, மற்றது சாத்திய மற்றது போலவும். ஆனால், மானுஷீகத்தின் ஒளித் தரிசனம் பிரதானம். தரிசனத்தின் சொரூபங்கள் தேடுப வனின் பக்குவத்தையும், ஈடுபாட்டினையும், உள்ளொளி யாய்ச் சுடரும் ஓர்மத்தையும் பொறுத்து, கோலவேறு பாடுகள் புனையும். மானுஷீகத்தின் சங்கைக்கு தர்மம்-சத்தியம் அகியவற்றின் பரிபாலனந் தேவை. எனவே,

படிப்பகம்

www.padippakam.com

XVI

மானுஷீகத்தின் தேடலிலே இவை இரண்டினதும் பரிபாலனம் பற்றிய அக்கறை கவிதல் வேண்டும். யதார்த்தம் சத்தியத்தின் ஈடு அல்ல. யதார்த்தம் புலனெறிகள் சம்பந்தமான அனுமானம். அனுமானங்கள் மாறும்; சத்தியம் மாறாது. இதனால், யதார்த்த இலக்கியவாதி திணிக்கும் தேடற் பாங்கத்தை நிராகரித்தவன். கலை உபாசனை சடங்காகிவிட்டது. சடங்குகளுக்கு சனாதனிகள் விதிகள் ஏற்படுத்தி விட்டார்கள். விதிகள் தர்மங்கள் அல்ல. தர்மம் விதிகளுக்கு மேலானது. இதனால், சனாதன இலக்கியவாதிகள் கற்பிக்கும் தேடல் முறைமைகளையும் நிராகரித்தவன். இந்த நிராகரிப்புகள் தேடலைக் கடினமாக்குவன. தேடலிலே கடினங்களைக் கண்டு சோர்பவன் விடுதலையின் சுகத்தை அநுபவிக்க ஒண்ணான். ஈற்றிலே மானுஷீகத்தின் தேடலும் விடுதலைச் சுகமும் ஒரே சந்நிதானத்திலே சங்கமமாகும்.

சத்தியத்துக்கு அதன் இயல்பே வடிவு. அதனை அழகுபடுத்தும் எத்தனம் அதர்மம். பொய்மைக்கு அல்லது போலிக்குத்தான் அலங்காரந் தேவை; மறைப்புகளும் ஜிகினா வேலைப்பாடுகளும் உதவும். உண்மை என்ற மாயத்தை ஏற்படுத்தும் ஜோடிப்புகள்! சத்தியத்தினை விசுவசிக்காத இலக்கியவாதி, தன் ஊழியத்தின் ஆன்மாவையே இழந்து விடுகிறான். ஆன்மாவை இழந்து விடும் இலக்கியவாதி போலிகளைச் சந்தைப்படுத்தும் வியாபாரியாகின்றான்; அன்றேல்அத்தகைய வியாபாரிகளுக்குத் துணைபோகும் தரகனாய் மாறுகின்றான்! ஊழியம் வேறு; வியாபாரம் வேறு. வியாபாரத்துக்கான நியதிகள் சத்தியத்திலே வேரூன்றுவன அல்ல. அந்த நியதிகளை லோகாயுத ஆதாயம் மட்டுமே நியாயப்படுத்தும். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பெரும் முதலீடுகளுடன் நடத்தப்படும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இலக்கியத்தினைச் சந்தைப் படுத்தும் சரக்காக மட்டுமே மதிக்கின்றன. அவை

www.padippakam.com

# XVII

வலியுறுத்தும் தர்மம் அற்ப வியாபார நியதியாகத் தாழ்ந்துவிட்டது. அவை நிர்ப்பந்திக்கும் தர்மத்துக்கு மசிந்துவிடுபவன் image building என்கிற Tacticsஸிடம் புகலிடந் தேடுகிறான். பெரும்பாலான கலைஞர்களும்-அரசியல்வாதிகளும் மானுஷீகத்தின் சேவையும் சேவிப்பும் என்பதை மறந்து, சுத்த சுயம்புவான வர்த்தகர்களாகி விட்டார்கள்! அவர்களுடைய ஆரவாரங்களை அபிநயித்து, இலக்கியவாதிகளும் image building என்கின்ற...இந்த அவலச் சிலுவைகளையும் சுமக்கும் ஆக்கினையும் மானுஷீகத்தின் தேடலிலே ஈடுபட்டுள்ள இலக்கியவாதிக்கு விடிந்துள்ளது. இருப்பினும், கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக என் தேடல் தொடர்கின்றது.

இன்று...கலைஞர்களின் ஆதர்சம் சினிமா. அரசியல்வாதிகளின் விமுக்தி பதவி. இந்த இரு சாராரும் நிகழ்கால நுகர்வோரின் எண்ணிக்கையைப் பெருக்கும் தந்திரத்தையே சத்தியமாகவும் தர்மமாகவும் இனங்காணுகிறார்கள். அவர்கள் நாடும் முக்தி உடனடிப் பணவசதிகளே. மானுஷீகம் தொடர்ச்சியான ஊற்று என்கிற பிரக்ஞை அவர்களுக்கு இல்லை. சரஸ் அவர்களுக்கு லீலைக்குகந்த கணிகையே! இம்மைக்கு அப்பாலான வாழ்க்கை பற்றிய உசாவலும் அவர்களுக்கு இல்லை. நாளைக்காக இன்றையை இழக்க விரும்பாத சந்தர்ப்பவாதிகள்! அஃது அவர்களுடைய பாடுகள். ஆனால், இலக்கியவாதி என்கிற முறையிலே எனக்கு மானுஷீகத்தின் அமரத்துவத்திலே நம்பிக்கை இருக்கிறது. அமரத்துவம் என்று வந்துவிட்டால். இம்மைக்கு அப்பாலான வாழ்க்கையிலும் நம்பிக்கை தேவை. (ஆத்மா—அதன் அழிவின்மை—பரமாத்மா என்று இந்து மதத்தத்துவ விசாரணைகளை இங்கு போட்டுக் குழப்பத் தேவையில்லை. நான் தர்க்கிப்பது இலக்கியவாதியின் மதம்.) மானுஷீகத்தின் அமரத்துவத்திலே நம்பிக்கை பாய்ச்சினாற்றான், மானு

www.padippakam.com



ஷீகத்தின் தேடலாய் அமையும் இலக்கியத்திற்கு நாளைய வாழ்க்கையும் உண்டு என்கிற நம்பிக்கை சாத்தியம். இந்த 'நாளை' சில ஆண்டு அப்பாலே பிறக்கப் போகும் 'நாளை'யை மட்டுமல்ல, பல நூற்றாண்டுகளுக்கு அப்பாலே பிறக்கப்போகும் 'நாளை'யையும் குறிக்கும். அந்த 'நாளைய' இலக்கியச் சுவைஞனின் மரியாதையையும் வென்றெடுக்கச் சிந்தை பூண்ட இலக்கியவாதி, இன்றைய இலக்கிய வணிகர்கள் நிர்ப்பந்திக்கும் அளவுகோல்களுக்கும், தர நிர்ணயங்களுக்கும் அடிபணியமாட்டான். அவ்வாறு அடி பணியாது, என் விடுதலையை என் வசமாக வைத்திருப்பது சுகமாகவும் இருக்கின்றது.

மானுஷீகத் தேடலின் கனிந்த அக்கறையே இலக்கியமாயினும், இலக்கியப் படைப்பும் அதுவும் ஒன்றல்ல. ஒன்றல்ல என்றாலும், தூல வேறுபாடுகள் கொண்ட இரண்டும் அல்ல. பூரண தெளிவுக்கு இது தொற்றிய துவைதத்தின் தத்துவக் கடைசல் உதவும். அதன் சாங்கோபாங்கமான அலசலுக்கு இந்த இடம் தோதல்ல. அவாக்கள் அறுக்கப்படாத நிலையில் மாயையே துவைத தரிசனம் என்பாரும் உளர். இன்றைய இலக்கியச் சுவைஞரின் மெச்சுதலை மட்டுமன்றி, நாளைய இலக்கியச் சுவைஞரின் மரியாதையையுஞ் சம்பாதித்தல் வேண்டும் என்கிற என் 'அவா'வைப் பேராசையென்று கருதினால், நான் பேராசைக்காரன் என்று ஒப்புதல் சாட்சியம் அளித்து விவகாரத்தினை முடித்துக் கொள்ளலாம்.

நான் எழுதியுள்ளதும் எழுதப்போவதுமாகிய ஆயிரமாயிரம் பக்கங்களிலே, ஒரேயொரு பக்கத்தினை என்றாலும், அன்றேல் ஓரிரு வாக்கியங்களை என்றாலும், அந்த வருங்கால இலக்கியச் சுவைஞன் 'இலக்கியம்' என்று ஏற்றுக் கொள்ளுவானாகில், இந்த இம்மையின் என் எழுத்து ஊழியம் பயனுள்ளதாக அமைந்தது என்கிற திருப்தி எனக்கு ஏற்படும். எஸ்.பொ. என்று நீங்களும் நானும் அறிந்துள்ள

படிப்பகம்

www.padippakam.com

# XIX

இந்தத் தூலம் அழிந்து விடும். உண்மை. ஆனாலும், 'எஸ்.பொ. எழுத்துக்கள்' என்னும் வீரியம் வாழும் பொழுது, நான் எப்படி அழிந்தவனாவேன்? இறப்புகளை அறுத்து வாழும் அமரத்துவத்தின் சூக்கும தரிசனம் சித்தித்ததா? எங்களுக்கு விளங்காத காரணத்தினால் சத்தியத்தின் நிலைப்பாடு இல்லையென்று ஆகிவிடுமா?

வினாக்கள் என்று வந்துவிட்டால், கிளை வினாக்களும் எழும், அநித்தியத்தை அறுத்துள்ள அந்த ஓரிரு வாக்கியங்களை அன்றேல் அந்த ஒரேயொரு பக்கத்தினை எழுதிவிட்டேனா? அன்றேல் எழுதிச் சாதிப்பேனா? இது முற்று முழுக்க என் வசத்துமில்லை. அவனுடைய இலக்கிய ரஸனை, தளம், ஞானம் ஆகியனவும் எனக்குத் தெரியாது. என்னுடைய இலக்கியத் தேடல்களையும், தெளிவுப்பக்குவங்களையும் கருத்திற் கொண்டா வள்ளுவனும், இளங்கோவும், கம்பனும், சங்க காலத்துச் செந்நாப் புலவர்களும் இலக்கிய ஊழியத்திலே வாழ்ந்தனர்? அவர்கள் அனைவரையும் என் உச்சி மீது சுமந்து, சுவைத்து இன்புறுகின்றேனே! இதனால் என்னுள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே! என்னைப் போன்றே, நாளைய இலக்கியச் சுவைஞனும் செப்பமான இலக்கிய ஆக்கங்களை வந்தனை செய்யும் பெற்றியனாய் வாழ்வான் என்பதில் மட்டும் எனக்குக் கிஞ்சித்தும் ஐமிச்சம் இல்லை.

பிறிதொன்று பற்றிய அறிவின் உதைப்பும். மானுஷீகத்தைத் தேடும் நான் ஒரு மனிதனும்! மனிதன் தரிக்கும் கூடு அல்லது யாக்கைதான் அவன் தூல வடிவம். அதனை கேசம்-நகம்-தந்தம்-தோல்-இரத்தம்-மாமிசம்—என்பு-நரம்பு-எச்சில்-பித்தம்-சலம்-மலம் என வரும் முப்பத்திரெண்டு அழுக்குப் பொருள்களால் ஆன கூடு என்று தரிசித்தால் என்ன, கலம்-கரு-முதலுரு—சலமின்சவ்வு-குறமசோன்ஸ்-DNA-RNA-GENES என்றெல்லாம் ஆய்வுக்கூட சமத்காரங்களினால் தரிசித்தாலென்ன, சித்த பரிசுத்தம் அன்றேல்

www.padippakam.com

# XX

ஆன்ம ஈடேற்றம் என்கிற விமுக்திச் சடங்குகளுக்குள் உட்பட வேண்டிய ஜீவதோரணை என்று நோக்கினாலென்ன, ஈற்றிலே 'காற்றடைத்த பையடா' என்றும், 'ஒரு பிடி சாம்பர்' என்றும் என் உறவுப் பயன்கள் தேறுதல் அடையும் 'நேற்றைய மனிதனாய்' அவர்களாலே சிலகாலம் பேசப்படும் ஒரு சாமான்யன்என்பதை மறந்தவனுமல்லன். இந்தச் சாமான்யனிலேதான் நாளைய சுவைஞனின் இன்பத்துக்கும் படைத்திடல் வேண்டும் என்கிற என் அவா—அஃது அவாவேயானாலும் அதனை என் படைப்பு ஓர்மம் என நான் சம்பாவனை செய்கின்றேன்—வேர் பாய்ச்சியுள்ளது என்பதை மெய்யாகவே உணர்வேன். இந்த அவா ஆகுமானது. நித்தியம் பற்றிய புதிய ஞானத்தையும் பரிமாணத்தையும் அது சமைக்க வல்லது. எழுத்து வல்லாளனுக்குத் தோதான மதத்தின் தோற்றுவாயும், இந்த மேலான சிந்தனைகள் மத்தியிலும் மாம்ஸ பலவீனங்கள் என்னை அலைக்கழிக்கின்றன; ஆக்கினைப் படுத்துகின்றன. இந்த அலைக்கழிவுகளும் ஆக்கினைகளும் என் திருஷ்டியையும் சிருஷ்டியையும் பாதிக்கின்றன. இந்தப் பலவீனங்களை மறைத்து, வேஷம் புனைந்து வாழ்வதன் மூலம் என் எழுந்து ஓர்மத்துக்கு ஓர் ஆழமோ, கனதியோ சேர்த்துவிட இயலாது, தன்னையே மறுதலிக்கும் ஒருவனால், மானுஷீகம் பற்றிய தேடலை நடத்துதல் சாத்தியமோ?

இந்த முரண்பாடுகளுக்கான ஒருகுறியீடுதான் 'அவா'. கதை வஸ்து அதீத கற்பனை சார்ந்ததாகத் தோன்றும். மனித அவாக்கள் யதார்த்தத்தினை எகிறியும் வளரலாம். சங்க காலப் புலவனின் அதிகற்பனைக்குச் சிக்காத பல புதுமைகளை இன்றைய விஞ்ஞானச் சித்தர்கள் சாத்தியமாக்கியுள்ளார்கள். மனிதப் படைப்பாற்றல் அதிவீச்சுடன் வளர்கின்றது. மனிதத்தின் அதீத ஆற்றலிலே கொண்டுள்ள நம்பிக்கையின் எதிர் நீச்சல் வீச்சாக அதீத கற்பிதங்கள் கோலங்காட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



என்னுள் வாழும் மனித அம்ஸங்களிலே தூக்கலானது சினம். 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு' என்பார்கள். 'புத்தி ஜீவி'யாக வேஷம் புனைவதிலும் பார்க்க, ஆத்திரக்காரனாய் வாழ்வது மேலானது. இடையிலே வள்ளுவர் புகுந்து, 'தன்னைக் காத்துக் கொள்பவன் சினத்தைக் காக்கக் கடவன்' என்று அறிவுரை கூறுவது பற்றியும் எனக்கு அக்கறை இல்லை. அடக்கு முறை, அட்டூழியம், அக்கிரமம், அநியாயம், அதர்மம் ஆகியவற்றைக் கண்டு ஆத்திரங் கொள்ளாமல், தன்னைத்தான் காத்துக் கொள்ள விழைபவனாலே, மானுஷீகத்தின் ஒப்பற்ற நேர்த்தியைத் தரிசித்தல் சாலாது. மானுஷீகத்தின் விடுதலைக்காகவும் சேவிப்புக்காகவும் தன்னைத்தான் அழித்துக் கொள்ள விடுதலை வெறியன் அஞ்சான். அந்த விடுதலை ஓர்மத்தை எழுத்து ஓர்மத்தின் இன்னொரு ஸ்திதியாகவே நான் இனங் காணுகின்றேன். இந்த ஆத்திரம் உணர்ச்சி பூர்வமானதாக மட்டுமே இருந்தாலும் தக்கதே. உணர்ச்சி அறிவுக்குச் சத்துராதியா என்கிற விசாரணையில் எனக்கு அக்கறை இல்லை. புத்தி ஜீவிகளாக வலம் வருவோர் அனைத்து அசத்தியங்களுக்கும் அதர்மங்களுக்கும் துணை போகும் அவலத்தினைப் பார்த்ததினாலும் இந்த அக்கறை அறுந்தது. உணர்ச்சிகளைக் காப்பதான 'பாவலா' மூலம், பதவிகளும் வசதிகளும் அதிகாரங்களும் குவித்த புகழை நத்தி வாழும் புத்திஜீவிகளுடைய நபுஞ்சகத் தனங்களைப் பார்க்கும் பொழுது, என் ஆத்திரங்கள் பன்மடங்கு அதிகரிப்பதும் என் சுபாவம். அந்த ஆத்திரத்தின்-ஆவேசத்தினைப் பூசிமெழுகி எழுத வேண்டும் என்று நான் சிரத்தை எடுத்ததும் இல்லை.

என் ஆத்திரங்களை இத்தொகுதியில் இடம் பெறும் கதைகளிலே இனங்காணுதல் சாத்தியமே. இதனால், என் எழுத்துப் பணியின் இன்னொரு முகத்தைத் தரிசிக்க இத்தொகுதி வாய்ப்பளிக்கும். இந்த ஆத்திரங்களின்

www.padippakam.com



மூல ஸ்தானங்களைப் பிரஸ்தாபிக்க எனக்கு ஆசையே. இருப்பினும்...

நதிமூலம் ரிஷி மூலம் பற்றிய உசாவல் தேவையற்ற புனிதங்கள் பற்றிய நினைவுகளே சுகம். இதை உன்னி, இந்தக் கதைகளை எழுதிய காலங்களிலே என்னென்ன கோபங்கள், ஆத்திரங்கள், சினங்கள், ஆவேசங்கள் எனக்கு என்னென்ன வகையிலே சலனங்களை ஏற்படுத்தின என்கிற வர்த்தமானத்தைத் தவிர்க்கின்றேன். நான் தவிர்த்துள்ள போதிலும், அவை சிதம்பர ரகசியமுமல்ல. பக்குவர் தரிசிப்பர். தான் ஒரு மகத்தான படைப்பாளி என்கிற அகங்காரத்தின் வசப்பட்டு, சுவைஞனின் கற்பனை வளத்தினையும், சுவை மேதைமையையும் ஓர் எழுத்தாளன் அவமதித்தல் அடாது. இலக்கிய வளத்துக்குச் சுவைஞனின் பங்களிப்பு உயிர்ப்பானது என்கிற உண்மையைச் சங்கை செய்து அவன் தோழமையை நாடுபவன் நான்.

இந்தக் கதைகள் எழுத்துருப் பெற்ற காலங்களில் பிரசவம் பார்த்த மருத்துவிச்சி போன்று எனக்கு உபகாரி யாய்த் திகழ்ந்தவர் இளம்பிறை எம். ஏ. ரஹ்மான். இவற்றின் பிறந்தமேனிக் கோலங்களைக் கண்டவரும் அவரே. இன்றும் எனது எழுத்து ஊழியத்திலே அவர் சகாவாக வாழுதல் ஓர் ஆறுதல். அவருடைய அயலுதவி யின்றி, அவுஸ்ரேலியாவில் என் எழுத்துப் பணிகளைத் தொடர்வதில் பல சிரமங்களை அநுபவிக்கின்றேன். இங்கு என் எழுத்துப்பணிகளுக்கு உதவியாய் இருக்கும் மாத்தளை சோமுவுக்கும், கோவிந்தராஜாவுக்கும், கவிஞர் சந்திரஹாஸ னுக்கும் என் நன்றிகள். 'ADIEU' கதையை உருவாக்குவதில் சந்திரஹாஸனின் உதவிகள் மறக்க ஒண்ணா. அந்த நன்றியின் சம்பாவனையாகவே அக்கதையில் அவரும் ஒரு பாத்திரமாகியுள்ளார்.

www.padippakam.com



இத்தொகுதிக்கு முன்னுரை வழங்கியுள்ள வல்லிக் கண்ணனுக்கு என் நன்றி. பல்வேறு பணிகள் மத்தியிலே, இத்தொகுதியிலுள்ள கதைகளுக்கு ஒரு சிறிய வழிகாட்டி போல தமது முன்னுரையை அமைத்துள்ளார். அவர் என்னைப் பற்றிக் குறிப்பிடும் பகுதிக்கு ஒரு திருத்தம் சேர்த்தல் என் கடமை. 'சரஸ்வதி' மூலம் தமிழ்நாட்டிலுள்ள வல்லிக்கண்ணன், சி.சு. செல்லப்பா, சிட்டி, சோ. சிவபாதசுந்தரம், சாலை இளந்திரையன் போன்றோருடைய அக்கறையை நான் கவர்ந்தேன் என்பது நிசம். இருப்பினும், அதற்கும் ஒரு தசாப்த காலத்துக்கு முன்னரே நாரண துரைக்கண்ணன் அவர்களுடைய ஆசியுடன் 'ஆனந்த போதினி' 'பிரசண்ட விகடன்' ஆகிய சஞ்சிகைகளிலும், அரு. ராமநாதனின் ஆதரவுடன் அவர் நடத்திய 'காதல்', 'ரஸிகன்' ஆகிய சஞ்சிகைகளிலும் என் கதைகள் பிரசுரமாயின. பின்னர், கி. வா. ஜ. வின் ஆதரவுடன் 'கலைமக'ளிலும் என் கதைகள் வெளிவந்தன. வரலாற்று நாணயத்தைப் பேணுவதற்காக மட்டுமே இவற்றை குறிக்க நேரிடுகின்றது.

அவுஸ்ரேலியாவில் எனக்கொரு இலக்கிய வாழ்க்கையும் பொசிந்திடல் வேண்டும் எனச் சிரத்தை ஊன்றும் பிலிப்பா மக்கின்ரோஸுக்கும் என் மகன் பொன் அநுரவுக்கும் என் நன்றிகள். இந்த நூலின் அமைப்புக்கு உதவிய ஓவியர்கள் ரி. சௌந்தர், நிக் வில்லியம்ஸ் ஆகியோருக்கும், மித்ர வெளியீடுக்கும் என் நன்றிகள்.

எஸ். பொன்னுத்துரை

Eastwood
Australia
15-09-93

www.padippakam.com



**கதைகள் 7**


| | | |
|---|---|---|
| 1. | சுவடு | —1 |
| 2. | ஆகுதி | —65 |
| 3. | சிலநேரங்களில் சில தோழர்கள் | —131 |
| 4. | ADIEU | —151 |
| 5. | சுழி | —191 |
| 6. | யானைக்கதை | —199 |
| 7. | அவா | —212 |


படிப்பகம்

www.padippakam.com

# சுவடு

## 1
## மிருதி

அந்தி நோக்கிப் பொழுது நகர...வெயிலின் காங்கை தணியும் வேளை, வெப்பமிழந்த மஞ்சள் கதிர்கள், பித்தளைக்குப் பொன்முலாமிடும் போலியிலே கலவும் பொலிவு. முற்றத்திலுள்ள மாமரத்தின் கிளைகள், கர்ப்பவதியின் எழிலுடன் பூவும் பிஞ்சும் வழிய, கணிகையின் நெஞ்சில் கிளர்ந்தெழும் காமத்தின் வேகத்தில் வீசி வரும் தென்றலின் ஆட்டத்திற்கு அபிநயம் பிடிக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

அக்காட்சியில் என் மனம் பசி கொண்டு மேய்கின்றது.

என் மனம் லாவண்யப் புல்லில் மேய,மேயச் சென்ற மாடு திரும்பி வந்து, மாமரத்தின் கீழ்ப் படுத்து அசை போட்டுக் கொண்டிருக்கிறது. அசை போடும் மாட்டைத் தாண்டி, அச்சகம் சென்றிருந்த பையன் திரும்புகின்றான்.

அவன் கொண்டு வருவது...

...கல்யாண அழைப்பிதழ்கள்!



படிப்பகம்

www.padippakam.com



ஓர் அழைப்பினை ஆவலுடன் பிரித்துப் பார்க்கின்றேன். சுத்தமான அச்சு வேலை. அந்தப் பத்திரிகையில் 'கோல்ட் டஸ்ட்', எழுத்துக்களின் பிரகாசிக்கும் மணமக்களின் பெயர் என் உள்ளத்தில் ஊர்ந்து 'கீச்சு மூச்சம்' காட்டுகின்றது. வாலிப உள்ளத்தில் குமைந்து புகையும் பாலுணர்ச்சிகள், அஞ்சணப் போர்வை இடுகின்றன.

கல்யாணம்...

...எனக்குத்தான்! எனக்குக் கல்யாணம் என்பது ஆச்சரியமானதா? மனித வாழ்க்கையில், இயல்பான ஒரு கட்டம் கல்யாணம். வெகு சாதாரணமாக...

பிறப்பைப் போன்று, சாவைப் போன்று, இதனையும் இயல்பானதென்று சொல்லலாம். மனிதன் பூமகளின் பிசின் இச்சைகளுடன் பிணைக்கப்பட்டு, பறன் முகட்டின் பையில் தொங்கும் வம்சவிருத்திக்கான விதைகளைத் தூவி, சுய பிரக்ஞையற்ற மனத்தின் அந்தக நிலையிலேயே அறுவடைப் பயனை அநுபவிக்கும் எத்தனம். உள்ளத்தின் விளிம்புவரை முட்டி மோதி, உடைப்பு ஏற்படுத்திவிட வேண்டுமென்று கச்சையை வரிந்து கட்டும் வாலிப உணர்ச்சி என்ற வெள்ளத்தை, வரம்பிற்குட்பட்ட வாய்க்காலினூடேவடிய வைக்கும்ஒழுங்கு. மனித சிந்தனையினதும் உழைப்பினனும் விளைவான வெங்காயச் சருகுச் சேலைகளினாலும், வேட்டிகளினாலும் மறைப்புக் கட்டி, சுயநலத்தின் குஷ்ட ரோகத்தையும், அம்மண உடலின் வேகாத புலால் வேட்கையையும் நெறியின்பாற் பட்டதாக்க, மாஜி மிருகக் கூட்டம் கற்பித்துள்ள ஏற்பாடு.

அப்படியாயின்? நான் அசாதாரணமானவனா?

மனிதனின் பிரபஞ்ச ஆசைகள் என்ற சகதிக்குள் குண்டுக் கல்லாகப் பிணைத்து வைத்திருக்கும் மூவாசை

www.padippakam.com



களை வென்று, இல்லறமென்ற இருள் நுழைக்குள் சிக்காமல், துறவியாக - தூயவனாக- ஆனாலும், அநாமதேய அப்பாவியாகவே புழுதியில் என் சரீரத்தைக் கிடத்துவதுதான் என் ஊழும் வாழ்வுமென்று ஜீவிய பயணத்தை மேற்கொண்டிருந்தவன் நான். பிரத்தியட்சப் பரிமாணங்களுக்கும் தருக்கத்தின் பொறிக் கிடங்குகளுக்கும் சிக்குப்படாமல், கற்பனை என்ற சிலந்தி நூலில் மட்டும் பட்டம் விடும் பகவானுடன் இரண்டறக் கலந்து ஐக்கியப் படுத்துவதற்கு என் மனத்தைத் தயார் செய்வதில் காலத்தைப் போக்கி கொண்டிருந்தவன். புழுதி வாழ்க்கையின் சக்களத்தியாகக் கிளைத்துள்ள பட்சபாத விவகாரங்களில், பட்டும்-படாமலும் ஒட்டியும்-ஒட்டாமலும், தாமரை இலை நீராக வாழ வேண்டுமாம்! சேற்றுடன் கலந்த நீர் என்ற ஆதாரமின்றித் தாமரை தோன்றியதா? தாமரையின்றிக் குறளி வித்தையினால் தோன்றும் இலையா? அந்த இலையில், நீரின்றி நீர் எப்படி வந்தது? இலையின் தண்டறுத்து சோரம் போகாமலே, நீர் மறைந்துவிடும் விந்தை என்ன? கலியுகத்தின் ஒரு துளியின் சிறு பின்னமான ஆயுளென்ற குமிழி உடைந்து காற்றின் வெறுமையின் வெறுமையில் அந்தம் கண்டுவிடும் அற்ப மனித வாழ்க்கை நேரத்தில், தாமரையிலைத் தண்ணீராக வாழ்வதில் அல்லது மரணிப்பதில் என்ன பயன்?

மனித வாழ்க்கையின் பயன்?

கடலின் வைகுண்டமா? மலையின் கைலாசமா? வெள்ளரச மரத்தின் கீழுள்ள கட்டாந் தரையா? ஞானச் சுடர் வெடித்துச் சிதறியதா? சுடர் அவிந்ததும் ஜனிக்கும் அஞ்ஞானமா? அது எப்படியோ? புழுதிசேர் பூமியின் இன்ப துன்பங்களுடன் ஆசாபாசங்களுடன் வெகு இயல்பாகவே பிணைக்கப்

www.padippakam.com



பட்டு—இல்லை, இல்லை, காலவெள்ளத்தின் ஓட்டத்தின் வளைவு வழிகளில் என் விரிய வெள்ளத்தைப் பாய்ச்சி வால்பேத்தைகள் தவளைகளாகி, அத்தவளைகள் தவழுவதைத் துறந்து முதுகெலும்பின் உறுதியிலே நடக்கின்றனவா, என்றெல்லாம் பருவ வளர்ச்சிகளின் பரிணாமவியலை ஆராயும் வேட்கையுடன், இல்லறம் என்ற விட்டத்திற்குள் நுழையத் திட்டமிட்டிருக்கின்றேன்.

அதன் முடிவு?

இன்னும் ஒரு வாரத்தில் எனக்குத் திருமணம் நடக்கப் போகின்றது.

'இந்த முதல் அழைப்பிதழை யாருக்கு அனுப்புவேன்?'

குறுக்குச் சிந்தனையின் ஒரு பாய்ச்சல்.

என் வாழ்க்கை அமைப்பிற்கு முரணான எண்ணச் சிதர்களை என் மனத்தில் குதிரச்செய்து, என் வாழ்க்கை வழியைத் திசை மாற்றியமைத்த என் முழு முதற் குருவாகிய உனக்கே யல்லாது வேறு யாருக்கு அனுப்பி வைப்பேன்? என் அகக் கண்களின் அக இமைகளைத் திறந்து, வாழ்க்கையின் சிக்கலான முடிச்சுகளை, சுருக்குதடமென்ற வாக்கில் மிகச் சுலபமாகவே அவிழ்த்து, அதனுள் மறைக்கப் பட்டிருந்த சூன்யப் பிரதேசத்தின் உண்மைகளை உணர்த்திய மகான் நீ. என் அஞ்சலிகளை எப்படிச் சமர்ப்பிப்பது என்று அறியாமல் தவிக்கின்றேன்.

குருவென்று வரித்து விட்டேன். சிறு பிள்ளைத் தவறா? உடல் மட்டும் பெருத்தவனின் பேதமையா? பிரத்தியட்சக் கடவுளென வரித்தல்தான் முறையா? குருவாக வந்த தெய்வ மென்று உரையாசிரியர் பாணி

www.padippakam.com



யில் வலிந்து அர்த்தம் கற்பித்துத் தப்பிக் கொள்ளு கிறேன். குருவென்று அழைத்தேனா? நீ பெண். 'குருத்தினி' என்றழைப்பதுதான் சரியென்று மொழிப் பண்டிதர்கள் சாதித்தல் கூடும். நாமாகக் கற்பிக்கும் கருத்துக்களை மட்டும் புலப்படுத்தும் வெறும் குறியீடு களான செல்லா நாணயங்களில், காசுக்கடை நடத்தும் அந்தச் செட்டிகளை விட்டுத் தள். உன்னைக் குரு வென்றோ, குருத்தினி என்றோ அழைத்ததான ஞாப கத்தை இறந்த காலமென்ற புதை பொருள் ஆராய்ச்சிக் கிடங்கில் கண்டெடுக்க முடியவில்லை.

உன்னை எப்படி அழைத்தேன்?

கருங் கொண்டல் இருளுக்கு நோக்காடு ஏற்படுத் தும் வாக்கில் பிளந்து பிரசவமாகும் மின்னல் கீற்றின் ஒளி வேரோடிச் சதுராடுவதைப் போல, நினைவென்ற நிழலாட்டத்தில்...

என்மனம் என்ற புழுதி நிலத்தில், நன்றாகப் பாதங் களைப் பதித்து நடந்த ஒரு பிரயாணியின் சுவடுகள் தெரிகின்றன. கால வெள்ளத்தின் மணல்மாரிகள் மறைத்து விடாத சுவடா?

இயற்கைக்கு முரண் என்ற மருட்சியைத் தந்தாலும் வெகு இயல்பானது என்ற நினைவு குதிர்வதினால், அதைப் பின் நோக்கிப் பார்க்கும் ஒரு வேகத்தில்...

## 2
## வருகை

அந்த முன்நிலவின் குளிரிலே தோய்ந்து சிலிர்த்த முன்னிரவு ஞாபகம் இருக்கின்றதா? கலைந்து கிடக்கும்

படிப்பகம்

www.padippakam.com



பழைய சம்பவங்களென்ற 'சீட்டு'க்களை ஒரு தடவை 'பஸா'ரிக்காமலே, என்னால் அந்தச் சம்பவத்தை உருவி எடுக்க முடிகின்றது.

அந்த முன்னிரவு, இறந்த காலச் சவக்கிடங்கை அடைந்ததா? கால வெள்ளத்தின் சுழற்சியின் ஒரு சிற்றலை புரண்டோடியதைப் போல, அந்தச் சம்பவம் என் நெஞ்சில் இப்பவும் பசுமையாகவே இருக்கின்றது. நீ மறந்திருக்கலாம். மறதி, மகான்களுக்கும் தீர்க்க தரிசிகளுக்கும் வரப்பிரசாதமானது என்று கேள்விப் பட்டிருக்கின்றேன். நான் மகானா? அல்லது தீர்க்க தரிசியா?

மனம் குதிரையாகக் குதித்தோட, அதன் உந்து வேகத்தில் கால்கள் உடலை இயக்க, உன் வீட்டுக்கு முன்னால் நிற்பதை உணருகின்றேன். காவல் தேவையில்லாத உன் வீட்டுக் கதவுக்குப் பூட்டா? கதவு பூட்டப் பட்டிருக்கின்றது. நீ ஆற்றங்கரைக்குக் குளிக்கச் சென்றுவிட்டாய் என்று, கிடைத்த செய்தி உண்மை தான். கதவை ஒட்டினாற் போலிருக்கும் மிதிகல்லிற் குந்தலாம் என்ற நினைவு ஊரும் பொழுது, இயற்கையின் தேவையொன்றுஎன்னைஉன் வீட்டின்கொல்லைப் புறத்திற்கு விரட்டுகின்றது. சலப்பையில் நிரம்பி ஊறிய சிறுநீரை இறக்கி, அந்தச் சுகானுபவத்திலிருந்து விடுபட்டுக் கொல்லையை நோட்ட மிட்டுப் பார்க்கின்றேன். நான் சொல்லப்போவதை, உன்னையே குருத்தினியாக வரித்துக் கொண்ட பிரிய மாணாக்கனின் முகஸ்துதியென்று நினைக்காதே! அன்பும் பக்தியும் மனமண்ணின் வளத்தில் 'விசுக் விசுக்' கென்று வளரும் பொழுது, எப்பொழுதும், வரம்பையும் வேலியையும் மீறத்தான் செய்கின்றன. உண்மை. ஆனால், உண்மையைச் சொல்வதும் முகஸ்துதியாகாது என்பதும் உண்மை.

படிப்பகம்

www.padippakam.com



நான் பார்த்தேனா? அனுபவித்தேனா? எல்லாம் கேள்வி ஞானந்தான். களிம்புகளின் பொலிவுடனும், பவுடர் மினுக்குடனும், அத்தரின் நெடியுடனும் உடலின் வளைவுகளையும் கோணங்களையும் கவிதை மிகையின் பாற்பட நெளித்துக் குறுக்கித் திரியும் சட்டைக் காரிகளின் உள்ளங்கிகளில் படிந்திருக்கும் அழுக்கினை விழுங்க, ஒரு 'கலன்' மண்ணெண்ணெயில் வளர்க்கப் பட்ட அக்கினி கூட வலியற்றதாம். உள்ளங்கிகளின் நினைவு, அவற்றிற்கும் வீட்டுக் கொல்லைகளுக்கும் உள்ள ஒற்றுமையின் காரணமாக வெடித்துக் கிளம் பியது! முற்றத்தில் வண்ணத்திற்கு ஒன்று, வகைக்கு ஒன்றாக மலர்ச்செடிகள் பூத்துக் குலுங்கி மனங்கவர் காட்சி தரும். மழலை நடை பயிலும் தென்றலில் அந்த மணம் பரவி, இன்ப லாகிரியை ஊட்டும். ஆனால் மலசல கூடத்துடன் கூடிய கொல்லைப் புறத்தில்? மணிக் குடலைத் தொண்டைக் குழிக்குள் சொருகி விடும் துர்நாற்றம். நீ விசித்திரமானவள். கொல்லைப் புறத்தில் நீ ஓர் இனிய உலகைச் சமைத்து வைத்திருக் கின்றாய். அங்கு ஒரு மாமரம்— இங்கு, முற்றத்தில், கர்ப்பவதியின் பூரண எழில் காட்டும்மரத்தின் சாயலில்— இருக்கின்றது. அதனடியில், மென்மையிலும் மிருதுத் தன்மையிலும் வாலைக் குமரியின் தன மேட்டின் ஸ்பரிசத்தைத் தோற்கடிக்கும் வெண்குருத்து மணலைப் போட்டு நிரப்பி வைத்திருக்கின்றாய். அந்த மணல் விரிப்பு என்னை 'வா...வா...' என்று நீள்கரம் நீட்டு வதான மனப் பிராந்தி. அதிலே உடம்பைச் சற்றுச் சரிக்கலாமென்று வெறும் வரையாக இருந்த ஆசை, கோஷத்துடன் பொங்கியெழும் சுலையாகச் சீக்கிரமே ராட்சத வளர்ச்சியடைகின்றது. அதிலே அமர்ந்து, என் உடலைச் சுகமாக நெட்டி முறித்து நீட்டுகின்றேன். மாமரத்தைச் சுற்றிலும், திரை விரிப்பதைப் போல, விதம் விதமான மலர்ச் செடிகளை நாட்டியிருக்கிறாய்.

www.padippakam.com



தினமும் அந்தப் பூச்செடிகளில் ருதுவாகி விரியும் புஷ்பங்களைத்தான் நீ புத்தரின் பாதங்களிலே சமர்ப்பிக்கக் கொய்து வருவாயா? பூச்செடிகளைக் கிணற்றிற்கு உவமிப்பதில் கவித்துவம் கிடையாது. ஆனால், பறிக்கப் பறிக்கப் புஷ்பிக்கும் மலர்ச் செடிகளை ஒரு சாமான்யன் எதற்கு ஒப்பிடுவான்? ஏதோ, ஊருணி என்கிறார்கள்...

சரிந்தவன், நடந்து வந்த களைப்பினாலோ, அல்லது கடந்த சில நாள்களாக என்மனத்தில் நெளிந்து சுருளும் எண்ண உளைச்சல்களினாலோ, கண்ணயர்ந்து விடுகிறேன்.

கண்ணயர்ந்தேனா? கண்களை மூடிய வண்ணம் ஏதோ நினைவுகளில் சஞ்சரித்தேனா? நினைவா? கனவா? நினைவென்றால் என்ன? கனவென்றால் என்ன? விழித்த நிலையின் கனவுகளே, நினைவுகள். தூங்கிய நிலையின் நினைவுகளேகனவுகள். இரண்டிற்கு மிடைப்பட்ட கயிற்றரவு நிலையில் - பழுதை, எது; பாம்பு எது—அவஸ்தைப் படுகிறேன்.

கற்பனையில் சிருஷ்டித்துப் பார்க்கும் சுவர்க்கத்தின் எழில் மாடங்களை வனப்பிலும் அமைப்பிலும் தோற்கடிக்கும் நெடிதுயர்ந்த மாடம். மாடத்தின் உப்பரிகை. அதன் காலதர்த் திரைகளிலே, வெள்ளிகள் பூத்துக் குலுங்குவதான தோற்றம். அந்தச் சன்னல் விளிம்பில், மெல்லிய திரைச்சேலையை ஊடறுத்து நுழையும் தென்றலுடன் கலந்து இன்பம் அனுபவிக்கும் போதையில், பால் நிலவுக் கற்றை புகுந்து கொண்டிருக்கின்றது. அகிற் புகையின் வாசனை அறையைச் சிறை பிடித்துவிடும் எத்தனத்தில் ஈடுபட்டிருக்கின்றது. பல நறுமணங்களின் உற்பத்தி சாலையோ என்ற மயக்கத்தைத் தருகின்றது. மத்தியில் ஒரு கட்டில். தென்றலைக்

படிப்பகம்

www.padippakam.com



கூட உறுத்தாத வெண்மலர்கள் அதன் பஞ்சு மெத்தை யில் தூவப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டிலில் ஓர் அழகன் அமர்ந்திருக்கிறான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு கட்டழகி, தங்களை மறந்த இன்ப நிலையில்...சிறிது நேரம் என் புலன் கண் சிமிட்டும் தாரைகளின் வனப்பில் புதையுண்டு விழிப்படையும் நேரத்தில்...உடல்களை மறந்து, இயற்கைச் செழிப்பின் மேடு பள்ளக் கவர்ச்சி களை மூடும் துணிகளைக் களைந் தெறிந்த அம்மண நிலையில், தோப்பிலே அன்றொரு நாள் நான் பார்த்த இரண்டு சாரைப் பாம்புகள் பின்னிப் பிணைந்து நெளியும் கோலத்தில், அந்த அழகனும் அழகியும்... அவர்கள் சிருஷ்டித் தொழில் ஒத்திகையில் இன்பம் அநுபவிக்கிறார்கள். பொறாமையா? மனக் குரோதத் திற்கு நாஸூக்கான சொல்தான் பண்பா? கண்களை மூடிக் கொள்ளுகிறேன்... இமைகளை வெடிப்பில் விரித்துப் பிதுங்கித் திறக்கும் கண்கள். அந்த ஆணின் உடலில் மணற்குறுணி அளவில் பரவிக்கிடக்கும் வியர் வைத் துளிகளைத் துடைத்து, சிந்திய வீரியத்தின் சக்தியை ஈடு செய்யும் எத்தனத்தில் பழங்களை ஊட்டு கிறாள். இருவரையும் இமைக்காது பார்க்கின்றேன். அடையாளம் கண்டு கொள்ள முடிகின்றது. ஆண், சாக்கிய இளவரன் சித்தார்த்தன்; பெண், அவன் மனைவி யசோதை! அந்த இரவு லீலையின் விளைச் சலாக ராகுலன் பிறந்திருக்கலாமென்ற எண்ணம் வெகு இயல்பாகத் தோன்றுகின்றது. வத்ஸாயன சாத்திரத் தின் பொலிப் பதிப்புகளின் பக்கங்களையேனும் நான் பெயருக்குக்கூடத் தட்டிப் பார்த்தவனுமல்லன்...சே! அந்த ஆண் சித்தார்த்தனல்லன்; நான்-மனசார நானேதான்! பெண் யசோதை அல்லள்; அவளுடைய சிலையைத்தானும் நான் கண்டவனல்லன். அந்தப் பெண், குருத்தினியே, நீயேதான்! என்னை நீ

www.padippakam.com



அணைத்து... நான் கண்களைத் திறந்து பார்க்கும் ஆக்கினையில்—.

கண்கள் மயக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளு கின்றன.

உடன் கறந்த பசுப்பாலைப் போன்ற முன்னிலவின் ஒளிக்கற்றை பூமி நங்கைக்குக் கிளுகிளுப்பு ஊட்டிக் கொண்டிருக்கின்றது. அந்த ஒளி என் முகத்தில் மட்டும் படிந்து, என் உடலில் விழாது ஒரு நிழல் படருகிறது. அந்த நிழல்...

உன் நிழல் !

அந்த இடத்துக்கு நீ ஏன் அந்தக் கோலத்தில் வந்தாய்? ஆற்றில் நீராடச் சென்றநீ, ஈரத்தை உலர்த்த துண்டு எடுத்துச் செல்ல மறந்து, ஏன் வீண் சிரமம், சந்திர ஒளியில் உலர்த்திக் கொள்ளலாம் என்று நினைத்து வந்தாயா? குருத்தினியே நிர்வாண கோலத்தில்— அந்த மாடத்தில் சாரைப் பாம்பு போன்று பின்னிக் கிடந்த அந்த அவளுடைய அம்மண நிலையில்— வேறெந்தப் பெண்ணுருவத்தையும் பார்க்காத எனக்கு, அது ஒரு புது அநுபவமாக இருந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மலைகளும், நதிகளும், புல்வெளிகளும், சுண்ணாம்புப் பாறைகளும், குளங்களும் நிறைந்துள்ள நிலத்தை, நிலமகளென்று பெண்ணாக உருவகப் படுத்துகின்றார்கள். இந்த உருவகத்தின் நேர்த்தியை, பிறந்த மேனியாக நீ ஆற்றிலிருந்து அந்த மரத்தடிக்கு வந்த கோலத்திலேதான் நான் உணர்ந்து கொள்ளுகிறேன்.

என் உடலை ஏதோ உணர்ச்சிகளும் அவசங்களும், வண்ணான் கையில் கஞ்சி முறுக்கப்படும் துணியாக,

www.padippakam.com



முறுக்கி எடுக்கின்றன. வலையில் அகப்பட்ட மானுக்கு ஏற்படும் வெருட்சியும் பயமும், என் உள்ளத்தின் மையத்தில் கவிகின்றன. நான் எழுந்து உட்காருகின்றேன்.

நீ என்னை வணங்குகின்றாய். ஆற்று நீரில் அழுக்க கன்று, மென்னீரத்திலே அலையலையாய்ப் புரளும் உன் கேசம், என் தோளில் சற்றே ஆலம் விழுது இறக்குகின்றது. அந்தக் காலத்து அரசவைகளில் வீசப்படும் வெண்சாமரம் இந்தச் சுகத்தைத் தான் கொடுத்ததோ? உன் மூச்சுக்கூட தென்றலாக என் உடல்மீது தவழ்ந்து...

தென்றலா?

அது பொல்லாத சுழல் காற்றாய் உருவெடுத்து, என் உள்ளத்தில் நீறு பூத்த நெருப்பை— வெப்பம் அவிந்து சாம்பல் உமிழ்ந்து கொண்டிருக்கும் உணர்ச்சிகளை— அக்கினி நாக்குகளை நீட்டிக் கொழுந்து விட்டெரியச் செய்து...

''ஸாதுக்களே! நீங்கள் இங்கு இருப்பீர்களென்று நான் நினைக்கவில்லை...'' - மேடையின் கன்னித் தோற்றத்தில் முதல் வசனத்தை உச்சரிக்கும் அநுபவமில்லாத நடிகையைப் போன்று, ஒவ்வொரு சொல்லாக உச்சரிக்கின்றாய்.

''வேளை வரும்பொழுது வருவதாக வாக்குத் தந்தேன். இன்று சமயம் கிடைத்தது; வந்திருக்கிறேன்.''

''என் பாக்கியம். இங்கேயே இருங்கள். நான் ஒரு நொடிப் பொழுதில் திரும்புவேன்.'' பகவரைச்

www.padippakam.com



சம்பாவனை செய்யும் பாவனையில் சொல்லிச் செல்கின்றாய்.

உன்னைத் தொடர்ந்த என் மனம், அன்று ஆரமத்தில் நீ என்னைச் சந்தித்த சம்பவத்தில் நிலைக்கின்றது...

## 3
## பிட்சை

அந்த விஹாரத்திற்கு வந்து ஒரு வாரஞ் சென்றிருக்கலாம். என்னை முதன் முதலில் புஷ்பாஸனத்திற்குச் சமீபமாகப் பார்த்த அன்று தொட்டே, இரையினைக் குறி தப்பாது கண்ணி வைத்தே வட்டமிடும் பருந்தின் பான்மையுடன் பார்த்து வருகின்றாய். பூரண மலர்ச்சி காட்டாத—ஆனாலும் போதான— முறுவலை? அலையாத இதழ்களில் புரளச் செய்து பார்க்கிறாய். சொல்லாத கதைகளெல்லாம் உன் நயன மொழியில் சிந்தித் தெறிப்பதை உணர முடிகின்றது. ஏனோ தானோ என்று அலட்சியமாக இருந்த என்னை, உன் பார்வை இப்படித் திசை மாற்றி அழைக்கும் என்று முதலில் உள்ளுணர்வுகூட அற்றவனாக இருந்தேன்.

அறிவு வரம்பிற்குள்ளும், சீலத்தின் வேலிக்குள்ளும் என் மனத்தினைக் கட்டுப்படுத்திவசக்குவதற்கிடையில், நான் அந்த வம்பு விவகாரத்தில், ஆலாவின் கூர் நகங்களுக்கிடையில் அகப்பட்ட கோழிக் குஞ்சினைப் போல வகையாகச் சிக்கிக் கொண்டதாக அவலப்படுகின்றேன்.

'சிதறி விடக் கூடாது என் சீல ஒழுக்கம்; சங்கத்தின் மறுவற்ற புகழுக்கு மாசு கற்பிக்கப்படக் கூடாது' என்று

படிப்பகம்

www.padippakam.com



எழுச்சியுடன். விஹாரத்திற்கு வராமல், தொடர்ந்தாற் போல சில தினங்கள் ஆரமத்திலேயே தங்கியிருக் கிறேன்.

குருத்தினியே! நீ பொல்லாத துணிச்சல்காரி. (அந்தக் கொடிவாக்கு உடலில் இவ்வளவு துணிச்சல் எப்படி விளைந்தது?)

நீ என் ஆரமத்திற்கே வந்து விடுகிறாய்.

''ஸாதுக்களே!''

நான் வெளியில் வந்து பார்த்த பொழுது நீ—

''நீங்கள் இங்கேயா?'' — வார்த்தைகள் தறி கெட்டுத் தடுமாறி உதிருகின்றன.

''பிணியிருக்கும் இடத்தை நாடி வைத்தியர்களும் செல்லலாம்; வைத்தியர்கள் இருக்கும் இடத்தைத் தேடி நோயாளர்களும் வரலாம்.''

''நான் பிணியா? அல்லது வைத்தியனா?''

''ஆரமத்தில் வைத்தியர்கள் வாசம் செய்வதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''......''

''என் குழம்பிய மனத்திற்குச் சாந்தி தரவல்ல வைத் தியர் நீங்கள் தான்.''

''பகவரை நினையுங்கள் அவருடைய நினைவு அமைதியும் நிறைவும் தரும்.''

''முயன்றேன்; முடியவில்லை...தாங்கள் ஒரு நாள் என் வீட்டுக்கு வந்து பிட்சை ஏற்க வேண்டும். அப்

www.padippakam.com



பொழுதுதான் என மனத்தில் தோன்றியுள்ள புயல் ஓயும்,''

''நோயாளிக்கு அதன் தன்மையும், அதனைக் குணப்படுத்த வல்ல மருந்தும் தெரிகின்றதே?''

''நீண்ட கால நோயாளிக்குப் பழக்கத்தினாலேயே இவை தெரிந்து விடும். தேவையான மருந்து தெரியும். ஆனால், அது உங்களிடந்தானே இருக்கின்றது?''

''மருந்து?''

''ஆம; ஒரு நாள் என்னிடம் பிட்சை ஏற்க வேண்டும்.''

''நானா?''

''ஆம்.''

''உங்கள் வீட்டிற்கா?...இப்பொழுதே, இந்த இடத்தில் நீங்கள் என்னுடன் தனிமையில்பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தாலே...''

''பூ, இவ்வளவுதானா? உங்கள் மீது உங்களுக்கே நம்பிக்கை இல்லையா?'' ஒவ்வொரு வார்த்தையிலும் ஏளனத்தின் துர்நாற்றம் மண்டிக் கிடப்பதை உணர முடிகிறது.

தோல்வியை ஒப்புக் கொள்ள—அதுவும் சலன புத்திகளின் விளை நிலமான ஒரு பெண்ணிடம் ஒப்புக் கொள்ள—என் தன்மான உணர்வு (பௌத்த பிக்குகளுக்குத் தன்மான உணர்வு இல்லையென்று யார் சொன்னார்கள்?) மறுக்கின்றது.

''அப்படியா?... நீங்கள்...''

படிப்பகம்

www.padippakam.com



''நீங்கள் நீங்களென்று அந்நியமாக நினைத்துப் பேசும் உங்களிடம் நான் கருணையையும் ஆதரவையும் எதிர்பார்த்து வந்ததே பிசகுதான்.''

மௌனம். கோழைத்தனம் வேரூன்றுகின்றதா? அல்லது. மான பங்கத்திலே ஆண்களுக்கு ஏற்படும் ரோஷம் ஊறுகின்றதா?

''முடமான இளமறியைத் தோளிற் சுமந்த போதி மாதவருடைய கருணை எங்கே? அவருடைய போதனை களைப் பரப்புவதாகத் தமுக்கடிக்கும் நீங்கள் எங்கே? சீவர ஆடையைப் புனைதல் மட்டுமே, அன்பையும் அருளையும் உள்ளத்தில் விதைத்து விடாது.''

அப்பொழுது என் உள்ளத்திலே புழுத்துப் பெருகிய சபல நினைவுகளை நீ எப்படி அறிவாய்?

''சரி. உன் மன நோயைத் தீர்த்து நிறைவை ஏற்படுத்த நான் உன் வீட்டுக்கு வரத்தான் வேண்டு மென்றால், நான் தாராளமாக வருவேன். உன் வீடு எங்கே இருக்கிறது?''

''என் வீடா? இந்த ஊரின் எல்லையாக இருக்கும் ஆற்றின் தெற்குக் கரையில் தனித்தே நிற்கும் குடிசை என்னுடையது. எப்பொழுதும் வரலாம். உங்களுடைய வருகைக்காக இந்த நோயாளியின் வீட்டுக் கதவுகள் என்றும் அகலத் திறந்திருக்கும்.''

''வேளை வரும் பொழுது வருகிறேன்.''

''கட்டாயம் வருவீர்களா?''

''தேரரின் வார்த்தைகளில் அவநம்பிக்கையா?''

www.padippakam.com



அன்று நீ என்னை நம்பினாயோ தெரியாது. எனக்கே என்மீது நம்பிக்கை இருக்க வில்லையே! நீ என்னுடன் தனிமையில் நீண்ட நேரம் அளவளாவுவதை விஹாரத்தின் பெரிய ஹாமுத்ரு அறியக் கூடாது என்ற அவசரத்தில் நான் தந்த உறுதி மொழி.

ஊழ் என் பிடரியைப் பிடித்துத் தள்ளி உன் வீட்டிற்கு அழைத்து வருமென்று நான் நினைத்தது கிடையாது. உன் மனம் குழம்பிக் கிடப்பதாக நீ சொன்னாய். நீ ஆரமத்திற்கு வந்து சென்ற அன்று தொட்டு— இல்லை, உள்ளத்தின் உள்மனதை ஆத்ம பரிசோதனை செய்து நிதானமாக யோசித்தால், அதற்கு முன்னிருந்தே கூட— என் மனமும், சிறாரின் குறும்புக்கு இரையான கடற்கரை மணல் வீடு போலக் குழம்பித்தான் கிடக்கின்றது. சில்லிட்டுத் திரண்டு வரும் கருமேக நினைவுகள், என் உள்ளப் படுக்கையில் உறை பனியின் குளிர்ச்சியை ஏற்படுத்தி, உஷ்ணத்தை நாடச் செய்யும் தவிப்பினை உண்டாக்கி...

காயா எங்கே? இந்தச் சிற்றூர் எங்கே? அங்கே வைசாக பௌர்ணமி தினமொன்றில்...

## 4
## போதம்

**அந்திநேரத்து** அடிவானில்சிந்திச்சிதறிய செந்தூரத் துகள்கள் இரவு நங்கையின் கேசக் கலைப்பில் மறைகின்றன. சயனம் நாடிய புள்ளோசைகள் மெல்ல மடியவும், ஓர் அமைதி இலேசாக மடிப்பு விரிக்கிறது.

www.padippakam.com



இரவல் ஒளியிலே, ஜெகஜாலம் சாதிக்கும் சந்திரன் முளைத்து விட்டான்.

குருபத்தினி, தாரகை இந்தச் சந்திரன் மீது எத்தகைய அழுங்குப் பிடியான மோகத்தை வைத்திருந்தாள்? பிரம்மச்சாரிய நோன்பிலே உறைந்து கிடக்கும் அந்த அசாதாரண வீரியக் குளிரிலே புனலாட எழுந்த இச்சையிலே, நாணத்தைத் துறந்து, தன்னையே இழந்து, எண்ணெய்ச் சட்டியிலே தன் அம்மண விம்பத்தை வீழ்த்தி, காம சுகத்தின் புதிய சுருதிகளை-அந்த குலமகள், வேசிப் பெண்ணாக-அநுபவிப்பதற்கு முன்னர், அவன் பெற்றிருந்த அதேபொலிவுடன்...

...முளைத்து விட்டான்!

கள்ளுறைந்த வழிப்பாட்டில் அவனுடைய மோகன நடைப்பயணம். அந்தப் பயணஞ் சிந்திய மதுத்துளிகளை அள்ளிப் பருகிப் போதை தலைக்கேறிச் சுய நினைவிழந்த நிலையில், தென்றல் மரக்கிளைகளில் மோதுண்டு, தள்ளாடித் தள்ளாடிக் கபிலவஸ்து அரண்மனையின் அந்தப்புர உப்பரிகைக்குள் தஞ்ச மடைகின்றது.

அத்தென்றலின் மதுமயக்கத்திலும் பார்க்க அதிக கிறக்கம் கொண்ட நிலையில் அந்த உப்பரிகையில் ஒரு பெண். அவளை யசோதை என்பார்கள். விரகத் தவிப்பில் நாள் மிக நீண்டு, அந்த நெடிது நீண்ட நாள்களினாலே உருவான ஒரு மாத காலம்! அந்த மாதங்களும் நகர்ந்தும் நகராது நிற்பதான கோலங் காட்டி, மிக மெதுவாக ஊர்ந்து, ஓராண்டு நிறைவினை நாடுகின்றது. இளவரசன் சித்தார்த்தன் அவளை



படிப்பகம்

www.padippakam.com



மனைவியாகவோ காதலியாகவோ பாவித்த தில்லை. வயிற்றுச் சுமை, சிசுவின் ஆரோக்கியம், பிரசவம் செய்த பச்சை உடல் என்ற நியாய ஏதுக் களிலே பொய்க்காலூன்றி, இவ்வளவு காலத் தையும் கடத்தி விட்டாள். எத்தகைய சாதனை!

பெண்மையின் நாணம் பூத்த சாம்பலினால் மறைக்கப்பட்டிருந்த உணர்ச்சிகள், சாம்பர் உடையைக் கழற்றி, நிர்வாண நெருப்பாக அவளைச் சுடுகின்றது. தண்மையின் இரவு, வெண்ணிலவின் குளிர்தேன், மென் காற்றின் குறுந்தழுவல். பெண்மையின் தொண்டைக் குழியை நசித்துக் கொண்டே பீறிட்டுள்ள வெறி. பனிமலையில் நிற்கும் பொழுதும், தீயில் நிற்பதைப் போன்ற தவிப்பு. வானைப் பார்த்து, அங்கு ஓடம் செலுத்தி விளையாடும் கார்முகில் கருணையினாலே கனத்து, தன்மீது அன்புத் துளிகளைப் பொழியாதா என்று வேகிக் கருகும் பயிரின் ஏக்கம்...

கனவு நிலையில் எழும் நினைவுகள் வளைத் துக் கொள்ளுகின்றன.

'வண்ண மகளே! அபூர்வ அழகி என்று கொண்டாடப்படும் என் சுந்தரம் சோரம் போய் விட்டதா?' என்று அங்கலாய்த்த பொழு தெல்லாம்...

'இளவரசி இப்பொழுதுதான் உங்கள் அழகு பூரணப் பொலிவிலே பொங்கி வழிகின்றது. பால் சுரந்து, அமுத கலசத்தை அமைப்பிலும் சாறி லும் தோற்கடிக்கும் வண்ணம் நிமிர்ந்து எழில்

www.padippakam.com



காட்டும் உங்கள் முலைத் திரட்சியைக் கண்டால்...'

தன் உடலைப் பார்த்தே எழும் ஒருவகைக் காமக் கிறுக்கும் அவளுடைய ஏக்கத்திற்கு ஒரு சூன்ய ஆழத்தினை ஏற்றுகின்றது.

'இன்று உன் வீணையின் நரம்புகள் சிருங் சார இசையைப் பிழிய வேண்டும்...'

'அந்த இசையையும் விஞ்சும் அர்த்த அலைகளை என் ஆடும் உடலிலே ஏற்றி, காம நினைவுகள் தவிர்ந்த ஏனைய நினைவுகள் புகமுடியாத ஒரு புது உலகத்துக்குக் கொண்டு செல்வேன்.'

இந்த ஏற்பாடுகளுடன் யசோதை காத்தி ருக்க இளவரசன் சித்தார்த்தன்சயன அறைக்குள் நுழைகின்றான்.

☐ ☐

யசோதையின் ஏக்கம் என் வசமாகின்றது.

''யசோதை, நீ ஒரு பைத்தியக்காரி. நான் உன்னை மட்டுமல்ல, இந்தஅவனியிலுள்ள சகலஜீவராசி களையும் நேசிக்கின்றேன். அன்பு என்பது உடலின் பத்தில் உழல்வதல்ல... மஞ்சள் பூசி, பன்னீரிலே குளித்து, சந்தனக் கலவை தடவி, நறுமணம் கக்கும் உடலால் என்னைத் தழுவுகின்றாய். ஒரேயொரு கணம்...நான் உடலெல்லாம் சீழ் சிந்தும் புண் பரவிய பிணியாளனாக இருப்பதாகக் கற்பனை செய்து பார்... பிணி! மஞ்சளும், பன்னீரும், சந்தனமும் பிணியை— உலக மக்கள் அனைவரையும் பீடிக்கும் சகல பிணிகளை யும்—போக்க வல்லனவா? நமது உடலங்கள் அழகினதும்

www.padippakam.com



அழகியல் லீலைகளினதும் இருப்பிடங்களல்ல... மனிதர்களை வாட்டும் பிணிகளுக்கு மருந்து உன்னைக் கட்டித் தழுவி அநுபவிக்கக் கூடியகலவி இன்பத்திலே கிடைத்து விடுமா ? பிணியை வெற்றி கொள்ளும் மருந்து எது?— இவ்வாறு சாக்கிய இளவரசர் கேட்டார்'' என்று பெரிய ஹாமுத்ரு கதை கதையாகச் சொல்வார்.

அங்கே, காயாவில்; வைசாக பௌர்ணமி தினமொன்றில் ஞான ஒளிபெற்றுச்சித்தார்த்தர் பரிநிர்வாண மோட்ச கதி அடைந்தாராம். அந்த அருளுருவத்தை நெஞ்சிலே குடியேற்றத்தான் இங்கு வந்தேன். இங்கு நிர்வாண நிலையில், கபிலவஸ்து அரண்மனையில், யசோதையுடன் சிற்றின்ப வாழ்க்கையின் களிப்புகளுக்குத் தன்னை அர்ப்பணிக்கும் சாக்கிய இளவரசனின் உருவமல்லவா குடியேறுகின்றது?

வாலிபத் தசை நார்களில் விளைந்து முறுக்கேறும் போக உணர்ச்சிகளுக்கும், சீலத்தின் வழி வகுக்கப்பட்ட பிரமச்சாரியப் பண்புகளுக்குமிடையில் ஓயாத போராட்டம். இலட்சியமாக வரையறுத்துக் கொண்ட தொடுவானை அடைய எதிர் நீச்சல் போடும் ஓயாத முயற்சி. நிதான சிந்தனையின் அணுப்பிரமாண வலுவுள்ள மட்டும் நீந்துகிறேன். முயற்சியில் தோல்வியா? சோர்வு ஏற்பட்டு, துரும்பாகி, வெள்ளத்தின் நீர்ப் பிரவாக மார்க்கத்திலேயே...

விழிப்புணர்ச்சியும், சுய பிரக்ஞையும் ஏற்படும் பொழுது, உன் வீட்டிற்கு வந்துவிட்டதை உணர முடிகிறது...-

படிப்பகம்

www.padippakam.com



## 5
## சோதனை

அந்த மரத்தடியில் என்னை அமரச் செய்து சென்ற நீ, ஒப்பக்கோலம் புனைவதில் உனக்குள்ள புலமையை வெளிப்படுத்தும் வகையில் சிங்காரித்துக் கொண்டு, கையில் தட்டேந்தித் திரும்புகின்றாய்.

பாற்கிண்ணம் தவிசிருக்கும் தட்டைக் கீழே வைத்து விட்டு, எனக்குச் சமீபமாக அமருகின்றாய்.

சிருஷ்டிக் கலையிலே தோய்ந்து சிலிர்க்கும் உறுப்புகளை மறைப்பதற்குத்தான் உடை தேவையென்று சொல்வார்கள். அந்த நினைவில் மண் தூவும் எண்ணத்துடன் நீ அந்தச் சேலையை அணிந்தாயா? பிரகஸ்பதியின் மனைவி, சந்திரனின் இளமையைத் தனது புலால் வேட்கையைத் தணிக்கப் பயன்படுத்த நினைத்த பொழுது, தன் அம்மண உடலை எண்ணெய்ச் சட்டியில் எதிரொலியாகக் காட்டி அவன் உள்ளத்தில் அக்நியின் அக்கினியை மூட்டினாளாம். விஸ்வாமித்திரனின் முற்றிய இந்திரியத்தினை இறக்கி, அதன் மூலமே அவனுடைய தபோ வலிமைகளை மழுங்கச் செய்யும் பணியை ஏற்று வந்த இந்திரசபை ஆடலழகி மேனகை, தன்னுடைய உடலைப் பொறிக்கிடங்காக்க, ஆற்றில் நீராடிய ஈரப்புடவையுடன் வந்தாளாம். புராதனப் பெண்டிருக்கு, சேலையணிந்தே அதனூடாக விழி விருந்து படைத்து ஆணின் 'கற்'பைச் சூறையாட இக்கால நாகரிக நெளிவு சுளுவுகள் தெரியாது. நீ அக்கலையில் பெற்றுள்ள பாண்டித்தியத்தினை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

தென்றலும் உன் வனப்பில் மயங்கித்தான் ஸ்தம்பித்ததா? ஒரேயொரு கணம். என் புலன்கள் உன்

www.padippakam.com



உடல்மீதே நிலைத்து விட்டபடியால், உலகின் சீவராசிகள் சகலவும் தங்கள் அசைவையும், இயக்கத்தையும் இழந்து விட்டனவாகத் தோன்றின.

நீ மட்டும் உன் நெடு மூச்சினால், அந்த மோகன மௌனத்தை,அம்பலத்து இரைச்சலாக்கிக் கொண்டிருக்கின்றாய்.

சிறிது நேரத்தில், யோக நிஷ்டையிலிருந்து விழிப்படைந்தவளின் பாவனையில், பாற்கிண்ணத்தை என்னிடம் நீட்டி, ''அருந்துங்கள் ஸாதுக்களே!'' என்று சொல்கின்றாய்.

''நானா? அருந்துவதா? நான் சங்கத்தைச் சேர்ந்தவன் என்பது தெரியாதா? சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மதியத்திற்குப் பின்னர் போஜனம் கொள்வது கிடையாது. அஷ்டபானத்தில் பால் சேர்த்தியல்ல''

''ஏன் இந்தப் பேச்சு? 'உன் வீட்டில் நான் பிட்சை ஏற்கத் தயாராக இல்லை' என்று சொல்லுங்களேன்.''

''அப்படிச் சொல்லாதீர்கள்—சொல்லாதே! பாலுக்குப் பதிலாக நீ கொத்தமல்லித் தண்ணீர் தருவாயானால், நான் மறுக்காமல் பருகுவேன்.''

''ஏன்?''

''அது சீலத்தின்பாற் பட்டது. அது மருந்து.''

''மருந்துக்கும் விருந்துக்கும் என்ன வித்தியாசம்?'' என்று கேட்ட வண்ணம், கிண்ணத்தை மறுபடியும் தட்டில் வைக்கின்றாய்.

''.......''

www.padippakam.com



''பார்த்தீர்களா; விழிக்கின்றீர்கள்... பாளிநூல் புலமை மட்டும் போதாது, நான் சொல்லட்டுமா?''

''ம்...''

''பகவரின் புஷ்பாசனத்தில் ஒரு மலரை வைப்பது மருந்து, அதற்கு மேல், ஒரு தட்டு மலர்களைச் சாத்துவது விருந்து. தேவைக்கும் திருப்திக்கும் குறைவாக...''

''இதைச் சங்கத்தில் ஒருவரும் சொல்லித்தரவில்லையே. விஹாரத்தின் பெரிய ஹாமுத்ருவுக்குக்கூட இந்த உண்மை தெரிந்திருக்காது.''

''ஏன் தெரிந்திருக்காது?''

''என்ன?''

ஆச்சரியம் தன் மாயவட்டத்திற்குள் என்னைச் சுண்டியிழுத்து மாட்டுகிறது.

''நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்? இதே வீட்டில், நான் கடந்த ஐந்து ஆண்டுகளாக வசித்து வருகின்றேன். நான் தேர்ந்தெடுத்த வாழ்க்கையோ... அல்லது சமூகம் தன்னைத் தூய்மையாக வைத்திருக்க என் மீது திணித்த வாழ்க்கையோ? சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்னர், இதே மரத்தடியில், பெரிய ஹாமுத்ரு என்னைத் தன் உடல் நோய்க்குச் சகாயம் செய்யும்படி கேட்டார். அன்றும் இரவுதான். ஆனால் அவர், உங்களைப் போல அஷ்டபானம் கேட்கவில்லை. பச்சை மாமிச விருந்து கேட்டார். ஹ...ஹ...''—இந்த ஆட்கொல்லிச் சிரிப்பை எங்குதான் கற்றாய்?

உன் சிரிப்பில் என் சிந்தை தன் பிரக்ஞையை இழந்ததா? பூமி சதுப்பு நிலமாக மாற, நான் அதற்குள்

www.padippakam.com



அமுங்கிப் போவதுபோல ஒரு துகட் பொழுது நேரம் பிரமை தட்டுகிறது. உள்ளத்தில் நுகும்பு விடும் பல் வேறு உணர்ச்சிகளையும் திரையிட்டு. ''வழி தப்பி வந்தாரா?'' என்று சமாளிக்கப் பார்க்கின்றேன்.

''சங்கம் வாழ்க! ஆனால்...உடலில் ஊறும் வீரிய வெள்ளத்தை பாய்ச்சுவதற்கு ஆற்றங்கரைக்குப் பக்கத் தில் ஒரு வடிகால் இருப்பதாக அவர் நிதானித்திருக் கலாம்.''

''அந்தச் சமாசாரங்கள் எனக்குத் தெரியாது. நான் இந்த விஹாரத்துக்கு வந்து ஒரு மாதந்தான் ஆகின்றது.''

''உங்களைப் பார்த்தவுடனேயே நீங்கள் இந்த ஊருக்கு மட்டுமல்ல, இந்த விவகாரத்திற்கே புதிசுதான் என்பதை நிதானிக்க முடிகின்றது. ஆனால், தொப்பூள் கொடி உதிருவதற்கு முன்னர் எந்தக் குழந்தையும் நடந்து பழகுவது கிடையாது.'' பின்னர் மௌனஞ் சாதிக்கின்றாய்.

மௌனமா?

என் உள்ளத்தில் புயலின் வேகம். சமுத்திரத்தின் பேரிரைச்சல். கழுத்தின் விளிம்புவரை முட்டி மோதி, மடிந்து மறுபடியும் இராவணத் தலைவாக்கில் முளைத் தெழுந்து...

வலியெடுக்கும் நிஷ்கள நினைவுகளில் நான் புல னைச் செலுத்திக் கொண்டிருக்கும் சமயமாகப் பார்த்து, நீ எனக்குச் சமீபமாக—மிகமிக நெருக்கமாக— நகர்ந்து உட்காருகின்றாய். உன் உடல் இலேசாக,

www.padippakam.com



பட்டும் படாமலும், என் உடலை வருடும் உணர்வு. இதென்ன உணர்வு? சிரங்கை நகத்தால் சொறிந்து கொடுக்கும் பொழுது, வலியும் ஏற்படும், சுகமும் ஏற் படுகின்றதல்லவா? அதைப் போலத்தான் அந்த அநு பவம். 'எனக்குக் கையும் ஓடவில்லை காலும்ஓடவில்லை. இராமனின் கால் வண்ணத்தால், சிலையாகச் சபிக்கப் பட்ட அகலிகை உயிர் பெற்றாளாம். ஆனால், பெண் ணின் ஸ்பரிசம் பெற்று ஆண் சிலையாக மாறுவதும், மறு கணம் பூகம்பமாக வெடிப்பதும்...

அந்நிலையிலிருந்து என்னை விடுவித்துக் கொள் வதற்கிடையில், நீ என் காதோரம், ''உங்களுடைய விஹாரத்தின் லொக்கு தேரர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு பற்று- வரவு வைத்துக் கொண்டிருந்த பொழுது, என்னை எப்படி அழைப்பார் தெரியுமா?'' என்று பட்டுத் துணியின் உராய்வினைப் போன்ற மெல்லிய குரலிற் கேட்கின்றாய்.

''உன்னை அந்நியமாகக் கருதாமல், நீயென்று அழைத்திருக்கலாம்''

''ஆருடம் அநுபவ வித்தில் முளை கொள்ளுகின்றது. அதிலும் கோட்டை விட்டீர்கள். என்னை அவர் 'சோமா' என்று தேனொழுக அழைப்பார். போதைக் கிறுக்குத் தலைக்கேறிய சமயங்களில், 'என் இனிய தேனே!' என்றுகூட அழைத்திருக்கின்றார். சோமாவதி யென்ற பெயரைச் செல்லமாகச் 'சோமா' என்று அழைப்பதில் இனிமை இருக்கிறது. எங்கே, காதலன் தன் காதலியைக் கூப்பிடும் குரலில் 'சோமா' என்றழை யுங்கள் பார்க்கலாம்...'' சரஸம் கீச்சா மூச்சம் ஊட்டும் குரலில் குழைகிறாய்.

www.padippakam.com



குருத்தினியே, நீ மகா கெட்டிக்காரி! நான் அந்தக் கணம் என் வசமிழக்கிறேன்.

'நான் யார்? என் இலட்சியம் என்ன? சீவர ஆடை வகுத்துள்ள ஒழுக்க வரம்பென்ன?' இப்படிச் சுய விசாரணை செய்யும் பற்று முற்றாக இற்றுவிடு கின்றது...

கருவானம் இமைகளை வெட்டிப் பளிச்சிடும் இரண்டு விண்மீன்களைப் போன்று ஒளிரும் உன் கண் களில் செப்படி வித்தைக்கு முற்றாக உட்பட்டு விடு கின்றேன்.

மனக் குரங்கு குருட்டான் போக்கில் கிளைக்குக் கிளை தாவுகின்றது.

என் தவிப்பினை நாடி பார்த்து உணர்ந்தவளைப் போல, "...ம், என்ன தயக்கம்? ஒரேயொரு தடவை என் குழம்பிய மனதை இதப்படுத்துவதற்காகச் சோமா என்று அழையுங்கள்."

உன் ஆகர்ஷண விட்டத்திற்குள் நான் முற்றாக அமுங்கி விடுகிறேன்.

"சோ...மா..."

"ம், ஹூ... இனியவரே, இன்னொரு தடவை?"

"சோமா!"

அந்த முன்னிலவு தெளித்த பாலெரளியில் உன் முகத்தைப் பார்க்கிறேன். உன் விழிகளை இமைத் திரைகள் போர்த்தி யிருக்கின்றன. மது வெறியில் காலத்துடனும் பொருளுடனும் புணர்த்திப் பேசாது உளறுபவளைப் போல, ஏதோ வெல்லாம் பிதற்றிக்

www.padippakam.com



கொண்டிருக்கின்றாய். அப்புறம் ஊமத்தஞ்சாறு தலைக்கேறிய வேகத்தில், என் கழுத்தினை உன் கரங்களுக்குள் கொக்கியிட்டு, என் உதடுகளில் உன் உதடுகளால்...

நான் எச்சிற்படுகின்றேன்...

ஆண்மை விம்மிப் புடைத்து வீறு கொள்ளுகின்றது. விரைப்புடன் கலந்த வலியின் வேகம். எனக்குப் பழக்கப்பட்டதைப் போன்று... தன் கையின் உதவியின்றியே உடைப்பு ஏற்பட்ட நிலையில், சீறிக் கக்கும் நுங்கும் நீரும்... சீவர ஆடையின் புனிதத்திற்குப் பங்கம் விளைவித்து விட்டேன்!

இன்ப நீர் வடிந்தது—

துன்பச் சேற்றில் தவறி விழுந்து விட்டவனைப் போல, ஓர் அருவருப்பு உணர்வு குருகு தளிர்த்து வளருகின்றது.

உன்னை மணலில் உருட்டித் தள்ளிவிட்டு, நான் நகர்ந்து உட்காருகின்றேன்.

வெற்றியின் மமதை உன் நெஞ்சில் ஊர்ந்து விளையாடுவதாகக் கற்பித்துக் கொள்ளுகிறேன்.

இறுதி வெற்றி கைப்பிடி அளவு தூரத்திலேதான் இருக்கிறது என்ற பூரண நம்பிக்கை. முனிவும் முரலும் கலந்த பாசாங்கு உணர்ச்சி ரேகைகளுடன் பின்னி உன் முகத்தில் படர்வதைக் காண முடிகிறது.

திடுதிப்பென்று ஊளையிட்டுக் கொண்டு காற்று வீசுகிறது. அது வீசிவரும் வேகத்தில் மாங்கிளைகளை உலுப்புகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



பிஞ்சாகி, காயாகி, கனியாகிப் பயனெய்த வேண்டிய பூக்கள் ஜனன விருத்திக்கு அடிகோலாது உதிர்ந்து விழுகின்றன.

உதிரும் பூக்கள்...

பயனின்றி ஸ்கலிதமான ஆண்மை!

''ஹாமுத்ரு!''—நீ என்னை நானாகவே செயற்பட விடும் எண்ணம் உனக்கில்லைப் போலும்.

''ம்...'' —வேண்டா வெறுப்பு.

''விருப்பமில்லாத நீங்கள் ஏன் என் வீட்டிற்கு வந்தீர்கள்?''

''உன் மனம் குழம்பிக் கிடப்பதாகவும், நான் உன் வீட்டிற்கு வந்து அதனைக் குணப்படுத்த வேண்டுமென்றும் கேட்டிருந்தாய். வேளை வரும்பொழுது வருவதாக வாக்குத் தந்தேன். வந்திருக்கிறேன்.''

''நீங்கள் ஒரு மனநோய் வைத்தியனா?'' என்று கேட்டுக் கெக்கலி கொட்டிச் சிரிக்கிறாய்.

''ஆம்.''

நீ மறுபடியும் அட்டகாசமாகச் சிரிக்கின்றாய்.

என குழம்பிய மனம் மேலும் குழம்புகின்றது.

நான் மனநோய் வைத்தியன் என்பதை ஒப்புக் கொண்டேன். நான் ஒரு பைத்தியக்காரன்.

நீ தான் மனநோய் பரப்பி!

படிப்பகம்

www.padippakam.com



உன் மனக் குழப்பத்தைப் போக்கலாமென்று நான் நினைத்தது உண்மை.

உண்மையில் நீ என் மனத்தைக் கலங்கிய குள மாக்கி விட்டாய்.

உன்னால் நிறைய மீன் பிடிக்க முடிந்ததா ?

சிந்தனைப் பொறிகளிலே தாவித்தாவி என் மனம் அலைய, இளகிய இரும்பினைக் கண்ட கொல்லனைப் போல, ''உங்களைப் போலத்தான் தன்னை ஒரு மன நோய் வைத்தியனென்று சொல்லிக்கொண்டு பெரிய ஹாமுத்ருவும் இங்கு வந்தார். அப்புறம் நான்தான் அவருடைய மன நோய்க்கு வைத்தியஞ் செய்தேன்.'' உன் குஞ்சிரிப்பினாலேயே ஆக்கினைப்படுத்துபவள் நீ.

''ஆரமத்தில் சந்தித்து உன் மனம் குழம்பிக் கிடப்ப தாகச் சொன்னாயே ?''

''என்னைப் போன்ற பெண்கள் சொல்வதெல்லாம் தேவவாக்கென்று நம்பும்படி யார் உங்களுக்குச் சொன்னார்கள் ? முதலில் நோயைப் பரப்ப வேண்டும். அப்புறந்தான்...''

''அப்புறந்தான்?''

''பித்தம் தெளிய வைக்கும் மருந்து.''

''நீ பரப்பும் நோய்?''

''மனநோய் வைத்தியர்களென்று வேஷமிட்டுத் திரியும் உங்களைப் போன்ற துறவிகளுக்கும் மனநோய் பரப்புகின்றேன். சில கற்றுக்குட்டிகள் அந்த மன நோய்க்கு காதல் என்று அழகாகப் பெயர் சூட்டி யுள்ளார்கள்''

www.padippakam.com



உன் துணிவே துணிவு!

பேச்சை வேறு தடத்தில் திருப்பவும், பெரிய ஹாமுத்ருவின் வரலாற்றினை அறியவும் ஆவல் பிறக்கின்றது...

''ஆம்...அந்தக் கதையை நீங்கள் கேட்கப் பிரியப்படுகின்றீர்கள்; நானும் சொல்ல ஆசைப்படுகின்றேன்...'' என்று சுழிபோட்டு, அந்த வரலாற்றைச் சொல்லுகிறாய்.

## 6
## பழம்

அட்சரம் தவறாமல், உன் குரலில், என் நெஞ்சக் குகையில் அந்தக் கதை எதிரொலிக்கின்றது.

நீ சொன்னாய்:

உங்களுக்கு நான் வலை விரிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு சரக்கினதும் தேவைக்கும் தரத்திற்குமேற்ப மதிப்பும் விலையும். அதனை நிர்ணயிக்கத் தெரிந்த கை தேர்ந்த வைத்தியன் நான். புலன்களை இதப்படுத்துபவற்றில் சுவையிருப்பதாக நினைத்துக் கொள்ளுகிறோம். சுவை, நமது புலன்களின் தீட்சண்யம்- மனோ நிலை- சுவைக்கத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பண்டம் ஆகிய சகலவற்றையும் பொறுத்தது. எட்டாத பொருளை வலோத்காரமாக வழிப்பறி செய்து அநுபவிப்பதிலுள்ள இன்பமே அலாதியானதுதான். அந்த இன்பரகசியத்தை உணர்ந்துதான் பெரிய ஹாமுத்ரு என்னை வலம் வந்தார். முதன் முதலில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான்

www.padippakam.com



இங்கு வந்தார் என்றுதானே சொன்னேன்? அப்பொழுது இந்த மாவில் பழங்கள் பொலிந்து கிடந்தன.

அன்றும் இப்படித்தான் நிலவு...

அவர் மிகவும் நெஞ்சழுத்தக்காரர். ஒரு பழத்தை இந்த மரத்திலிருந்து பறித்துச் சுவைத்த வண்ணம், என்னை விழுங்க விரும்பும் விழிகளை என்மீது குத்தி நிறுத்தி, பழச்சாற்றினை அளைந்த நாக்கினை இதழ் ஓரங்களில் மடித்து ஏதோ சைகை செய்கின்றார். நாக்கு நெளிப்பின் அர்த்தம் எனக்குப் புரிகின்றது. நான் அறியாத சிங்காரச் சேஷ்டைகளா? இருப்பினும், இவ்விவகாரங்களில் ‘புறி’யமும் மௌசும் காட்டி ஆணின் ஆசையை இன்னும் தூண்டுவதில் சுரக்கும் ஊமை இன்பம் இருக்கிறதே! அது, அலாதியானது. எனக்கு விருப்பமானதும். நாடக மொன்றிற்கு ஒத்திகை நடத்துகின்றார் என்பதை அறியாதவளாக அபிநயித்துக் கொண்டு, ‘சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மதியத்திற்குப் பின்னர் போஜனம் கொள்வதில்லையென்று கேள்விப்பட்டிருக்கிறேன்’ என்றேன்.

‘இது கனி’

‘இருப்பினும் போஜனம்.’

‘இல்லை. இது அழகு, அல்லது சுவை நுகர்ச்சி. கனியையும் கன்னியையும் உவமித்துப் பேசுகின்றார்கள் கவிஞர்கள். முதலில் கனியைச் சுவைத்துப் பார்க்கிறேன். பிறகு...’ அவருடைய கடைக் கண் விஷமத்துடன் சுட்டிக் காட்டிய பொருள் நான்தான்.

www.padippakam.com



குலப் பெண்களின் கற்பையும் ஒழுக்கத்தையும் காப்பாற்றுவதாக, கணிகையர் கூட்டம் உருவாக்கப் பட்டதாகச் சொல்வார்கள். குலப் பெண்களின் உடல் உணர்ச்சிகளைப் பட்டினி போடுவதுதான் கற்பாம்! மகடு உக் குணத்தைத் துறந்தும், பெண் சுவையின் ஊற்றாக அமைந்தவள். இருந்தும், 'ஸாதுக்களே! நீங்கள் என் மீது இச்சை கொள்வது தகாது. சங்கத்திலுள்ளவர்கள் சத்திய சீலர்கள்; பெண்ணாசையைத் துறந்த புனிதர்கள்; மூவாசையை வென்ற தூயவர்கள். ஒழுக்கம் வழுவாச் சீல வாழ்க்கையின் வழிகாட்டிகள். உங்களுடைய இலட்சியங்கள் முகிலின் நீரைப் போன்று அப்பழுக்கற்றவை. நான் சேறு நிரம்பிய குளம்.' அது வஞ்சப் புகழ்ச்சியோ, என்னவோ? ஆசைத் தீக்கு நெய்யூற்றும் உந்து விசை.

'இந்த மாமரம் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் தொடர்ந்து காய்க்காமல் மலடு பற்றி விட்டால் என்ன செய்வார்கள்? தறித்து விடுவார்களல்லவா?'

'ஒரு வேளை விறகிற்காகவாவது பயன் படுமே என்ற எண்ணத்தினால்...'

'அப்படியாயின் கனிகள் தருவதுதானே இம்மரத்தின் பயன்'

'இருக்கலாம்.'

'காயின் முதிர்ச்சிதான் பழம்?'

'ம்...'

'காய் அல்லது பிஞ்சு எப்படி உண்டாகிறது? பூவும் வண்டும் கலவி இன்பம் அடைவதின் பேறாகத்தானே ?'

படிப்பகம்

www.padippakam.com



'இயற்கை நியதி.'

'பூவும் வண்டும் கூடுவது இயற்கை. ஆணும் பெண்ணும் கூடுவதும் இயற்கையே. பூவினைத் துளைத்து வண்டு கலவியின்பம் நுகர்வது தர்மமானது என்றால், நான் உன்னைத் தழுவி நுகர்வதும் தர்மத்தின்பாற் பட்டதுதானே?' என்றொரு கேள்விக் கணையைத் தொடுத்து, தான் மோகனாஸ்திரத்தால் தாக்குண்ட வெறியில், என்னைக் கட்டித் தழுவி மடக்கினார். நான் என்ன பதிலைச் சொல்லலாம் என்று யோசிக்கும் நேரத்தில், நான் எதிர்பாராத ஒரு நொடிப் பொழுதைத் தேர்ந்தெடுத்து, என்னை அணைத்து, என் இதழ்களில் ஒரு முத்தம் பதித்தார். என் அநுபவத்திலிருந்து சொல்லுகிறேன்: அது நிச்சயம் அவருடைய கன்னி முத்தமல்ல...

தலைக்கு மேலும் ஒரு சாணளவு நீரிலும் நீந்தப் பழகியவள் நான். குளிரும் கூதலும் நான் அறியாதவை. இருப்பினும், ஒரு ஹாமுத்ருவுடன் வைத்துக் கொண்ட முதல்தொடர்பு...ஒழுக்கசீலத்திலிருந்து அவரைத் தவறச் செய்வதற்கு நானே ஒரு கருவியாகிவிட்டேனோ என்ற பயத்தின் நீள் நிழல் என்மீது படிவதை உணர்ந்தேன்.

'இயற்கையில் ஏற்படும் இச்சைகளையும் பால் எழுச்சிகளையும் வெற்றி கொள்வதின் மூலந்தான், நமது நாட்டின் பண்புக் கோபுரமாக நின்று விளங்கும் சங்கத்தில் உன்னத இடம் பெறலாம்.'



படிப்பகம்

www.padippakam.com



'அப்படி யார் சொன்னது?'

'போதித்தவர்.'

'அவர் மட்டும் தன் போதனைகளுக்கு ஏற்ப வாழ்ந்தவரா ? அவர் யசோதை என்ற அழகியை மணக்கவில்லையா? பூவும்-வண்டும் போல அவர்கள் கபிலவஸ்து அரண்மனையில் கலவிக் களியாட்டத்தில் ஈடுபடவில்லையா? அதன் பின்னர்தான் அவருக்கு விரக்தி ஏற்பட்டது... எத்தனையோ சோதனைகளுக்குப் பின்னர் ஞான விடிவு. ஞான தரிசனத்திற்குப் பின்னர் தான் போதிக்க ஆரம்பித்தார்.'

'வேம்பு கசக்கிறது; அக்கினி சுடுகிறது என்று மற்றவர்கள் தங்களுடைய அநுபவத்தைச் சொன்னால், அதை நாமும் அநுபவித்துப் பார்த்துத்தான் நிச்சயித்துக் கொள்ள வேண்டும் என்று கருதுவது விவேகமா ? முறையா ?'

'உண்மை. ஆனால், கரும்பு இனிக்கிறது ; நீரோடையில் குளிப்பது இதந் தருகிறது என்ற சுகாநுபவங்களை மற்றவர்களுடைய அநுபவத்தைக் கேட்டதின் மூலமே, நாமும் அநுபவிக்க இயலாது. சாக்கியச் சித்தார்த்தர் பூவினைத் துளைக்கும் வண்டாக இகலோக இன்பங்களிலே திளைத்தார். அவர் யசோதையுடன் அநுபவித்ததை நான் உன்னோடு அநுபவித்தால், எனக்கு மட்டும் பரிநிர்வாண கதி யென்ற வீட்டின்பப் பேற்றின் வாசல் அடைக்கப் பட்டு விடுமா? நானாக விரும்பி, பூர்ண அறிவு அவதானத்துடன் சீவர ஆடைக்குள் புகலிடம் தேடவில்லை. சேர்க்கப்பட்டேன், நான் காணாத ஒரு முக்திக்காக. பிரத்யட்ச இன்பத்தை ஒரு

www.padippakam.com



நாளாவது அநுபவிக்காமல்...அன்பே, பிரிய வளே...என்று என்னை அழைத்து...'

—இந்தக் கட்டத்தில் கதையை நிறுத்தி, நெடுமூச்சு விடுகிறாய்.

நீ சொல்லுங் கதை புதுமையாக இருக்கிறது. புதிய விளக்கத்தின் சுவட்டிலே நடந்து, அதன் எல்லையை யும் கண்டுவிடும் ஆவலில், ''பின்னர்?'' என்று தூண்டு கிறேன்.

எட்ட உருட்டப்பட்ட நீ கதையைச் சொல்லிக் கொண்டே கிட்ட நெருங்கி விட்டாலும், இன்னும் நெருக்கமாகவே நகர்ந்து உட்கார்ந்து, காதோடு இதழ் பொருத்தி இரகசியம் பேசும் தொனியில், ''கட்டாயம் அறிய வேண்டுமா?'' என்று கேட்கிறாய்.

'ஆம்'என்று அர்த்தம் தொனிக்கத் தலையை ஆட்டு கிறேன்.

நீ என்னைச் சட்டென்று அணைத்து, உன் மார்பு என்ற பஞ்சணையில் மல்லாக்கக் கிடத்தி...

ஈர உணர்வும், ஸ்கலிதத்தின் சோர்வும் என்னை நெருட, என் மீதே எனக்கு வெறுப்பு ஏற்படச் செய் கின்றது...

என் வெறுப்பை-கையாலாகத் தனத்தை-உன் மீது திருப்பி...

உன் கரங்களின் பூட்டுகளை எப்படியோ உடைத் தெறிந்து, அங்கிருந்து விஹாரத்திற்கு விரைகின்றேன்.

நான் கோழை!

www.padippakam.com



## 7
## தெளிவு

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவேயில்லை. ஏதேதோ...இனந்தெரியாத உளைச்சல்கள்.

உன்னை உருட்டித் தள்ளியதற்காக இப்பொழுது ஏன் நான் சங்கடப்படுகின்றேன்?

மாலை மயக்கத்தின் சாயலில்; அல்ல, தூக்கத்தில் எழும் கனவுகளைப் போல; இருந்தும் பூரண பிரக்ஞையுடன் மூளை வெடித்துக் குதிக்கும் சிந்தனைச் சிதர்களைப் போல, குமைந்தெழும் குமுறல்கள்...

மனம் என்ற குகைக்குள் ஆயிரம் சாரைப்பாம்புகள்-ஜோடி ஜோடியாகப் பின்னிப் பிணைந்து சுருளும் சாரைப் பாம்புகள்..-ஒரு பிணைச்சலைப் பார்க்கின்றேன். சித்தார்த்தரும் யசோதையும்! இன்னொன்று என் அப்பா—அம்மாவாக இருக்கலாமென்று கற்பித்துக் கொள்ளுகின்றேன். ஒரு நேரத்தில், இந்த அவனியில் ஓர் ஆயிரம் ஜோடிகளாவது பின்னிப் பிணைந்து முக்கித் தவிக்காதா? பாம்புப் பிணைச்சல்கள் மறைகின்றன... ஒரு கூட்டம் வண்டுகள்; ஒரு கொத்து மலர்கள், பூக்களின் மென்னிதழ்களைப் பிய்த்துத் துன்புறுத்துவது போலத் துளைத்துத் தேன் குடிக்கும் லீலை...இன்பத்தில் துளைத்துத் திளைத்தெடுத்த மகரந்தப் பொடிகளை எடுத்து...ஒரு வண்டு எத்தனை மலர்களைச் சுவைக்கின்றது; ஒரு மலர் எத்தனை வண்டுகளை அழைக்கின்றது?... அந்த விபசாரக் காட்சியை மறைத்து, ஒரு வண்டு ஆணாகின்றது; ஒரு பூ பெண்ணாகின்றது. அந்தப் பெண் தன் பஞ்சு மெத்தை மார்பில் ஆணை வளர்த்தி...பூக்கள் உதிர்ந்து விடுகின்றன; வண்டுகள் கலைந்து விடுகின்றன. ஒரு குவியல் பிஞ்சுகள்

www.padippakam.com



தொங்கிக் கொண்டிருக்கின்றன... காட்சியின் நடுவே, ஜுவாலையுடன் வளர்ந்திருக்கும் அக்கினி தன்னகத்தே உள்ள வெப்பத்தில்—சேந்தின் எழில்முறுவலில்—மயங்கி மறைகின்றது. அதில் குளிர்காயும் நோக்கத்துடன் ஒரு கூட்டம் விட்டிற் பூச்சிகள் பறந்து வருகின்றன. அந்த அக்கினிக்கு முதலில் பலியான விட்டில் பெரிய ஹாமுத்ருவின் சாயலில்...தொடர்ந்து பல விட்டிற் பூச்சிகளின் மரணம்...கடைசியாகத் தீயின் செந்நாக்கை இன்னும் முத்தமிடாது அதைச் சுற்றிப் பறக்கும் விட்டில் என் சாயலில்...

மனம் விழித்துக் கொள்ளும். அது புண்களினால் சிருஷ்டிக்கப்பட்ட பையாக நோவெடுக்கும். ஏதோ அக்கினி; வெப்பமிகு நெருப்பு; நெருப்பின் வெக்கை; கங்கு உமிழும் தீ! என் உடலை வதக்கி வாட்டுகிறது. நோயுமல்ல சுகமுமல்ல. உன் நினைவுகள் என் உள்ளத்தை முறித்தெடுக்கும் சபதத்துடன் என்னைப் பற்றிப் படர்ந்து, இறுக்கி, நசுக்குகின்றன.

சங்கிலித் தொடராக இணைந்து குருத்துத் தள்ளும் பல நினைவுகள்; பூரண விழிப்பு நிலையில் வலம் வரும் நினைவுகளும் பிணைகின்றன.

'நான் எப்படிப் பிறந்தேன்?'

இந்த வினா என் உள்ளத்தில் ஒற்றைக் காலில் தவமியற்றும் கொக்காகிறது...

அப்பா-அம்மா என்று பின்னர் தங்களை அறிமுகம் செய்து வைக்கும் இரு ஜீவாத்துமாக்கள்- இயற்கையின் வழியே கலவி இன்பம் அநுபவித்ததின் அறுவடை நான்! அப்படி அவர்கள் உருவாக்கிய சிருஷ்டி பாவமானது என்றால், நான் பாவத்தின் அவதாரம்! பாவத்தில்

படிப்பகம்

www.padippakam.com



விளைந்த அழுக்குக் கூட்டிற்குப் புண்ணியம் எதற்கு? பாவத் தொடராகச் சம்சார சக்கரம் சுழலட்டும்...

இடை வெட்டிலே நான் சங்கத்திலே சேர்ந்த வர்த்தமானமும் நினைவுத் திரையில் மங்கலாக நிழலாட்டம் போடுகின்றது. சின்ன வயதிலே நான் துடுக்குக்காரன். இசைந் தொழுக முடியாத முரட்டுத்தனம். என் அட்டா துட்டித் தனங்களினாலே மற்றவர்கள் துன்புறுவதைப் பார்ப்பதுதான் இன்பமும் என்ற ஒரு வகை மூர்க்கமும்! விதை ஊன்றி விருத்தி காணும் அப்பா வழியிலேயோ, வேரோடும் விளாத்தியாகப் பரவிய அம்மா வழியிலேயோ என்னைப் போன்ற மூர்க்கன் பிறந்ததில்லை என்று குடும்ப வட்டாரத்தில் கவலையுடன் பேசிக் கொள்ளுகின்றார்கள். இந்தப் பேச்சுகள் கூட சமுதாயம் என்னை ஏதோ ஒரு வழியில் அங்கீகரித்து விட்டதான மகிழ்ச்சியையே தருகின்றது. 'இவனைப் பெற்றதிலும் பார்க்க ஒரு அம்மிக் குளவியைப் பெற்றிருந்தாற் கூடப் பயன்பட்டிருக்குமே' என்று பிலாக்கணம் வைத்து, இரண்டு பொட்டுக் கண்ணீர் சிந்தி, மூக்கைச் சீறி எறிவது அம்மாவின் தினசரி வழக்கமாகிவிட்டது. 'வீட்டுக்கு வீடு இப்படியும் பிள்ளைகள் பிறக்கின்றன. நாம் மனம் வருந்தி என்னாவது? பகவானிலே பழியைப் போட்டு, பிள்ளையைச் சங்கத்திற்கு அர்ப்பணித்துவிட்டால் நமது பிரச்சினை தீர்ந்தது. சங்கத்திற்கு நாமும் ஒரு பிள்ளையைக் கொடுத்தோம் என்ற திருப்தி எங்களுக்கு. பின்னர் எல்லாம் சங்கத்தின் யோகத்தையும் பிள்ளையின் யோகத்தையும் பொறுத்தது' என்று, அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் 'மாமா' என்று எழுந்து நின்ற நெட்டை உருவம் ஒன்று ஆலோசனை சொல்வதும் வழக்கமாகி விட்டது. மாமாவின் ஆலோசனைக்குள்ள ஆணவம் வெல்கின்றது. நான் சங்கத்

www.padippakam.com



திலே சேர்க்கப்படுகின்றேன். இதில் என் விருப்பம் என்று எதுவுமே இல்லை.

வீட்டுக்கு வீடு பிரச்சினையாக எழுந்து நிற்கும் வேண்டாத பிள்ளைகளைத் தள்ளுவதற்கான 'குப்பை மேடு' தான் சங்கமா என்ற ஐயத்திலே என் மனம் தவித்த தவிப்பு. பலரைப் பார்க்கும் பொழுது அப்படி ஒரு பொது விதி பொருந்துவது போலவுந் தோன்று கின்றது. சிலரைப் பார்க்கும் பொழுது சங்கத்திற்குத் தனி ஒரு மகத்துவம் இல்லாமலும் இல்லை என்ற எண் ணமும் எழுகின்றது.

இந்த ஐயங்கள் அடங்கி, 'வீட்டுக்கு வேண்டாத பிள்ளை, நாட்டுக்கு வேண்டும் பிள்ளையாக வாழலாம்' என்ற ஒரு இலட்சியத்தினை நோக்கி நடக்கும் தெளிவு பிறக்கின்றது. கல்விப் பயிற்சியுடன், சங்கத்திற்கும் இன்றைய சமுதாயத்திற்கும் பயனுள்ள தொடர்புகளை யதார்த்த பூர்வமாக ஏற்படுத்தும் ஓர் ஊழியம் உவப் பானது எனவுந் தோன்றுகின்றது. சங்கத்தினைச் சிறப்பித்தவர்களுள் களனி விஹார புத்தரக்கித தேரர் இலட்சிய துவஜத்தை வழி நடத்திச் செல்லும் ஆதர்ஷ மாக உயருகின்றார்.

அவருடைய நாவண்மை வியக்கத் தக்கது. புதிய சமுதாய மறுமலர்ச்சி பற்றி அந்த நா இசை பாடிற்று. இந்நாட்டின் வரலாற்றிலே, ஒரு ரத்தம் சிந்தாப் புரட்சி மூலம், புதிய மாற்றத்தினை ஏற்படுத்திய சிற்பிகளுள் அவரும் ஒருவர். சங்கம் மீண்டும் மகோந்நத நிலையைப் பெறுவதாயிற்று. ஆட்சியாளரின் மிக உயர்ந்த மட்டங்களிலே கூட சங்கத்தின் ஆலோசனை களுக்கு ஒரு மகத்தான அங்கீகாரம் கிடைப்பதாயிற்று. பௌத்த மறுமலர்ச்சி என்ற பேரியக்கத்தின் சாதனை

படிப்பகம்

www.padippakam.com



களுக்கு ஒரு சாட்சியாய் அமருகின்றோம் என்ற எண்ணமே பெருமை தருவதாகவும் அமைந்தது.

இந்த ஆர்வாரங்களுக்கு மத்தியில் கலாசார மறு மலர்ச்சி என்ற பேரலையின் மத்தியில், இந்த மாற்றங் களுக்கெல்லாம் நாயக புருஷராக விளங்கிய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க சடுதியாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கி முனையிலே நாட்டின் மக்கள் பிரதமரைச் சுட்டுக் கொன்றவன் ஒரு பிக்குவாம். கொலைக்குப் பின்னால் ஒரு பெரிய சதி நடை பெற்றிருக்கின்றது. இந்தச்சதிகளை முன்னின்று இயக்கியவர் விஹாராதிபதி புத்த ரக்கித தேரராம். அவருக்கும் ஒரு பெண் அமைச் சருக்கும் இடையில் தகாத உறவுகள் உண்டாம். என் ஆதர்ஷம், இருளிலே கொடூர காம வாழ்க்கை நடத்திய தாகப் பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாக வந்த பொழுது...

புதிய குழப்பங்கள்!

சங்கத்தில் சேரும் ஆண்கள் பெண்ணாசையைத் துறந்து, காம எழுச்சிகளிலிருந்து விடுதலை பெற்று வாழ்வதுதான் நெறியாம்.

போதிசத்துவர் போதித்த நெறி!

போதிசத்துவரின் புகழை நாட்டும் முன்னணி வீரராகவும், ஆதர்ஸமாகவும் விளங்கிய புத்தரக்கித தேரர் சிறையிலே!

சங்கம் ஒரு குப்பை மேடா? வீட்டிலே வேண்டாத 'குப்பை'கள் அங்கு, என்னைப் போல கொட்டப்படு கின்றனவா? வடிகால் ஆரோக்கியமான ஏற்பாடு. குல மகளிருடைய கற்பு நெறியைப் பேணுவதற்கு வடிகாலாக

www.padippakam.com



கணிகையர் தோன்றினார்கள். சங்கமும் ஒரு வடிகாலா? அது எதற்கு வடிகால்?...

சங்கம் வடிகால்!

புலால் தழுவாமை என்ற நெறி...?

சே!

மனிதருக்குப் போதிக்கப்பட்ட இந்தப் புலால் தழுவாமை என்ற ஒழுக்க நெறி ஏன் மிருகங்களுக்கு— ஆடு, நாய் போன்ற ஜீவராசிகளுக்கு— வலியுறுத்தப்படவில்லை? அன்றொரு நாள் ஒரு நாய் இன்னொரு நாயுடன் போதி மர நிழலில் குடும்பம் நடத்தும் குல விருத்தி வித்தையில் இழுபடுவதைப் பார்த்தேன்.

பூவும் வண்டும்?

இயற்கை!

எது இயற்கை?

புணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டே வம்ச விருத்திப் பணி நடைபெறுதல் இயற்கை.

நான் மட்டும்?

பாலுணர்ச்சியில் வீறு கொள்ளும் அங்கங்களைச் சத்திர சிகிச்சை மூலம் அப்புறப்படுத்தி விட்டா சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்? இல்லை, சங்கத்தில் கடைப் பிடிக்கும் அனுஷ்டானங்களின் பேறாக அவை தங்கள் தசையும் நரம்பும் நிலையிழந்து மரக்கட்டைகளாக மாறிவிடுகின்றனவா? இயற்கையை வெறுத்தொதுக்கி, கோணல் வழிகளில்— சுயதிருப்தி விவகாரங்களில்— உடலைப் பழக்கி எடுத்துக் கொள்வதுதான் ஒழுக்கமா?

இத்தனையும் மீறியே ஒழுக்க சீலர்களாக வாழ்ந்தவர்கள் எத்தனை பேர்? சங்கத்தின் உயர்வுக்காகச்

படிப்பகம்

www.padippakam.com



சர்வ பரித்தியாகம் செய்த எத்தனை உத்தமர்கள் இருக்கிறார்கள்? அவர்களுடைய தந்தங்களையும் பாதுகாக்கின்றார்களா?

இல்வாழ்க்கையில் கிடைத்திருக்கக் கூடிய ஏமாற்றங்களால்- விரக்தியால், பெண்களை வெறுத்து ஓடி, தர்க்கம்- தத்துவம்- மனோவியல் முதலிய துறைகளிலே நிபுணனாகி... அவன் ஒருவன்; முதல்வன். அவனுடைய சுவட்டில் வெறும் மந்தையாக நடக்கும் என்னைத் தலையில் வைத்தா கொண்டாடப் போகின்றார்கள்?

கிடைக்கும் இன்பங்களுள் தலை சிறந்தது என்று லோலர்களால் கற்பிக்கப்படும் சுகத்தினை அநுபவிக்கத் தக்க சாதனமாக அழகே உருவான ஒருத்தி என் காலடியில் கிடக்கிறாள். நானே வேண்டாமென்று உதறுவதா? பெரிய ஹாமுத்ருவை மதியாதவர் யார்? அவருடைய தேஜஸைப் புகழாதவர் யார்? குருத்தினியே! உன்னைக் கட்டித் தழுவி இன்பம் அநுபவித்த அவர் தேகத்தில் துர்நாற்றமா வீசுகின்றது?

மூன்று நான்கு நாள்கள்... இதே நினைவுகள் உள்ளத்தில் சுழல் காற்றாகச் சுற்றிச் சுழன்று... உள்ளம் சருகாக அலைக்கப்படுகின்றது. குகைக்குள் சிக்கிக் கொண்ட ஒலியாக உன் நினைவு மனத்தினை உதைத்துத் தாக்குகின்றது. அக்கினி பொசுக்கும் வாதனை.

நெஞ்சக் குழியிலே ஹோமகுண்டத் தீ இடப்படுகின்றது. அதனை இட்டவள் நீயேதான்! அது மட்டுமா? அந்தத் தீக்குத் தாராளமாக நெய்யும் ஊற்றுகின்றாய். அந்தத் தீயில் சாம்புகின்றேன். அந்தத் தீக்கு வேள்வி கொடுத்தாக வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



வேள்விப் பொருள் !

நானா ?

இல்லை. உன்னிடம் சிருஷ்டித் தொழிலின் ஒத்திகை நடத்தி, அதன் இரகசியங்களை அறிந்தால் என்னுடைய உயிர் போய்விடுமா ?

தீயை அவிக்க வேண்டும்...

அல்லது தீ நாக்குகள் சுழன்று காட்டும் திசைகளின் வழியில்...

வீரமா ? அல்லது வீரிய ஊற்றா ?

இயற்கையின் உந்தலா ? அல்லது ஆண்மையின் குதியாட்டமா ?

நான் ஆணின் ஆண் தன்மை பெறுகின்றேன்.

அதன் வேகத்தில் அலைக்கழிக்கப்படுகின்றேன்.

உன்னைப் பார்க்க வேண்டுமென்ற தணியாத தவிப்பு.

தவிப்பா?

வெறி ! ஆண்மையின் ருத்ர தாண்டவத்தில் குதித்து ஜனிக்கும் வெறி !

## 8
## மயல்

**அஞ்சனம்** தீட்டிய உன் விழிகளிடம் கற்ற வித்தையா? நீ வரும் நேரத்தைக் கணக்கெடுத்து, அவ்வேளைகளில் விஹாரத்தில் நிற்கத் தொடங்குகின்றேன். மாமரத்தடிச் சம்பவத்திற்குப் பின்னர், சந்தித்த அன்று நீ ஏன் முகத்தைச் சிறுத்துக் கருக்கினாய்? ஆண்மையில்லா நபுஞ்சகமென்று அலட்சியமா?

www.padippakam.com



எட்டாத பொருளைக் கிட்டுவதிலிருக்கும் இன்பத்தைப் பற்றி நீ சொல்லியவற்றின் உட்பொருள் விரிகின்றது. கண் ஜாடையின் பரிபாஷையிலேயே எல்லாவற்றையும் சரி செய்து, ஆண்மை என் அகத்தில் மொக்கு அவிழ்ந்து விரிவதை உணர்த்துகிறேன். உன்னிடம் பழைய கனிவு; பழைய குழைவு.

அந்த பௌர்ணமி இரவு உனக்கு ஞாபகமிருக்கின்றதா? திங்கள் தோறும் முளைக்கும் முழுமதி; எத்தனை முழுமதி இரவுகளைத் தேனிலவு இரவுகளாக்கியிருக்கின்றாயோ? எதைத்தான் ஞாபகத்திற்குக் கொண்டு வருவாய்? நான் அந்த இரவை மறக்கவில்லை.

என் கல்யாண அழைப்பிதழைக் கையில் வைத்துக் கொண்டு, என் வாழ்க்கையின் திருப்பத்திற்கு வித்தூன்றிய அந்தச் சம்பவத்தை நினைப்பதிலேதான் எவ்வளவு சுகம் இருக்கின்றது?

அன்று நிச்சயமாகப் பௌர்ணமிதான். பூமியின் மீது அன்று குடம் குடமாகச் சரிக்கப்பட்ட பால் நிலவு ஜாலத்தை என் நெஞ்சம் கொஞ்சமும் மறக்கவில்லை. 'பிட்சை' ஏற்க வந்த பொழுது, புஷ்பாசனத்தில் பகவருக்குக் காணிக்கை மலர்களைக் கொட்டி, இதழ்களிலே மென்னகையை மெல்லச் சுழியவிட்டு, வீசிவரும் தென்றலில் சிகைப்பற்றின் முன்னோச்சி மயிர் சிலந்திக் கூடு கட்டி ஊஞ்சலாட, தியானத்தில் ஆழ்ந்திருப்பதாகப் பாவனை காட்டுகிறாய். என்ன நடிப்பு? வாழ்க்கையின் ஒரு பகுதி நடிப்பிலும் நகருகிறது...

அந் நிலையிலே கூட, போதி மாதவரின் கருணையை நினைத்து மனம் கசிந்துருகுவதாகப் பாவனை செய்து கொள்ளும் அந்த நிலையிலேகூட, என்னை நீ மறக்கவில்லை. குரு அல்லது குருத்தினி

www.padippakam.com



மீது மாணாக்கன் கொள்ளும் அன்பைக் குரு பக்தி யென்றால், என்னைப் போன்ற மாணாக்கன்மீது உன்னைப் போன்ற ஒரு குருத்தினி கொள்ளும் பக்தியை எப்படி அழைப்பது? நாமாகக் கற்பிக்கும் அர்த்தங்களை மட்டும் சென்னியில் வைத்துப் பம்மாத்துக் காட்டும் சொற்களிலே சில உறவுகளைப் புலப்படுத்திவிட முடியுமா?

ஊஹூம்!

பக்தரெல்லோரும்-நிதர்சனத்தின் ஸ்தூல உண்மைகளை மறந்து, கண்களுக்கு எட்டாத, அறிவின் தருக்க வலைக்குள் சிக்காத, பாம்பும் மீனுமாய்த் தோன்றும் விலாங்குக் கற்பனைகளில் கருக் கொண்டு வெளிப்பட்ட மூடக்கொள்கைகள் என்ற மூட்டைகளை அடைக்காக்கும் அப்பாவிகளெல்லோரும் — கெட்டிக்காரப் புளுகளின் கற்பனைத் திறனாலும், கலைஞன் ஒருவனின் கைவண்ணத்தினாலும்,ஆற்றங்கரையில் மிதி கல்லாகக் கிடந்து தேய்ந்து போகவேண்டிய கருங்கல், 'பகவான்' திருவுடன் எழுந்து நிற்கும் அதிசயத்தில் தங்களை மறந்திருக்கும் பொழுதுகூட,நீ என்னைமறக்கவில்லை. பக்தி என்னும் பனித்திரையைப் போர்த்தி, மனத்தில் எழும் உஷ்ண எண்ணங்களுக்கு மற்றவர்கள் உறையிடுவதாக வெட்டி வேடம் புனையும் அந்நேரத்திலேகூட, கூம்பிய கைகளில் மலர் வைத்து,கன்னத்தில் குழி பதிய, இதழ்களில் அரும்பும் புன்னகையை உதிர்த்தும் உதிர்க்காமலும், பகவானென்று கலைஞர்களும் நாமும் கற்பித்துக் கொண்ட சிலைக்கு முன்னால் பிரார்த்தனை செய்வதாகப் பாசாங்கு செய்யும் பொழுதுகூட, நீ என்னை மறக்கவில்லை. யாருமே என்னையும் உன்னையும் அவதானிக்காத ஒரு பின்னத்தின் வினாடியைத் தேர்ந்தெடுத்து, மூடியிருக்கும் இமைகளைச் சற்றே

படிப்பகம்

www.padippakam.com



ஒதுக்கி, அதற்குள் பளிச்சிடும் இரண்டு நட்சத்திரக் கண்களின் ஒளியை என் மீது பாய்ச்சி, விழி மொழி பேசியது ஞாபகமிருக்கிறதா? நீ ஒரு ஞாபக மறதிக்காரியாக இருக்கலாம். ஆனால், உன் மாணாக்கனாம் நான் எப்படி மறப்பேன்?

நாவேன்? மொழியேன்? அந்தக் கண்கள்—இமை விளிம்பில் எட்டிப் பார்த்த நட்சத்திரக் கண்கள்—ஒரு கணத்தின் பின்னத்தில் என்மீது சொரிந்த அன்பும், விடுத்த செய்தியும்...உன் அன்பே—அன்பு!

வார்த்தைகள் எதற்கு?

உனக்கும் எனக்கும் ஏற்பாடு தெளிவாகின்றது. நான் மெதுவாக, நீயே எனக்குக் கற்பித்துத் தந்த நயன மொழியில் ஜாடை காட்டி, விஹாரத்தை விட்டு வெளியேறுகிறேன். மக்கள் கூட்டத்தைப் பிரிந்து, ஆற்றுக்குச் செல்லும் வீதி வழியே நடக்கின்றேன். ஆற்றுக்குக் கிளைவிடும் ஒற்றையடிப் பாதையின் முகப்பில், பருத்துச் சடைத்து வளர்ந்த ஆலமரமொன்று நிற்கின்றது. அதன் கூனல் முதுகில், நிழலில், மறைந்து கொள்ளுகின்றேன். என் விழிகளை மட்டும் விஹாரத்திலிருந்து வரும் வழியின்மீது பதித்து, நீ வருவாயென்று காத்திருக்கின்றேன். கால வெள்ளத்தின் சுழிப்பிலே, அரும்பிய மணித்துளிக் குமிழிகள் பல மடிந்து, நிகழ் காலமென்ற கடமையைக் கடந்து, இறந்த காலம் என்ற...

நீ வருகிறாய். எதிர்பார்த்ததற்கு ஒக்கத்தனிமையில் வருகிறாய். 'உலகில் இந்த உடற் சுமையைத் தாங்கிப் பொந்திலிருந்து புறப்பட்ட பொழுது துணையில்லாமற் பயணம் வைத்தோம்; இறுதியில் இந்தத் தோற்பாண்

www.padippakam.com



டத்தைக் கல்லறையில் உக்கி மக்கச் செய்யும் பிரயாணத்திற்கும் துணையில்லாமலே செல்கின்றோம். இடைப்பட்ட ஜீவித நாள்களுக்கு மட்டும் ஏன் துணை தேவை? வேலீ தேவை?' என்ற மனோபாவம் எப்பொழுதுமே உனக்கிருக்கின்றது. ஆகையினாலேதான் நீ தன்னந் தனியாக நடமாடுகின்றாய், தனியாகவே உன் ஆற்றங் கரை வீட்டில் வசிக்கின்றாய் என்பது சரியா?

நான் 'உஸ்ஸ்' என்று மிக மெல்லிய குரலில், எங்கே ஆலமரத்துக்குக் கூடச் செவியிருக்கலாமோ என்ற பயக்கெடுதி இழையோடிய குரலிலே சைகை செய்கின்றேன். நான் என் முழுமுதற் கடவுளாக வரித்துக் கொண்ட குருத்தினியே! உன் ஆற்றல்கள் என்ன? உன் செவிப்பறை அவ்வளவு நுண்ணியதா? பதட்டம்- பரபரப்பு எதுவுமின்றி, ஒலி வந்த திக்கில் உன் பருந்துப் பார்வையை எறிகின்றாய். என் உள்ளத்தை என் வசம் ஒப்படைத்து, சந்து பொந்தின் மறை பொருளாய் இருக்கும் மூலஸ்தான வழிபாட்டில் ஈடுபட்டு, வாழ்க்கையின் சூட்சுமத்தினை அறிந்துவிட வேண்டுமென்ற குதுகுதுப்பில் சாம்பும் உன் பிரிய மாணாக்கனாம் நான், ஆல மரத்தின் கூனல் முதுகு மறைவில் நிற்கின்றேன். கலங்கரை விளக்காக அட்டதிக்கும் அலைபாயும் உன் கண்கள் என்னைத் தேடுகின்றன.

துணிச்சலுடன் இவ்வளவு தூரம் வந்துவிட்ட என்னுடைய நெஞ்சில் சோழைத்தனம் தும்பி ஊதுகின்றது.

எனக்குப் பக்கத்தில், பூமாதேவியின் புல்வெளி அங்கத்தினை அரவணைக்கும் முயற்சியில், பல் சுத்தம் செய்பவர்களின் கிராதகச் செயலினாற் பல தடவைகள் தோல்வியுற்றும், வெற்றி இன்னும் இரண்டு விரற்

www.padippakam.com



கட்டை தூரத்திற்றான் இருக்கின்றது என்ற நம்பிக் கையுடன் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஆலம் விழுதினை அசைத்துச் சைகை காட்டி என் இருப்பிடத்தைக் குறிப்பிடுகின்றேன்.

ஆண்டவனும் பக்தனும் இரண்டறக் கலப்பதிலே தான் பக்தி முக்தி பெறுகிறதாம். இந்த முக்தி விவகாரம் காதற் துறையிலும் இரண்டறக் கலப்பதிலே தான் தங்கியிருக்கின்றது என்ற ஒரு தெளிவின்மையின் தெளிவு.

நீ என் பக்கத்தில் வருகின்றாய். நீ அந்தப் பால் நிலவில், புருவத்திற் சிலையேந்தி, நயனத்தில் பஞ்ச பாணன் கணை தொடுத்து, என் மனதைத் துளைத்துக் கொண்டிருக்கின்றாய். அந்தக் கோலத்தில் இவ்வளவு காலமும் என் கண்களிலே தட்டுப்படாத புதிய சௌந் தர்யம் உன் உடலெல்லாம் பூத்து வழிவதாகத் தோன்று கின்றது. ரஸனையில் அமுங்குகின்றேன். வீசிவரும் காற்றின் அலைக்கழிவில் சில பழுத்த இலைகள் தண்ட றுந்து விழுந்து, சருகுகளில் உராய்ந்து, மௌனத்தைக் கலைக்கும் பொழுது போக்கில் ஈடுபட்டிருக்கின்றன. இல்லாவிட்டால், காயாவில் போதிமர நிழலில், தியானத்தில்,ஆழ்ந்திருந்த சித்தார்த்தருடைய உள்ளத் திலே கூடக் குடிகொண்டிருக்காத பேரமைதி நிலவி யிருக்கும்.

என்னைத் தூண்டி, பிடரி பிடித்துத் தள்ளி, இவ்விடம் அழைத்து வந்த தைரியம் எங்கே?

நீயும்—நானும்!

பாதாள நதி பெருக்கெடுக்கும் அந்த வேளையில் பல்லாயிரக்கணக்கான ஜீவன்களுக்கு வித்தூன்றும் ஜீவ

www.padippakam.com



நதி சங்கமிக்கும் அந்தத் துகட் பொழுது நேரத்தில், மின்னல் சொடுக்கிய சடுதியில் ஏற்படும் அந்தச் சுகம்...

சீவர ஆடை பற்றிய பிரக்ஞையும் ஏற்படுகின்றது.

வயல் வரம்புகளைப் போன்று, மஞ்சள் துணித் துண்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. பயிரின் வளர்ச்சிக்கு வரம்பு நீரைத் தேக்கி வைத்திருக்கின்றது. ஆனால், பயிர் வரம்புகளையும் மீறி வளருகின்றது... சீவர ஆடையின் வரம்புகளை மீறி, என் உணர்ச்சிகள் வளருகின்றன...

''ஹாமுத்ரு!''

''சோமா...''

''அன்று என்னை உருட்டித் தள்ளிவிட்டுச் சென்ற பொழுதே, எப்பொழுதாவது நீங்களாக என்னை நாடு வீர்கள் என்பது எனக்குத் தெரியும்.''

''நடந்தவை ஏன்? என்னைப் பின் தொட ருங்கள்...''—இதைச் சொல்லி, என் பதிலுக்குத் தரிக் காது, சமீபமாக, ஆனால் வீதியிலிருந்து பார்த்தால் தெரியாத தூரத்தில், சடைத்து வளர்ந்து நிற்கும் மூங்கில் புதர் மறைவில், சயன மஞ்சத்திற்கு ஆயத்தஞ் செய்கின்றாய்.

வேரூன்றி மரந்தாங்கும் ஓர் ஆலம் விழுதினைப் போல, என் கால்கள் நிலத்தில் ஒட்டிக் கொண்டன போன்ற மலைப்பு ஏற்படுகின்றது.

கால்களுக்கும் மனத்திற்கும் தர்க்கம்.

ஒழுக்கத்திற்கும் ஆசைகளுக்குமிடையில் மல்யுத்தம்.

அ—4

படிப்பகம்

www.padippakam.com



நான் என்னுள் எனக்காக ஒரு யுத்தம் நடத்தி முடிக்கின்றேன்.

மறு கணம்—

சீலத்தைப் பற்றிய கொள்கைகள் பழுத்த இலைகளாக உதிர்ந்து, நீ என் நடு நெஞ்சில் மூடியுள்ள தித்தியின் தீ நாக்குகளுக்குச் சாம்பராகி...

கோழைத்தனம் பனியாக உருக, தைரியம் கதிரவனாய் எறிக்கின்றது.

நானும் மூங்கிற் புதருக்குள் வருகின்றேன்.
நீ...

என் குருத்தினியே, நீ...

''என் இனியவரே!'' என்று என்னை அழைக்கின்றாய். அந்த மெதுவான அழைப்புக்கு அவ்வளவு சக்தியா?

அக்நியின் புலால் வேட்கை உடலின் ஒவ்வொரு நகக் கண்ணிலும் நீக்கமறப் பரவி நிற்கின்றது...

## 9
## வித்தை

அற்பமோ? அல்லது அனந்த கோடி இன்பமோ?

வாழ்க்கையின் ஒவ்வொரு அம்ஸமும் கலைதான். அவதானத்துடன் கற்று, பயிற்சி மூலம் தேர்ச்சி பெற்று, அநுபவப் படியில் முன்னேற வேண்டும். இந்த உண்மையில் நம்பிக்கை இல்லாவிட்டால், நான் இப்பொழுது கல்யாணத்திற்குத் தயாராக இருக்க மாட்டேனே!

www.padippakam.com



வம்ஸவிருத்திக் கலையின் ஆரம்ப வகுப்பு, மூங்கில் மறைப்பில் நீ சமைத்த மஞ்சத்தில் துவங்குகின்றது.

நீ இடையின் கீழுள்ள பகுதிகளை, உந்திச் சுழிக்கு மேலாகவும் அம்மணமாகக் காட்டும் வாக்கிலே சேலையையும் பாவாடையும் ஒதுக்கிப் படுத்துக் கிடக்கின்றாய். வத வத வென்று மென்மையின் சதைச் செழிப்பான தொடைகள் சேரும் இடத்திலே மயிர்க் கற்றையா? சிலந்தியின் ஆம்பி இழையா? கருந்தேளா? ஒரு லாவகத்தில், கருந் தேள் அசைந்ததா? குல விருத்திப் பதியத்தின் மூல வெடிப்பினை அகட்டிக் காட்டிப் படுத்துக் கிடக்கின்றாம்...அதனை அந்தக் கோலத்திலும்கோணத்திலும்பார்க்கும் பொழுதே நரம்புகள் மின் இயக்கத்தில் முறுக்கேற, மயிர்கள் சிலிர்த்து விறைப்புக் கொள்ளுகின்றன.

சுந்தர விளையாட்டின் ஆதார கலசங்களை சட்டையின் கீழ்முடிச்சு நெகிழ்த்திப் பிதுக்கிய பொழுது, உயிர் பெற்ற முயற்குட்டிகளைப் போன்று முன்னே பாய்ந்த கவர்ச்சி...

நான் அப்பாவியாக, சாரைப்பாம்பினைப் போன்று கட்டிப் பிடித்து நெளிவதிலேதான் இன்பமிருக்கிறது என்ற நினைப்பில்...

பூமியைப் பெண்ணிற்கு உருவகப்படுத்துகின்றார்கள்...நசியும் மலைகளையும், விரிந்து மலரும் சதுப்புப் புல்வெளிகளையும் தேடி அலைந்தேனா?

உணர்ச்சியின் விந்தை! தோல் தசையாகி, தசை நரம்பாகி, நரம்பு எலும்பாகி, எல்லாம் கண்சிமிட்டும் நேரத்தில்...

www.padippakam.com



குளிரும் உஷ்ணம்; சுடும் வெள்ளப் பிரவாகம். முற்றிப் பழுக்காத மாம்பழத்தில் புரையோடிக் கிடக்கும் புளிப்பைப் போல, தித்திப்பு அநுபவத்தில் எரிவும் வேதனையும் படர்ந்து... உச்சிக்கு ஏறுவதற்கு முன்னர், நடு வழியிலே உடைப்பு ஏற்பட்டு, பனியாக உறைந்து கிடந்த வெள்ளம் உருகி, வாய்க்கால் விளிம்புகளில் வழிந்தது.

ஆயாசம்—சோர்வு...

நான் செயலற்றுக் கிடக்கின்றேன்.

உன் முகத்தில் ஜுவலித்த பசி வேகத்தையும், அதில் கலந்திருந்த திருப்தியின்மையையும் அவதானிக்கின்றேன்.

தொட்டாற் சுருங்கி மரம்போல்...எல்லாமே... விலகுகின்றேன். சீ, இதுதானா, கிடைக்க முடியாத இன்பமா என்கிற ஓர் அலட்சியம். இச்சையின் சுய திருப்திக்கும், இதற்கும் என்ன வேறுபாடு? வினாடிச் சிதறலில் தோன்றிய அருவருப்பு உணர்வு ஒரு கண நேரம் சூறாவளியாக வீசி, மறுகணமே ஓய்கின்றது.

புதரை விட்டு வெளியேறுகிறோம்.

உன் முகத்தில் திருப்தியில்லை. இருப்பினும், வெற்றியின் சாயல். பூரணத்துவம் அடையாத இன்பம் என்ற உணர்வு நெஞ்சின் முள்ளாக ஏறி, ஏற்பு வலியினை உண்டாக்குகின்றது. எல்லாவற்றிற்கும் என் கற்றுக் குட்டித்தனந்தான் காரணம். வீணையிலே சுருதி சுத்தமாக இசை எழுப்பப் பயிற்சி அவசியம். அந்தந்தக் கலைகளுக்கு அந்தந்தப் பயிற்சிகள்.

கொண்டை போட்ட உன் கேசத்தில் ஒட்டிக்கிடந்த சருகுகளைப் பிய்த்தெறிந்து, சேலையைச் சரி செய்த

www.padippakam.com



வண்ணம், நீ முன்னால் நடக்கின்றாய். நான் உனக்குப் பின்னால், உண்மையைச் சொன்னால், தவசிப்பிள்ளையாகப் பின் தொடர்கின்றேன்.

''சோமா!''

''என்ன ஸாதுக்களே?''

''...''

''தானம் தந்தேன், திருப்தியில்லை?''

''நாளைக்கு உன் வீட்டுக்கு வரட்டுமா?''

''மருந்துதான் நல்லது.''

''எனக்கு விருந்துதான் தேவை.''

''தேன் திகட்டி விடக்கூடாதே!''

''சோமா! என்னைத் தவிக்க விடாதே!''

''நான் நோய் பரப்பி என்று சொன்னேனே?''

''நோய்?''

''காதல்! அதனை நெய்யூற்றி வளர்த்த பின்னர் அவிப்பதிலேதான் என் சாமர்த்தியம் இருக்கிறது.''

''அப்படியாயின்?''

''நாளை மறுதினம் வாருங்கள்; நான் காத்திருப்பேன்.''

நீ உன் வீடு நோக்கி நடக்கிறாய்; நான் விஹாரத்திற்குத் திரும்புகின்றேன்.

## 10
## வேள்வி

அசுரம், என் நெஞ்சில் வியாபிக்கிறது.

www.padippakam.com



காதலுக்கும் கள்ளுக்கும் ஏதோ ஒற்றுமை இருக்கிறது. குடிகாரன் கள்ளுண்ணக் கள்ளுண்ண மேலும் கள்ளையே அதிகம் அதிகமாக நாடுகிறான். குமரப் பருவத்திலே அநுபவிக்க அநுபவிக்கக் காமமும் அப்படித் தான்.

அடுத்த நாள்.

உன்னைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை நெஞ்சில் நிரம்பி வழிகின்றது. முதல் நாள் கிடைக்காத வெற்றியை, அடுத்த நாளாவது பூரணப்படுத்தும் தவிப்பு மூங்கிற் புதரில் இருந்திருக்கக் கூடிய அவசரம், வீட்டில் இருக்காது, சிட்சையை ஒழுங்காகப் பெறலாம் என்ற நம்பிக்கை.

அஸ்தமன நேரத்தைத் தேர்ந்தெடுக்கின்றேன். என்னை அறியாமல் என் கால்கள் உன் வீட்டிற்கு என்னை இழுத்து வருகின்றன. நான் இரும்புத் துணுக் கல்ல, இருந்தும் உன் ஆகர்ஷண சக்தி என் சீவர ஆடையையும் நுழைத்து இழுக்கிறதே! 'காமம் வெட்க மறியாதது' என்பதை முழுசாக ஒப்புக் கொள்ளுகிறேன், அன்று என் காலடியில் விழுந்து என்னை வேண்டினாய். அன்று உன்னை உதறித் தள்ளிய அதே நான், இன்று காலடியில் விழுந்து கிடந்தாவது...

தேனைச் சுவைக்கக் கருதிய ஈ தேன் குடத்திலேயே விழுந்து விட்டதைப் போல...

உன் வீட்டின் கதவு பூட்டப்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது. ஒரு சமயம் கொல்லையிலிருக்கும் மாமரத்தின் கீழ்ப் படுத்திருக்கலாமென்ற நினைவு, காரண வேலியை எட்டிப் பார்க்கின்றது.

www.padippakam.com



என் கால்கள் திரும்ப முனையும் நேரத்தில், ''காசை முதலில் தா'' என்று ஒலிக்கும் உன் குரல் என் காதில் விழுகிறது.

கதவின் சாவி ஓட்டைக்குள் என் விழியைப் புகுத்திப் பார்க்கிறேன்.

அறையினுள் மங்கியெரியும் விளக்கொளியில், நீ கட்டிலில் அமர்ந்திருப்பதைப் பார்க்க முடிகின்றது. நாம் நிர்வாணமாகவே பிறந்தோம் என்பதை இந்த வயதிற்குப் பிறகும், நீ எல்லோருக்கும் காட்டிக் கொண்டே இருக்க வேண்டுமா ?

கட்டிலில் நீ; கட்டிலின் கீழ்-நிலத்தில் ஒருவன்.

அவனுடைய முகம் தெரியவில்லை; பின்புறந்தான் தெரிகிறது. அவனுடைய தலை மேலும் கீழுமாக ஆடிக் கொண்டிருக்கிறது. அந்தத் தலையாட்டம் குடிபோதையின் வசமானவர்களுக்கே சொந்தமானது என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.

உன் கைகளில் சில ரூபாய் நோட்டுகள் இருப்பதைக் கவனிக்கிறேன். மறுபடியும் மறுபடியும் எண்ணிப் பார்த்துக் கொண்டே இருக்கின்றாய்.

''என்ன, எட்டுத்தானே?...இன்னும் இரண்டு?''

''ஏன்டீ இன்னமும் குமரியாட்டம் பேசுகிறாய் ? இது போதாது உன் மூஞ்சைக்கு ? அந்த ஹாமுத்ருவும் பத்துப் பத்தாக எண்ணியா தருகிறான்?'' மதுபோதையில் தடம்புரண்டு கிடக்கும் நாக்கு உச்சரித்துத் தள்ளும் வார்த்தைகள்.

www.padippakam.com



"அது என் இஷ்டம். நான் விரும்பினால் யாருடனும் சும்மா போவேன். அந்த ஹாமுத்ருவுக்கு இதனால் கிடைக்கும் பணத்தையும் தானம் கொடுப்பேன். என் உடலை அநுபவிக்க நீ விரும்புகின்றாய்—அதனை எனக்குப் பிடித்தமான ஒரு விலைக்குத் தர நான் தயாராக இருக்கிறேன். வியாபார நியதிகள் இந்த விவகாரத்திலும் செல்லும். சந்தையில் கிடைக்கக் கூடிய பெண்களின் எண்ணிக்கையும், தேவையுந்தான் வாடகை விகிதத்தை நிர்ணயிக்கின்றன. உனக்கு நான் தேவையா ? அப்படியாயின் இன்னும் இரண்டை எடு...இல்லாவிட்டால், வெளியே போய் வேறு யாராவது ஒருத்தியைப் பார்."

திக்பிரமை அடைகிறேன். முன்னறிவித்தலில்லாத பூகம்பத்தினால், என் பாதங்களுக்குக் கீழேயுள்ள நிலப் பகுதி பிளந்து, அந்தப் பிளவில் நான் அமுங்கிப் போவதாக உணருகிறேன். என் தலை, பூசாரியின் முன்னால் சுழலும் பேய் பிடித்த பெண்ணின் தலையாக உருக் கொள்ளுகிறது. வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் அறுந்து என் சென்னியில் விழுவதைப் போல...

சே!

குடலைக் குமட்டி யெடுக்கும் அருவருப்பு.

பாலென்ற எண்ணத்தில் சுண்ணாம்புத்தண்ணீரைக் குடித்துவிட்ட அவஸ்தை!

நிலைமையைச் சமாளித்துக் கொண்டு திரும்ப யோசிக்கிறேன். ஏதோ கரங்களின் ஸ்பரிசத்தில் என் தலை திரும்புகின்றது.

அங்கு பெரிய ஹாமுத்ரு—விஹாராதிபதியான தேரர்—நிற்கின்றார்.

www.padippakam.com



'விளக்கம் தேவையில்லை; எல்லாம் எனக்கு விளங்கும்' என்பதைச் சொல்லும் கண்கள்.

விஹாரத்தை நோக்கி அவர் முன்னால் நடக்கின்றார்.

நான் அவரைப் பின் தொடருகிறேன்.

மௌனம் இருவருக்குமிடையில் சுவர் எழுப்பி நிற்கின்றது.

நீ ?

அதற்கிடையில் பேரத்தை முடித்திருப்பாயா ?

## 11
## போதனை

அடுத்த தினம்.

பொழுது புலரும் வேளையில் பெரிய ஹாமுத்ரு என் முன்னால் நிற்கின்றார்.

''சரணங்கா! நான் உன்னைக் குற்றஞ் சாட்டவில்லை. உனக்காக அனுதாபப்படுகின்றேன். நீயாக-உன் சித்தத் தெளிவினால்-இந்தச் சங்கத்திலே சேரவில்லை. 'பிரச்சினைப் பிள்ளை, சங்கத்திலே சேர்ந்து உபயோகமாக வாழ்வான்.' என்று தன்னை உன் 'மாமா' என்று அறிமுகப்படுத்திய நெட்டைப் பேர்வழி கூறினார். நீ சங்கத்திலே சேர்ந்த சில மாதங்களுள் உன் அப்பா இறந்தார். 'இயற்கை மரணம்' என்று வைத்திய அறிக்கை கூறியது. உன் அப்பா செத்த ஆறு மாதங்களுக்கிடையில், அந்த மாமாவுடன் உன் அம்மா ஓடிப் போய்விட்டாள். பச்சை வயதிலே நீ சங்கத்திலே சேர்க்கப்பட்டாய். உன் குடும்பத்திலே ஏற்பட்ட இந்தச் சடுதி

www.padippakam.com



யான மாற்றங்கள், உன்னை அறியாதே உன்னில் தாக்கங்களை ஏற்படுத்தின. ஒழுக்கம் வளர்ந்தது. ஞான வழியிலே நின்றாய். சங்கத்தின் முழு அங்கத் தவனாய் விதிக்கப்பட்டாய். இருப்பினும், சபல நினை வுகள் செழித்து வளரும் பொல்லாத பருவம் உன்னு டையது. தேகத்தின் சபலத்திற்கும், பருவத்தின் உணர்ச்சிகளுக்கும் உன்னால் தாக்குக் கொடுக்க இய லாது என்பதை நான் உணருகிறேன். நீயானாலென்ன? நானானாலென்ன? உலகின் ஆஸாபாஸங்களுக்கும், இச்சைகளுக்கும் கட்டுப்படாது தாமரை இலை நீராக வாழப்பழகிக் கொள்ள நீண்ட பயிற்சி தேவை. துறவறம் என்பதும் ஒரு கலை. வைரம் பாய்ந்த நெஞ்சுறுதி யினால் சாதிக்க வேண்டும். அத்துடன் சூழ்நிலை யும் இசைவாக அமைதல் வேண்டும். இந்த ஊரின் சூழல், உன்னை இகபோக இச்சைகளில் பிணைத்து விட்டது. மனதை மீண்டும் துறவற நிலைக்குத் திருப்ப ஒரு புதிய சூழல் தேவை. ஆகையால் உன்னை வேறோர் விஹாரத்திற்கு இன்றே அனுப்பி வைக்கத் தீர்மானித்திருக்கிறேன். உன் நன்மையையும், சங்கத் தின் மேன்மையையும் கருதித்தான் இந்த ஏற்பாட் டினைச் செய்திருக்கிறேன் என்பதை ஒரு நாள் உணரத்தான் செய்வாய். இன்னொன்று; இன்ப மென்ற சொல்லுக்குத் தவறான அர்த்தங்கள் கற்பித் துக் கொள்ளாதே. இன்பம் என்பது மனதின் மயக்க நிலையே. மனதின் பருவத்திற்கும், பக்குவத்திற்கும் ஏற்ப இன்பத்தைப் பற்றிய கருத்துக்கள் மாறுபடு கின்றன. சிற்றின்ப விவகாரம் என்ற இன்பம் தொடு வானைப் போன்றது. வெறும் போலி; உண்மை என்ற மயக்கத்தை மட்டும் தருகின்றது. அதை—அந்தத் தொடுவானை—தொட்டுவிட வேண்டுமென்று முனைந்த அத்தனை பிரயாணிகளுக்கும் கிடைத்த வெகுமதி தோல்வி-ஏமாற்றம்-துன்பம்-மனக் கசப்பு! சரணங்கா, நீ அறியாதனவல்ல. உன் மனதில் பழைய பாடங்களை

www.padippakam.com



மீட்டுகிறேன். புலன்களால் உண்டாகும் பற்றுகள் எல்லாம் துன்பம் தருவன. அதற்குக் காரணம் அவா. அதனைக் கடந்து நிர்வாண மோட்சத்தை நாடுகிறான் பிக்ஷு. அவன் நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்லூக்கம், நற்கடைப் பிடி, நல்லமைதி ஆகியவற்றைக் கடைப்பிடித்து ஒழுகு கின்றான். உன் அகத்தே அழிக்கப் படாது அடங்கிக் கிடந்த தீய எண்ணங்கள் எழும்பிச் செயற்படத் துவங்கி விட்டன. பஞ்ஞா என்ற நுண்ணறிவால் அவற்றை அழிப்பது உன் கடமையல்லவா? இந்த உலகம் என்ற சகதிக்குள் சிக்கித் தவிக்காதே. இவ்வுலகம் அநித்திய மானது; துன்பமுடையது; அநாத்மிகமானது; அசுத்த மானது! பற்றற்ற பிக்ஷு வாழ்க்கையால் வீட்டை அடையும் மார்க்கத்தில் சேர்ந்து விடு...உன் பிரயாணத் திற்கு எல்லாம் தயார். மதியத்தில் புறப்படத் தயாராக இரு.''

பெரிய தேரர், புனித பிக்ஷு எனத் தன்னைக் கற்பித்துக் கொண்டு போதிக்கிறார்.

நான் மௌனமாகக் கேட்டு நிற்கின்றேன்.

இவர் மட்டும் சங்கத்தில் சேராது போனாலும், மேடைப் பேச்சின் மூலமே, பெரிய அரசியல்வாதியாக முன்னணிக்கு வந்திருக்கக் கூடும்.

பேச்சிலே சாரம் இருந்தாலும். எனக்கு உறைக்க வில்லை. தர்க்கத் திவலைகள் பறக்கின்றன. 'நீர் மட்டும் யோக்கியனா?' என்று கேட்க உன்னிய நாக்கு அண்ணத்தில் ஒட்டிச் சருகாக உலருகின்றது. 'பெண் களை மற. புலாலிச்சையைத் துற' என்று கட்டளை யிட்ட சித்தார்த்தனைப் பார்த்து, 'நீ மட்டும் யசோதை என்ற எழிலரசியைத் தழுவி அநுபவித்தீரே!

www.padippakam.com



வாலிபத்தின் வீரியம் உப்பி உம்முடைய நரம்புகள் முறுக்கேறியிருந்த அந்தக் காலத்தில், பெண்ணாசையைத் துறக்க நீர் சக்தியற்றிருந்தது என்? கருணையைப் போதிக்கும் நீர், உமது இளம் மனைவி 'ஆண் ஆசை'யைத் துறக்க இயலாத நிலையில், இளமைத் துடிப்புடன் அங்கம் அங்கமாகச் சாம்பிக் கொண்டிருந்ததை நீர் நினைத்துப் பார்த்ததுண்டா?' என்று யார் கேட்டார்கள். ஒருவருமில்லை. காயாவின் போதி மரத்தின்கீழ் வைசாகப் பௌர்ணமியில் ஞானம் பெற்றாராம். அதன் பிறகு அவருடைய முகத்தில் வீசிய சாந்தி அவருடைய சீடர்களைத் தர்க்கக் கலையை மறக்கச் செய்ததாம். அப்படித்தான் பெரிய ஹாமுத்ருவின் ஜோதிக்கு முன்னால், பேச இயலாது தவிக்கின்றேன்...

உன் உடலைத்தழுவி அவர் சம்பாதித்த ஜோதியா?

அப்படியாயின் சூன்யத்தின் இருள் எப்படி என்மீது மட்டும் கவிந்தது.

## 12
## சகதி

அக்நி எழுச்சிகளைத் தூண்ட இயலாத புதிய சூழலுக்கு, பெண்களின் நடமாட்டம் காததூரம் வரை இல்லாத ஒரு விஹாரத்தில் வந்து சேருகிறேன்.

பூ மலராத் தோட்டத்தில் என்னஅழகு இருக்கிறது? பெண்களில்லாப் பிராந்தியமும் அப்படித்தான். கிழ ஹாமுத்ருக்களும், சங்கத்தில் புதிதாகச் சேர்ந்துள்ள சிறார்களும்! பெண் மச்சமே வீசவில்லை. புதிதான விகாரச் செயல்களுக்குப் பெயர்தான் பிரமச்சாரியமா?

www.padippakam.com



அவர்கள் மத்தியில், நான் நீரிலிருந்து வடிக்கப்பட்ட மீனாக—கிளையிலிருந்து வழி தப்பிய மானாக-தவிக்கிறேன்.

சலிப்பு.

கண்கள் கனக்கின்றன. படுக்கையில் நோயாளியாகச் சரிந்துவிடும் ஆயாசம். என் சீவர ஆடையைக் காட்டிக் காட்டிக் கிழ ஹாமுத்ருக்கள் ஏதோ குசுகுசுக்கிறார்கள். அன்று மாமரத்தின் கீழ், அல்லது மூங்கிற் புதரில் ஏற்பட்ட கறைகள், இன்னமும் சீவர ஆடையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றனவா?

அவர்கள் உற்றுப் பார்க்கும் சீவர ஆடையின் பகுதியை நானும் பார்க்கிறேன். குரும்பைத் துணுக்குகளில் சம்மாணம் கொட்டி உட்கார்ந்து விட்டதைப் போன்று கயர்த் துளிகள். நாளாக நாளாக அந்தக் கயர்த் துளிகளின் எண்ணிக்கைகள் குட்டி போடுகின்றன. சோர்வின் சாகரத்திற்குள் அமுக்கப்படுகிறேன். பிணி! உலக பந்தங்களுள் பிணைக்கப்பட்ட சின்னம். இயற்கையின் நீர்க் கழிவுகளைச் செய்யும் பொழுது தாங்க முடியாத எரிவு-நோ-வேதனை!

மூலையில் முடங்கி, இறுக்கிப் போர்த்துக் கொண்டு படுக்கிறேன். முகத்தை வெளியிற்காட்ட வெட்கம். போர்வையென்ற ஓட்டிற்குள் நான் ஆமையாகின்றேன்...சாவைப் பற்றிய நினைவுகள் நிழலாட்டம் போடுகின்றன.

பின்னர் ஒரு நாள் வந்து சேர்ந்தது. என் மஞ்சள் அங்கி களையப்படுகிறது. பிட்டனெனப் பிரகடனப் படுத்தப்படுகிறேன். புழுதி சேர் இன்ப துன்பங்களுடன் பிணைக்கப்பட்டு, தன் வம்ச விருத்திக்கான விதைகளைத் தூவி, இயற்கை நியதியென்ற ஆற்றுவெள்ளத்

www.padippakam.com



தின் ஓட்ட வாக்கில் வாழ்க்கையை நடத்தும் சாதாரண மனிதனின் உடை தரப்படுகின்றது.

அன்றே தூரத்திலுள்ள நகரத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறேன். அங்கு வைத்தியம் நடைபெறுகின்றது. பறங்கிப் புண் என்று விளக்கம் தரப்பட்டு, ஊசி மருந்துகள் மூலம் சிகிச்சை தரப்படுகின்றது.

நீ உண்மையைச் சொன்னாய்.

உன் நேர்மையைப் பாராட்டுகிறேன்.

நீ நோய் பரப்பியேதான்.

மனநோய் வைத்தியர்களுக்கு மனநோய் பரப்புபவள் நீ!

நீ காதல் நோய் பரப்பியா ?

இல்லை.

ஊசி மருந்து பாய்ச்சித்தான் சொஸ்தப்படுத்த வேண்டிய பறங்கிப் புண்பரப்பி.

நீ சாமர்த்தியசாலி.

சிலருக்கு நீ இலவசமாக அளிக்கின்றாய்.

மற்றும் சிலரிடம் இந்தக் கைங்கரியத்திற்காகச் சுளை சுளையாகப் பத்து ரூபா வசூலித்து விடுகின்றாயே!

## 13
## முழுமை

அழைப்பைக் கையில் வைத்திருக்கும் பொழுது ஏன் உன் ஞாபகந்தான் வரவேண்டும்? என் உள்ளத்தில் நீ நடமாடிய சுவடுகள் இன்னும் அழியவில்லை.

www.padippakam.com



உள்ளமா?

அது பாலைவனப் பரப்பு. அதில் தாகம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற வேட்கையில், பசுந்தரையைக் காணலாம் என்ற நம்பிக்கையில், எத்தனையோ பிரயாணிகள் அலைந்திருக்கலாம். அவர்கள் நடமாடிய சுவடுகள் உன் உள்ளத்தில் பதிந்திருக்கின்றனவா? ஒருவனின் அடிச்சுவடுகளை இன்னொருவன் அழிக்க... மற்றவன் பின்னவனின் சுவடுகள்மீது நடக்க...லொக்கு ஹாமுத்ருவின் சுவட்டை நானும், என் சுவட்டை? தன்மீது நடந்து உருக்குலைந்தபிரயாணிகளைப் பற்றிப் பாலைவனம் ஏன் கவலைப்படப் போகின்றது?...

குருத்தினியே! என்பாத சுவடுகளுள் ஒன்றுதானும் அழிபடாது உன் உள்ளத்தில் இருக்கிறதா?

நீ என் உள்ளத்தில் நடமாடிய சுவடுகள் இன்னமும் தெரிகின்றனவே! அவை அழிய வேண்டாமா? அப்பொழுதுதான் மன நிறைவு ஏற்படுமா?...இன்னும் ஒரு வாரத்தில் வேறொரு பெண் என் மனம் என்ற மணற்பரப்பில் நடக்கப் போகிறாள்...அவள் நீ நடந்த சுவடுகளை அழித்தாலும் அழிப்பாள். அதற்கிடையில், ஒரு தடவை உன்னைப் பார்க்க ஆசையாக இருக்கிறது.

அன்புசால் குருத்தினியே! சீவர ஆடைக்குள் மறைந்து கிடந்த சிக்கல் நிறைந்த முடிச்சுகளை அவிழ்த்து.மனித வாழ்க்கையின்பசுமைப் பிரதேசங்களை நுகர்ந்து வாழும் வழியினைக் காட்டிய சோமாவே! உன்னை எப்படியெல்லாம் சம்பாவனை செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேன். உன்மீதுகொண்டுள்ள பக்தியின் பெயரால் இந்த முதல் அழைப்பிதழை உனக்கே அனுப்பி வைக்கிறேன்.

www.padippakam.com



நீ இப்பொழுதும் அந்த ஆற்றங்கரை வீட்டிலே தான் வசிக்கிறாயா ?

குடிவெறியில், நீ பரப்பும் நோயினைப் பெறுவதற்கு பத்து ரூபாநோட்டுகளை நீட்டும், அல்லது பேரம் பேசும்வாடிக்கைக்காரனின்தொந்தரவுஇல்லாவிட்டால்; பெரிய ஹாமுத்ருவின் கதையையும் என் கதையையும் வேறொருவனுக்குச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாவிட்டால்; என் அழைப்பினை ஏற்று, என் திருமணம் பார்த்து, தாம்பூலாதிகள் தரித்து, மண மக்களை ஆசீர்வதித்துச் செல்ல ஒரு தடவை வந்து போ. குருத்தினிக்கு அவளுடைய பிரிய மாணாக்கன் தன் தூய அஞ்சலிகளைச் சமர்ப்பித்து இறைஞ்சும் கோரிக்கை இதுவே.

★

www.padippakam.com

# ஆகுதி

## 1

''வாருங்கள் மகாதேரரே! நாட்டிலே நிலவும் அரசியற் குழப்பங்களினால், இவள் வீட்டுக்கு வரும் பாதையை...''

''மறந்து விட்டேனோ என்று சந்தேகப்பட்டாயாக்கும். இந்தப் பெண்கள் இப்படித்தான். தன் மயமாகவும் தன் நயமாகவுமே யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்...''

''சுகத்துக்கும் படுக்கைக்குந்தான் பெண்கள் என்ற நிலையில்...''

''நந்தாவதி, மங்குளிப் பெண்போலப் பேச வேண்டாம். என் அனைத்தையும் நீ அறிவாய். நான் உன்னுடன் பங்கிடாதன எதுவுமே இல்லை என்னிடம். நான் அரசியற் சதுரங்கத்தில் பாச்சிகையை உருட்டுகிறேன். யோகத்திற்கு ஏற்பக் காய்களை நகர்த்துகிறேன்; வெட்டுகிறேன். உண்மை. ஆனாலும், புத்தரின் நாமத்தை என் உதடுகள் உச்சரிக்காத நாள்கள் இருக்கின்றன. ஆனால், உன் நினைவு...''

''ஐயோ, உங்கள் ஆடையிலே இரத்தக்கறை... ஏதாவது ஆபத்தில் மாட்டிக் கொண்டீர்களா?''

''எனக்கா? ஆபத்தா? எரிமலைக் குழம்புக்குப் பூகம்பத்தினால் ஆபத்தா? நான் மழித்த தலையுடனும்,

அ—5

www.padippakam.com



மஞ்சள் அங்கியுடனும் நடமாடும் சந்நியாசிதான். ஆனால், என் தயவில்லாவிட்டால் என் ஆசியில்லா விட்டால், இந்த உடரட்டையின் அரசியல் நாடியே ஸ்தம்பித்துவிடும். மன்னன் விமலதர்மசூரியவின் மரணத்துக்குப் பின்னர், சுவையான அரசியற்போட்டி ஒன்று நடைபெறுவதை நீ அறிவாய். இந்த மூளை யின் அசாத்திய வல்லமைகளைக் காட்டச் சமயம் வந்தி ருக்கிறது. நான் மன்னர்களையே உருவாக்கும் அதிசக்தி...''

''உங்கள் சக்தியை அறிந்தோர் அறிவர். ஏன் நீங்களே இந்த உடரட்டையின் மன்னனாகக்கூடாது என்கிற கற்பனையிலே நாள்...வெட்கத்தை விட்டுச் சொல்லுகின்றேன். நான் சுயதிருப்தியும் கண்டிருக் கிறேன்...''

''உன் திருப்திகளும், உன் சுயதிருப்திகளும் உன்னுடையவை. நான் விரும்பினால், மலை நாட்டின் சிம்மாசனத்தைக் கொள்ளவும் முடியும். அப்படி மன்ன னானால்...''

''மன்னனானால்?''

''நீதான் ராணியாவாய்.''

''முகஸ்துதி.''

''ஆனால், உண்மையும். காயகற்பம் சாப்பிட்ட மாறாத இளமை. சுகத்தைப் பட்டை தீட்டித் தரும் மிருதுவான அநுபவம். சேனநாயக்கவுக்கு இருக்கும் நெஞ்சுரம்; அதிகாரநாயக்கவுக்குத் தேவையான அறிவு நுட்பம். நீ ஓர் அபூர்வப் பெண்.''

''புகழ் மொழிகள் கேட்டுக் கிறங்குகிறேன்.''

www.padippakam.com



''புகழ்மொழிகள் சொரிந்து கிறங்கவைப்பதற்கு உன் கணவனைப் போல நான் ஒரு புலவனல்லன். வேடிக்கை போதும். விஷயத்துக்கு வருவோம்..''

''விஷயம்?''

''மன மோகத்துக்கு ஒரு வேளை; செயல் ஊக்கத்துக்கு ஒரு வேளை... உடரட்டவின் சிம்மாசன விஷயமாக நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.''

''யார்?''

''அவன் ஒரு காலத்தில் என்னைப்போல மஞ்சள் அங்கி அணிந்திருந்தான்.''

''சேனரதனா?''

''ஆம்.''

தலதா மாளிகாவின் மகாநாயக்க தேரரான புத்த தாஸர் மௌனத்தில் ஒன்றினார். அவருடைய ஆசை நாயகியாகவும் இன்ப ஊற்றாகவும் திகழும்குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொட அவரையே இமைக்காது பார்த்திருந்தாள். அவர் அவளுடைய வீட்டுக்கு வருவதும், இன்ப நுகர்ச்சியிலே பொழுது போக்குவதும் வழமை. இன்று வழக்கத்துக்கு மாறான ஒரு மந்தம். இலேசான முறுவலுடன் மௌனத்தைக் கலைத்தார்.

''அரசனாகுவதில் இன்பம் இல்லை; நிம்மதி இல்லை; சுகம் இல்லை. அரசர்களை ஆக்கும் என் வாழ்க்கையிலேதான் சுவையிருக்கிறது. குடும்பப் பொறுப்பில்லாத இன்பம்; உழைக்காமலே காலடியிலே கொட்டிக்கிடக்கும் உல்லாசம்; எதிரிகளைச் சம்பாதித்துக் கொள்ளாத அதிகாரம். சதுரங்க ஆட்டம் துவங்கி விட்டது. முதல் வெற்றி என் பக்கலே. அந்த வெற்றித் திலகமே ஆடையிலுள்ள இந்த இரத்தக் கறை. இன்று நீ தோனாவைச் சந்திக்கவில்லையா?''

www.padippakam.com



''தோனா...தோனா கதரினா! உங்களுடைய வற்புறுத்துதல்களுக்காகத்தான் இந்த ஊழியம்—அவளுடைய தோழியாக நடிக்கும் ஊழியம்—தொடர்கின்றது.''

''ஸ்ரீவர்த்தனபுரவின் இன்றைய அரசியலிலே தோனாதான் முக்கிய காய். அதைத் தன் பக்கம் வைத்திருப்பவன்தான் ஆட்டத்தில் ஜெயிப்பான்.''

''தெரியும் தேரரே! அவளுடைய மனம் ஊவாத் தலைவன் விதியபண்டாரவில்...''

''விதியபண்டார! இனி அவள் அவனை எமனுலகத்திலேதான் சந்திக்க முடியும்''

''அவர் தன் பரிவாரங்களுடன் அரண்மனைக்குச் சென்றதாகச் சொன்னார்கள்...''

''என் இனிய மங்குளிப் பெண்ணே! சாவுக்காக நாளும் கோளும் பார்த்திருக்கத் தேவையில்லை. அரண்மனையில், தோனாவின் முன்னிலையிலேயே, அவன் கொலை செய்யப்பட்டான். சேனரதன் என்ற காயை நான் ஆட்சி பீடம் நோக்கி நகர்த்துவதற்குத் தடையாக இருந்த காய் வெட்டியெறியப்பட்டது...இன்னொரு வெற்றிச் செய்திக்காக இங்கு காத்திருக்கிறேன்"

புத்ததாஸ மகாநாயக்க தேரரின் உதடுகள் முறுவல் பூக்கும் பாவனையில் நிலைத்தாலும், நெற்றியிலே, யோசனையின் ரேகைகள் இலேசாக நெளிந்தன.

## II

**கி.பி.1604** ஆம் ஆண்டில், சிங்களத்தீவின் மத்திய மலைப்பகுதியான உடரட்டவில் நடந்த சில சரித்திர நிகழ்வுகளே இக்கதைக்கு ஆதாரம்.

www.padippakam.com



பிற்காலத்தில் கண்டி என்றும், 'மாநுவர' என்றும் அழைக்கப்படும் நகரம், அக்காலத்தில் ஸ்ரீவர்த்தனபுர என்று அழைக்கப்பட்டது.

புயல் காரணமாக, 1505 ஆம் ஆண்டில், போத்துக்கேயர் என்னும் பறங்கியர் இலங்கைக்கரையை அடைந்தனர். இடைப்பட்ட ஒரு நூற்றாண்டு காலத்திற்கிடையில், போத்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலே தமது ஆட்சியை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றனர். போத்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்தில், இலங்கை மூன்று சுதந்திர நாடுகளைக் கொண்ட ஒரு தீவாக விளங்கிற்று. தென்மேற்குப் பகுதியிலே கோட்டை ராஜ்யம் இருந்தது. ஜெயவர்த்தன புர கோட்டை அதன் தலைநகர். அதுவே முதன்முதலில் போத்துக்கேயர் ஆளுகையின் கீழ் வந்தது. வடக்கில், நல்லூரைக் கோநகராகக் கொண்ட, தமிழ் பயின்ற, யாழ்ப்பாண ராஜ்யம் தனியரசாகத் திகழ்ந்தது. அத் தமிழரசு போத்துக்கேயரின் படைபலத்துக்கு முன்னால் அடிபணிய நேர்ந்தது. மலைகள் செறிந்த உடரட்ட ராஜ்யத்தைக் கைப்பற்றுவதில் போத்துக்கேயர் வெற்றி பெறத் தவறினர். கத்தோலிக்க மதம் தழுவி, போத்துக்கேயரிடம் படைப்பயிற்சி பெற்று, அவர்களுடைய நண்பனாய் நடித்தவன், சமயம் பார்த்து, போத்துக்கேயரை வென்று, பௌத்த மதம் தழுவி, விமலதர்மசூரிய எனப் புதுப் பெயர் புனைந்து, உடரட்டவில் சுதந்திரத் தனியரசு நிறுவினான். அவன் 1604 இல் இறந்த பொழுது, அவனுடைய மகனான மகாஅத்தானன் சிறுவன். இந்நிலையில், உடரட்டவில் பௌத்த மத மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதிலே அவனுக்கு உதவிய, அவன் தம்பி முறையினனான சேனரதனை ராஜப் பிரதிநிதியாக நியமித்திருந்தான்.

www.padippakam.com



தனக்கு அளிக்கப்பட்டஅதிகாரங்களை நிலைநாட்ட முடியாதவனாக சேனரதன் இருக்கிறான். அவன் மகுடத்துக்கு இரத்த உறவு முறையில் பாத்தியதை அற்றவனாகக் கருதப்படுகின்றான்.

உடரட்டவின் பிரதானிகள் மத்தியிலே பலத்த போட்டி முளைக்கின்றது. ஊவாப் பகுதித் திஸாவை, உடரட்டவின் முடிக்குரிய கோமகனாகமக்களாற் கொண்டாடப்படுதல் மரபு. எனவே, பிரதானிகள் பலருடைய ஆதரவு ஊவா திஸாவையான விதியபண்டாரவுக்கு இருந்தது. அவனுடைய நண்பனான தேருவேபண்டார உயர்ந்த பதவியான அதிகார நாயக்க பதவியில் இருந்தான். இவ்விருவரும் கூட்டாக, சேனரதனுக்கு எதிர்ச்சக்தியாக அணி திரண்டிருந்தனர்.

III

''நீங்கள் என் வருகைக்காக இங்கு காத்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. அதனால், வந்தேன்...'' என்று கூறிக் கொண்டே, கஜநாயக்க ராஜசுந்தர முதலியார், அவர்கள் முன் தோன்றினார்.

''தகவலும் சரி; வந்ததும் சரியே! அமர்ந்து பேசலாம்...''

இருக்கையை நோக்கி நகர்ந்த கஜநாயக்க, சற்றே தடுமாறினார்.

''ஆயிரம் யானைகளை அடக்கி ஆளும் வல்லமை பெற்ற கஜநாயக்க தடுமாறுவதா?'' என்று கேட்ட புத்ததாஸ மகா நாயக்க தேரர் இளநகை சிந்தினார்.

www.padippakam.com



''அரண்மனையிலே குழப்பம் என்று கேள்விப்பட்டேன். வீதிகளிலே கிளர்ச்சி. விதிய பண்டார...''

''கொல்லப்பட்டான். பிரேதம் ஊவாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. பிரேதத்தைக் கண்டதும் வீதியில் நிற்கும் மக்களுக்குச் சுடலை ஞானம் ஏற்படுதல் இயல்பு. சுடலை ஞானங்கள் எழும் வேகத்திலேயே அடங்கியும் விடும்...அது கிடக்க, நீ சென்ற காரியம்?''

''ஜெயம். நீங்கள் பணித்த வண்ணமே பாளுகமப் பிரதானி செல்லவந்தாரைச் சந்தித்தேன். பாளுகம தொடக்கம் கொட்டியாறுவரையிலுள்ள பிரதானிகள் சகலரும் உங்களுக்கே விசுவாசமாக இருப்பதாகவும், தாங்கள் விரும்பும் பட்சத்தில் சேனரதனை மன்னனாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் செல்லச் சொன்னார். தேனவாக்கை மாயதுன்னை மட்டும்...''

''கேள்விப்பட்டேன். அவனும் தோனா மீது காதல் கொண்டு கசிந்துருகின்றானாம்...அவன் பித்தத்தைத் தெளிய வைக்க என்னிடம் மருந்துண்டு. உன்னுடன் வந்த சேனநாயக்க?''

''நீங்கள் கற்பித்த வண்ணம் மகியங்கனையில் வைத்துக் கொலை செய்து, அவன் உடலைக் கங்கை நீரிலே வீசிவிட்டேன்.''

''ஒன்றே செய்தாய்; நன்றே செய்தாய். சேனநாயக்க பதவிக்கு நீயே நியமனம் பெறுவாய் என்று நான் வாக்குத் தருகின்றேன்...'' என்று கூறிய மகாதேரர், உள்ளே நோக்கி, ''நந்தாவதி!...'' என்று கூப்பிட்டார்.

www.padippakam.com



நந்தாவதி வந்து பவ்வியமாக் வணங்கி நின்றாள்.

''ராஜசுந்தரர் களைத்திருப்பார்...ஏதாவது...''

''இதோ...'' எய்யப்பட்ட அம்பு போல மறைந்தாள்.

''வரும் வழியில் தேருவேபண்டாரவைச் சந்தித்தாயா?''

''யாரை? அதிகாரநாயக்கவையா? சந்தித்தேன்''

''...ம்.''

''விசேஷமாக எதுவும் இல்லை?''

''விதியபண்டாரவின் மரணம் அவர் சற்றும் எதிர்பாராதது.''

''அதைப்பற்றி அவர் எதுவும் பேசவில்லை.''

''பேசமாட்டார்...''

மகாநாயக்க தேரர் உரையாடலை வளர்த்தாரே தவிர, அதிலே சிரத்தை ஊன்றாத ஒரு பாவத்திலே பேசினார். மௌனம் சூழ்வதற்கு முன்னரே, நந்தாவதி ஒரு கிண்ணத்திலே பால் கொண்டு வந்து, கஜநாயக்கவிடம் கொடுத்தாள்.

''நந்தாவதி கடுகக் காய்ச்சும் பாலுக்கு ஒரு தனிச் சுவையுண்டு.''

''உங்களுக்கு?''

''மதியத்திற்குப் பின்னர் அஷ்டபானந்தான் என்பது தெரியாதா?''

கஜநாயக்க ஒரு மிடறினைச் சுவைத்து, ''ஏலமும் பட்டையும் பாகும் இட்டுக் காய்ச்சிய பால், சுவையாக

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறது...'' என்று விமர்சித்துக் குடிக்கலானார். புத்ததாஸ மகாநாயக்க தேரர் எழுந்து சிறுநடை பயின்று கொண்டிருந்தார். பருகி முடிந்ததும், கிண் ணத்தைப் பெறும் பாவனையில், நந்தாவதி கஜநாயக்க முன் குனிந்து நின்றாள். உடரட்டவின் உயர்குல நங்கையர் வீட்டிலிருக்கும் பொழுது கச்சு அணிவ தில்லை. அவள் தோளிலே எறிந்திருந்த மெல்லிய துணி, காற்றிலே விலக...திரண்ட குவி முலைகளும், அவற்றிலே ஜம்பு நாவற்பழங்கள் இரண்டு பதித்தன போன்று விறைத்து நின்ற காம்புகளும்...கஜநாயக்க தனது விழிகளை அவற்றின் காந்த சக்தியிலிருந்து பிடுங்கி எடுக்க இயலாத ஒரு நேரத்தைதேர்ந்தெடுத்து, கஜநாயக்கவின் பின்னாற் சடுதியாக வந்து, அவன் முதுகிலே, தமது பலம் முழுவதையும் கையிலே ஏற்றிக் கட்டாரியாலே குத்தினார். பின்னர், அவன் நிலத் திலே விழும் வரையும் குத்திக் கொண்டே இருந்தார். அவன் திணற முடியாது, நந்தாவதி அவனைக் கட்டிப் பிடித்து, மகாதேரருக்கு உதவினாள்.

கஜநாயக்க ராஜசுந்தர முதலியார் மூச்சுத் திணறிய படி நிலத்திலே வீழ்ந்தான்.

''ஐயோ...மகாதேரரே...நீங்களா?...'' என்று தடு மாறினான்.

''உண்மையிலேயே உன் முடிவுக்காக நான் வருந்துகின்றேன். வேள்விக் குண்டத்திலே, உன் னைப் போன்ற ஒரு நண்பனைப் பலியிடுவதைத் தவிர, வேறு வழியில்லை. இந்த இறுதி நேரத்திலாவது உன் வம்சவழியை நினைவுபடுத்திப்பார். கங்கா ஸ்ரீபுராதேவி என்ற இளவரசியின் பேரன்தான் தொன் பிரான் ஸிஸ்கோ. அவன் கிறிஸ்தவனாக இருந்தாலும், பறங் கியரிடமிருந்து ஸ்ரீவர்த்தனபுரவின் சுதந்திரத்தைக்

www.padippakam.com



காப்பாற்றுவதற்காகப் போராடிய சுத்த வீரன்; சுதந்திர முழக்கம் செய்த மகாதீரன். விமலதர்மசூரியவின் வெற்றிகளில் பெரும் பங்கு அவனுடையது. அந்த மாவீரனுடைய மகன்தான் நீ. பராக்கிரமத்தில், தேச பக்தியில், மக்கள் ஆதரவைச் சம்பாதித்துக் கொள்வதில் நீ உன் தந்தைக்கே தந்தையாக விளங்கினாய். உன் தந்தையின் மதத்தைத் துறந்து, பௌத்தத்தைத் தழுவிக்கொண்ட ஒரே சம்பவம் போதும், நீ இந்நாட்டின் அரசியற் கோதாவில் முக்கிய நாயக பாத்திரம் ஏற்கத் தயாராகிவிட்டாய் என்பதை நிரூபிக்க! ராஜசுந்தரா, பெரிய மீன்களுக்குச் சின்ன மீன்கள் இரையாவது இயற்கை. அரசியல் அரங்கிலே, பகைவர்களிலும் பார்க்க நண்பர்களே ஆபத்தானவர்கள். இருவருக்குத் தெரிவது தான் இரகசியம். மூவர் அறிந்தால் பரகசியம். இங்கு நீ மூன்றாம் மனிதன். விதியபண்டாரவின் மரணத்துக்குப் பின்னர், சேனரதனுக்குப் போட்டியாக நீயே சிம்மாசனத்துக்கு மிகச் சமீபத்தில் இருக்கின்றாய் என்பதை நீ அறியா விட்டாலும், நான் அறிவேன். இந்த உண்மையை மற்றும் முசலியார்கள் உனக்கு உணர்த்துவதற்கு முன்னர், நீ இறப்பதே நமது நட்பிற்கு நல்லது. எதையும் முளையிலே கிள்ளி எறிவது சுலபம்; விவேகம்...''

புத்ததாஸ மகாநாயக்க தேரர் தமது பேச்சினை நிறுத்தித் தரையிலே வீழ்ந்து கிடந்த கஜநாயக்கவைப் பார்த்தார். அவன் இறந்த காலமாகியது நிலைத்தது.

## IV

**பண்டுதொட்டே** இலங்கை பல சுதந்திர நாடுகள் கொண்ட தீவாக விளங்கிற்று என்பது வரலாறு. புத்த பகவான் ஜீவந்தராக இருந்த காலத்தில், வடக்கில்

படிப்பகம்

www.padippakam.com



நாகதீபம் என்கிற நாடும், மேற்கில் கல்யாணி என்கிற நாடும் இருந்தன. இவை இரண்டும் நாகர்கள் வாழ்ந்த நாடு. தெற்கிலிருந்த மூன்றாவது நாடு யக்கர்களுடைய நாடு. மொத்தம் மூன்று தனி நாடுகள்.

மகாவம்சத்தின் தன்னிகரற்ற தலைவனாகச் சித்திரிக்படும் துட்டகாமினியின் காலத்தில், வடமேற்கில் ராஜரட்டை, தென்கிழக்கில் ரோகண, மத்திய மலைநாடு மாயரட்ட என மூன்று நாடுகளாகத் திகழ்ந்தன என்று வரலாறு கூறுகின்றது.

சூளவம்சத்தின் தன்னிகரற்ற தலைவனாகச் சித்திரிக்கப்படும் பராக்கிரமபாகுவிற்குப்பின்னர், சிங்கள மக்களுடைய தென்மேற்குப் புலப்பெயர்ச்சி இடம் பெற்றது. இந்தப் புலப்பெயர்ச்சியின் பேறாக, தென் மேற்குப் பகுதியை அடக்கிய சிங்கள அரசான கோட்டை ராஜ்யமும், வட பகுதியைக் கொண்ட தமிழரசான யாழ்ப்பாண ராஜ்யமும், மத்தியமலைப்பகுதிகள் கொண்ட உடரட்டஎன்னும் ராஜ்யமும்தோன்றலாயின. பதினாறாம் நூற்றாண்டில், கோட்டை ராஜ்யமும் யாழ்ப்பாண ராஜ்யமும் போத்துக்கேயருடைய ஆட்சியின்கீழ் வந்தது. உடரட்ட மட்டுமே சுதந்திரத் தனியரசாகத் திகழலாயிற்று. இந்தச் சுதந்திர அரசை வலுப்படுத்துவதிலே பளுகம (தற்காலத்தில் பழுகாமம்) தொடக்கம் கொட்டியாறு (திருக்கோணமலை) வரையிலும் இருந்த தமிழ்ப் பிரதானிகள் துணை நின்றார்கள்.

போத்துக்கேயருக்குப் பின்னர் இலங்கையை ஆண்ட ஒல்லாந்தர் உடரட்டவின் கிழக்குக்கரையோரமிருந்த கணிசமான தமிழர் பிரதேசத்தினையும் தமது ஆட்சிக்குட் படுத்தினர். இருப்பினும், உடரட்ட முழு

www.padippakam.com



வதையும் கைப்பற்றும் அவர்களுடைய முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

உடரட்டவின் முதலாவது கோநகராக விளங்கியது கங்கஸ்ரீபுர. (இது தற்காலத்தில் கம்பளை என வழங்கும்.) தோனாகதரினாவின் தந்தையான கலியட்ட பண்டார காலத்திலேதான் ஸ்ரீவர்த்தனபுர கோநகராக நிலைபெறலாயிற்று. இருப்பினும், கங்கஸ்ரீபுராவிலே நிலை கொண்ட குடும்பமும் உடரட்ட சிம்மாசனத்துக்கு உரித்துடையது என்றே கருதப்பட்டது. கஜநாயக்க ராஜசுந்திர முதலியாருக்கு அந்த உரித்தே எமனாயிற்று!

## V

**புத்ததாஸ** மகாநாயக்க தேரர் இலேசாக ஒலி எழுப்பிச் சிரித்தார்.

குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொடவின் முகத்தில் உறைந்த கலவரம் இன்னமும் அகலவில்லை.

''உன் கணவன் தெம்லிகலவிலுள்ள கணிகையர் கோட்டத்துச் சரங்களே கவிதைக்கான சரஸ் எனக் கற்பித்து அலையலானான். தென்றலிலும் நிலவிலும் உன் வயசும் வனப்பும் தேய்தல் கூடாது எனக் கருணை சுரந்தேன்...அவன் கவிதை என்மீது வசைபாடத் திசை திரும்பியது. பாவம். நமக்கும் நிம்மதி; அவனுக்கும் நிம்மதி. கொல்லையிலுள்ள தோட்டத்திலே நிம்மதியாக எத்தனை ஆண்டுகள் தனிமையாக உறங்குகின்றான்...இத்தனை காலம் கழித்தாவது ஒரு துணை—சாத்துணை...''

புத்ததாஸர் இரத்தந் தோய்ந்த கட்டாரியைத் துடைத்து, சீவர ஆடையின் மறைவில் மிகவும் நிதான

www.padippakam.com



மாகச் சொருகிக் கொண்டார். அச்செயலிலே தானம் பெறும் பொழுது படியும் ஒரு பவ்வியம் இழையோடிற்று.

ஏதாவது பேசவேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்காக, ''சீவரஆடைக்குள்கட்டாரியைமறைத்துத் திரிவது...'' என்று துவங்கி நிறுத்திக் கொண்டாள்.

''நான் என்ன செய்வது நந்தாவதி? பீரங்கியையோ அல்லதுதுவக்கையோஇந்தச்சீவர ஆடைக்குள்மறைத்து வைக்க முடியாதிருக்கின்றது என்பது என் கவலை. இந்தக் கட்டாரியளவான துவக்குகளை யாராவது செய்து தருவார்களானால், என் விஹாரத்திலுள்ள அத்தனை பிக்குகளையும் தங்கள் மஞ்சள் அங்கிகளின் மறைவில் ஒவ்வொரு துவக்கைச் சுமக்கும் ஆயுதபாணிகளாக்கிவிடுவேன்...இந்தக் கட்டாரியும் கூர்மையானது தான். காலையில் விதியனின் உயிரைக் குடித்தது ; இப்பொழுது கஜநாயக்க...''

''நீங்கள் எப்பொழுதும் ஆபத்துக்களுடன் விளையாடுகிறீர்கள்...''

''இசைந்தொழுகுபவர்கள் அடிமைகள். அவர்களுக்கு ஆனந்தம் சித்திப்பதில்லை. விதிகளை நெகிழ்த்துபவன், புதிய அநுபவங்கள் பெறுகின்றாள். அந்த அநுபவங்கள் நிலைக்குமானால், அவன் புதிய விதிகளை அமைத்தவனுமாகின்றான்.ஆபத்துக்கு அஞ்சாதவர்களே, புதிய சமுதாயத்தையும் புதிய மரபுகளையும் உருவாக்க உதவுகிறார்கள். நான் இந்த உடரட்ட அரசியலில் புதியன படைக்கப் புறப்பட்டுள்ள புண்ணியன்...''

''புரியவில்லைப் புண்ணியரே...''

www.padippakam.com



''மேதைகளின் சிந்தனை ஓட்டம் சாமான்யர் களுக்குப் புரிவதும் இல்லை. கசக்கி மணப்பதற்குரிய கஸ்தூரி மேனியளே, உன் மூளையைக் கசக்காதே! உன் செயல்களுக்கு என் சிந்தனையைப் பொருத்திக் கொள்...என் சீவர ஆடைகளுள் ஒன்று இங்கு உளது...''

''அது பத்திரமாக இருக்கிறது...''

''எடுத்துவா...''

புத்ததாஸ மகாநாயக்க மகாதேரர் சிறிது நேரம் உலவினார்.

துவைத்து மடித்திருந்த சீவரஆடையுடன் நந்தாவதி வந்தாள்.

''அது ஊஞ்சலில் இருக்கட்டும். நீ வெளிக்கதவைப் பூட்டிச் செல், அரண்மனைக்குச் செல்வதாகப் போக்குக் காட்டிவிட்டு, கொல்லை வழியால் வந்துவிடு. நிறைய வேலைகள் உண்டு...''

நந்தாவதி தயங்கினாள். ''சேனரதனை ஆட்சி பீடத்தில் அமர்த்தும் தங்கள் முயற்சி தோற்றால்...''

''அழிவேன்; அழிவோம்! தோல்வியைப் பற்றிச் சிந்திப்பவன் செயலில் இறங்குவதேயில்லை. செயலில் இறங்காதவன் வெற்றி சாதிப்பதும் இல்லை. ஆபத்துக்கள் நிறைந்த செயல்களின் ஊடாகச் சாதிக்கும் வெற்றியின் சுவையே அலாதியானது. பேச்சுக்களை ஒறுத்துச் சாதனை ஒன்றினை மலரவைப்பதற்கு நிறையப் பணிகள் இருக்கின்றன...ம்...''

புத்ததாஸ மகாநாயக்க தேரரின் பணிப்புரையை நிறைவேற்றும் வகையில் வாசலை நோக்கி நடந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



## VI

மலைக்கூரைகளிலே கவியும் முகில்களில் அளைந்து வந்த தென்றலின் வருடல் அவளுக்கு ஒத்தட சொஸ்தம் அளித்தது.

புழைக்கடை வாயிலை நோக்கி நடந்த குமாரி ஹாமி நந்தாவதி பெத்தியாகொட கொல்லையில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை அவதானிக்கவுந் தவற வில்லை.

புத்ததாஸ மகாநாயக்க தேரரின் மதிநுட்பம் அவளைக் கிள்ளியது. மண்சரிவு ஏற்படலாம் என எச்சரித்தும், கல் அரிவதற்குக் குறிப்பிட்ட இடத்திலேயே மண் கோலும் படி மகாதேரர் பணித்திருந்தார். பணித்தலும் பணி தலும். சில பணிகள் இச்சீர்த்தியில் நடைபெறுவதையே மகாதேரர் விரும்பினார்.

மண் எடுத்த குழியில், சரிவதற்குச் சமயம் பார்த்து அருகிலே நின்ற மண் பிட்டி, சரிந்து மூடிக் கிடந்தது. பிட்டி இடம் மாறி, நிலையான படுக்கை நிலை அடைந்தது போல...

கஜநாயக்கவின் உடல் அதற்குள் புதையுண்டு கிடக்கலாம் என்று கற்பனை செய்ய வல்லவர் யார்?

எதிர்ப்பக்கமாக, இதேபோன்று, ஆனாலும் சிறிய, மண் சரிவு ஏற்பட்ட இடத்தில் 'தூரியன்' மரங்கள் வளர்கின்றன. கவிஞனின் உடல் உக்கி, அந்த மரங் களின் வளர்ச்சிக்கு நல்ல உரமாகச் சுவறிக் கொண்டி ருக்கிறது!

அவள் வீட்டுக்குள் நுழைந்ததும், கொல்லைக் கதவு தாழிடப்பட்டது.

நிமிர்ந்து பார்ப்பதற்கிடையில். புத்ததாஸர் சமைத்த மூர்க்கமான ஆலிங்கனத்திற்குள், நந்தாவதி பூவாகக் கசங்கினாள்.

www.padippakam.com



சாவின் பயத்திலே, உடல் இலேசாகப் பதற, ''இந்த நேரத்திலா...'' என்னும் சிணுங்கலுடன் திமிறும் பெட்டை முயற்சி.

''இப்ப நானும் போர்வீரனே... மங்கை தரும் சுகத்திலேதான் வீரம் பட்டை தீட்டப்படுவதாக அநுபவஸ்தர்கள் சொல்லுகிறார்கள்...''

போதிமாதவர் போதித்த அனைத்தையும் துறந்து, தன்னை இழந்து...

மலைச்சிகரங்களிலே கவியும் முகில்களில் அளைந்து வரும் தென்றலை வசக்கி, கள்வழியும் இதழ்களிலே, புத்த நாமம் பூஜிக்கும் உதடுகளை ஊன்றி அழுத்தி...

...களைந்து, அளைந்து, இணைந்து, பிணைந்து... இரண்டும் இற்று, ஒன்றாகிய ஸ்திதியில்,..

வத்ஸாயனனுக்கும் தெரியாத வித்தைகளை விண்டிடும் ஒரு வேகத்தில்...

குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொடவின் மென்னுடல் என்ற ஓர் பெண்மைக்குள் புதைந்து, புகுந்து, கனிந்து, கழன்று புத்ததாஸ மகாநாயக்க தேரர் கலவிக் களியின் மோனத்திலே ஒடுங்கவும்...

...பகலை இரவு புணர்ந்து தன் வசப்படுத்தியது!

## VII

நந்தாவதி ஏற்றிய அகல் விளக்கின் சுடர் இலேசாக நடுங்கிற்று.

சாமானியருக்குச் சுடலை ஞானம்.

www.padippakam.com



புத்தரைப் போன்று தர்மத்தைப் பற்றிய மறுவிசாரணை நடத்திய ஞானப்பித்தர்களுக்குப் போதிமர ஞானம்.

புத்ததாஸ மகாநாயக்க தேரருக்கு மட்டுமே சித்திக்கும் கலவி யோக ஞானம்.

ஆண்டவன் படைத்த முதலாவது ஆணான ஆதாமின் கோலத்திலே எழுந்து நின்ற அவர்...

ஒரே நேர இன்பத்திற்காக எத்தனை எத்தனை ஜீவ அணுக்கள் விரயமாக்கப்படுகின்றன?...பெருக்கிப் பார்த்தால் எத்தனை பேரழிவு...? அழிவிலேதான் இன்பம்.

அழிவிலேதான் தூய பௌத்த சிங்கள அரசும் மலரும்.

அரச போகமும் இன்பமே.

உடரட்டயின் புதிய அரசு இன்னும் எத்தனை பலிகளை யாசிக்குமோ?...

'நிப்பாண' கலையாது நின்ற தேரரின் பார்வை நடுங்கும் சுடரிலே மீண்டும் நிலை குத்தியது.

## VIII

"திருப்பாற் கடலைக் கடைந்து தேவர்கள் அமுத கலசம் பெற்றார்களாம்...நீ மதுகலசத்தைக் கடைந்து உடரட்டவின் சிம்மாசனத்தைப் பெற்றுவிடலாம் என்று பார்க்கிறாயா?'' என்று கேட்டுக்கொண்டே, தலதா மாளிகாவின் மகாநாயக்க தேரர் உள்ளே வந்தார்.

சேனரதன் புத்ததாஸ மகாதேரரின் வருகையை எதிர்பார்த்தானாயினும், மதுவுக்கும் தனக்கும் முடிச்



படிப்பகம்

www.padippakam.com



சுப்போடும் நகைச்சுவையை அவன் ரஸிக்கவில்லை. அதே சமயம், சேனரதனின் விழிக்கோடிகளிலே கோலந் தீட்டியிருந்த செவ்வரிக் கோடுகளை அவதானிக்க மகா தேரர் தவறவில்லை.

''ஏடுகளைப் புரட்டுவதிலும், எழுத்தாணியைப் பிடிப்பதிலும் காலங் கழித்தவன் நான்... இப்பொழுது, வாள்வித்தையிலே வல்லவர்களை எதிர்த்து, சிம்மாசனம் ஏறும் வீரசாகஸத்திற்குள் என்னை இறக்கியிருக்கிறீர்கள்... சாவுகளைக் கண்டு என் மனம் மிரளுகின்றது. உங்களுக்கு ஹேமபிட்டகெதற ஞானசீஹ தேரரைத் தெரிந்திருக்கும். அவர் ஆயுர்வேத வைத்திய ரத்னாவும். சமநிலை இழக்கும் மனதிற்கு இந்த மது அற்புதமான மருந்து என்று அடிக்கடிசொல்லுவார்...''

''அதை நானும் அறிவேன். அதே சமயம் மது போதையின் சீரழிவுகள் பற்றி ஒரு முழு நீளப் பிரசங்கம் நிகழ்த்தவும் முடியும்... இப்பொழுது நமது இலக்கு என்ன? உன் அரச பதவி. அதற்கு உதவக் கூடிய அனைத்தும்தக்கன;ஏனையனவிலக்கவேதக்கன! ஒவ்வொரு பதவிக்கும் ஒவ்வொரு விலையுண்டு... பதவியின் மீதுள்ள ஆசை, மதுவின் துணையின்றியே, வெறியாக முற்ற வேண்டும். அந்த வெறிதான் வீரத்தின் விளைநிலம்.''

''புதுமையாக இருக்கிறது உங்கள் விளக்கம்.''

''புதியன சாதிக்க நினைப்பவர்கள், புதிய கற்பனைகளை ஊக்கவல்ல விளக்கங்கள் கொடுப்பதில் சித்தர்களாகவும் இருத்தல் வேண்டும்.''

''ஏட்டிலே ட்டித்தன எல்லாம் மறந்து போயின... நான் விதியபண்டாரவைக் கொலை செய்யக் கருதியவனல்ல...''

படிப்பகம்

www.padippakam.com



''கிறிஸ்தவனைப் போல பாவமன்னிப்புக் கேட்கப் போகிறாயா?''

''இல்லை...இருந்தாலும் நேற்றைய சம்பவம்...''

''நேற்றைய சம்பவம்...நேற்றைய சம்பவம்... சேனரதனின் அரச பதவிக்குக் குறுக்கே யார் நின்றாலும், அவனுக்குச் சாவுதான் பரிசு என்கிற அச்சம் எதிரிகளை உலுப்ப வேண்டும். அந்தப் பயத்தினை எதிரிகளுக்கு ஊட்டுவதற்காகச் சில அரசியற் கொலைகள் பட்டப்பகலிலே, நடத்தப்பட வேண்டும்.''

''பலர் பார்த்திருக்க...''

''ஆம்...விதிய பண்டார பகிரங்கமாகவே உன்னை எதிர்த்தான். சுடச்சுட, பகிரங்கமாக அவனுக்கு மரண தண்டனை ! பதவியை நாடிப் பறதிப்படுபவர்களுக்கு ஓர் எச்சரிக்கை ! பகிரங்கக் கொலைகள் மகா ஒறுப்பாகவும், படுகோரமாகவும் அமைய வேண்டும்...''

''ஏனையன?''

''மறைவிலும் மர்மமான முறையிலும் நடக்க வேண்டும்.''

"பாளுகம சென்ற சேனநாயக்கவைக் காணவில்லையாம்!''

''அவன்கூடச் சென்றிருந்த கஜநாயக்க ஸ்ரீவர்த்தனபுர திரும்பினானாயினும் மர்மமான முறையிலே மறைந்து விட்டான்.''

''எப்படி ?''

''இவற்றைக் கண்டு பிடிப்பது அதிகாரநாயக்கவின் வேலை. சேனரதா ! இதை அறிந்து கொள்.

www.padippakam.com



மிருகராசிகள் மத்தியிலே, உயிர் வாழும் போராட்டத்தில், கொலையும் அறமாகப் பயிலப் படுகின்றது... துரோகம் என்பது பாதிக்கப்பட்டவனின் ஓலம். சாதனையாளனுக்கு அது சாமர்த்தியத்தின் இன்னொரு ஸ்திதி...பழைய வரலாறு. மதுவிலும் பார்க்க, போதைதரவல்லது. உன் தந்தையின் அண்ணன்—உன் பெரியப்பா—வீரசுந்தர முதலியார் உன்னுடைய இன்றைய உரிமை கோரலுக்கு எப்படி வித்திட்டார் என்கிற வரலாறாவது உனக்கு நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார்.

மௌனம் நிலவியது. கால ஓட்டம் விசிறிய புழுதிகளைத் துடைத்து, சம்பவங்களைக் கோவைப்படுத்துதல் ஆக்கினையாக இருந்தது. மகாதேரரே மௌனத்தைக் கலைத்தார்.

''நமது உரிமை கோருதல் கலியட்ட பண்டார ஸ்ரீவர்த்தனபுரவில், உடரட்டவின் மன்னனாகப் பதவி ஏற்றதிலிருந்து துவங்குகிறது. வீரசுந்தர முதலியார், கலியட்ட பண்டாரவின் உறவினன்; நண்பன், சிறந்த போர்வீரன். இதனால், அவன் மகாமுதலியாராக நியமிக்கப்பட்டான். இந்தக் காலத்திலேதான் சீத்தவாக்கையின் மன்னனான ராஜசிங்கன் அகண்ட சிங்கள ராஜ்யம் பற்றிக் கனவு கண்டான். சீத்தவாக்கை கோட்டை ராஜ்யத்தின் ஒரு துண்டுதானே? ராஜசிங்கன் மகா போர்வீரன். கோட்டை ராஜ்யம் முழுவதற்கும் மன்னனாகும் எத்தனத்தில் இறங்கினான். பறங்கியரின் பீரங்கிகள் கோட்டைக்குத் துணை நிற்கவே, அவனுடைய படையெடுப்பு முயற்சிகள் வெற்றி பெறவில்லை. ராஜசிங்கனுக்குப் போரே வேதமும் மதமுமாகியது. புத்தம் போதிக்கும் அஹிம்ஸை, வீரத்தை வளர்க்கத் தவறியதாகக் கருவினான். நெற்றியிலே நீறு புனைந்து வீரகாளியின் உபாசகனாய் மாறினான். உடரட்டவை

www.padippakam.com



இணைத்துத் தனது பலத்தைப் பெருக்குதல் உபாய மெனத் தெரிந்தான்.

''உடரட்டவின் மிகப் பெரிய பாதுகாப்பு அதன் இயற்கை அரண் என்பது அவனுக்குத் தெரியும். மலை நாட்டுப் போர்முறை அவன் அறியாததல்ல. படையெடுப்பை அவன் நுணுக்கமாகத் திட்ட மிட்டான். வெளியாரின் படையெடுப்பை முறியடிப்பதற்குக் கலியட்ட பண்டார, வீரசுந்தர முதலியாரின் பராக்கிரமத்தையே பெரிதும் நம்பியிருந்தான் என்பது தெளிவாயிற்று. எனவே, வீரசுந்தர முதலியாரைத் தன் பக்கமாகத் திருப்பிக் கொண்டால், உடரட்டப் படையெடுப்பு விரைவான வெற்றியைத் தரும் எனக் கணித்தான். ராஜசிங்கன் காட்டிய ஆசைகளுக்கு வீரசுந்தர மசிந்தான்; கலியட்ட பண்டாரவைக் காட்டிக் கொடுக்க இசைந்தான். திட்டமிட்டபடி உடரட்ட ராஜசிங்களின் படையெடுப்பிலே அடி பணிந்தது. இந்த வெற்றியிலேயே தன் பங்கினைக் கேட்க வந்த வீரசுந்தர முதலியாரைப் பகிரங்கமாகக் கொலைசெய்தான்... நேற்று நீ விதிய பண்டாரவைக் கொலைசெய்தாயே !அப்படித்தான்...அந்த ஒரேயொரு கொலையைப் பார்த்து, உடரட்டயின் சிம்மாசனத்திற்கு உரிமை கோரக்கூடிய அனைவரும் நாட்டை விட்டோடி பறங்கியரிடம் சரணடைந்தார்கள்! யார் யார் தெரியுமா? மன்னன் கலியட்ட பண்டாரவின் மகள். மதம் மாறிய அவளைத் தோனாகதரினா என அழைக்கின்றோம். அவளுடைய மணாளனாய் கலியட்ட மன்னனால் நியமிக்கப்பட்ட ஜெஸிம்மன். இவர்களுடன் வீரசுந்தர முதலியாரின் மகனும்! அவனும் கிறிஸ்தவம் தழுவி கோணப்ப பண்டார என்னும் பெயரை டொன் ஜுவான் என்று மாற்றினான்! இவர்கள் அனைவரும் இந்தியாவிலுள்ள பறங்கியருடைய கோவா ராச்சியத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

www.padippakam.com



''ராஜசிங்கனுடைய அரசினை அகற்றி, தமது மேலாணையை ஏற்கக் கூடிய பொம்மை அரசு ஒன்றினை ஸ்ரீவர்த்தனபுரவில் நிறுவுவதற்குப் பறங்கியர் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜெஸிம்மன் ஆரவாரமான அதிகாரங்களிலே ஆசை வைக்காத மென்போக்குடையவனாக விளங்கினான். கலியட்ட பண்டார தன் மகளை அவனுக்கு மணஞ் செய்ய விரும்பியதைப் பிரதானிகள் அறிவர். எனவே, இந்தத் திருமணத்தினை முடித்து வைத்து, அவனை அரசனாக்கினால் உடரட்ட பிரதானிகளும் மக்களும் ஒருமுகமாக ஏற்றுக் கொள்வார்கள் என்பதைச் சரியாகவே அநுமானித்தனர். டொன் ஜுவான் சிறந்த போர்வீரன் அவனுக்குப் பறங்கியர் புனர்வாழ்வு அளித்திருந்தனர். இதனால், அவன் என்றென்றும் பறங்கியர்களுக்கு விசுவாசமானவனாகவும், அவர்களுடைய நலன்களைப் பேணுவான் என்றும் நம்பினர். இதனால், ஜெஸிம்மன்-தோனாதம்பதிகளுடன் அவனும் உடரட்டவுக்கு அனுப்பப்பட்டான். ஆனால், அவன் தனக்குச் சாதகமான கணக்கு ஒற்றினைப் போட்டுக் கொண்டு வந்திருந்தான்.

''ஸ்ரீவர்த்தனபுர வந்தசில தினங்களிலேயே ஜெஸிம்மன் மர்மமான முறையிலே இறந்தான். அவனுடைய மரணத்துக்கு கோணப்ப பண்டாரவே காரணன் என்று பலரும் சந்தேகப்பட்டார்கள். ஆனாலும், அதனை எண்பிக்க யாராலும் முடியவில்லை...இதற்கிடையில், யாரும் எதிர் பார்க்காத சடுதியில், பறங்கியருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, உடரட்டவின் முற்று முழுத்தான சுயாதீனத்தைப் பிரகடனப்படுத்தினான். கிறிஸ்தவ மதத்தையும் விதேசியப் பழக்க வழக்கங்களையும் துறந்தான். பௌத்த சிங்களப் பெருமிதத்திற்குக் கனதி சேர்க்கும் வகையிலே, விமலதர்ம சூரிய என்ற ஆரிய சிங்கள நாமம் சூட்டி, அரசுக் கட்டில் ஏறினான். இருப்

www.padippakam.com



பினும், ஸ்ரீவர்த்தனபுர சிம்மாசனத்தினைக் தட்டிப் பறித்த 'வெளி ஆள்' என்கிற ஒரு காழ்ப்பு உணர்வே பிரதானிகள் மத்தியில் நிலவியது. 'தோனா கதரினா என் மனைவி, அதனால் உரியது' என்ற விளக்கத்தையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. 'தோனா ஜெஸிம்மனின் விதவை. அவள் உன் மனைவி என்பதற்கு என்ன ஆதாரம்?' என்று நச்சரிக்கவுந் துவங்கினார்கள். அப்பொழுதுதான் அவன் பிரதானிகள் அனைவரும் விக்கித்துத் தலைகுனிந்து நிற்கும் வகையில் ஒரு காரியத்தைச் செய்தான்...''

புத்ததாஸ மகாநாயக்க தேரர் விழிகளை மூடி மௌனியானார், ஏதோ ஒரு காட்சியை மனக்கண் முன் கொண்டு வரும் எத்தனம் போலும். அந்த அவகாசத்தினைத் திருடுபவன்போல, சேனரதன் கிண்ணத்திலிருந்த மதுவைச் சிறிது உறிஞ்சி, தன் மிடறினைப் பவ்வியமாக நனைத்துக் கொண்டான். அவர் சொல்லும் வர்த்தமானங்கள் சில அவனுக்குப் புதியன அல்ல. ஆனால், அவர் அவற்றைக் கோவைப்படுத்திச் சொல்லும் பாணி சுவையாக இருந்தது.

'''அவள் உன் மனைவி என்பதற்கு என்ன ஆதாரம்?' என்று உசாவிய பிரதானிகள் சகலரும் சபையிலே கூடியிருந்தார்கள். அப்பொழுது, அவன் தோனா கதரினாவை இழுத்து வந்து அவர்கள் முன் நிறுத்தினான். அவளுடைய ஆடைகளைக் களைந்தெறிந்தான். அவனுடைய ராக்கதப் பிடிக்குள் தோனாவின் கொடி உடல் துவண்டது. அங்கேயே, அவர்கள் முன்னிலையில், தோனாவுடன் தாம்பத்திய உடலுறவை நிகழ்த்தி முடித்தான். வெட்கமும் சோர்வும் சேர்ந்த அசதியிலே தோனா மயங்கிக் கிடக்க, 'இவள் என் மனைவிதான் என்பதை எண்பிப்பதற்கு இதிலும் பார்க்க ஆதாரம் வேண்டுமா? இந்தக் காட்சியைப் பார்க்கத்தானே இவ்

www.padippakam.com



வளவு காலமும் வாயூறிக் கொண்டிருந்தீர்கள்?' என்று கர்ஜித்தான். வரலாற்றிலே, இப்படி ஒரு பகிரங்கக் கற்பழிப்புச் செய்யும் துணிச்சலும், சாகஸமும் யாருமே சாதிக்காதது. இஃது ஆரிய சிங்கள இனத்துக்கே உரிய தனித்துவப் பண்பாகவும் இருக்கலாம். இதற்குப் பின்னர் உரிமைப் பிரச்சினையை யாரும் எழுப்பியதே இல்லை. பௌத்த சிங்கள உணர்வுகளுக்குப் புதிய பரிமாணம் சேர்ப்பதிலே சிரத்தை ஊன்றினான். ராஜ சிங்கனின் விபூதிச் சந்நதத்துக்குப் பயந்து இங்கு வந்த பிக்குகளுக்குப் புகலிடம் அளித்தான். கிறிஸ்தவ மத மாற்றங்களுக்குத் தப்பி வந்த பௌத்தர்களுக்கு ஆதரவு தந்தான். மஹாவம்ஸ காவிய நாயகன் துட்டகாமினி. சூளவம்ஸ நாயகன் பராக்கிரமபாஹு. அவர்களுக்கு இணையாக, ததாதகர் மும்முறை விஜயம் செய்து பௌத்தர்களுடைய புனித வதிவிடமாக அர்ச்சிக்கப்பட்ட இச்சிங்களத் தீவிலே புத்தத்தின் மேன்மையை மீண்டும் நிலைநாட்டிய விமலதர்ம சூரியவின் கீர்த்தியையும், வரலாறு போற்றும் என்பது திண்ணம். பௌத்தத்தைப் புதுக்கும் நிர்மாணப் பணியிலே தோள் கொடுக்க உன்னை அழைத்துப் பதவிகளும் தந்தான்...''

புத்ததாஸ மகாதேவருடைய பேச்சுத்தடம் எதை நோக்கி நகருகின்றது என்பதை சேனரதனால் நிதானிக்க இயலவில்லை. பிரசங்க பாணியிலே நீண்ட, தேரரின் பேச்சை அறுத்து, அவன் உள் நுழைந்தான்.

''உறவுச் சுமையும், உழைப்பின் அயர்ச்சியும் அணுகாத சங்கத்தின் வாழ்க்கை. அந்தச் சங்கத்தின் துறவு வாழ்க்கையைத் துறந்து, அவன் அழைப்பினை ஏற்று, அரசியலுக்குள் நுழைந்தேன். மஹா விஹாரத்துக்கும், மகியங்கனை தாதுகோபத்துக்கும் நிகராக, புத்த பகவானின் புனித சின்னங்கள் பேணத்தகும் உயர் விஹாரமாகத் தலதா மாளிகாவை நிர்மாணித்

www.padippakam.com



தேன். சிங்கள பௌத்தர்களுடைய சில அநுட்டானங்களுக்கான மையம் ஸ்ரீவர்த்தனபுரவின் தலதா ஸ்தலமே என்கிற பெருமை உங்கள் ஆசியினாலும், என் ஊக்கத்தாலும் உழைப்பாலும் சமைந்தது. பௌத்தத்தின் கௌரவத்தினை மீட்டெடுப்பதில் என் உதவியும் பங்களிப்பும் கணிசமானது மகா தேரரே!''

''உண்மை. உதவினாய். உன் பங்களிப்புக்கு மேலாகவும் உன் பணிகளை விமலதர்மசூரிய அங்கீகரித்தான். உன்னை மகா முதலியாராக்கினான். தனது பிரதம ஆலோசகனாக உயர்த்தினான்...உன்மீது அவன் பாராட்டிய நம்பிக்கையின் காரணமாகத்தான் தன்னைச் சாவு அண்மித்து விட்டது என்பதை உணர்ந்ததும், உன்னையே தன் மகன் மகாஅத்தானனின் பாதுகாவலனாகவும், உடரட்டவின் ராஜப் பிரதிநிதியாகவும் நியமித்தான். இந்தப் பதவிகளே சிம்மாசனத்திற்கான உன் பாதையைத் திறந்து வைத்திருக்கின்றன...''

''இந்தப் பதவிகளை நான் யாசித்ததில்லை...''

''நீ ஆசைப்படாத பதவிகள் எல்லாம் உன் மீது திணிக்கப்பட்டன. அது ஒரு கட்டம். விமலதர்ம சூரியவின் ஆணையே வேதமாக ஒலித்தது ஒரு காலம். இன்று? ஆணை பிறப்பிக்கும்தத்துவத்திற்கான போராட்டம்! சேனரதா, சிம்மாசனத்தை அடையும்பாதை ஒற்றை வழிப் பாதை. அதிலே புகுந்துவிட்டால், திரும்ப முடியாது...''

''அந்தப் பாதையிலே என்னை இறக்கியது நீங்கள்...''

''தூண்டியது யார் என்பதைப் பற்றி வரலாறு அக்கறைப்படுவதில்லை...அரசர்களுடைய வரலாறுதான் நாட்டின் வரலாறாகத் தொகுக்கப்படுகின்றது...நமது

www.padippakam.com



சிங்கள அரசுரிமைப் போட்டிகளின் வரலாற்றையும், வெற்றிகளையும் நீ விஹாரவாசியாக இருந்த காலத்தில் படித்திருப்பாய்...விதிய பண்டாரவின் கொலை மூலம் சிம்மாசனத்திற்கான உனது உரிமை கோரலை உடரட்ட முழுவதும் அறியச் செய்துவிட்டாய்...ராஜபாட்டைகளின் சேரிடங்களிலே ஜெயஸ்தம்பங்கள் நாட்டப் படுவதில்லை. அது குறுக்கு வழியின் முடக்கிலே நாட்டப்படும். பின்னர், ராஜபாட்டை அதனை நோக்கி விரிவடையும்...''

''விதிய பண்டாரவின் மரணத்துக்குப் பின்னர், ஜெயவர்த்தனபுர கோட்டையிலுள்ள பறங்கியரின் ஆதரவையும், படை உதவியையும் கோரி, அவனுடைய ஆதரவாளர்கள் தூது அனுப்பியுள்ளார்களாம். தங்களது மேலாணையை உடரட்ட மண்ணிலே நாட்டப் பறங்கியர் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்...பறங்கியரின் பரிவும், பிரதானிகள் பலருடைய ஆதரவும் தோனா கதரினாவின் பக்கலே இருக்கிறது...''

''அவற்றை நினைவுபடுத்தவும் நான் இங்கு வந்தேன்...இப்பொழுது உன் தியானத்துக்கும் சேவிப்புக்கும் உரிய பொருள் மதுவல்ல...அது மங்கை. தோனா கதரினா என்னும் மங்கை!''

''தோனா கதரினா எப்பொழுதும் என்னை வெறுப்பவள்...விமலதர்மசூரிய மரணப் படுக்கையில் இருக்கும் பொழுதே, அவள் ஊவாத் தலைவன் விதிய பண்டாரவுடன் சல்லாபிக்கத் துவங்கியவள்...அவனை நான் கொன்றதினால். அவள் வெறுப்பு மேலும் உக்கிரம் அடைந்துள்ளது,''

''நான் இன்று உடரட்டவின் செவிகளாகவும் விழிகளாவுஞ் செயற்படுகின்றேன். தோனாவின் இனிய

படிப்பகம்

www.padippakam.com



காதல் நினைவுகள் அலைமோதத்தான் விதிய பண்டார தன் பரிவாரங்கள் புடை சூழ, அவசர அவசரமாக ஸ்ரீவர்த்தனபுர நோக்கி வந்தான்...அவனுடைய ஆசை களுக்குக் குறுக்கே நீ பாய்வாய் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. எதிரியைப் புலிப் பாய்ச்சலில் ஒரே அமுக்கு!...சேனரதா, இனி நீ அவளை...''

''இனி அவளை...'' என்று தேரரின் சொற்றொ டரை இரவல் வாங்கிச் சேனரதன் இழுத்தான்.

''தோனா கதரினா வேறு பராக்குகளிலே ஈடுபடக் கூடாது என்பதற்காக அவளைச் சர்வ பிள்ளைத்தாச்சி யாகக் கனிந்திருக்கச் செய்தது விமலதர்மசூரியவின் இன்னொரு தந்திரம். அவள் மூன்று பிள்ளைகளுக்குத் தாய்தான். ஆனாலும், இன்றும் இளமைக் கட்டுக் குலையாத அழகியாகத்தான் திகழ்கிறாள். பறங்கி யரைக் கூட உன்மத்தம் பிடிக்கச் செய்தது அவள் அழகு. அவளுடன் படுக்கையைச் சுகிப்பவனுக்குத் தான் உடரட்ட சிம்மாசனம் என்பது தலைவிதியாகிவிட் டதே. அவளுக்குச் சிந்திக்கும் அவகாசம் கொடுக்கக் கூடாது. போகப் போதையிலே அவள் சர்வசதா கால மும் அமிழ்ந்திருக்கவேண்டும்...சர்வசதா காலமும் அவள் மிருதுவான மிருக பலத்திற்கு உட்பட்டிருத்தல் வேண் டும். மிருதுவான மிருக பலம்! அதனைப் பிரயோகிப் பதிலே விமலதர்மசூர்ய மகா கெட்டி. காய்களைச் சீக்கி ரமேபழுக்க வைப்பதற்குப் புகையடிப்பது நமதுவழக்கம். அதைச் செய்வதற்காக குமாரிஹாமி நந்தாவதி பெத் தியாகொட இப்பொழுது அந்தப்புர வாசத்தை மேற் கொண்டிருக்கிறாள்...'' என்றுகூறிய மகாதேரர், வேறு எதையோ நினைத்துக் கொண்டவரைப் போல சேனர தனை உற்றுப் பார்த்தார்,

''இந்த மதுவுக்கு இன்று மாலையிலேதான் வேலையுண்டு, அது வரையிலும் நிதானந்தேவை.

படிப்பகம்

www.padippakam.com



அதிகாரநாயக்க தேருவே பண்டார இங்கு வந்து எங்களைச் சந்திப்பான்.''

''அவன் விதிய பண்டாரவின் ஆப்த நண்பன்... இங்கு வருவானா?''

''நாம் எல்லோரும் விதி என்கிற கயிற்றின் சுழற்சியில் ஆடும் பம்பரங்கள்...அவன் இங்கு வரும் வரையிலும், எனக்கு ஓய்வு தேவை...'' தலதா மாளிகாவின் மகாநாயக்க தேரர் முறுவல் பூத்தபடி சயன அறையை நோக்கி நடந்தார்.

## IX

''**தலதா** மாளிகாவின் மகாநாயக்க தேரருக்கு என் வணக்கங்கள். உங்களுக்கு வாக்குத் தந்தபடி வந்துள்ளேன்...''

''அதிகாரநாயக்க தேருவே பண்டாரவின் நாணயத்தில் என்றுமே நமக்கு நம்பிக்கை உண்டு. அமருங்கள்...''

''அமருங்கள் ஆறுதலாகப் பேசலாம்'' என்று கூறியபடி சேனரதன் அவர்கள் முன் தோன்றினான்.

''கஜநாயக்க ராஜ சுந்தர முதலியாரும் இங்கு இருப்பார் என்று எதிர்பார்த்தேன்'' என்று கூறியபடி, மகாதேரர் சுட்டிய இருக்கையில், தேருவே பண்டார அமர்ந்தான்.

''ஏதோ அவசர பணிவிடை என்று வெளியே சென்றார். எந்த நேரமும் திரும்பலாம்.''

www.padippakam.com



''வந்த களைப்பு, சற்று அருந்துங்கள்'' என்று இரண்டு கிண்ணங்களிலே மதுவை ஊற்றி, அவன் முன்னால் சேனரதன் வைத்தான். ஒரு கிண்ணத்தை தேருவே பண்டார எடுத்துக் கெள்ள, மறுகிண்ணத்தை சேரதனன் எடுத்துக் கொண்டான்.

''நமது சிங்கள கலாசாரம் மதுவுடன் இரண்டறக் கலந்துள்ளது. மதியத்துக்குப் பின் அஷ்ட பானம் என் பதினால் நான் தவிர்த்தேன்... பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் பேசக் கூடி இருக்கிறோம். ம்...''

இருவரும் சிறிது மதுவருந்தி, கிண்ணத்தை வைத் தார்கள்.

''நல்லது. நாம் எதற்காக இங்கு கூடி இருக் கிறோம்?'' என்று கேட்டு விவகாரத்துக்குச் சுழி போட்டார், மகாதேரர்.''

''மகாநாயக்க தேரரே, உங்களைப் போன்று நான் ஞானி அல்லன். சாமான்யன்.''

''சாமான்யன் என்பது அவையடக்கம். யானைக் குத் தன் பலம் தெரியாது என்று சாதாரணமாகச் சொல் வார்கள். உமது ஆற்றலையும் கீர்த்தியையும் நாம் அறிவோம். விதிய பண்டார உமது ஆப்த நண்பன் என்பது...''என்று மகாதேரர் முடிப்பதற்கிடையில் அதிகார நாயக்க குறுக்கிட்டான்.

''இறைமாட்சி தர்மத்தின் நெளிவு சுழிவுகளிலே எனக்கும் சற்றுப் பரிச்சயம் உண்டு. நேற்றைய' நண்பர் கள் இன்றைய எதிரிகள். இன்றைய எதிரிகள் நாளைய நண்பர்கள். அரசியலிலே இவை மிகச் சாதாரணம். எனது அரசியல் வளர்ச்சியில், விதிய பண்டார படிகல் லாக உதவுவான் என நினைத்தேன். நண்பனா

www.padippakam.com



னோம். இந்நேரம் அவனுடைய பிரேதம் ஊவாவை அடைந்திருக்கும். அவனுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் நீலித்தனமாக வடிக்கலாம். இறந்துபோன ஒருவனுக்காக, அதிகார உபாசகர்களைப் பகைத்துக் கொள்ளும் அளவிற்கு நான் பாமரன் அல்லன்.''

''நீர் விவேகி என்பதும் நமக்குத் தெரியும். இல்லாவிட்டால், இந்த வயதில், அதிகாரநாயக்கவாக, நீதி பரிபாலனஞ் செய்பவராக, பதவி உயர்ந்திருத்தல் சாலாது.''

சேனரதன் கிண்ணங்களில் மீண்டும் மது ஊற்றியவாறு, ''வாஸ்தவத்தை உணர்ந்து விரோதம் பாராட்டாத உமது செயல் உவகைக்குரியது. அதைக் குடித்துப் பாராட்டுவோம்'' என்று கூறி. சேனரதன் குடித்தான். அதிகாரநாயக்க சேர்ந்து கொண்டான்.

''அதிகாரநாயக்கவுக்கு என் சார்பில் இன்னொரு கிண்ணம் மது கொடுக்கவும். எதற்காகத் தெரியுமா?"

''எதற்காக? முதலில் அதைச் சொல்லுங்கள். பின்னர் குடிப்பதைப் பற்றி யோசிக்கலாம்''

''சேனரதன் சிம்மாசனம் ஏறும் அன்றைக்கு நீர் மகாமுதலாலியாராக நியமனம் பெறுவீர். இது சத்திய வாக்கு.''

''அது தகுதியின் அடிப்படையிலும், உபகாரத்தின் அடிப்படையிலும் கொடுக்கப்படும் பதவியா?''

''தகுதி தாராளமாக உண்டு. இந்த உடரட்ட முழுவதிலும் நீர் ஒருவர்தானே துவக்கு வைத்திருக்கிறீர்?''

www.padippakam.com



''என்னிடம் இருக்கும் பறங்கியர் துவக்கு பற்றி...''

''பற்றியும்... நமக்குத் தெரியும். உமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களும் நமது அணியிலிருக்கிறார்கள் என்பதற்கு வேறு சான்று தேவையா? அத்துவக்கு உம்மிடமிருந்து ஏன் வீணாகத் துருப் பிடிக்க வேண்டும்?''

''உங்களுக்கு ஏன் அந்தத் துவக்கு ?''

''தலதா மாளிகாவில் வைத்துப் புனித சின்னம் என்று கதை சோடிப்பதற்காகவா அதனைக் கேட்பார்கள் ? கோட்டை ராஜ்யத்தில் குழப்பம் விளைவிப்பதற்கு அது பெரிதும் பயன்படும். அவ்வளவுதான். அதற்கான விலையைத் தந்துவிடுகிறோம்.''

''விலை ?''

''ஆம். அதனை ஐயாயிரம் பறங்கிப் பர்தாங்குகளுக்கு வாங்கியிருக்கிறீர். நாங்கள் பத்தாயிரம் பறங்கிப் பர்தாங்குகள் தருகிறோம்.''

''அது முடியாத...''

''முடியாத காரியமல்ல. உமக்குப் புத்தி சொல்வது மீனுக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பது போலாகும். உமது நன்மை அதிலே தங்கியிருக்கிறது. உமது மகா முதலியார் பதவியும், நமது நட்பும் அதிலே தொங்கிக் கொண்டிருக்கிறது. தலதா மாளிகாவின் மகாநாயக்க தேரரின் மிக நம்பிக்கைக்குரிய நண்பராக மாறுகிறீர் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்.''

''என்னைச் சிக்கலில் மாட்டுகிறீர்கள்.''

''இல்லை. பிறகு ஏற்படக்கூடிய சிக்கல்களிலிருந்து உம்மை விடுவிக்கும் பரோபகாரமும் இதில் உண்டு.''

www.padippakam.com



மௌனம் நிலவியது. அதிகாரநாயக்க சிறிதுநேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

''என்ன யோசனை?'' என்று மகாதேரர் கிண்டினார்.

''துவக்கைத் தருகிறேன். பர்தாங்குகள் வேண்டாம்...''

''சோனக வர்த்தகன் மூலம் நீங்கள் அதனை வாங்குவதற்குப்பட்ட சிரமங்கள் கொஞ்சமல்ல...கடுமையான பேரத்தின் பின்னர் கொடுக்கப்பட்ட விலை. நண்பர்கள் மத்தியில் மண்கொள்ளை சரியல்ல. நமது விலையை ஏற்றால், துவக்கைத் தரலாம்.''

''சரி...''

''மகிழ்ச்சியுடன் சொல்லும்'' என்று மகாதேரர் வற்புறுத்தினார்.

''எனக்கு மகிழ்ச்சியே..." என்று கூறிய அதிகார நாயக்க தேருவே பண்டார கிண்ணத்தில் மீதமிருந்த மதுவைக் குடித்தான்.

''அதிகாரநாயக்க! பூரணைக்கு இன்னும் இரண்டு தினங்கள். இன்று வானும் நிர்மலமாக இருக்கிறது. நிலா பால்போல் காயும், இன்றிரவு இங்கு நிலா விருந்து ஒன்று உமக்காக ஏற்பாடாகும். அப்பொழுது உமக்காக இங்கு பத்தாயிரம் பறங்கிப் பர்தாங்குகள் காத்திருக்கும். நீர் விரும்பினால், உமது நண்பர்கள் இரண்டொருவரை விருந்துக்கு அழைத்து வரலாம். ஆட்சேபனை இல்லை. ஆனால், நீர் உமது துவக்குடன் வரவேண்டும். ஒப்பந்தம் சரிதானே?''

''நான் ஒப்பந்தத்தில் இறங்குவதில்லை. ஒப்பந்தம் செய்து கொண்டால் அதிலிருந்து தவறுவதும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



துவக்குடன் உங்கள் விருந்துக்கு வருவேன்... இப்பொழுது விடை பெறட்டுமா?''

அதிகாரநாயக்க புறப்பட்டான்.

''மும்மணிகளின் ஆசிகள் எப்பொழுதும் தங்களுக்குத் துணை நிற்கட்டும்...'' என்று ஆசீர்வதித்த புத்த தாஸ மகாநாயக்க தேரர், அதிகாரநாயக்க தேருவே பண்டார சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றார்.

## X

பகல் கரைந்தது. இரவு விகசித்தது. வானிலிருந்து பால் நிலவு ஒழுகியது.

நிலவிலே குளித்த இலைகளை அளைந்து வந்த தென்றல், சீதளம் அப்பிக் காலதர் வழியாக உள்ளே நுழைந்தது.

அதிகாரநாயக்க தேருவே பண்டார வரக்கூடிய வீதி வெறிச்சோடிக் கிடந்தது.

காலதர் விளிம்பிலே உடல் சாய்த்து நின்ற புத்த தாஸ மகாநாயக்க தேரரின் பக்கலில் வந்து சேனரதன் நின்றான்.

''இத்தகைய ஒரு அழகிய இரவிலே சாவதற்குக் கொடுத்து வைக்க வேண்டும்...''

''இன்னொரு கொலையா தேரதே?'' என்று சேனரதன் மிடறு முறித்தான்.

அ—7

படிப்பகம்

www.padippakam.com



ஒரு கொலை செய்தவன் கொலைகாரன் என்று சமூகத்தில் இகழப்படுகிறான். பல கொலைகளை அடுக்கடுக்காகச் செய்பவனை 'வீரன்' என்று பாராட்டவும் அந்தச் சமூகம் தயங்குவதும் இல்லை. எண்ணித் துணிந்துவிட்டோம்; இனித் துணிந்து செயலாற்ற வேண்டும். நீ விரும்பும் சிம்மாசனத்துக்கு இரத்தினக் கம்பளத்திலே நடந்து சொல்லமுடியாது. மண்டை யோடுகளைப் படிக் கட்டுகளாக அமைத்துத்தான் செல்லவேண்டும். நீ தயாரா?''

''நான் தயார்? அடுத்து யார்? அதிகாரநாயக்கவா?''

''இந்த அழகிய இரவிலே லோறென்ஸூ பாதிரியார் சாவதுதான் பொருந்தும்...''

''பாவம், கிழவர். தோனாவுக்குப் பிரீதியானவர். விமலதர்ம சூரிய ஆதரவுடன் தேவாலயத்தில் வாழ்ந்து வரும் பறங்கியர்...''

''அரசியற் கொலைகளிலே பாவ புண்ணியம் பார்க்கப்படுவதில்லை. வயசு மரியாதைகள் பாராட்டப் படுவதில்லை.''

''இந்தக் கொலையால் நமக்கென்ன நன்மை?''

''கொலை நமக்கு ஆதாயமாக இருக்க வேண்டு மென்பது உண்மை. திட்டம் முழுவதையும் கேள். லோறென்ஸூ பாதிரியார் இருக்கும் வரை, இந்த மண்ணிலே கிறிஸ்தவ தேவாலயத்தின் மணியோசையும் கேட்டுக் கொண்டே இருக்கும். அந்த மணி யோசை தோனாவுக்கு அசாத்திய தைரியம் ஊட்டு வதை நீ அறியமாட்டாய். பறங்கியரோ கிறிஸ்தவரோ இல்லாத ஓர் இடத்திலே, எதற்காக லோறென்ஸூ

படிப்பகம்

www.padippakam.com



பாதிரியார் இந்த ஆலயத்தைக் கட்டிக் காக்கின்றார்? மனித செயல் எதற்கும் ஒரு நியாயம் இருக்க வேண்டும்...''

''தோனா கதரினாமீது கொண்டுள்ள பாசத்தினால்...''

''பாசம் பொங்கி வளர்வதற்கு அவர் பெத்த அப்பனா? அல்லது தொட்ட அப்பனா? ஏதோ ஒரு மர்மத்தை அவர் கட்டிக் காக்கின்றார். அந்த மர்மம் நிச்சயமாக உடரட்டவின் சேமலாபத்துக்கு உகந்ததல்ல. மேலும், தோனாவின் கவனத்தைத் திசை திருப்புவதற்கும் அவர் கொலை செய்யப்படவேண்டும். அவர் கொலைக்கும் இங்கு நடைபெறப்போகும் விருந்துக்கும் சம்பந்தமிருக்கிறது...''

''எப்படி''

''அப்படிக் கேள். விருந்தின் போது, மகா தொய்வான ஒரு நேரத்தில், சிறிது மயக்க மருந்து ஊட்டப்படும். அது மிக நொய்ப்பமாக நடக்கும். அவள் இங்கு மயங்கிக்கிடக்கும் அதே வேளையில், அவனுடைய துவக்கால் லோறென்ஸு பாதிரியார் கொல்லப்படுவார். அந்தக் கொலைக்குற்றம் அதிகாரநாயக்க தேருவே பண்டார மீது சுமத்தப்படும். அவனுடைய துவக்கு ஒன்றே அவனுக்கு எதிராகக் குற்றஞ் சுமத்தப் போதுமான ஆதாரம். அத்துடன்?''

''அத்துடன்?''

''கொலைகாரனைக் கைது செய்தவன் நீ என்று பறைசாற்றப்படும். விமலதர்மசூரியவினாலேயே மதிப்புடன் நடத்தப்பட்ட லோறென்ஸு பாதிரியாரைக் கொலை செய்த அதிகாரநாயக்க, தண்டனைக்காகப் பறங்கியவர் வசம் ஒப்படைக்கப்படுவான். பாதிரியாரின் மறைவினாலே தனிமைப்படுத்தப்படும் தோனா

www.padippakam.com



கதரினா உன் ஆதரவின் பக்கலிலே சாய்தலும் சாத்திய மாகும்...''

''இவ்வளவு ராஜதந்திரமும் விஹாரத்தின் நாற் சுவர்களுக்கிடையில் முடங்கிக் கிடப்பதா?''

''முகஸ்துதி சுயாதீன விவேகத்தினை மலினப்படுத் தவே உதவுகிறது. என் மூளையின் பலம் எனக்குத் தெரியும்...அதோ பார்! அதிகாரநாயக்க இங்கு வந்து கொண்டிருக்கிறான். சிலந்தி வலையிலே மாட்டிக் கொள்ளப் பாயும் சிறு பூச்சியைப் போல...சேனரதா, உன் கிரீடம் வந்து கொண்டிருக்கிறது என்று கட்டியங் கூறும் ஒரு கட்டியக்காரனின் நடையை அவனிடம் காண் கிறேன்...''

மோகனம் சிந்தும் நிலவிலே, தேவாலயத்தின் மணிக்கூண்டுக் கோபுரத்தின் மேலே நாட்டப்படிருக்கும் சிலுவை இங்கிருந்து பார்க்கத் துல்லியமாகத் தெரி கின்றது.

## XI

'கர்த்தரே! பாவிகளுக்கெல்லாம் பாவமன்னிப்பு அருளி இரட்சிக்கும் சர்வேசுவரா! என் வாழ்க்கை எப் படி எல்லாம் உக்கி உருக்குலைந்துவிட்டது பார்த்தீர் களா? சுகமென்ற நீருற்றே இல்லாத பாலைவனமாகி விட்டது என்னுடைய வாழ்க்கை. என் ஜெபங்கள்-பிரார்த்தனைகள்-வேண்டுதல்கள் எல்லாம் உங்கள் செவிகளிலே விழவில்லையா? பாவிகளை இரட்சிப்பதற் காக முள்முடி தரித்தீர்; சிலுவை சுமந்தீர்; இரத்தத்தால் பூமியை அபிஷேகித்தீர்! இந்த அபலை வடிக்கும் கண் ணீர்க் கடல் மட்டும் உங்கள்பார்வையிற்படவில்லையா?'

www.padippakam.com



'விபூதிதாரியான அஞ்ஞானி ராஜசிங்கன் இந்த உடரட்டவின் மீது படையெடுத்தது முதல் இன்னலன்றி வேறென்ன அநுபவித்தேன்? ராஜ்யம் இழந்த என் தந்தை மெய்யான சர்வேசுவரனான உம்மையே ஏற்று, ஞானஸ்நானம் பெற்று, உமது ஊழியத்தையும் சுவிசேஷத்தையும் இந்நாட்டிலே பரப்பச் சித்தங் கொண்டாரே. ஆனால், வைசூரி நோயென்ற உருவில் மரணம் என் தந்தையையும் தாயையும் ஒரே நாளில் என்னிடமிருந்து பிரித்ததே!..,என் அத்தான் ஜெஸிம்ம எனக்கு ஆதரவாக இருக்கிறாரே என்று மனந்தேறி னேன். எவர் எனக்குத் துணையாக அமைந்து, என் வாழ்க்கையை வழி நடத்துவார் என்று நம்பியிருந் தேனோ அவரே சூழ்ச்சியாளரின் சதிக்குப் பலியா னாரே! சர்வேசுவரா ஏன் அவரை அந்தப் பிஞ்சு வய சில் என்னிடமிருந்து பிரித்தீர்?

'எத்தனையோ சந்தர்ப்பங்களிலே என் உயிரை நானே மாய்த்துக் கொள்ள நினைத்ததுண்டு. அப்பொழு தெல்லாம். 'மகளே, அவன் சித்தத்தினாலன்றி உன் சித்தத்தினால் எதுவும் நடைபெறமாட்டாது. அவன் படைத்த உயிரை நாங்களாகப் பறிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் கிடையாது' என்று லோறென்ஸு சுவாமி யார் அருள் போதனை செய்வாரே! லோறென்ஸு சுவாமியாரே, நீங்கள் என்னுடைய பக்கத்தில் இந் நேரம் இருந்தால், எத்தகைய ஆறுதல் மொழிகளைச் சொல்லிஎன் புண்பட்ட மனதினைசொஸ்தப்படுத்தியிருப் பீர்கள் ? கருணையின் மூத்த வடிவான உங்களை, பாவி களுக்காகப் பாரமேற்றுச் சிலுவையிலேபாடுபட்டு மரித்த ஏசுநாதருக்குத் திவ்விய தோத்திரம் செலுத்திக் கொண் டிருக்கும் பொழுது, கிஞ்சித்தும் நெஞ்சில் ஈரமின்றித் துவக்கால் சுட்டுக் கொன்றானே, பாவி ! அவனுக்குச் சாத்தானின் உலகிலேதானும் வாழும் அருகதைதானும் இருக்கிறதா?

www.padippakam.com



'லோறென்ஸு சுவாமியாரின் ஆத்மாவுக்குச் சாந்தி உண்டாவதாக...கர்த்தரே! உம்முடைய ராஜ்யத்துக்கு என்னைச் சீக்கிரமே அழைத்துக் கொள்ளும். இந்த ஆக்கினைகளிலிருந்து என்னை இரட்சியுங்கள்... அதுவரையிலும் இந்த அரசியல் சாக்கடையிலிருந்து கடைத்தேறும் வல்லமையைத் தந்தருளும். மன்னாரிலுள்ள கன்னியாஸ்திரிகள் மடத்துக்குச் சென்று துறவறம் பூண்டு, நோயாளருக்குச் சேவை செய்யும் ஊழியத்தில் ஈடுபட உதவுவதாகசுவாமியார்சொல்லியிருந்தார்... இனியார் எனக்குத் துணை? ஆறுதல்?...லோறென்ஸு சுவாமியாரின் ஆத்மாவுக்குச் சாந்தி உண்டாவதாக...'

நேரம் நீள்வதைப் பற்றிய பிரக்ஞை யற்றவளாக, மண்டியிட்ட நிலையில், தோனா கதரினா தன்னுடைய பிரார்த்தனையைத் தொடர்ந்தாள்...

## XII

"நந்தா! எனக்கு இந்தச் சித்திரச் சிங்காரம் எதுவும் தேவையில்லை..." தோனா கதரினா, கோபங்கொண்டவளாக ஒப்பனைப் பொருள்களை எல்லாம் தூக்கி எறிந்தாள்.

"கண்ணாடியைப்பாருங்கள். கோவபாவங்கூடஉங்களுக்கு அழகாகத்தான் இருக்கிறது..." என்று கூறிய குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொட, கண்ணாடி எதிரொளியிலே அவள் பிம்பத்தைக் காட்டினாள்.

"இந்த அழகுதான் என்னுடைய முதலாவது எதிரி... அன்று, என் கரம் பிடிக்கும் ஆசையுடன், ஆயிரம் மெல்லிய கனவுகளுடன் ஊவாவிலிருந்து இங்கு வருகை தந்த விதியபண்டார என் காலடியில், பிணமாகச் சரிந்தான். இந்த ஊன் சதையின் அழகே அவனுக்கு எமனா

www.padippakam.com



யிற்று...சேனரதன் பின் நின்று தாக்கிய அந்தக் கோரக் காட்சி...''

தோனா கதரினா, வெறுப்புணர்ச்சிகள் முகத்திலே அலைபுரள, விழிகளை மூடிக்கொண்டாள்.

''சேனரதர் சந்நியாசியாக வாழ்ந்தவர். மென்மையானவர். அவர் துணிந்து ஒரு கொலையைச் செய்தார் என்றால், அதற்கு வலுவான காரணம் உண்டு''

''நந்தாவதி, கொலைகாரனுடைய பாதகச்செயலுக்கு, ஒரு காரணம் கற்பிக்கிறாயா?''

''சேனரதர் இத்தனை காலமும் பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர்...ராஜப்பிரதிநிதியாக நியமனம் பெற்றதிலிருந்து, உங்கள் நலனையே தமது நலனாக ஏற்றிருப்பவர். அண்ணனின் மனைவியைத் தம்பி மறுமணம் செய்வது சிங்களத்தாரின்பண்பு.அந்தப் பண்பு வழியில், அவர்உங்கள் மீது மாளாத காதல் வளர்த்து வருவதை எல்லோரும் அறிவர்... தனக்கே உரியவளான அழகு சுந்தரியின்மீது மாற்றான் ஆசைவைப்பதை ஒருகோழை கூட அனுமதிக்க மாட்டான். தங்களுடைய காதல் நினைவுகள் ஊட்டிய வெறியிலேதான், எழுத்தாணி பிடித்த கைகள் கட்டாரியை ஏந்திற்று. காதல் சாம்ராஜ்யத்தில் எதுவுமே தர்மமானது என ஆன்றோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்...''

''மண்ணுக்கும் விண்ணுக்குமிடையிலே குதியாட்டமிடும் இளமை உணர்ச்சிகளுக்கு வடிகால் எது என்று தெரியாது குழம்பி,உப்பரிகையிலே நின்றுநெட்டுயிர்த்து வெள்ளைப் புரவியிலே ககனத்துப் பாதையிலே வரக் கூடிய இராஜகுமாரனைப் பற்றிக் கனவு காணும் கன்னி மாடத்துப் பெண்களிடஞ் சென்று உன் காதல்

www.padippakam.com



போதனைகளை நடத்து நந்தாவதி! மூன்று நான்கு காதல் விவகாரங்கள், இரண்டு கணவன்கள், மூன்று பிள்ளைகள்...இவை போதாதா காதலைப் பற்றிச் சுயஞானப் பிரகாசம் பெறுவதற்கு? கர்த்தரின் போதனைகளும், பிள்ளைகள் மீதுள்ள பாசம் மட்டும் ஒட்டிக் கொண்டிருக்காவிட்டால்...''

வார்த்தைகளை முடிப்பதற்கிடையில் பணிப்பெண் வந்து, பவ்வியமாக வணங்கி நின்றாள். 'என்ன?' என்று வினவுவது போல தோனா கதரினா பார்த்தாள்.

''தலதாமாளிகாவின் மகாநாயக்க தேரர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்.'' எனப் பணிப்பெண் அறிவித்தாள்.

''சரி வரச் சொல்'' என்று பணிப்பெண்ணை அனுப்பிய தோனா கதரினா பயங்கலந்த குரலிலே, ''இன்று சேனரதனையும் உடரட்ட அரசியலையும் ஆட்டிப் படைக்கும் சூத்திரதாரி இவர் என்று பேசிக் கொள்ளுகிறார்கள். எனக்கு அவர் சாத்தான்களின் ஞானாசிரியனைப் போலத்தான் தோற்றமளிக்கின்றார். விதிய பண்டார கொலை செய்யப்பட்ட நேரத்திலே அவர் முகத்தில் அப்பியிருந்த கொலை வெறியை என்றும் என்னால் மறக்க முடியாது...'' என்றாள்.

''காட்சிகள் அவரவர் மனோநிலைகளையும் பிரதிபலிக்கும் என்று சொல்வார்கள். அவர் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது பார்க்க வேண்டும். அவர் முகத்தில் அபூர்வ ஜோதி. தலையைச் சுற்றி ஓர் ஒளி வட்டம். அவர் திரிகாலத்தையும் அறிந்த ஞானி என்பது பௌத்த மக்களின் நம்பிக்கை. அவர் போதிசத்துவராக மதித்து வணங்கப்படுகின்றார்...'' என்று குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொட அவருடைய கீர்த்தியைச் சொல்லத் துவங்கினாள்.

www.padippakam.com



''உன் பார்வையும் என் பார்வையும் மட்டுமல்ல, நமது நம்பிக்கைகள் கூட வேறுபட்டவை'' என்று விவகாரத்துக்குதோனா கதரினமுத்தாய்ப்பு வைத்தாள்.

மகாசாந்தம் தவழும் முகத்துடன் புத்ததாஸ மகா நாயக்க தேரர் அவர்கள் முன் பிரசன்யமானார். ஓணானிலும் பார்க்க இந்த வித்தை மனிதருடைய முக பாவங்கள் நேரத்துக்கு நேரம் எப்படி எல்லாம் வேறு படுகின்றது என்பதை உன்னித் தோனா பிரமித்துப் போனாள்!

திரிரத்தன சால்பினை முணுமுணுத்த வண்ணம், அங்கு காணப்பட்ட ஓர் ஆசனத்தில் மகாதேரர் அமர்ந் தார். அவருடைய ஒவ்வொரு அசைவிலும் ஓர் அசாத் திய அமைதி புரையோடிக் கிடந்தது.

''ராணி தோனா கதரினா, சில முக்கிய விஷயங் கள் பற்றி உன்னுடன் பேசும் வேளை கனிந்ததினால் இங்கு வந்தேன். உன் தனிமைக்குப் பங்கம் விளைவித் திருந்தால் மன்னிக்கவும்.''

''அப்படி ஒன்றும் இல்லை.''

மௌனத்தில் பல வினாடிகள் இறந்த காலமாயின.

''இந்தப் பெண் யார்? இவள் சாட்சியாய் நிற்க நாம் பேசுவது முறையா? அதுதான்...''என்று உணர்ச் சிகளற்ற குரலிலே சொன்னார்.

''இவள் குமாரிஹாமி நந்தாவதி. பெத்தியா கொட வாகீஸ்வர கவிராஜர் மனைவி. கவிராஜர் எதற் காக எங்கே போனார் என்பதும் மகாமர்மம். இன்று, அவளுக்கு நானும், எனக்கு அவளுமே துணை...''

www.padippakam.com



''உங்கள் பேச்சுக்கு மத்தியில் நான் எதற்கு? நான்...'' என்று நந்தாவதி போகத் தயாரானாள்.

''நந்தாவதி, நீ இங்கே நில்!'' என்று வார்த்தைகளுக்கு அழுத்தம் ஏற்றி தோனா சொன்னாள்.

''அவள் நிற்பதில் எனக்கும் ஆட்சேபனை இல்லை.'' பிள்ளைத்தாச்சி வயிற்றைத் தடவிக் கொடுக்கும் மருத்துவிச்சியின் தழுவலைப் போன்ற மிக மிருதுவான குரல்.

''ராணி தோனா கதரினா! உன் மனம் மிகவும் நொந்து போய் இருக்கிறது. சாதாரண காலம் என்றால், இந்த விஷயங்களைப் பேசுதல் அநாகரிகம் என்று கூட நினைத்திருப்பேன். ஆனால், நாங்கள் மிகவும் அசாதாரணமான காலகட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உடரட்டையின் அரசியல் குழம்பிக் கிடக்கிறது. அதன் தன்னாதிக்க சுயாதீனத்தினை நிறுவும் பணி மெல்லிய மயிரிழையிலே தொங்கிக் கொண்டிருக்கின்றது. தீவின் ஏனைய பகுதிகளிலே உருவாகியுள்ள சூழ்நிலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, விமலதர்மசூரியவின் ஆசைக் கனவுகள், அவன் உடல் மண்ணிலே உக்குவதற்கு முன்னரே, நொருங்கிவிடும் போலத் தோன்றுகின்றது. தனது இலட்சியக் கனவாகத் தலதா மாளிகாவையே நிருமாணித்து, புத்த மக்களுடைய மகா புனித சின்னமான தந்த தாதுவை இங்கு தருவித்தான். அந்தத் தந்தத்தையும், இந்நாட்டின் சுதந்திரத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உன் மென்தோள்களிலே சுமத்தப் பட்டிருக்கின்றது...''!

''சில தலையாய கடமைகள் என் தோளிலே சுமர்த்தப் பட்டிருப்பதை நானும் அறிவேன் மகாதேரரே...''

www.padippakam.com



''இத்தீவின் ஏனைய பகுதிகளின் அண்மைக் காலச் சரித்திரத்தை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும். செந்நெல்லும், கன்னல் தமிழும் செழித்த மறவர் கோட்டமான நல்லூர் ராஜ்யத்தின் கதி என்ன? அற்ப சிற்றரசுப் பதவிக்காக எதிர்மன்னசிங்கன் என்பான் நல்லூரின் சுதந்திரத்தை பேரம் பேசிவிட்டான். நல் மரத்திலே தோன்றிய புல்லுருவி அவன்!...சிங்களத் தீவின் கோநகரெனப் பெருமையுடன் விளங்கிய ஜயவர்த்தனபுரவின் மாண்பு எங்கே? மாயதுன்னையின் சாம்ராஜ்யக் கனவுகளின் கேந்திரமாகத் திகழ்ந்த சீத்தவாக்கை எங்கே? அங்கெல்லாம் பறங்கியரின் ஆட்சி; ஆணை. அந்நியன்—பறங்கியன் கண் காணாத் தேசத்தில் வாழும் பிலிப் என்பவன் மன்னனாம். இந்நிலையில், சிங்களத்தின் சுதந்திரக் கொடி முற்றாக இறக்கப்படாமலிருப்பதைப் பார்த்துக் கொள்ளும்வீரப்பணி உடரட்டக்காரனிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு மேலானது நாட்டுப்பணி!''

''நான் உடரட்டவை ஆளும் உரிமையை—செங்கோலின் அதிகாரத்தை பெற்றவள் என்று சொல்லுகிறார்கள். உண்மையில் நான் ஓர் அடிமையாகவே நடத்தப்பட்டேன்.''

''அடக்குவதில் ஆண்களுக்கும், அடிமையாக இருப்பதில் பெண்களுக்கும் இன்பமிருப்பதாகச் சம்சாரிகள் சொல்லுகிறார்கள். அது எப்படியோ எனக்குத் தெரியாது. ஆனால் அரசியலில்...உன் அதிகாரத்தினை விமலதர்ம சூரியாவிடம் ஒப்படைத்த பொழுது, இந்த மண்ணிலே, உன் பெயரால் ஒப்பற்ற ஆட்சி ஒன்று நிறுவப்பட்டதை நீ அறிவாய்...''

''விமலதர்மசூரியவின் ராணியாக வாழ்ந்த அநுபவம், இனி வரப்போகிற பிறவிகளுக்கும் போதும்

www.padippakam.com



போதும் என்றாகி விட்டது...மகாதேரரே, நான் மலை நாட்டை விட்டுச் சென்று விடுகிறேன். மன்னாரிலோ அல்லது கோவைரட்டையிலோ உள்ள கன்னியாஸ்திரி மடத்திலே சேர்ந்து என் மீதி வாழ்நாளைக் கழித்துவிடு கிறேன்...''

''உன் வாழ்க்கை-உன் அமைதி என்பன பற்றியே நீ யோசிக்கிறாய்...உன் மூன்று பிள்ளைகளுடைய வருங்காலம் என்ன? உன் கணவன் விமலதர்மசூரிய அடிக்கல் நாட்டிய பணிகள் என்ன ஆவது? இம்மலை நாட்டுச் சிம்மாசனத்தற்கு உரியவனான மகா அத்தா னனை மாவீரனாக வளர்க்க வேண்டிய வீரத்தாயின் கடமைகளை மறந்தாயா? நீதான் மலைநாட்டின் மகாமாதா. அவர்களுடைய சுதந்திரப் பிறப்புரிமையை நினைத்துப் பார். நீ தன்னயமாகவே சிந்திப்பது எனக்கு வேதனையைத் தருகிறது. எப்பொழுது தொடச்கம் கலியட்ட பண்டாரவின் வழியில் வந்த சிங் கள இரத்தத்தில் சுயநலம் கலந்தது? தோனா கதரினா நீ ராணி; மானம் காக்கும் மாவீரர்களின் பிறப்பிடமான உடரட்டவின் ராணி; பறங்கிப் படைகளை நடுநடுங்க வைத்த விமலதர்மசூரியவின் ராணி...''

''மகாதேரரே...''

''இம்மலைநாட்டு மக்களைப் போஷிக்கவேண்டிய மாதா நீ! துட்ட காமினியைத் தந்து காவியப் புகழ் தழு விய விஹாரமாதேவி நிகர்த்த வீரத்தாய் நீ! ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவை மட்டுமே அபூர்வமாக அவ தரிக்கும் மகா மாதா நீ!''

''அதற்காக?''

''சேனரதனை மணஞ் செய்து கொள்ளவேண்டும்.''

''சேனரதனையா?''

படிப்பகம்

www.padippakam.com



''அவன்தானே உன்னை மணக்க உரிமையுள்ளவன்?''

''உரிமை?''

''நீ சேனரதனை மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைத்தான் உடரட்டவிலுள்ள அதிகாரிகளும், முதலியார்களும், பிரதானிகளும் ஒரு முகமாக விரும்புகிறார்கள். நீயே யோசித்துப் பார். மூவாசைகளையும் துறந்து புத்தபிக்குவாக வாழ்ந்து கொண்டிருந்த சேனரதனை ஏன் விமலதர்மசூரிய துறவறத்தைத் துறந்து, அரசியலில் நுழையும்படி வற்புறுத்தினான்? ஏன் அவனை மகா முதலியராக்கினான்? ஏன் அவனையே உன் மகன் மகாஅத்தானனின் பாதுகாவனாகவும், ராஜப்பிரதிநிதியாகவும் நியமித்தான்? தன் மரணத்தின் பின்னர் உனக்குத் தகுந்த பாதுகாப்புக் கிடைக்குமோ என்கிற அச்சமும் அவனுக்கு இருந்திருக்கிறது. இந்த மண்ணின் வழக்கத்தை ஒட்டி, தன் மரணத்துக்குப் பின்னர், நீ சேனரதனை மணந்து வாழ வேண்டும் என்றும் விமலதர்மசூரிய விரும்பியிருக்கிறான். அவனுடைய மரண சாஸனம் இந்த விருப்பத்தினைத் துல்லியமாகத் தொனிக்கின்றது.''

''நான் என் செய்வேன்? தனிப்பட்ட உணர்ச்சிகளுள்ள பெண் நான்...''

''நீ நரம்பும், என்பும், தசையுமுள்ள பெண். உண்மை. அதே சமயம் நீ சாதாரணப் பெண்ணல்ல என்பதையும் மறந்து விடாதே. சாதாரணப் பெண்களுக்கு ஏன் உனக்குப் பக்கத்திலுள்ள இந்தப் பெண்ணுக்கு-சொந்த விருப்பு வெறுப்புகள் இருக்கமுடியும். அவள் காதல்-அன்பு-குரோதம் என்ற தனி மனித உணர்ச்சிகளுக்கு வளைந்து கொடுக்கலாம். ஆனால், நீ ராணி. மக்களின் அன்னை. சொந்த அபிலாஷை

www.padippakam.com



களை விடுத்து, அவர்களுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்யும் தெய்வம். மக்களுடைய இஷ்டங்களைப் பிரீதி செய்வதே தெய்வப் பண்பு!''

''மகாதேரரே! நான் கெஞ்சுகின்றேன். எனக்கு மனுஷ வாழ்க்கை தாருங்கள்...''

''மனுஷ வாழ்க்கையின் வாஸ்தவங்களை நினைத்துப் பார். உன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக இருந்தான் அதிகாரநாயக்க தேருவே பண்டா. அவனே லோறென்ஸு பாதிரியாரைக் கொலை செய்கிறான்...''

''தயவு செய்து வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள். பாதிரியாரின் மரணத்தை நினைத்தாலே...'' தோனா கதரினா விக்கி விக்கி அழத் துவங்கினாள். அழுது, மூக்குச் சிந்தி, சம நிலை அடைவதற்கான அவகாசத்தினை அவளுக்கு மகாநாயக்க தேரர் அளித்தார்.

''நீ சீக்கிரமே உணர்ச்சிவசப்பட்டு விடுகிறாய். ஆனால், சேனரதன் உன்னுடைய மெல்லுணர்ச்சிகளை என்றும் கௌரவிக்கின்றான். லோறென்ஸு பாதிரியாருக்கு கிறிஸ்தவ ஆசாரப்படி, ராஜ மரியாதையுடன் கொடுக்கப்பட்ட நல்லடக்கத்தை நினைத்துப் பார். இவை போதாதா அவன் உன்னுடைய மெல்லுணர்ச்சிகளுக்கு எத்தகைய முக்கியத்துவம் கொடுக்கிறான் என்பதை நிரூபிக்க? ராணி தோனா கதரினா! உன் வயிற்றுள் வளர்ந்த குலக் கொழுந்து— வீரன் விமலதர்ம சூரியவின் ஏக புதல்வன்— மகா அத்தானன் இந்த ஸ்ரீவர்த்தனபுரவைத் தலைநகராகக் கொண்டு, சிங்களத் தீவு முழுவதுக்கும் என்றோ ஒரு நாள் சக்கரவர்த்தியாக வருதல் வேண்டும் என்கிற ஆசையைத் தவிர வேறு எந்த ஆசையும் இந்தத் துறவிக்குக் கிடை

www.padippakam.com



யாது. அந்த ஆசை உனக்கு மட்டும் இல்லையா?... அவனுடைய அன்னை நீ!''

''முகிற்கூட்டத்தின் நீரை வானவெளியிலே வைத்துக் குடிக்க விருப்பந்தான். ஆனால், என்னால் சக்கரவாகப் பட்சியாக மாறமுடியுமா?''

''அச்சங்கள் சாதனைகளின் சத்துரு! உன் மகன் தான் கலியட்ட பண்டாரவின் பேரனென்பதையும், விமலதர்ம சூரியவின் மகன் என்பதையும் அகிலம் முழுதும் அறியச் செய்வான். அவனுடைய ஜாதகம் அப்படிப்பட்டது. நீ பெண். உன்னால் அவனுக்கு வீரப்பயிற்சிகள் அளிக்க முடியுமா? இதற்கிடையில் நான்கைத்து அரசியற் கொலைகள் நடந்து விட்டன. இந்த எண்ணிக்கை தினமும் பெருகும். இரத்தப் பசி கொண்ட கொலைகாரனின் நிழல்கள் கூட மகா அத்தானனின் மீது படிதல் கூடாது. இந்த ஆபத்துகளிலிருந்து காப்பாற்றும் நோக்கமாகத்தான், நீ சேனரதனை மறுமணம் செய்து கொள்வதை விமலதர்ம சூரிய தன்னுடைய இறுதிக் காலத்தில் விரும்பியிருத்தல் சாத்தியம்...''

''மகா அத்தானனுக்குத் தகுந்த பாதுகாப்பு சேனரதன்தான் என்று நீங்கள் கருதும் பட்சத்தில், பிரதானிகள் சபையைக் கூட்டி, ஆட்சி அதிகாரங்களை சேனரனிடம் ஒப்படைக்கப்படுவதாகப் பிரகடனப்படுத்துகின்றேன்... திருமணம் எதற்கு?''

''அரசிகள் காதல் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள் என்று கதைகள் கேட்கும் பொழுது ரஸிகக் கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனால், உண்மையில் அவர்களுக்கு அரசியற் காரணங்களுக்காகத்தான் திருமணங்கள் நடைபெறுகின்றன. ராணி தோனா

www.padippakam.com



கதரினா, இன்னொரு தடவை பகிரங்கமாகக்கற்பழிக்கப் படும் கண் கொள்ளாக் காட்சியைப் பார்க்கலாமா என்று மனோ வியாதி கொண்ட பிரதானிகள் அலைவதும் எனக்குத் தெரியும். அநுபவத்தை ஆசானாய் ஏற்றுக் கொள்ளுதல் மகா கௌரவமானது...''

மகாநாயக்க தேரர் இதனை மகா சாமன்யமாகச் சொன்னபோதிலும், அதில்மறைந்து கிடந்த எச்சரிக்கை மகா கொடியது என்பதை தோனா கதரினா உணர்ந் தாள். தோனாவின் உடல் அச்சத்தினால் நடுங்குவதை குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொட அவதானித் தாள். புத்ததாஸ மகாநயக்க தேரர் தமது இறுதி அஸ் திரங்களைத் தொடுக்கத் துவங்கிவிட்டதை அவள் அனுமானித்தாள். தான் பேசும் சந்தர்ப்பம் முகிழ்வதை யும் அவள் உணர்ந்தாள்.

''சேனரதரை மணந்து கொள்ள இஷ்டமென்று ராணியார் வாய்விட்டுச் சொல்ல வேண்டுமென்று எதிர் பார்க்கின்றீர்களா, மகாதேரரே? 'சேனரதரை ராஜப் பிரதிநிதியாக நியமித்து அதிகாரங்களை வழங்குகின் றேன்' என்றால் என்ன அர்த்தம்? சூக்குமமாகத் தொக்கு நிற்கும் பொருளை நீங்கள் உணர வில்லையா?'' என்று நந்தாவதி சரஸம் குழைத்துப் பேசினாள்.

''நந்தாவதி...'' என்று தோனா சீறினாள்.

''அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன பெண் களுக்கு அணிகலன்களாம். ஐந்தாவது அணிகலன் பொய்க்கோபம்!''

''ராணி தோனா கதரினா! உன் சிநேகிதி மகா புத்திசாலி. உனக்காகப் பேசுவதாகப் போக்குக் காட்டி,

www.padippakam.com



பெண்கள் விவகாரத்தில் நான் ஒரு சந்நியாசிதான் என்பதையும் சுட்டிக் காட்டிவிட்டாள்...உன் நன்மை-உன் மகனுடைய நன்மை-உடரட்ட மக்களின் நன்மை-சிங்களத்தீவின் நன்மை எல்லாமே நீ சேனரதனை மறுமணஞ் செய்வதிலேதான் தங்கியிருக்கின்றது. மற்றைய ஏற்பாடுகளை நான் கவனிக்கிறேன். நான் வரட்டுமா?''

புத்ததாஸ மகாநாயக்க தேரர் புறப்படுவதற்குத் தயாரானார்.

## XIII

**தோனா** கதரினா, சேனரதனை மறுமணஞ் செய்யப் போகின்றாள் என்ற செய்தி ஸ்ரீவர்த்தனபுரவிலிருந்து புறப்பட்டு ஒரு சுற்றுச் சுற்றியது. அடுத்து, திருமணமும் முடிசூட்டு விழாவும் ஏக காலத்தில் நடைபெறும் என்கிற செய்தி வந்தது.

எல்லா ஏற்பாடுகளும் புத்ததாஸ மகாநாயக்க தேரரின் நேரடி மேற்பார்வையில் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

முடிசூட்டு விழாவுக்கு முன்னரே ஊவா திஸாவை, மகா முதலியார், சேனநாயக்க, அதிகாரநாயக்க, கஜநாயக்க ஆகிய முக்கிய பதவிகளுக்கான நியமனங்கள் முற்றுப் பெற்றுவிடும் என்று பிரதானிகள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சேனரதனும் புத்ததாஸ மகாநாயக்க தேரரும் தினமும் சந்தித்தும் பேசுதல் வழக்கமாகிவிட்டது.

அ—8

படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் அதி உச்ச அரசியல் விவகாரங்களைப் பேசி முடிவுகள் எடுப்பதாகவே மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள்அரசியல் பற்றிய தத்துவ—வித்துவ உரையாடல்களிலும் காலத்தினை விரயமாக்குவதும் உண்டு.

ஒருநாள்.

''சேனரதா, அரசுக் கட்டில் ஏறுவதற்கு முன்னர், சிலகருத்துவங்கள் பற்றியும் விழுமியங்கள் பற்றியும் ஒரு மீள்பார்வை தேவை'' என்று புத்ததாஸர் சுழி போட்டார்.

''மகாசங்கத்தைத் துறந்து, விமலதர்ம சூரியவுக்குத் துணையாக, அரசியற் பணிகளிலே இறங்கிய காலம் முதல், அரசியற் சூக்குமங்களின் படுமுடிச்சுகளை அவிழ்ப்பதிலும் அவாவுடையவனாய் இருக்கிறேன்... மக்கள் நலன் கருதி, அவர்களுடைய நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்து, நிறைவையும் அமைதியையும் நிலை நாட்டுதலே அரசின் கடமை...''

''தர்மிஷ்ட அரசின் கடமை. இத்தகு ஆட்சியை நடத்துபவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன?''

''வாக்கு நிதானம், செயல் திறன், மக்களிடம் அன்பு, பணியில் விசுவாசம், மூச்சு நிற்கும்வரை தொண்டு செய்யும் சேவா உணர்ச்சி முதலியன இருத்தல் வேண்டும்.''

புத்ததாஸ மகாநாயக்க தேரர் கடகடவென்று சிரித்தார்.

''இவை விதிகள். விதிகளை அறிந்தவனே அவற்றை உடைக்கும் அதிகாரத்தைப் பெறுகிறான்.

www.padippakam.com



விதிகளுக்கு இசைந்தொழுகுபவன் சாமான்யனாக வரலாற்றினால் மறக்கப்படுகின்றான். பொய்யைச் சொல்லி, அதுதான் உண்மை என்று பத்துச் சாட்சியங் களைச் சோடித்து, அதனை வாய்மையின் திருத்த விசுக்கு ஏற்றும் வல்லபம், ஆட்சியாளனுக்குச் சுகமும் நயமுந் தரும் ஒன்றினைப் பொது நலத்தின் மகாதிருத் தொண்டு என்று நிறுவும் வித்தாரம், 'சாந்தி...சாந்தி...' என்று உதடுகள் சதா பாராயணஞ் செய்து கொண்டிருக்க ஆயிரம் கொலைகளைச் செய்யத் திட்டமிடும் திட்பம், 'மக்கள் சொல்லே மகேசன் ஆணை' என்று சொல்லிக் கொண்டே மக்கள் அனைவரையும் பேசாமடந்தை களாக வைத்திருக்கும் சாதுர்யம்—இவற்றைக் கலை யாகப் பயிலக்கூடிய ஒருவன், ஆயிரத்துள் ஒருவனாய் ஆட்சியிலே சாதனைகளைச் சாதிப்பான். ஒரு தடவை உன் அண்ணன் விமலதர்மசூரிய சொன்னான்...தந்தி ரத்தில் குள்ள நரியாகவும், இரத்த வேட்கையில் வேங்கையாகவும், ஆணவத்தில் சிங்கமாகவும், நன்றி மறப்பதில் பாம்பாகவும், பிறர் அழுக்குகளைக் காண் பதிலே கழுகாகவும், பாவனையில் ருத்ராட்சப் பூனை யாகவும், ஞானத்தில் ஆந்தையாகவும் ஓர் அரசன் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்று கோனவரட்டை யில் சந்தித்த ஞானி ஒருவர் போதித்தாராம்...''

மகாநாயக்க தேரர் எழுப்பிய சிரிப்பொலியிலே சேன ரதனும் கலந்து கொண்டான்.

இருவர் எழுப்பிய சிரிப்பலைகளையும் ஓய வைப் பது போல, காதுகள் அறுக்கப்பட்ட நிலையில், இரண்டு சோனகர்கள் அவர்கள் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# XIV

**இலங்கையில்** முஸ்லிம்களுடைய வரலாறு சேனரதனுடைய ஆட்சிக் காலத்லேயே புதிய பரிமாணம் பெறுவதாயிற்று.

போத்துக்கேயர் 1498இல் கேரளக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தை வந்தடைந்ததிலிருந்து, ஐரோப்பியச் சாதியார் கிழக்கு நாடுகளுக்கு வருவதற்கான கடல் மார்க்கத்தினைக் கண்டுபிடித்தார்கள். அதிலிருந்து அவர்களும், அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர், பிரஞ்சியர், ஆங்கிலேயர், தேனியர் ஆகிய பல்வேறு பறங்கிச் சாதியாரும் இந்து சமுத்திர நாடுகளிலே தங்களுடைய ஊழியத்தினையும், ஆதிபத்திய முயற்சிகளையும் மேற்கொள்ளத் துவங்கினார்கள்.

போத்துக்கேயர் இலங்கைக் கரையை அடைவதற்கு முன்பிருந்தே இஸ்லாம்மார்க்கத்தினைஏற்றிருந்த சோனகர் செல்வாக்குப் பெற்ற வர்த்தக இனமாக, இலங்கையிலே செழித்தார்கள். அவர்கள் கேரளக் கரையில் கொச்சி, கள்ளிக்கோட்டை ஆகிய துறைமுகங்களிலும், இலங்கையில் ஜெயவர்த்தனபுர கோட்டைக்கு அண்மையிலிருந்த கொழும்புத் துறைமுகத்திலும் கிட்டங்கிகளும் கோட்டைகளும் அமைத்து ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுப் பொருளீட்டினார்கள். இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களாகத் திகழ்ந்த ஏலம், கறுவா, மிளகு, தந்தம், இரத்தினக்கற்கள், முத்துக்கள் ஆகியவற்றின் வர்த்தகம் முழுவதும் அவர்களுடைய செல்வாக்கின் கீழ் இருந்தன. இலங்கையைக் களமாகக் கொண்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட முஸ்

படிப்பகம்

www.padippakam.com



லிம்கள், தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்ந்து, இந்த நாட்டையே தமது தாய்நாடாகவும் பாராட்டத் துவங்கினர். அவர்களுடைய சேவைகளை ஆதாய மாகப் பயன்படுத்திய சுதேச சிங்கள அரசர்கள் அவர் களுக்கு வசதிகளும்-சலுகைகளும் அளித்ததுடன் அவர் களுடைய நட்புறவைச் சிலாகித்துப் பாராட்டினார்கள். அவர்களும் சிங்கள மன்னர்களுக்கு ராஜ்ய விவகாரங் களிலும் பயனுள்ள ஒத்துழைப்பு அளித்து வரலாயினார்.

போத்துக்கேய பறங்கியருடைய எழுச்சியை முஸ் லிம்கள் முழுமனத்துடன் வெறுத்தார்கள். பறங்கியரு டைய வர்த்தக நடவடிக்கைகளினால் முஸ்லிம்களே அதிகமாகப் பாதிப்பு அடைந்தனர். இதனாலும், சுதேச மன்னர்களுடைய நிலையான ஆட்சியை ஆதரித் தனர். சுதேச மன்னர்கள் பறங்கியருக்கு எதிராக நடத்திய போர்கள் பலவற்றிலே முஸ்லிம்கள் சுதேச மன்னர்களுடைய கையைப் பலப்படுத்துவதிலே முன்னின்றனர். சீத்தவாக்கை மன்னன் மாயதுன்னை போத்துக்கேயருக்கு எதிராகப் போராடி நாட்டிய வெற்றிகளிலே முஸ்லிம்களுடைய பங்களிப்புக் கணிச மானது. போத்துக்கேயர் கோட்டை ராஜ்யத்திலும், யாழ்ப்பாண ராஜ்யத்திலும் தமது வல்லபத்தினையும் ஆட்சியையும் நிறுவிய பின்னரும், போத்துக்கேயர் மீது முஸ்லிம்கள் பகைமையே பாராட்டினார்கள்.

போத்துக்கேயருடைய பரம்பலின் பிரதான குறிக் கோள்களுள் ஒன்று கத்தோலிக்க கிறிஸ்தவ மதப்பிர சாரமாகும். இஸ்லாத்தின் மேற்கு நோக்கிய பரம்ப லைத் தடுத்து நிறுத்துவதற்காக, ஐரோப்பியச் சாதி யார் சிலுவை யுத்தங்கள் நடத்தினார்கள். சிலுவை யுத்தங்கள் பற்றிய நினைவுகள் போத்துக்கேயருக்குப் பசுமையாக இருந்தது. இஸ்லாமியரான சோனகர் தமது சுவிசேஷ ஊழியத்திற்கு விரோதமாகச் செயற்படு

படிப்பகம்

www.padippakam.com



வார்கள் என்கிற நியாயமான அச்சம் போத்துக்கேயருக்கு இருந்தது.

எனவே, போத்துக்கேயருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பரஸ்பர விரோதம் வளரலாயிற்று.

உடரட்டயில் நிலைகொண்டிருந்த சுதந்திர சிங்கள அரசினைத் தங்கள் ஆதிபத்திய உரிமைகளுக்கு எதிரான சவாலாகவே பறங்கியர் கருதினர். விமலதர்ம சூரியவின் மரணத்தைத் தொடர்ந்து, உடரட்ட அரசியலிலே தோன்றியுள்ள குழப்ப நிலையைப் பயன்படுத்தி, படையெடுப்பு ஒன்றினை அவர்கள் நடத்த விரும்பியதும் உண்டு. மலைநாட்டின் இயற்கை அரண்களை ஊடறுத்து நீண்ட காலத்திற்குத் தமது ராணுவ வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள இயலாது என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆசையும் நிராசையும் பின்னிய உணர்ச்சியினால், பறங்கியர் தமது மூர்க்கத்தினை முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் திசை திருப்பினர்.

உடரட்டைக்குத் தேவையான உப்பினை முஸ்லிம் வியாபாரிகளே புத்தளத்திலிருந்து கொண்டு செல்வது நீண்ட கால வழக்கமாக இருந்தது. அரசுகளுக்கிடையில் போர் நிகழ்ந்த காலங்களிலும், உப்பு வர்த்தகம் தங்கு தடையின்றியே நடைபெற்றது. ஆனால், போத்துக்கேயர் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை ஒடுக்கி அடக்கத் துவங்கினார்கள்.

உப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களைக் கைது செய்து, அவர்களுடைய செவிகளை அறுத்து, ஸ்ரீவர்த்தனபுரவுக்கு அனுப்பி வைக்கும் நூதனமான எச்சரிக்கை முறையினைப் பறங்கியர் அண்மைக் காலத்தில் துவங்கினர். இதன்மூலம், முஸ்லிம்களைப் பழி

www.padippakam.com



தீர்த்துக் கொள்வதுடன், உடரட்டவுக்குச் சினமூட்டி வலுச்சண்டைக்கு அழைக்கலாம் என்றும் பறங்கியர் எதிர்பார்த்தனர்.

இத்தகைய பின்னணியில் ஆக்கினைக்கு உள்ளான சோனகர் இருவரே அவர்கள் (சேரைதன் +புத்ததாஸ மகாநாயக்க தேரர்) முன்னால் நிறுத்தப்பட்டார்கள்.

## XV

''மகாநாயக்க தேரரே! சோனகர்கள் பறங்கியருடைய கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகிறார்கள்... அவர்கள் தங்களுடைய பாரம்பரிய தொழில் வாய்ப்புக்களை இழந்து, நமது நாட்டிற்குள் தஞ்சமும் அபயமும் கோரி வருகிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை தினந் தினம் அதிகரித்து வருதல் கவலைக் கிடமானது... இதற்கு உடனடியாகப் பரிகாரம் தேடப்படுடல் வேண்டும்...''

''அவர்களுக்கு நாம் அடைக்கலம் கொடுக்க வேண்டும். அதே சமயம், நாம் அவர்களுக்குச் செய்யும் இவ்வுதவி, பௌத்த சிங்கள மக்களுக்கு, நீண்ட காலத்தில், ஆதாயந் தருவதாகவும் அமைதல் வேண்டும்... தீர்க்கதரிசனமுடைய நீண்ட காலத் திட்டம் ஒன்று தேவை.''

''புரியவில்லை மகாதேரரே...''

''பறங்கியர் இருசாராருக்கும் பொது எதிரி. எங்களுடைய நலன்களுக்கு உதவியானவர்கள் முஸ்லிம்கள் என்பதும் உண்மை. அதற்காக அவர்களை ஸ்ரீவர்த்தனபுர, கங்கஸ்ரீபுர ஆகிய இடங்களைச் சுற்றிக் குடியமர்த்திவிட முடியுமா? கண்களை மூடிக் கொண்டு, ஒரு

www.padippakam.com



நூற்றாண்டு அல்லது இரண்டு நூற்றாண்டு காலத்துக்குப் பின்னர் என்ன நடக்கும் என்று கற்பனை செய்துபார்... இந்த இடங்களில் எல்லாம் அவர்கள் பெரும்பான்மை இனமாகவும், நாங்கள் சிறுபான்மை இனமாகவும் மாறிவிடும் ஆபத்து உண்டு.''

''விந்தையாக இருக்கிறது உங்கள் கூற்று...''

''உலகம் விந்தையானது. மக்களுடைய பழக்க வழக்கங்களும் வித்தையானவை. இங்கு— இந்த மலை நாட்டில்— குன்றுகளின் அடிவாரங்களிலே படிகள் செதுக்கி, கழனிநிலம் கண்டு, வேளாண்மை செய்கிறோம். இந்தக் கழனிகள் நமக்கு உயிரானவை. சொத்துரிமைப் பிணக்குகளினால், இவை துண்டாடிப் போவதை நாம் விரும்பவில்லை. ஒருத்தனுக்கு ஒருத்தி என்கிற கற்பு நெறியைக்கூட நாம் நெகிழ்த்தியுள்ளோம். ஒரு குடும்பத்திலே மூத்தவன் ஒருவன் கல்யாணம் செய்கிறான். மூத்தவனின் மனைவியை, பாஞ்சாலியைப் போல, இளவல்களும் உடல்ரீதியாக அனுபவிப்பதை நமது சமூகம் அங்கீகரித்துள்ளது. இங்கு ஒருத்திக்குப் பல கணவன்கள் என்பது மரபுவழியிற் செல்லும். இந்தப் பண்பாடு நிலத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளது. தெம்லிகல போன்ற இடங்களிலே விவாகமாகாத பெண்கள் விபசாரக் கோட்டங்களிலே சேர்க்கப்படுகிறார்கள். சமூகத்தின் ஆரோக்கியத்திற்கு உகந்த வடிகால் என்பது ஆன்றோர் அநுபவம். பண்பாடு நாம் பின்பற்றும் மதத்தினாலும் வாழும் மண்ணினாலும் உருவாக்கப்படும். மண்ணின் தேவையில் முகிழ்ந்த நம் பண்பாடு பௌத்த சிங்கள கலாசாரத்திற்கு எவ்வகையிலும் முரண்பட்டதாகாது. ஆனால் முஸ்லிம்கள்? இஸ்லாம் மதம், ஓர் ஆண், ஏக காலத்திலே நான்கு மனைவிகள் வைத்துப் பெத்துப் பெருகுவதை ஆகுமான காரியமென அங்கீ

www.padippakam.com



கரிக்கின்றது. காமக் கோட்டங்களிலே அல்லலுறும் பெண்கள், புதிய மார்க்கம் தழுவி, குடும்பப் பெண்க ளாக வாழ முன்வருவதை நம்மால் தடுக்க முடியுமா? ஒரு முஸ்லிம் நான்கு பெண்களை மனைவியராக்கிப் பெத்துப் பெருகிக் கொண்டிருப்பார்கள். இப்படிப் பெரு கக்கூடிய சனத்தொகைக்கு முன்னால் வீட்டு வாசலிலே தொங்கவிடப்படும் சுளகின் நிலை கண்டு, கோவணங் களைச் சரிசெய்யும் நம்மவர்களாலே தாக்குப் பிடிக்க முடியுமா?...தானம் என்பது தன் இனத்தையே அளித்து விடும் தாராளமாக இருந்துவிடக்கூடாது...''

''அப்படியானால், அவர்களுக்கு உடரட்டவில் புக லிடம் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுகிறீர்களா?''

''அப்படி நான் சொன்னேனா? இல்லை. உடரட்ட வின் கிழக்கிலே, பரந்து கிடக்கும் நிலப்பரப்பைப் பார். அதற்கு அப்பால் வங்கக் கடல் விரிந்து கிடக்கின்றது. வங்கக் கடலிலே போத்துக்கேயர் என்கிற பறங்கியர் மட்டும் நடமாடவில்லை. பூனைக் கண்ணர், புகைக் கண்ணர், புலிக்கண்ணர் நீலக்கண்ணர் என்று பல்வேறு பறங்கி இனங்களின் கப்பல்கள் தெரிவதாகக் கேள்விப் படுகிறோம். திருக்கோணமலைத் துறைமுகத்துக்கு அப்பாலும், மட்டக்களப்பு முகத்துவாரத்துக்கு அப்பா லும் கப்பல்களின் நடமாட்டங்கள் தென்பட்டதாகவும், சில கப்பல்களிலே பறந்த கொடிகள் போத்துக்கேயப் பறங்கியருடையது அல்ல என்றும் உளவுச் செய்திகள் வந்ததாக விமலதர்மசூரிய சொல்லக் கேட்டிருக்கிறேன். உலாந்தப் பறங்கியருடன் தொடர்பு கொள்ளும் முயற்சி யிலும் அவன் இறுதிக் காலத்தில் ஈடுபட்டதையும் நான் அறிவேன். பறங்கி இனத்தவர்களுக்குத் துறைமுகங் களே தேவை. மேற்கிலே போத்துக்கேயர் குடி கொண்டுள்ளதால், கிழக்கிலுள்ள துறைமுகங்களிலே அவர்கள் கண்குத்துதல் சாத்தியம்... பறங்கி

www.padippakam.com



இனத்தவர்களிடம் பீரங்கிகளும் துவக்குகளும் உண்டு. இது ஒரு புறம். மறுபுறமுள்ள யதார்த்தம் என்ன? பளுகம, கொட்டியாரப் பகுதிகள் தமிழர் வாழும் பிரதேசங்கள். அவை பெயரளவிலேதான் உடரட்டவின் மேலாணையை ஏற்றுள்ளன. அண்மைக் காலத்தில் சேரர் தமிழர் மண்முனைத் துறையிலே வந்திறங்கியதாகவும், அவர்களுக்குக் குடியிருப்புகள் அமைப்பதிலே செல்லவந்தார் உதவியதாகவும் உளவுகள் வந்தது உனக்கும் தெரியும். இன்றில்லாவிட்டாலும், என்றாவது ஒரு நாள், இந்தத் தமிழர்கள் யாழ்ப்பாணத்துடன் இணைந்து ஒரு தனிஅரசு-தமிழ் அரசு-அமைக்க முனைய மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?...''

தலதா மாளிகாவின் மகாநாயக்க தேரர் சொல்லும் விஷயங்களை சேனரதன் அட்சரம் பிசகாது உள் வாங்கிக் கொண்டிருந்தான். அவன் காட்டிய அக்கறை மகாதேரரின் மனதைக் குளிர்வித்தது. சில காலமாகவே தமது மனதிலே மனைகோலிக் கொண்டிருந்த திட்டம் ஒன்றினைச் செயலாக்கும் தருணம் கனிந்து வருவதை மகாதேரர் உணர்ந்தார். எனவே, அவர் தமது திட்டத்தினை மேலும் விஸ்தாரமாக விளக்கச் சிந்தை பூண்டார்.

''இங்கு கறுவா-மிளகு-உப்பு-பாக்கு வணிகத்திலே ஈடுபட்டுள்ள முஸ்லிம்கள் பலரும் மலையாளக் கரையுடன் தொடர்புடையவர்கள். ஒரு 'சாதியான' தமிழைத்தான் அவர்களும் பேசுகிறார்கள்...அவர்களை பளுகமவை அண்டிய பகுதிகளிலும், முடியுமானால் எழுவான் கரையிலும் குடியேற ஊக்குவிக்கலாம்... உபரியானால் மகாகங்கைக் கரையிலே ஏராளமான கழனி நிலத்தினை உருவாக்கலாம்...பௌத்த சிங்கள இனத்தின் தனித்துவம்-மேலாண்மை-ஆட்சி

www.padippakam.com



யுரிமை ஆகியவற்றை நிரந்தரமாக்கும் உள்நோக்கந்தினைச் செயற்படுத்தும் விதத்திலேயே, முஸ்லிம்களை மீளக் குடியமர்த்தும் திட்டங்கள் செயற்படுத்தப் படுதல் வேண்டும்...நமது அங்கீகாரத்துடனும் அநுசரணையுடனும் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்படுவதினால், அவர்களுக்குப் புகலிடம் அளிக்கும் கடமையை நாம் செவ்வனே நிறைவேற்றுகிறோம். இதனால், அவர்கள் எங்களுக்கு விசுவாசமானவர்களாக வாழ்வார்கள். அதே சமயம், அவர்கள் புதிய தொழில்களிலே ஈடுபடும்பொழுது, அவர்கள் அங்கு வாழும் தமிழர்களுடனேயே போட்டி போடுவார்கள். மதரீதியாகவும் அவர்களுக்கும் இந்துக்களுக்கும் பிணக்குகள் தோன்றுதலும் தவிர்க்க இயலாதது... நீண்ட கால நோக்கிலே பார்த்தால், மேலும் பல நன்மைகள் உண்டு...''

''மகாதேரரே! உங்களிடம் கற்றுக் கொள்வதற்கு நிறையவே உண்டு... உங்களை என் அரசியல் ஞான குருவாகப் பெற்றமை என் பாக்கியமே!'' சேனரதனின் இந்த வார்த்தைகள் மகாநாயக்க மீது புஷ்பாஞ்சலியாகச் சொரிந்தன.

''தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களுக்குள் பிணக்குகளையும் வியாச்சியங்களையும் வளர்த்துக் கொண்டால், நாங்கள் விவகாரங்களைத் தீர்க்கும் மூப்பர்களாக எங்களுடைய அதிகாரங்களைச் செலுத்துவது சுலபமாகிவிடும்...பறங்கியர் கரையோர நிலப்பகுதிகளையே தாக்குவார்கள். அத்தகு சந்தர்ப்பங்களிலே, பீரங்கித் தாக்குதல்களின் மூர்க்கத்தினை அந்தப் பகுதியில் வாழும் மக்களே தாங்க நேரிடும். இந்தப் போர்களிலே சிந்தப்படும் இரத்தம் பௌத்த சிங்களவர்களுடைய இரத்தமாக இல்லாமலிருப்பது எவ்வளவு ஆதாயமானது?...என்னுடைய சிந்தனைகள் பல நூற்றாண்டுகளுக்கு அப்பாலாகவும் ஊடுருவிச் செல்கின்றது...

www.padippakam.com



வெள்ளைப் பறங்கியரால் நீண்ட காலத்துக்கு நம்மைக் கட்டி ஆள முடியாது...பல கடல்கள் கடந்து தலை முறை தலைமுறையாக ஆளுவதிலே பல நடமுறைச் சிக்கல்கள் ஏற்படவே செய்யும். அவர்கள் நமது கரையை விட்டுச் சென்று விட்டார்கள் என்கிற ஒரு கற்பனை நிலையை மனக்கண் முன் உருவாக்கிப் பார்... காலம் காலமாக—சேனன் குத்திகன் காலத்திலிருந்தே -இத்தீவினை ஆளுவதற்குப் பௌத்த சிங்களவர்களுக்கு எதிராக எழுச்சி பெற்றவர்கள் தமிழர்களே. நேற்றும் அவர்களே நம் எதிரிகள்; நாளையும் அவர்களே நம் எதிரிகள்...இத்தீவின் மூன்றாவது மக்கள் குழுவாக நம் மத்தியிலே வளர்ந்து வரும் சோனகர்களை அவர்கள் மத்தியிலே குடியிருத்திவிட்டால், தமிழர்களுக்கு எதிரான ஒரு நிரந்தர சக்தினை வளர்த்தெடுக்கக் கால் கோள் நாட்டியவர்களாவோம். இந்தத் தீர்க்கதரிசனம் மிக்க நடவடிக்கைக்காக மட்டுமே சேனரதனுடைய ஆட்சிக்காலம் இந்நாட்டின் வருங்காலச் சந்ததியாரா லும் நினைவு கூறப்படும் என்பது திண்ணம்...''

''நீங்கள் பரிந்துரை செய்யும் இத்திட்டம் மகா தீர்க்கதரிசனமுடையது என்பதை நான் முழுமையாக ஒப்புக் கொள்ளுகின்றேன்... தர்மசோகச் சக்கரவர்த் தியை உருவாக்கிய கௌடில்ய மாமுனிவருடைய நட மாடும் அவதாதரமாக நான் உங்களை இப்பொழுது தரிசிக்கின்றேன்...உங்கள் ஆலோசனைகளின்படி, பாதிப்புற்ற முஸ்லிம் மக்களை, கிழக்கிலே, குமுக்கன் ஓயாவுக்கு வடக்கிலும், மாகங்கைக்குத் தெற்கிலும், குடியிருப்புகள் அமைத்துக் குடியேற ஆவன செய் வோம்.''

''பரீட்சார்த்தமாக முதலில் ஐந்து குடியிருப்புகள் மட்டுமே...''

www.padippakam.com



''உண்மையில் மகாதேரரே! என் மூளையை எவ்வளவுதான் கசக்கி இருந்தாலும், இப்படி ஓர் அற்புதத் திட்டம் உருவாகியிருக்க மாட்டாது... நீங்கள் மகா மேதை... உடரட்டவுக்கு மட்டுமல்ல, சிங்களத்தீவு முழுவதுக்கும் மன்னனாக அதிகாரம் செலுத்த வல்ல முழு ஆற்றலும் உங்களுக்கே உண்டு.''

''புகழ் மொழியிலே உடல் உருக மயங்குபவர்கள் பெண்களே... நான் சந்தியாசி... சேனரதா! மீண்டும் சொல்லுகிறேன். போதிப்பதிலுள்ள சுகம், போதனைகளை ஒழுகுவதிலே கிடைப்பதில்லை...'' என்று கூறிய மகாநாயக்க மகாதேரர் எழுந்து நடக்கத் துவங்கினார்.

## XVI

''பட்டத்து ராணியாக எழிலரசி தோனா கதரினா அணி செய்ய, மணிமுடிதரித்த மன்னனாய் நீ ஸ்ரீவர்த்தனபுர சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க, 'மன்னன் வாழ்க!' என்ற வாழ்த்தொலியால், இந்த உடரட்டவைச் சூழ்ந்துள்ள குன்றுகளின் மீது துஞ்சும் மஞ்சுக் குவியல்கள் மழையாகக் கனிய, கோலாகமாகக் கொண்டாடப் படப்போகும் விழாவினைப் பார்த்து மகிழ இரண்டு கண்கள் போதவில்லையே என்று மக்கள் குறைபட்டுக் கொள்ளுவதை நான் அறிவேன்...''

''உங்களைத் தவிர வேறு யாராலும் இந்த ஏற்பாடுகளை இவ்வளவு நுட்பமாகத் திட்டமிட்டிருத்தல் சாத்தியமல்ல...''

''நீ சிம்மாசனம் ஏறும் படிக்கட்டுளை இந்த புத்த தாஸ மகாநாயக்க மகாதேரரின் மதிநுட்பம் செப்பனிட்டுத் தந்தது...''

www.padippakam.com



''முற்றிலும் உண்மை.''

''மனம் விட்டுச் சில விஷயங்களைப் பேசுவதற்கு இன்றைய விட்டால், வேறு தோதான அவகாசம் கிட்டவும் மாட்டாது...''

''மனந் திறந்து பேசுங்கள்...''

''நீயும் நானும் சேர்ந்து ஸ்ரீவர்த்தனபுர சிம்மாசனத்தைக் கொள்ளையடித்திருக்கிறோம். கர்த்தாவும் கருவியும்...''

''நான் என்னை மறந்த நிலையிலேகூட இதனை மறந்ததில்லை.''

''மறக்கவுங் கூடாது. நீ நன்றி மறவாதவன் என்பதை எண்பிப்பதற்காக, 'உங்கள் அங்கீகாரமின்றி எந்த உயர் பதவி அரச நியமனங்களையும் செய்ய மாட்டேன்' என்ற சத்திய வாக்கினை எனக்குத் தா!''

''இந்தச் சத்திய வாக்கினை எத்தனையோ சந்தர்ப்பங்களிலே் நான் தந்துள்ளேன்...''

''வாக்குறுதி தருவது என்பது வேறு; அதனை நிறைவேற்றுவது என்பது வேறு. நேற்று என்னைச் சந்திப்பதை நீ திட்டமிட்டே தவிர்த்துக் கொண்டாய்... உன் இந்தச் செயலுக்கான காரணத்தை நீ சொல்லவும் இல்லை... என் தயவால் மன்னனாகும் நீ, இந்த மகாநாயக்க தேரரின் சக்திகளை மறந்து விடாதே. அரசன் என்பவன் நாட்டு மக்கள் என்ற மந்தைக் கூட்டத்தின் இடையன். அவ்வளவுதான். சீவர ஆடைக்குள் புகுந்திருக்கும் இத்துறவி, சங்கத்தின் தலைவர், மகாநாயக்க தேரர், மலைநாட்டின்—அல்ல சிங்களத் தீவின்—இதயமாக விளங்கும் தலதா மாளிகாவின் புனித தந்த தாதுவின் காப்பாளன் என்பதை மறந்து

www.padippakam.com



விடாதே. நீ மன்னனாகிய பின்னரும், எனக்கிருக்கும் செல்வாக்கின் ஒரு துகள் கூட உனக்கு இருக்கப்போவது கிடையாது. இந்நாட்டு மக்களின் சக்தி முழுவதும் இந்த மஞ்சள் அங்கிக்குப் பின்னால் அணி திரண்டுள்ளது என்பதையும் நினைவில் வைத்துக் கொள். இந்தக் கையிலுள்ள விசிறியை விசுக்கினாற் போதும், அரசியல் வானிலே சூறாவளியே கிளம்பும். நான் ஆட்சிக்கு எதிராக ஒரு வார்த்தை சொன்னாற் போதும், அதன் எதிரொலியாக ஒரு பூகம்பமே தோன்றும். எப்படி என்னால் ஒரு மன்னனை ஆக்க முடியுமோ, அப்படியே ஆக்கிய மன்னரை அழிக்கவும் முடியும்...''

''மகாதேரரே! உங்கள் சக்திகள் நான் அறியாதன வல்ல... ஏன் இந்தக் கொதிப்பு?''

''காரணம் உனக்குத் தெரியும். மகாமுதலியார், அதிகாரநாயக்க, சேனநாயக்க, கஜநாயக்க ஆகிய உயர் அரச நியமனக்களுக்கான பெயர்கள் நாளைக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். நேற்று என்னுடன் அமர்ந்து இந்த நியமனக்களுக்கான பட்டியலைப் பூர்த்தி செய்வதாக வாக்குத் தந்திருந்தாய்...ஆனால், நேற்றுப் பூராகவும் என்னைச் சந்திப்பதைத் தவிர்த்தாய். குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொடவுடன் எங்கேயோ சென்று விட்டாய் என்ற தகவல் மட்டுமே கிடைத்தது...ஏன்? நேற்றைய உன்னுடைய நடவடிக்கைகள் அனைத்தும் எனக்குச் சந்தேகம் தருவனவாக அமைந்துள்ளன...''

ஆத்திரத்தில் மகாதேரரின் குரல் உடைந்தது!

''அவ்வளவுதானா? நானும் ஏதோ என்னவோ என்று திகைத்துப் போனேன்...பழைய கணக்குகள் சில பாக்கியிருந்தன...கடனாளியாக அரசுக் கட்டிலே ஏறுவது சங்கடம்...அதனால்...''

www.padippakam.com



''கணக்குத் தீர்ப்பதற்கும் குமாரிஹாமிக்கும் என்ன சம்பந்தம்?...''

''அரசியற் கலையின் சகல நுட்பங்களையும் எனக்கு விண்டு காட்டினீர்கள்...ஆனால், சிற்றின்பக் கலையிலே குமாரிஹாமியைக் பார்க்கிலும் சிறந்த ஆசான் கிடைக்கமாட்டாது என்கிற உண்மையை மட்டும் எனக்குச் சொல்லித்தரவில்லையே...''

''என்ன?'' கட்டடம் அதிரக் கத்தினார் மகாதேரர்.

''என்னை மன்னித்து விடுங்கள்...எல்லாம் கணக்கு களையும் இப்பொழுதே சரி செய்து விடுகிறேன்... யாரங்கே?''

சேனதரனுடைய குரலைக் கேட்டதும் பத்துப் போர் வீரர்கள் ஆயுதபாணிகளாக வந்து, புத்ததாஸ மகாநாயக்க தேரரைச் சூழ்ந்து கொண்டார்கள். மகா நாயக்க தேரர் இதனைச் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை. அவர் தொண்டையிலே ஈரம் சடுதியாக வற்றியது. அவர் நாக்கு அசைவினை மறந்தது.

''உடலைக் கசக்காது மகாதேரரைக் கைது செய்யுங்கள்...''

''ஆ!...'' அடிபட்ட வேங்கையின் அலறல். போர்வீரர்களின் பிடியிலே மகாதேரர் திக்குமுக்காடி னார்.

''ஆச்சரியப்படாதீர்கள். பேய்க்குப் படித்தால் தாய்க்குத் தானே பரீட்சித்துப் பார்க்கவேண்டும்? மஞ்சள் துணிக்காகப் பெற்ற தாயையே கொன்றவர்கள் என்கிற ஒரு பழி எங்கள் இனத்துக்கு உண்டு...''

www.padippakam.com



''சேனரதா! உன் மூளை குழம்பிவிட்டதா?''

''இப்பொழுதுதானே நான் சுயமாகச் சிந்திக்கின்றேன்? ''இருவருக்குத் தெரிந்தால் இரகசியம். என்பது உங்கள் கொள்கை. ஆனால், என்ன செய்வது? எப்பொழுதும் குருவுக்கு மிஞ்சிய சீடர்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவனுக்குத் தெரிந்தது மட்டுமே இரகசியம் என்பது என் வழி...கூட்டுச் சேர்ந்த கொள்ளைக்காரனுக்குப் பங்கு கொடுப்பது தர்மம். ஆனால், அவனை ஒழித்துக் கட்டுவது விவேகம்...''

''ஆபத்துடன் விளையாடுகிறாய்!''

''ஆபத்துகளுடன் விளையாடுவது நீங்கள் கற்றுத் தந்த பாடம். எனக்கு முன்னால் அறுசுவை படைத்து விட்டு, என் கைகளையும் கட்டிவைத்தல் தர்மமா? என் இலட்சியம் மன்னனாக நடிப்பது அல்ல; மன்னனாய் வாழ்வது! நீங்கள் உயிருடன் நடமாடும் வரையிலும், என்னாலே சுயாதீனமாகச் செயற்பட இயலாது... உங்களுடைய கைப் பொம்மையாக நான் இருப்பதைப் பார்க்கிலும், என் கைப்பொம்மையான மகாநாயக்க தேரர் ஒருவரை உருவாக்குவது மேலல்லவா?''

''நான் செய்தது ஒரேயொரு தப்புக் கணக்கு. அது உன்னைப் பற்றிய கணிப்பு!''

''உங்களுடைய சிந்தனைகள் எப்பொழுதும் உலக ளாவியதாகச் செயற்பட்டது. உங்கள் நிழல் பூமியிலேயே படிந்திருப்பதை மட்டும் பார்க்கத் தவறினீர்கள்... உங்களுக்கு எதிராகச் சாட்சியஞ் சொல்ல, நந்தாவதியின் வீட்டுக் கொல்லையிலே இரண்டு எலும்புக் கூடுகள் தவமிருக்கின்றன என்பதை மறந்து விடாதீர்கள்... நீங்கள் என் குருநாதர்... பகிரங்கமாக நீங்கள்

அ—9

படிப்பகம்

www.padippakam.com



அவமானப்படுவதை உண்மையில் நான் விரும்ப வில்லை... நஞ்சு கலந்த மது உங்கள் முன்னால் வைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்கின்றேன்... உங்கள் முடிவினைத் தேர்ந்தெடுக்கும் சுயேச்சையை உங்களுக்கு அளிக்கின்றேன்..''

''என் முடிவு... அது எதுவாக இருந்தாலும், என் எதிரிகளுக்குக்கூட வர வேண்டாம்.''

''நீங்கள் ஞானம் பெறுவதற்கு இங்கு போதிமரமும் கிடையாது. இன்று பூரணையுமல்ல...''

...மார்புகளுக்கு மேல் எறியப்பட்ட துகில் விலக, திரண்ட குவி முலைகளும், அவற்றிலே ஜம்பு நாவற் பழங்கள் இரண்டு பதித்தன போன்று விறைத்து நின்ற காம்புகளும் குலுங்கிட...

...மதுகலசத்துடன் குமாரிஹாமி நந்தாவதி பெத்தியாகொட மெதுவாக நடந்து வந்தாள்.

படிப்பகம்

# சில நேரங்களில் சில தோழர்கள்

அன்பு வாசகனே,

இந்தக் குறிப்பினை வாசித்த பிறகே என் கதையை வாசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். பரஸ்பர வசதி குறித்தே இந்த ஏற்பாடு.

"நான் இப்பொழுது புதிதாய் என்னை ஒரு சோதனையில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன். பயன் கதைகளுக்கு எதிர்ப்பும் ஆதரவும் இருக்கும். வாழ்க்கையே அப்படித்தான். பிரச்னைகள் இல்லாத வாழ்வுக்கு அர்த்தமில்லை. எனவேதான் வாழ்க்கை மாதிரி பிரச்னைக் கதைகளும் ரசமானவயயாக இருக்கின்றன."

"காலங்கள் மாறும் என்ற இந்தத் தொடர் கதையை எழுதிக் கொடுக்கையில்—இடையில் ஒரு சிறுகதை எழுதினேன். அந்தச் சிறுகதைக்கு 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்று தலைப்பிட்டேன். திடீரென்று தோன்றியது 'ஆ! இந்தத் தலைப்பு அந்தக் கதைக்கு அல்லவா ஏற்ற, பொருத்திய, அதற்காகவே வாய்த்த தலைப்பு' என்று. வாழ்க்கையில் எது எதுவோ மாறுகின்றது. மாற்றத்தின் மூலம் சிறப்பு ஏற்படுகிறது; வளர்ச்சி மிகுகிறது எனபதனாலே மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன; வரவேற்கவும் படுகின்றன. காலங்கள் மட்டும்தான் மாறுமா? ஒரு கதையின் தலைப்பு மாறாதா? மாறும். மாறியிருக்கிறது. 'சில நேரங்களில் சில மனி

www.padippakam.com



தர்கள்' என்று மாறி இருக்கிறது. கதை முடிகிறவரை இது மாறாது.''

-தோழர் ஜெயகாந்தனின் எழுத்துக்களில் எனக்குள்ள மோகத்தால், அவர் எழுதிக் கொண்டிருக்கும் 'தொடர் கதை' ஒன்றுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையின் பகுதிகளை இங்கு பொறித்து விட்டேன் என்று பிழை படக் கருதத் தேவையில்லை. ஆனால், சில நேரங் களில் சில தோழர்களுக்கு நிச்சய புத்தி இருப்பதில்லை என்பதற்கு—அதுதான் இச் சிறுகதையின் தொனிப் பொருள்—மேலே உள்ள இரண்டு பந்திகளும் மிக அச்சா வாகப் பொருந்துகின்றன.

தோழர் ஜெயகாந்தன் ஜனசக்தி காரியாலயத்திற் புகுந்து எழுத்துப் 'பயிற்சி' பெறுவதற்கு முன்னர் எழுத்தாளன் என்ற 'மிடுக்குடன்' கம்யூனிஸ்ட் கட்சிப் பணிகளிலே என்னை இணைத்துக் கொண்டவன் நான். இன்று ஜெயகாந்தன் காங்கிரஸ் கட்சி அரசியலுக்காக மாரடித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், மாஸ்கோ-பீக்கிங் வாதப்பிரதிவாதங்களினால் மனம் புழுங்கிக் கட்சி அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டாலும், மாக் ஸிஸ சித்தாந்தத்தில் எனக்கு இருக்கும் பிடிப்பு இம்மி யும் தளர்ந்து விடவில்லை. எனவே, நான் மூத்த தோழர் என்ற வாத்ஸல்யத்துடனும் இதனை எழுத நேரிடுகின்றது. புதிதாய் சோதனை ஒன்றிலே ஈடுபடும் பொழுது கூட சோதனையில் நிச்சயபுத்தியின்றித் தவிக் கின்றார். கருத்துக்கள் மாறலாம்; வளர்ச்சியுடன் மாறவேண்டும். ஆனால், 'சஞ்சல புத்தியே என் வித் துவம்' என்று ஜெயகாந்தன் கூத்தாடுவது பொருந் தாது. 8.8.69 இல் 'தத்துவார்த்தமாக' எழுதிய திற்கு, 15.8.69இல் துப்பல் போட்டு அழிக்க வேண்டிய அளவுக்கு அவருக்குச் சஞ்சலபுத்தி நிரம்பி வழிகின்றது. தனது சிறுகதைக்கு ஏற்ற தலைப்பு இன்னமும் கிட்ட

www.padippakam.com



வில்லை என்பதை ஒப்புக் கொள்ளும் ஜெயகாந்தனின் நேர்மையைப் பாராட்டலாம். ‘கதை முடிகிற வரை இது மாறாது’ என்று கூறுவதின் மூலம் இந்தத் தலைப்புக் கூட பொருத்தமானதா என்ற சஞ்சலத்தில் அவருடைய மனம் அலைமோதுகின்றது. கதை என்ற கலைப் படைப்பிலும் பார்க்க, அதற்கான தலைப்புஎன்ற ‘பிஸினஸ்’ விவகாரத்தில் தனக்குள்ள ஈடுபாட்டினைத் தோழர் இவ்வளவு அம்மணமாகக் காட்டுவது மிக ரஸக் குறைவானது என்பது என் அபிப்பிராயம். ‘தலைப்பு வைத்தல்’ என்ற வியாதி நமது எழுத்தாளத் தோழர்களை வெகுவாகப் பீடித்துள்ளது என்பதையும் அவதானிக்க முடிகின்றது. ‘சடங்கு’ என்ற தலைப்பில் நான் ஏதோ கதை பண்ணிக் கொண்டிருக்க, அதே தலைப்பில் தோழர் கணேசலிங்கன் ஒரு நாவலைச் சுடச்சுட அச்சிட்டு வெளியிட்டார். ‘சடங்கு என்ற தலைப்பு உமக்கு மட்டுந்தான் சொந்தமோ?’ என்று அவர் கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது. கலையென்று நான் நேசிக்கும் ஒரு துறையில் இவ்வளவு ‘கோக்கு மாக்கு’ இருக்கிறதா என நான் அசந்துவிடவும் இல்லை. சில நேரங்களில் சில தோழர்கள் அப்படித் தான் இருக்கிறார்கள் என்பது யதார்த்தம்.

இனி, என் கதைக்கு வருவோம். தோழர்கள் இருவருடைய டயறிக் குறிப்புக்கள் சில என் கதையிலே புகுந்துவிட்டன. தோழர் மார்க்கான் ஆங்கிலத்திலும் தேதியுள்ள டயறியை உபயோகிப்பவர். ஆங்கிலத்திலேயே சிந்திப்பவராகிய அவர் தமது குறிப்புக்கள் சிலவற்றை ஆங்கிலத்திலும் எழுதி வைத்துள்ளார். அவருடைய ஆங்கிலத்தை விளங்கிக் கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை. கதையின் தொனிப் பொருளை நுகருவதற்கு இது தடையாக இருக்க மாட்டாது. மற்றைய தோழரின் டயறிக் குறிப்புக்கள் கதையின் ஓட்டத்திற்கு ஈடுசெய்யும் என்பது கவனத்தில் வைத்துக்

www.padippakam.com



கொள்ளத் தக்கது. இந்த டயறிக் குறிப்புக்கள் 1962 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் நாளுக்கும், 1964 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாளுக்கும் இடைப் பட எழுதப்பட்டவை என்பதும் கவனத்திற்குரியது. இவை தவிர, மகாத்மா காந்தி தமது சுய சரிதையான 'சத்திய சோதனை'யின் மூன்றாம் பாகத்திலே 'பிரமச் சாரியம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள ஏழாம் எட்டாம் அத்தியாயங்களின் பகுதிகள் சிலவும் இடை யிலே புகுந்துவிட்டன என்பதைக் கூறி உன்னுடைய வாசகப் பரப்பினைச் சந்தேகிப்பதற்குக் கூச்சமாக இருக்கின்றது. இக்கதையை வாசிக்கும் பொழுது, ஆரம்ப கட்டத்திலாவது, குறுக்கெழுத்துப் போட்டி நிரப்புவதான அவதி உனக்கு ஏற்படலாம். இந்த அவதி தற்காலிகமானதுதான். கதையிலே முற்றாக ஈடுபடும் பொழுது, நான் எழுதாது, கோடிகாட்டி, உன்னுடைய கற்பனைக்கு விட்டுள்ள பகுதிகள் இன்னமும் சுவைப் பாய் இருப்பதையும் உணர்ந்து கொள்வாய். உன் கற்பனையிலும் நான் கொண்டுள்ள நம்பிக்கைதான் இக்கதையின் பரிசோதனைத் தளம்.

MAY 9 மே

Wednesday புதன்

மேதின சபதம் வெற்றி. Com சுந்தர் elected Mayor.

நாளை மத்திய கமிட்டிக் கூட்டம்.

Trunk Call : Colombo & Hatton.

## 13 மே—புதன்

என் கணவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, நானே அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதான மனநிறைவினைத் தருகின்றது. இருக்காதா? முதல் தடவையாக என் கணவர் முனிசிப்பல் தேர்

படிப்பகம்

www.padippakam.com



தலிலே போட்டியிட்ட பொழுது கட்டுக்காசையும் இழந்தார். இரண்டாந்தடவை வெற்றி கிட்டுவ தயன அறிகுறிகள் தென்பட்டன. ஆனால், ஈற் றிலே தோல்வி. அத்துடன், தனது அரசியல் வாழ்க்கை அஸ்தமித்துவிட்டதாக என் கணவர் வருந்தத் தொடங்கினார். பிரசாரக் கூட்டங் களுக்குத் தோழர்கள் வருவார்கள் போவார்கள். வெற்றியிலும் தோல்வியிலும் அவருக்கு உறுது ணையாக இருக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. மூன்றாவது தடவை தேர்தலிலே நின்று தோற்றால், அவர் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவார் என்பதை நான் ஒருத்தியே பூரணமாக அறிந்திருந்தேன். நான் ஏறாத வீடில்லை; நேரிலே பார்த்துப் பேசாத வாக்காள ரில்லை என்ற அளவிலேதான் பிரசாரம் செய் தேன். வெற்றி பெற்றார். அவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, அந்த வெற்றிக்கு மகுடம் சூட்டுவது போல அமைந்துள்ளது.

## 21 ஒக்டோபர்—ஞாயிறு

ஒக்டோபர் புரட்சி விழாவையும், மாநகர சபை யில் என் கணவர் கொண்டு வந்த சீர்திருத்தங் களுக்காக அவரைப் பாராட்டும் வைபவத்தையும் ஒன்றாக இணைத்துப் பிரமாதப்படுத்தி விட்டார் கள். இக்கூட்டத்தில் தோழர் மார்க்கான் பேசிய ஒவ்வொரு சொல்லும் என் நினைவுக்கு வரு கின்றது. 'தோழர் சுந்தர் மேயராகத் தேர்ந் தெடுக்கப்பட்டது, நமக்குத் தமிழ்மக்கள் மத்தி யிலே வளர்ந்துவரும் செல்வாக்கையே காட்டு கின்றது. அப்பன் பொன்னரும், தந்தை செல் வாவும் வளர்த்து வந்த தமிழ் வகுப்புவாதத்தைத் தமிழ்மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். இதனா

படிப்பகம்

www.padippakam.com



லேதான் தோழர் சுந்தரின் வெற்றி அவருடைய மனைவியின் தாலிப் பாக்கியத்திற்குக் கிடைத்த வெற்றி என்று வெட்கங்கெட்ட முறையில் ஏரிக் கரைப் பத்திரிகைகள் வாந்தி எடுக்கின்றன. நமது பாட்டாளி வர்க்கத்தினர் ஆட்சிக்கு வந் தால், ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சங்களும், முதலாளித்துவத்தின் அடிவருடிகளுமான ஏரிக் கரைப் பத்திரிகைகளின் விலா எலும்பை நொருக்குவார்கள் என எச்சரிக்க விரும்பு கின் றேன்... தோழர்களே! நமது தோழர் சுந்தரர்க் குக் கிடைத்த வெற்றி பட்டாளி வர்க்கத்திற்குக் கிடைத்த வெற்றி என்பதைப் பறை சாற்றுங்கள்... இந்த மேடையிலே இன்னும் ஒன்று கூற விரும்பு கின்றேன். ஒரு நல்ல கம்யூனிஸ்டின் நல்ல மனைவி எப்படி வாழ வேண்டும் என்பதற்கு தோழர் சுந்தரின் மனைவி பொன்னான எடுத்துக்காட்டு. மேடையிலே அமர்ந்திருக்கும் அவரைப் பாருங்கள். நிறை குடம் போலவும், குத்து விளக்குப் போலவும் அமர்ந்திருக்கின் றார். அவரைப்பற்றிக் கூசாது அவதூறாக எழுதிய கைக்கூலிகளைப் பாட்டாளி வர்க்கம் என்றும் மன்னிக்க மாட்டாது...' தோழரின் பேச்சைக் கேட்கும் பொழுது உண்மையில் என் தேகம் புல்லரித்தது.

ஸ்ரீ கிளாஸ்டன் பார்லிமெண்டுக் கூட்டத்திலே இருக்கும் பொழுதுகூட, அவருக்குத் தம் கையினா லேயே தேயிலைப் பானம் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று அவர் மனைவி வற்புறுத்தி வந்தார் என்று நான் எங்கேயோ படித்திருந்தேன். புகழ்பெற்ற இத்தம்பதிகளின் ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கையில் இது ஒரு நியதியாக ஆகிவிட்டதாம்.

www.padippakam.com



**NOVEMBER 14 நவம்பர்**
**Wednesday புதன்**

இன்றுதான் சீனாவிலிருந்து திரும்பினேன். என்னை வரவேற்பதற்கு தோழர் V
விமான நிலையத்திற்கு வந்ததில் மகிழ்ச்சி.
Must brief the inner party comrades.

## 17 ஜனவரி—வியாழன்

என் கணவரின் தேகநிலை மிகவும் மோசமாகி வருகின்றது. மேயர் பதவியை அவர் ராஜினாமாச் செய்யவேண்டும் என்று சில தோழர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். தோழர் மார்க்கானுக்கு எங்கள் குடும்ப நலனிலேதான் எவ்வளவு அக்கறை? அடுத்த வாரமே என் கணவர் ருஷியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ அனுப்பப்பட இருக்கிறார். என் கணவருக்குப் பதிலாக நானே போலிட்பீரோ மெம்பராகத் தேர்ந்தெடுகப்பட்டிருக்கின்றேன். இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண் நான்.

இவ்வரலாற்றில் பிரமச்சாரிய விரதத்தை மேற்கொள்வதைப் பற்றி நான் தீவிரமாக நினைக்கத் தொடங்கிய கட்டத்திற்கு இப்பொழுது வந்திருக்கின்றோம். எனக்கு மணமான காலத்திலிருந்தே நான் ஏக பத்தினி விரதத்தில் உறுதி கொண்டிருந்தேன். என் மனைவியுடன் உண்மையோடு நடந்து கொள்வது என்பது சத்தியத்துடன் நான் கொண்டிருந்த பக்தியின் ஒரு பகுதியாயிற்று.

www.padippakam.com



**FEBRUARY 18 பெப்ரவரி**
**Monday திங்கள்**
Rivisionist clique and the bloody பறங்கி. Must move fast.

**FEBRUARY 19 பெப்ரவரி**
**Tuesday செவ்வாய்**
தொழிற் சங்கத்தில் திரிபுவாதிகளுக்குச் செல்வாக்கில்லை.
C. W. F. is Solidly behind me.
மா ஓ பாட்ஜ் வந்து சேர்வதில் என்ன சுணக்கம்?

**FEBRUARY 20 பெப்ரவரி**
**Wednesday புதன்**
தோழர் V யின் அறிக்கை ஜோர். It will strengthen my stand.
Youth league உசாராக்க வேண்டும்.
Big C is not pulling fast.

**FEBRUARY 21 பெப்ரவரி**
**Thursday வியாழன்**
திரிபுவாதிகள் முகத்தில் கரி. பறங்கிக் கும்பல் எடுத்தது ஓட்டம்.
Vital Conference with Big C.
கேரளாவுக்கு 100,000 Literature அனுப்பவேண்டும்.

## 5 ஏப்ரல்-வெள்ளி

என்ன விந்தை? நான் தோழர் மார்க்கானைக் கனவிலே கண்டேன். அந்த இனிய கனவு நிறை வேறுமா? நிறைவேறினால் எனக்கு அரசியலும் வேண்டாம். புகழும் வேண்டாம். அடுக்களைப்

படிப்பகம்

www.padippakam.com



பெண்ணாகவும் படுக்கைப் பாவையாகவும் இருப்பதில் பூரண திருப்தி அடைவேன்.

ஸ்ரீமதி கிளாஸ்டன் தமது கணவரிடம் கொண்டிருந்த அபார பக்தி குறித்து ஒரு சமயம் ராய்ச்சந்திரபாயிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

## 9 ஏப்ரல்-செவ்வாய்

தோழர் மார்க்கான் எனக்காக எதுவும் செய்வார். என்ன அர்த்தம்?

## 10 ஏப்ரல்-புதன்

ஒரே பானையில் வெந்த சோற்றையும், ஒரே சட்டிகளில் ஆக்கிய கறியையும் தோழர் மார்க்கானுடன் ஒன்றாக இருந்து சாப்பிடும் பொழுது எவ்வளவு இன்பமாக இருந்தது? பாவம், என் கணவர். பச்சை அரிசிச் சோறும் மரக்கறியும்!

## 11 ஏப்ரல்-வியாழன்

ஆகா! பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட சுகம். இந்த இரவை வாழ்நாளில் மறக்கமாட்டேன்.

**MAY 1 மே**
**wednesday புதன்**

இன்று தலைநகரில் மூன்று May Day ஊர்வலங்கள். என்னுடைய Ceylon Workers' Federation நடத்திய ஊர்வலமே the biggest and the longest.
Long Live Mao. தோழர் V மட்டக்களப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கச் சென்றுள்ளார்.

www.padippakam.com



MAY 2 மே
Thursday வியாழன்
யாழ்ப்பாண விநியோகத்திற்கு 50,000 சுருட்டுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

JUNE 4 ஜூன்
Tuesday செவ்வாய்
என் 50th பிறந்த நாள். தோழர் தேசப்பிரியா வீட்டில் விருந்து. தோழர் Vயும் வந்திருந்தார்.

JUNE 9 ஜூன்
Sunday ஞாயிறு
அச்சுவேலிக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பொழுது தோழர் V மயங்கி விழுந்தார். Telegram : கொழும்பு வரும்படி.

JUNE 10 ஜூன்
Monday திங்கள்
தோழர் V consulted Doctor.
Admitted. Must undergo Plastic surgery.

JUNE 12 ஜூன்
Wednesday புதன்
Treatment success. Vital conference wrth Big C.

ராய்ச்சந்திரபாய் என்னிடம் பின் வருமாறு கேட்டார் : ஸ்ரீமதி கிளாஸ்டன் மனைவி என்ற முறையில் தன் கணவரிடம் கொண்ட அன்பு பெரிதா? ஸ்ரீ கிளாஸ்டனிடம் அவருக்குள்ள உறவு எதுவானாலும் அதைப் பற்றிய சிந்தனையின்றி ஸ்ரீமதி கிளாஸ்டன் அவருக்குப் பத்தியோடு செய்து வந்த சேவை பெரிதா?...அப்பெண் மணி அவருடைய சகோதரி என்றோ, வேலைக்காரி

www.padippakam.com



என்றோ வைத்துக் கொள்வோம். அதே கவனிப்போடு அப்பொழுதும் தொண்டு செய்திருந்தால் அப்பொழுது நீங்கள் அந்தச் சேவையைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

### 7 ஜூலை-ஞாயிறு

என் கணவர் கிழக்கு ஜெர்மனியிலிருந்து திரும்பி விட்டார். பூரண சுகமடைந்துள்ளவராகக் காணப் படுகின்றார். தேர்தல் நொமினேஷனுக்கு இன் னும் ஒருமாதம் இருக்கின்றது.

JUIY 9 ஜூலை
Tuesday செவ்வாய்
சபாஷ்! ஆலயப்பிரவேச இயக்கத்தில் நம் தோழர்கள் கேந்திரப் பதவிகளைக் கைப்பற்றியுள்ளார்கள்.
அடுத்த கிழமை சங்கானையில் பலப்பரீட்சை.
Telegrams to: K. D, K, S, Hidler and Kaleel.

JULY 10 ஜூலை
Wednesday புதன்
1000 மா ஓ பாட்ஜ் அனுப்பப்பட்டது.
C. W. Fஇன் சொந்த அச்சகம் நிறுவப்பட்டது.

### 17 ஜூலை-புதன்

பத்து நாள்களுக்கிடையில் இவருடைய உடல் நிலை இப்படி மோசமாகிவிட்டதே. வெளிநாட்டி லிருந்து திரும்பியதும் புது வாழ்வு கிட்டும் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். பன்னிரண்டு ஆண்டு களாக என் உடலையே தொட்டுப் பார்க்காமல்...

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பிரிக்க முடி யாத பந்தம் இருக்கிறது. ஆகையால் கணவனிடம்

www.padippakam.com



மனைவி பக்தி கொள்வதில் ஆச்சரியம் எதுவுமில்லை. இந்த பக்தி முற்றிலும் இயற்கையானது. ஆனால், எஜமானுக்கும் வேலைக்காரனுக்கும் இடையே இதற்கு இணையான ஒரு பக்தியை வளர்ப்பதற்கு விசேட முயற்சி அவசியம் ஆகிறது... கவிஞரின் கருத்து எனக்கு மெள்ள மெள்ள விளங்கலாயிற்று.

## 2 ஆகஸ்ட்-வெள்ளி

உடல்நிலை காரணமாக என்கணவர் தேர்தலிலே போட்டியிடக்கூடாது என்றும், அந்த இடத்திற்கு தோழர் மார்க்கான்போட்டியிடவேண்டும் என்றும் மத்திய கமிட்டியில் வந்த பிரேரணை ஒரு வாக்கி னால் தோற்றது.என்கணவருக்கு எதிராக எப்படி பகிரங்கமாக வாக்களிப்பது? தோழர் மார்க்கா னிடம் நாளை முழுவதையும் விளக்க வேண்டும்.

## 10 ஆகஸ்ட்-சனி

என் 46 வது பிறந்ததினம். எனக்கு இவ்வளவு வயது என்று யாரும் நம்பமாட்டார்கள். தோழர் மார்க்கான் சீனாத் தங்கத்திலே செய்த மோதிரம் ஒன்றை என் கணவருக்குத் தெரியாமல் பரிச ளித்தார். எனக்கு நாற்பது வயதாகின்றது என மழுப்பினேன்,

## 1 செப்டம்பர்-ஞாயிறு

'நான் படுக்கையிற் கிடக்கும் பொழுது நீ மார்க்கானுடன் ஊர் சுற்றித்திரிவது வடிவில்லை. தோழர்கள் ஒரு மாதிரியாகப் பேசுகிறார்கள்'

www.padippakam.com



என்று சென்னார். என் கணவர் ஒரு பேராசைக் காரன். இந்த உடல் நிலையிலும் தேர்தல் பிரசாரம் நடத்துகின்றாரே!

'அப்படியானால் எனக்கும் என் மனைவிக்கும் இடையே இருக்கும் உறவு எப்படி இருக்க வேண்டும்?' இவ்வாறு என்னை நானே கேட்டுக் கொள்வேன்.

OCTOBER 4 ஒக்டோபர்
Friday வெள்ளி
Big C agreed.
C.W.F. திரிபுவாதத் தலைமையை முற்றாகப் புறக் கணித்து, என் தலைமையை ஏற்றுக்கொண்டது.
பறங்கிக் கூட்டம் Labour Federation of Ceylon என்று புதிய தொழிற் சங்கம் தொடங்கியிருக்கிறார்கள்.
Must break it up.

OCTOBER 6 ஒக்டோபர்
Sunday ஞாயிறு
உண்மையான மார்க்ஸிஸ- லெனினிஸ- மா ஓ வழிவந்த புதிய புரட்சிவாதக் கட்சி அமைக்கப்பட்டுவிட்டது.
தோழர் V, Hidler, Stalin, Liu, கோப்பாய், ராமன் குட்டி பிராந்திய அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக் கிறார்கள்.

என் மனைவியைப் பொறுத்தவரை நேர்மையாக சொல்வதானால் காம இச்சைக்கு என்னைத் தூண்டு பவளாக அவள் என்றுமே இருந்ததில்லை என்றே கூற வேண்டும்.

5 ஜனவரி – ஞாயிறு

தேர்தல் தோல்வி இவரை வெகுவாகப் பாதித்து விட்டது. நாளுக்கு நாள் உடல் நிலை சீர்

படிப்பகம்

www.padippakam.com



குலைந்து வருகின்றது. தன்னை நான் விவாகரத்துச் செய்யக் கூடாது என்று கெஞ்சுகின்றார். அவ்வாறு செய்ய மாட்டேனென்று வாக்குறுதி அளித்துள்ளேன். இன்னும் சில வாரங்களுக்கு மேல் அவர் உயிர் வாழ மாட்டார் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். எனக்குப் பொறுமை இருக்கின்றது. விதவையான நான் தோழர் மார்க்ஸை மறு மணஞ் செய்வதைப் புரட்சி வாதத் தோழர்கள் ஆட்சேபிக்கவில்லை என்பதல்ல; முழுமனத்துடன் ஆதரிக்கவும் செய்கின்றார்கள்.

சமூகத்தின் சேவைக்கே என்னை இந்த வகையில் அர்ப்பணஞ் செய்து கொள்ள விரும்பினால், பிள்ளைப் பேற்றில் அவாவையும் பொருளாசையையும், அறவே ஒழித்துவிட்டுக் குடும்பக் கவலையினின்றும் நீங்கியதான வானஸ்பிரஸ்த வாழ்க்கையை நான் மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று.

JANUARY 7 ஜனவரி
Tuesday செவ்வாய்
தோழர் V Plastic surgery செய்ய மறுக்கின்றார். நியாயமற்றது. Must convince.

JANUARY 9 ஜனவரி
Thursday வியாழன்
Plastic surgery successful.

JANUARY 15 ஜனவரி
Wednesday புதன்
Com. சுந்தரலிங்கம் காலமானார். அவர் ஆத்மா சாந்தியடைய.

படிப்பகம்

www.padippakam.com



FEBRUARY 5 பெப்பிரவரி
Wednesday புதன்
சிறுபான்மைத் தமிழர்... கிளர்ச்சிக் கூட்டம்.
குழப்பம் சூடு பிடிக்கவில்லை.
கொழும்பு மாம்பழம்1000தேவை நமது தோழர்களுக்கு.
அப்பொழுதுதான் குழப்ப நிலை வளரும்.
இன்றிரவு தோழர் V யுடன் கழிந்தது.

MARCH 2 மார்ச்
Monday திங்கள்
K. K. S. கூட்டம். மாவிட்டபுரம்.
மாம்பழங்கள் தயார்.

MARCH 3 மார்ச்
Tuesday செவ்வாய்
குழப்பம். வெற்றியில்லை. ஆரம்பம்.
பத்திரிகைகள் இருட்டடிப்பு.
அறிக்கை.

MARCH 4 மார்ச்
Wednesday புதன்
என் தத்துவ விளக்கக் கட்டுரை Daily News இல் பிரசுரமாகியுள்ளது. Why should Big C insist on Govigama Sinhala orientation of our party.

MARCH 29 மார்ச்
Sunday ஞாயிறு
துண்டுப் பிரசுரம். A.C.L.C, ஐக் காண வேண்டும்.
File affidavit.
Plastic surgery... தீராத பிரச்னை.



படிப்பகம்

www.padippakam.com



APRIL 4 ஏப்ரில்
Saturday சனி
Bank loan?? Labour Trib. சாட்சிகள் தயார்.
தோழர் V பிரச்சினை பற்றி Q.C. ஐச் சந்திக்க வேண்டும்.

APRIL 9 ஏப்ரில்
Thursday வியாழன்
Courts... proxy to proctor.
கொழும்பு போக முடியாது. தோழர் Vயை அனுப்ப லாம். அத்துடன் Q.C.யின் ஆலோசனைகளையும் அவர் நேரில் கேட்டு வரலாம்.

ஆனால், நான் அத்தகைய பிரமச்சரியத்தை மனிதப் பிரயத்தனத்தினால் மட்டும் அடைந்துவிடுவது முடியாத காரியம் என்பதை நான் இந்தியாவுக்கு வந்த பிறகே அறியலானேன்.

## 12 ஏப்ரில்-ஞாயிறு

என் தாய்க்கிழவிக்கு எது சொன்னாலும் விளங் குவதில்லை. கணவர் உயிருடன் இருக்கும் பொழுதே இருந்து வந்த தொடர்பு... கணவனும் அறிவார். இப்பொழுது கிழவி ''நான் பொலி டோல் குடிப்பேன்'' என்று பயமுறுத்தினால், நான் என்ன செய்வது? கிழவி செத்துத் தொலை யட்டும்.

APRIL 13 ஏப்ரில்
Monday திங்கள்

படிப்பகம்

www.padippakam.com



தோழர் Vயின் தாயார் தற்கொலை செய்துவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. Contact Q. C. immediatly.

## 13 மே-புதன்

இன்று தாயாரின் அந்தியேட்டி......இன்றுதான் இந்த வீட்டில் கடைசி நாள். சிறைவாழ்வு ஒழிந்தது. நாளை மறுதினம் செல்வி சுப்பையா புவனேஸ்வரியாகிய எனக்கும், நவக்கிரி மார்க்கண்டு அவர்களுக்கும் மிக இரகசியமாகப் பதிவுத் திருமணம் நடைபெற இருக்கின்றது. Q. C. எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துவிட்டார். புது மணப் பெண்ணின் குறுகுறுப்பு மனத்தை அரிக்கின்றது. இவ்வளவு காலமும் P. Sundaralingam என்று கையெழுத்து வைத்துள்ள நான் இனிமேல் P. Markandoo என்றல்லவா கையெழுத்து வைக்க வேண்டும். நாளை முழுவதையும் கையெழுத்து வைத்துப் பழகுவதிலேயே கழிக்க உத்தேசம்.

இந்திரியங்களைத் தடுத்து வைப்பவனுக்கு விஷயானுபவங்கள் இல்லை; ஆனால் ஆசை மட்டும் இருக்கும். பரமாத்மாவை தரிசித்த பிறகு அவனுடைய ஆசையும் அழிகிறது.

MAY 12 மே
Monday திங்கள்
Parliament dissolved.

JUNE 7 ஜூன்
Sunday ஞாயிறு

www.padippakam.com



மா ஓ சிந்தனைகள் 50,000 விநியோகிக்கப்பட்டு விட்டன.
50,000 மா ஓ Badges தேவை.
'துப்பாக்கிக் குண்டுகளிலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறது' என்ற கோஷத்திற்கான விளக்கவுரை. Big C uses Pressure tacties on rhe Govigama Sinhala orientation of Our Party.

JUNE 9 ஜூன்
Tuesday செவ்வாய்
டிராஸ்கிய திரிபுவாதி கே. கனகசிங்கம் புளுகுணி ஏரிக்கரைப் பத்திரிகையில் புளுகுணிக் கட்டுரை ஒன்று எழுதியிருக்கின்றான்.
பதில் கட்டுரை எழுதி வாயை அடைக்கவேண்டும்.
தோழர் V என் மனைவியாகிவிட்டபடியால், நான் தேர்தலில் நிற்க வேண்டுமென்று Big C விரும்புகின்றது.
Big Cயே எனக்கு நிதியும் மதியும். தேர்தலில் நிற்பதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று : என மனைவியின் தேர்தல் ஞானத்தைப் பயன்படுத்துவது. இரண்டு: மா ஓ சிந்தனைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குத் தேர்தல் பிரசார கூட்டங்கள் பயன்படும்.

## 9 ஜூன்-செவ்வாய்

என் கணவர் பாராளுமன்ற அங்கத்தவராக வேண்டும். இதுவே என் ஆசை; இலட்சியம். இதனைக் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்.

JUNE 17 ஜூன்
Wednesday புதன்
Six of Our Party candidates are selected.
'துப்பாக்கிக் குண்டுகளிலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறது' என்ற கோஷத்துடன் தேர்தல் பிரசாரம் அங்குரார்ப்பணம்.

படிப்பகம்

www.padippakam.com



## 4 ஜுலை-சனி

என் கணவருக்கு நல்ல ஆதரவு. தோழர் சுந்தரலிங்கத்திற்கு இருந்ததிலும் பார்க்க, தொழிற்சங்கவாதிகள் மத்தியில் என் கணவருக்கு அமோக ஆதரவு இருக்கின்றது. முழுகி இரண்டு மாதம். அதற்காகத் தேர்தல் பிரசாரத்தைக் கைவிட முடியுமா?

ஆகவே மோக்ஷத்தை நாடுகிறவனுக்கு ஆண்டவனுடைய திருநாமமும் ஆண்டவனுடைய பேரருளுமே கடைசி ஆதாரங்கள். இந்தியாவுக்குத் திரும்பிய பின்னரே இந்த உண்மை எனக்குப் புலனாயிற்று.

SEPTEMBER 11 செப்டம்பர்
Friday வெள்ளி
Printing Press Completed.

15ல் இருந்து சிங்களத்திலும் தமிழிலும் நமது பாட்டாளி வர்க்கத் தினசரிகள் வெளிவரும். நமது கட்சியைச் சேர்ந்த ஆறு வேட்பாளரும் கட்டுக்காசை இழந்துவிட்டதாகப் புளுகுணி ஏரிக்கரைப் பத்திரிகைகள் வாந்தி எடுக்கின்றன. புகட்டுவோம் பாடம்.

Agreed with Big C to give a Govigama Sinhala colouring to Our Party.

SEPTEMBER 28 செப்டம்பர்
Monday திங்கள்

செஞ்சீனக் குடியரசின் பதினைந்தாவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள மனைவியும் நானும் நாளை மறுதினம் பீக்கிங் புறப்படுகின்றோம்.

## 29 செப்டம்பர்-செவ்வாய்

நானும் என் கணவரும் நாளைக்கு பீக்கிங் புறப்படுகின்றோம். தேசப்பிரியாவும் எங்களுடன்

www.padippakam.com



வருகின்றார். அங்கொடை எம்.பி. யான அவர் சுதந்திரக்கட்சியிலிருந்து விலகியுள்ளார். பீக்கிங்கிலிருந்து திரும்பியதும் அவர் நமது கட்சியிலே சேருவார் நமது கட்சிக்கு சிங்களத் தலைமை உண்டு என்று கூறுவதற்கும் வாய்ப்பாக இருக்கும்.

## வாசகனுக்கு: பிற்குறிப்பு

தோழர் மார்க்கான் என்பது தோழர் மார்க்கண்டுவையும், தோழர் V என்பது திருமதி சுந்தரலிங்கமாக இருந்து, திருமதி மார்க்கண்டு ஆகிவிட்ட தோழரையும் குறிக்கும் என்பதை உங்களைப் போலவே என்னாலும் சுலபமாக அறிந்து கொள்ள முடிந்தது. சுருட்டு என்பது ரூபாவையும், மாம்பழம் என்பது கைக்குண்டையும், Big C என்பது சீன அரசாங்கத்தையும் குறிக்கும் என்பதை என் விசாரணைகளில் அறிந்து கொண்டேன். டயறிக் குறிப்புக்களில் எனக்கும் விளங்காத பகுதிகளும் வருகின்றன. மா ஓ சிந்தனைகளைத் தினமும் வாசித்து வந்தால் எல்லாப் பகுதிகளும் நன்கு விளங்கும் என்று 'திரிபுவாத' வைரிகளான புரட்சிவாதத் தோழர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள். இதன் உண்மை பொய்யை அறிவதற்கு எனக்கு நேரம் இல்லை. என்னைப் பிற்போக்குவாதி எனச் சபித்தாலும் பாதகமில்லை. நீ வேலையற்ற படித்த வாலிபனாக இருந்தால், மா ஓ சிந்தனைகளுடன் இதனை ஒப்பு நோக்கிப் படித்து எனக்கும் விளங்காத பகுதிகளையுந் துப்புத் துலக்க முன் வருவதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது.

www.padippakam.com

● கோபர்ச்சேவ் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிக் கொள்கிறார். ● தனது மகனை விடுதலை செய்ய இரண்டு லட்சம் ரூபா தருமாறு போலிஸ் அதிகாரி கோரியதாக தாய் முறைப்பாடு. ● 8000 க்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம். ● குடியேற்றவாசிகள் அவுஸ்ரேலியாவின் பலிகடாக்களாவார்கள்—பேராசிரியர் எச்சரிக்கிறார். ● கர்ப்பிணிகளுக்கு எயிட்ஸ் பரிசோதனையைக் கட்டாயப்படுத்துமாறு வைத்தியர்கள் கேட்கப்படுகிறார்கள். ● தலைமைப் போட்டி காரணமாக ஜனநாயகக் கட்சி செனட்டர் விலகிக் கொள்ளுகிறார். ● ANC இன் பதவி மறு சீரமைப்பில் மண்டெலா ஒதுக்கப்பட்டுள்ளார். ● வரவு-செலவுத் திட்ட எதிர்ப்பாளர்கள் மெடிக்கெயர் கட்டணத்திற்கு எதிராகப் போர் தொடுத்துள்ளனர்.

# ADIEU

'நேரம் சரியாய் இருக்கும் போலை... Come let us Have some Beer.'

பரநிருபசிங்கம் அங்கிள் உற்சாகமாகச் சொல்வது போலத்தான் காட்டிக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



அவருடைய குரலிலே இயல்புக்கு மாறான ஏதோ ஒன்றும் புரையோடிக் கிடப்பதாக பாலாவுக்குத் தோன்றியது.

'பாலா, நீர்தான் என்னோடை Air Port வரை வர வேணும்' என்று பரநிருபசிங்கம் அங்கிள் வற்புறுத்தி யிருந்தார். அந்த உரிமை அவருக்குத் தாராளமாக இருந்தது. அவரும் பாலாவின் அப்பாவும் கொழும்பில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே Department இல் வேலை செய்தவர்கள். எப்பொழுது துவக்கம் அவரை 'அங்கிள்' என்று கூப்பிடத் துவங்கியது என்பது அவனுக்கே ஞாபகமில்லாத ஒன்று.

ஆனால், வழியில்...

அப்பொழுதுதான் சந்தித்து அக்கம் பக்கமாக அமர்ந்து செல்லும் ரயில் பிரயாணிகளைப் போல Weather ஐப் பற்றிப் பேசினார். பிறகு, சட்டென்று தான் தப்பாகப் பேசி விட்டதை உணர்ந்து, கொஞ்சத் தூரம் 'உம்மன்னா' மூஞ்சி பிடிச்சார்.

மௌனம்கூட அவர் சுபாவத்திற்கு அந்நியமானது.

திடீரென்று, உச்சாணிக் கொப்பிலே பவனி வருவ தாக பாவலாக் காட்டும் சிட்னிவாழ் தமிழர் சிலரைப் பெயர் சொல்லிச் சாடினார். டாக்டர் ஜோசப் நீண்ட காலம், கொழும்பிலே, பரநிருபசிங்கம் அங்கிளின் குடும்ப டாக்டராக இருந்தவர். பார்க்காவிட்டால், மனஸ்தாபப்படுவார் என்கிற அளவுக்கு நெருக்கம். வேலைக்கு apply செய்யும் பொழுது அவரையே referee ஆகப் போடலாம் என்று நினைச்சார். போய்ப் பார்த் தால், medicare sign பண்ணுறதிலைதான் ஆள் குறியாக இருந்தான். 'உவங்கள் இங்கை வைத்தியத்

www.padippakam.com



தொழில் பார்க்கிறாங்களோ? இல்லை, medicare ஐ வைச்சு பிஸினஸ் நடத்துறாங்களோ?' என்று கேட்டு, 'பிறகு அவன்ரை மூஞ்சையைக்கூட முழிக்க விருப்ப மில்லை' என்று முடிச்சார். 'ஒரு லோயர். இலங்கை யிலை மனித உரிமைகளுக்காக வெளிச்சம் பிடிச்சவர் என்று சொல்லித் திரியிறவர். Refugee application போடுறதுக்கு எங்கடை பொடியங்களிட்டை பொல் லாலை அடிச்ச காசு அடிக்கிறானாம். 'Legal aid காரன்களும் Refugee Advice and Casework காரரும் சும்மா செய்து கொடுக்கிறான்கள். எங்கடையவன் காசு பறிக்கிறான். இது வடிவே?' என்று அங்கிள் ஆதங்கப்பட்டார். 'பாலசிங்கம் என்று ஒரு எக்கவுண் டன்ற். கசவாரம். எப்பவும் தன்ரை மிதப்பிலைதான் கண். பொதுப்பணி எண்டால் தன்ரை பெயர் விளம் பரத்துக்காக எப்பிடியும் நுழைஞ்சிடுவார். இந்தச் சொறிச் சேட்டைகளை ஊரிலையும் விட்டவர். இப்ப சிட்னியிலை தமிழர் பண்பாட்டைக் காக்கக் கச்சை கட்டிக் கொண்டு நிக்கிறாராம். மனசார இவனுக்கும் தமிழுக்கும் என்ன சம்பந்தம்?தமிழருக்குச்சிரங்கு குத்தப் போறாரோ?' என்று பொருமினார். 'உவங்களை விட்டால் தமிழன்களுக்குப் பாடை கட்டிப்போட்டுத்தான் மறுவேலை பார்ப்பான்கள்' என்று 'பிடிசாபம்' போட்டு அலுத்துக் கொண்டார்.

இந்த விமர்சனங்கள் கூட அவருடைய இயல்புக்குப் புறநடை.

எந்தக் காலத்திலும் அடுத்தவரை புழுகிக் கொண்டே இருப்பது பரநிருபசிங்கம் அங்கிளின் சுபாவம். அவர் யாரையும் குறை சொல்வது கிடையாது. இன்றைக்கு அவருக்கு என்ன நேர்ந்தது?

வழக்கத்திற்கு மாறாக அவர் 'Lillte up-set' ஆக நடப்பதாக அவன் சரியாகவே மதிப்பிட்டான்.

www.padippakam.com



'பியரோ?'

'Why not, பாலா?'

பரநிருபசிங்கம் அங்கிளுடன் சேர்ந்து குடிப்பது பாலாவுக்குத் தர்மசங்கடமானது. அங்கிள், அப்பாவுடன் சேர்ந்து குடிப்பது அவனுக்குத் தெரியும். வயசு இடைவெளிக்கு மரியாதை கொடுத்தே இதுவரையிலும் பழகியிருக்கிறான். கடந்த ஆறுமாத காலத்தில் அங்கிள் அடிக்கடி அவன் வீட்டுக்கு வருவார். அங்கிள் சாப்பிடுவதற்கு முன்னர் ஒரு பியர் 'உடைச்சு'க் கொடுப்பான். குடிப்பார். பாலாவைச் சேரும்படி அவர் கேட்டதுமில்லை. அவருடன் சேர்ந்து குடிக்கவேணும் என்று அவன் நினைத்ததுமில்லை.

ஆனால், இன்று, என்றுமில்லாத கூத்தாகச் சற்று வற்புறுத்தியே கேட்கிறார்.

இருவருக்குமிடையில் Communication மிகவும் dull ஆக இருந்தது. மனித வாழ்க்கையைச் சொல்லி இருக்கே? இனி, எப்பெப்ப சந்திக்கக் கிடைக்குதோ? இன்னொரு கோணத்திலே பார்த்தால் பிரிவு ஒரு பியரோடை நிகழ்வது நல்லது போலவும் பட்டது.

அவருடைய வீட்டுக்குப் போய்த்தான் அவரைத் தன்னுடைய காரில் ஏற்றியவன். அவருடைய மகளும் சன்இன்லோவும் கதவுக்கு வெளியே வந்து கையைக் காட்டினவை. பேசவில்லை.

பரநிருபசிங்கம் அங்கிள்மீது அவனுக்கு எல்லையில்லாத இரக்க உணர்வு கசிந்தது. அவரைத் திருப்திப்படுத்த அவன் எதைச் செய்யவும் ஆயத்தமாக இருந்தான்.

www.padippakam.com



கையில் Hand luggage ஆன ஒரு கையடக்கமான 'பேக்'. பெரியது ஏற்கனவே, செக்கிங்-இன் கவுண் டரில் வைத்தே, உரிய சடங்குகளை முடித்துக் கொண்டு உள்ளே போய்விட்டது.

புறப்படும் விமானங்கள் பற்றியும், புறப்படும் உத் தேச நேரம் பற்றியும் கம்பியூட்டர் பலகை மின் ஜோடனை செய்த வண்ணம் இருந்தது. கொழும்பு செல்லும் 'ஏயர் லங்கா' விமானம் இன்றைக்கு வலு லேட். ஆகக் குறைந்தது, ஒன்றரை மணி நேரமாவது ஆகலாம். இந்த நேரத்திலை ஆளை ஆளைப் பார்த்து மூக்கையே சொறியிறது? அங்கிள் சொல்லுறது போல, போய் 'பியர்' குடிக்கிறதுதான் புத்தி.

பாலா 'பேக்' ஐக் கையிலே தூக்கிக் கொண்டு BAR ஐ நோக்கி நடந்தான்.

Departure தளத்திலுள்ள BAR நிரம்பி வழிகிறது. அத்துடன், lobby பக்கமாக அறிவித்தல் பெண்ணின் குரல் சன்னமாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது...

'கீழை போவமே... அது கொஞ்சம் வசதி' என்று பரநிருபசிங்கம் அங்கிள் இழுத்தார். இந்த இழுவை-தயக்கம் எல்லாம் எப்படி இன்றைக்கு அங்கிளுக்கு வந்தது என்பதை நிதானிக்க இயலாது பாலா குழம் பினான்.

'ஓமோம். கீழை சத்தமும் குறைவு. இஞ்சினை adults only காட்சியளும் நடக்கும். அரியண்டம் பிடிச் சவங்கள்...' அங்கிளின் கோரிக்கைக்கு பாலா ஒரு நியாயம் கற்பிப்பது போலவும்... 'லிப்ட்' பக்கம் போனவன் திரும்பிப் பார்த்தான்.

www.padippakam.com



பரநிருபசிங்கம் அங்கிள் தம்மை மறந்தவராக escalator படியொன்றிலே நின்று கீழே இறங்கிக் கொண்டிருந்தார். பாலா பறதி பறதியாக இன்னொரு படியிலே தொற்றிக் கொண்டான்.

இந்தத் தளத்திலுள்ள 'பா'ரிலும் பிழையில்லாத கூட்டம். கொஞ்சம் அலட்டல் குறைஞ்ச கூட்டம். மெய்யாத்தான். அவுஸ்ரேலியாக்காரங்களுக்குக் குடி கண்ட இடம் கைலாசம். ஸ்ரீ லங்கன்ஸும் உலகத் திலை திறம் குடிகாரர் என்று பேர் எடுத்திருக்கினம். காலியாக ஒரு மேஜை தென்பட்டது. அதன் மேல் 'பேக்'கை வைச்சு, அங்கிளை ஒரு கதிரையில் அமர்த் தினான். 'நான்தான் pay பண்ணுவன்' என்று அங்கிளைச் சண்டித்தனம் செய்ய வைக்காமல், கவுண் டருக்குப் போன பாலா இரண்டு 'ஸ்கூனர்' பியருடன் மேஜைக்குத் திரும்பினான்.

தொண்டையின் வறட்சியைக் குளிர்ந்த பியரிலே தோய்த்து எடுப்பது போன்ற பவ்வியத்தில், அரை கிளாஸ் பியரை உறிஞ்சிக் குடித்தார்.

> **பாலா,** நீ என்ரை மகனைப் போல...இல்லை. அதுக்கும் மேலை. அதுக்காகத்தான் உன்னை நான் Air portக்கு வரச்சொன்னனான்.Taxiக்குக் கொடுக்கிற ஒரு முப்பது நாற்பது டொலர் பெரி செண்டே உன்னை வரச் சொன்னனான்?எனக்கு என்ன நடந்தது எண்டு எனக்கே தெரியேல்லை. இந்தப் பயணத்தை எப்பிடிச் செய்து முடிக்கப் போகிறோம் என்கிற பயம். ஒரு விநோதமான பயம். எப்பிடிச் சொல்லுறது எண்டு எனக்கே விளங்காத உணர்வுகள். எல்லாம் குழம்பிக் கிடக்குது.

படிப்பகம்

www.padippakam.com



கொழும்பிலை இறங்கி, நான் என்ரை சிநேகிதங்களுக்கும் மற்றவங்களுக்கும் எப்பிடி முகம் கொடுக்கப் போறன் எண்டதும் விளங்கேல்லை. அவுஸ்ரேலியாவுக்கு என்ரை migration papers approve பண்ணப்பட்ட உடனை, கண்விண் தெரியாமல் நான் அடிச்ச நடப்புகள் கொஞ்சமே? சுவர்க்கத்துக்கே VISA கிடைச்சது போலை. மொக்குத் தனமாத் துள்ளிப்போட்டன். நான் இலங்கைக்குத் திரும்பி வந்ததுக்கு என்ன கதையைச் சொன்னால் நம்புவாங்கள்? எத்தனையோ ஆயிரக்கணக்கான சனங்கள்—எங்கடை சனங்கள்—ஓடித் தப்பலாம் எண்டு தவம் கிடக்கிறாங்கள். கிடைச்சதும் வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டு வந்திருக்கிற என்னைப் பார்த்து 'மோடன்' எண்டு சொல்லுவாங்கள் என்கிறது எனக்குத் தெரியும். அதுக்காக?

**இப்ப** இவள்—என்ரை சத்தியா—மட்டும் உயிரோடை இருந்தால் நான் ஒண்டுக்கும் கவலைப் பட மாட்டன்.

**என்ரை** சத்தியாவை அள்ளிக்கொடுப்பன் எண்டு நான் கனவு கூடக் கண்டதில்லையடா, தம்பி! உனக்கு சத்தியா அன்ரியைத் தெரியுமல்லே? பாவம். எப்பவும் குழந்தைப் பிள்ளை மாதிரி. பால் வடியிற வஞ்சகமில்லாத முகம். நான் Office ஸிலை இருந்து 'லேட்' டாப் போனாலும் பயந்து நடுங்கிக் கொண்டிருப்பாள். எனக்கு வாகீஸ் பொடியன்; நிம்மி பொட்டை. அந்த இரண்டு பிள்ளையளோடை அவவையும் ஒரு பிள்ளையைப் போலதானே பாத்து வந்தனான்? அவளுக்கு இந்தச் சிங்கள அறுவான்கள் இப்பிடி

படிப்பகம்

www.padippakam.com



அநியாயம் செய்வாங்களெண்டு சாத்திரம் பார்க்கிறதே?

**அறுபதுகளில்தான்** நான் கொழும்பிலை காணி வாங்கி வீடு கட்டத் துவங்கினனான். அவள் சீமாட்டி கொண்டு வந்த காசை அநியாயப் படுத்தக்கூடாது என்பதுக்குத்தானே? அப்ப தொடக்கம் நான் ஜே. ஆருக்குத்தானே வோட்டுப் போட்டனான்? காவாலிகளை எல்லாம் அரசியலுக்கை கொண்டு வந்தது பண்டாரநாயக்கா அல்லோ? யூ.என்.பி.க் காரன்கள் படிச்சவங்கள் எண்டல்லோ அவங்களோடை நாங்கள் நிண்டனாங்கள்? புது Constitution கொண்டந்து ஜேஆர் ஜனாதிபதியானாப் பிறகு வந்த bye-election னிலை நான் அநுரா செபஸ்டியானுக்கு Open ஆ அல்லோ வேலை செய்தனான்? என்ரை கைக் காசைப் போட்டுச் செலவழிச்சனான். அந்த எலெக்‌ஷன் துண்டுக்க, செபஸ்டியன்ரை ஆக்கள் எத்தினை பேர் சத்தியா அவிச்சுப் போட்டதை முழங்கை வழிய வழியத் திண்டிருப்பாங்கள்?

**1983 ஆம்** ஆண்டு அமளியிலை அவங்கள் தானே துடிக்கத்துடிக்க சத்தியாவைக் கொண்டவங்கள்? என்ரை காரிலை இருந்த பெற்றோலை எடுத்து ஊத்தியல்லோ அவளை எரிச்சவனுகள்? அவளின்ரை முகம்கூடக் கருகிப்போச்சு. இப்படி ஒரு கோரச் சாவு என்ரை சத்துராதிக்குக்கூட வாறதை நான் விரும்பமாட்டன். அப்ப, வாகீஸ் லண்டனிலை, தாயின்ரை சா வீட்டுக்கு வாற பொசிப்புக்கூட அவனுக்குக் கிடைக்கேல்லை.

www.padippakam.com



**சத்தியாவின்ர** சாவுக்குப் பிறகுதான் எனக்கு எவ்வளவோ உண்மைகள் வெளிச்ச மாச்சுது. அவளை நான் குழந்தைப் பிள்ளை போலதான் பாத்தனான். அவளும் என்னை ஒரு குழந்தைப் பிள்ளையைப் போலதான் பாத்திருக்கிறாள். அவள் இல்லாத உலகத்திலை என்னால் ஒரு நாளேனும் வாழ முடியாது என்பதுபோல அப் பிடி ஒரு வெறுமை. ஆனால், நானும் போனால், எங்கடை இரண்டு பிள்ளையளுக்கும் என்ன கதி? அதிலும் நிம்மி. உருவத்திலை அவள் தாயை உரிச்சுப் படைச்சு-அசல் கார்பன் கொப்பி போலை!

**நிம்மிக்குத்** தெறிச்சுப் பார்த்து நல்ல மாப் பிள்ளையைக் கட்டி வைச்சிருப்பன், எனக்கு இல்லாத அறிமுகங்களோ? ஆண்டவனே எண்டு நல்லாச் சம்பாரிச்சிருக்கிறன். இல்லை; ஒரு கதைக்குக் கேக்கிறன். உன்ரை அப்பாவிட்ட உன்னை மாப்பிளையாகக் கேட்டி ருந்தால் மறுத்திருப்பாரோ? ஏன் மகேனுக் குச் செய்து வைச்சனான்? அவன் இவவின்ரை அண்ணன் மகன், அவனுக்குத்தான் நிம்மியைக் கட்டி வைக்கவேணும் எண்டு கதைப் பிராக்கிலை சத்தியா சொல்லுறவ... அதுக்காத்தான் அவ உயிரோடை இருக்கேக்க சொன்னதை நிறை வேற்ற வேணும் எண்டதுக்காகத்தான்..., அவங் கள் கேட்டதைஎல்லாம் அள்ளிக் கொடுத்தல்லோ செய்து வைச்சனான்? என்னத்திலை குறை வைச்சன்? எவ்வளவு பாடுபட்டு அவங்களை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைச்சனான்? சத்தியா உயிரோடு இருந்தால், எவ்வளவு சந்தோஷப்படுவாள் எண்டு புழுகிப்புழுகியல்லோ செய்தனான்?

படிப்பகம்

www.padippakam.com



இப்ப...

**இதெல்லாத்தையும்,** பாலா, உனக்கு எப்பிடிச் சொல்றது? சொன்னாலும் உனக்கு விளங்காது தம்பி! நீயும் குடி...நானும் குடிக்கிறன்...குடிச் சால் உதுகளை எல்லாம் மறந்து கொஞ்ச நேரம்நிம்மதியா இருக்கலாம்.

நீள் கயிற்றிலே, தான் தனிமையில் யோசிப்பது பரநிருபசிங்கம் அங்கிளுக்கு உறைக்கிறது.

'உண்மையாய் நான் இப்ப சந்தோஷமாய் இருக் கிறன். மகளையும் சன்இன்லோவையும் விட்டிட்டு ஏன் உம்மை வரச் சொன்னனான் தெரியுமே?...'

'தெரியும். சொன்னீங்கள்தானே?'

நேற்றிரவு வீட்டுக்கு வந்திருந்த பொழுது, இதே கேள்வியையும் அதற்கான பதிலையும்...ஓம்; நாலு தரத் துக்கு மேல சொல்லியிருப்பார்...இப்ப ஏதாவது புதிசாகச் சொல்லப் போறாறோ என்று நினைத்து பாலா நிமிர்ந்து பார்த்தான்.

அவர் தமது பியர் கிளாஸை காலி செய்து வைத்த படி...

'I didn't want to create a scene here...அவையள் வந்திருந்தால் நான் அழுதிருப்பன்!' இதே பதிலை, இதே தொனியிலேதான் நேற்றும் சொன்னவர்.

பரநிருபசிங்கம் அங்கிள் 'கோக்கு மாக்கு' எதுவும் செய்யாமல்; நிரந்தர வதிவிட அனுமதியுடன் அவுஸ்ரே லியாவுக்கு வந்தவர். எதற்காக அவசரப்பட்டு இலங் கைக்குப் போறார்? மகன் வாகீஸ் குடும்பத்துடன்

படிப்பகம்

www.padippakam.com



கனடாவில் குடியேறி இருக்கிறான். இவர் இங்கை இன்னும் இரண்டு மாசம் இருந்தால் இங்க Citizenship கூட கிடைச்சிருக்கும். ஒரு நாள், பேச்சுப் பராக்கில, 'கொழும்பு வீட்டுக்கு ஒரு வழி செய்யிற வரைச்சும் பிரஜாவுரிமைக்கு apply பண்ணுறது பற்றி யோசிக்க வேணும்' எண்டு சொன்னவர். எதையும் யோசித்துச் செய்ய வேண்டும் என்கிற தொனி... ஆனால், திடுதிப் பென்று ஒரு மாதத்துக் கிடையிலை திடீர் பயணம் வைத்து விட்டார். இரண்டு வருஷத்துக்கிடையில் சிட்னி வாழ்க்கை வெறுத்துவிட்டதா? இவற்றைக் கேட்க வேண்டுமென்ற ஆசை பாலாவின் நாக்கு நுனி வரை வந்து காலை உதைக்கிறது. ஆனால் அவர்கள் இருவருக்கும் இடையிலிருக்கும் மரியாதையும் வயசும் இவற்றைக் கேட்டுத் தெளிஞ்சு கொள்வதற்குத் தடை யாக இருக்கின்றது.

அங்கிள் சொன்னதற்குத் தான் எதுவும் சொல்ல வில்லை என்கிற நிதர்சனம் பாலாவின் மனதில் விழித் துக் கொள்ளுகிறது.

'அங்கிள், நீங்கள் ஏன் இவ்வளவு feel பண்ணுறி யள்? அடிக்கடி வந்து போவியள்தானே?'

'அடிக்கடி வந்து போகக் கட்டுபடியாகுமே?.பாலா, If you don't mind இன்னொரு பியர் எடுக்கிறீரே?'

பரநிருபசிங்கம் எழுந்தார்.

'அங்கிள், நீங்கள் இருங்கோ...இனி எப்பெப்பச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்குதோ?நான் போய் வாங்கி வாறன்...' என்று கூறிக் கொண்டே பாலா கவுண்டரை நோக்கி விரைவாக நடந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



கவுண்டரில் நிறையச் சனம். பாலா காத்திருக்க வேண்டியதாயிற்று.

பாலா, நிம்மியும் சன்இன்லோவும் எப்பிடி இங்கை வந்தவை எண்டு தெரியுமே? அது ஒரு story.

வாகீசனுக்கு லண்டனிலை படிக்கும் பொழுது ஒரு பொடிச்சியைப் பிடிச்சுப் போச்சு, 'காதல் கீதல்' எண்டு சொல்லக் கூச்சம். பொடிச்சி கட்டுவன் பக்கம். நல்ல பகுதி. அப்பிடி இப்பிடி எண்டு கிளறிக் கொண்டு போனால், தூரத்திலை சொந்தம் எண்டு கூடச் சொல்லலாம். முறையா மாப்பிள்ளை கேட்டு வந்தவை. இந்தக் காலத் திலை, அவனுக்குப் பிடிக்கிற சம்பந்தத்தை எப்படி வேண்டாம் எண்டு சொல்லுறது? பொடிச்சி யின்ரை brothers எல்லாம் கனடாவிலை settle பண்ணீட்டினம். வாகீஸ் கல்யாணம் முடிச் சோடனை கனடாவிலை அவனும் settle பண்ண வேணும் எண்டு அவை condition போட்டினம். அதுதான் எனக்கு அவ்வளவாப் பிடிக்கேல்லை. நாங்கள் செம்பாட்டு மண்ணிலை பிறந்தவங்கள். நிலவுக்கு ஒளிச்சுப் பரதேசம் போறதோ எண்ட றாங்கி.

'உந்தச் சிங்கள உலுத்தன்கள், என்ரை அம்மாவை பட்டப் பகலிலை, நடுறோட்டிலை வைச்சுக் கொன்று போட்டு, கொள்ளியும் வைச் சவங்கள். உவங்களோடை எங்களுக்கு எப்பவும் சரிப்பட்டு வராது. அவங்கள் தங்கடை நாட்டை எப்பிடி எண்டாலும் ஊத்தைவாளியாக்கட்டும். அது அவங்கடை பாடு, நாங்கள் வாழ வேண்டி யவங்கள். எங்கடை உயிருக்கு இந்த நாட்டிலை

படிப்பகம்

www.padippakam.com



security இல்லை. ஒவ்வொரு நிமிஷமும் சாவை எதிர்பார்த்துக் கொண்டு வாழலாமே! 'எங்கை யெண்டாலும் எங்களுக்கு ஒரு secure லைஃப்பை அமைச்சுக் கொள்ள வேணும். தங்கச்சியையும் உங்களையும் sponsor செய்து எடுப்பிக்கிறது தான் என்ரை நோக்கம்...' என்று கொம்பினான்.

அவன்ரை நிலையிலை அவன் சொல்லுறதிலை யும் நியாயம் இருந்தது.

அப்பதான் migrate பண்ணவேணும் என்கிற ஆசை நிம்மிக்கும் வந்தது. இவைக்கு அவுஸ்ரேலியாவிலதான் ஒரு கண். வாகீஸின்ர மனுஷி யின்ரை சித்தப்பா ஒரு டொக்டர். அவர் செவின் டீஸிலேயே இங்கை settle பண்ணினவர். அவரைப் பிடிச்சுத்தான் இவை ஏதோ செய் விச்சு இங்கை வந்தவை.

நிம்மி குடும்பம் அவுஸ்ரேலியாவிலை. வாகீஸ் குடும்பம் கனடாவிலை, அந்தப் பெரிய கொழும்பு விட்டிலை, இவவும் இல்லாமல் சீவிக்கிறது பெரிய விசராய்க் கிடந்துது.

அப்ப நிம்மிக்கு மகனும் பிறக்கிற காலம்.

'உங்களுக்கு ஏன் வீண் அலைச்சல்? உங்களை ஆர் பார்ப்பினம்? வயசும் ஐம்பத்தைந்து ஆகுது, பேசாமல் retire பண்ணிப்போட்டு பேரனோடை இருக்கலாம் தானே?' என்று நிம்மி கடிதங்களும் எழுதினவள்.

நான் பசையடிக்கிறதைப் பார்த்து, நான் கனடா வுக்குப் போய் மகனோட இருக்க plan பண்ணு

www.padippakam.com



றனோ என்றும் பிழையா விளங்கீட்டினம்... 'கனடாவுக்குப் போற எண்ணம் இருந்தால் விட்டிடுங்கோ... அங்க சரியான குளிர் Temperature minus degree களுக்குப் போகும். அவுஸ்ரேலியாவில ஒரு மூன்று மாச winter. Snow இல்லை. சிட்னியில temperature plus பத்து degreeக்குக் கீழ போகவே போகாது... குளிர் மாசி மாத இரவைப் போல இருக்கும். அவ்வளவு தான்... நீங்கள் வந்து பேரப்பிள்ளையோட இருந்தால் எங்களுக்கு எவ்வளவு நிம்மதி; சந்தோஷம்...' என்று நிம்மி call'க்கு மேல call எடுத்தவள்...நிம்மி குட்டி சத்தியா அல்லோ?

**செம்பாட்டு** மண்ணிலை என்ர அப்புவின்ரை செல்லமாக அவரின்ரை விரலைப் பிடிச்சுக் கொண்டு நடந்தது நேற்று நடந்தது போல இருக்கு. கடைசி காலத்திலை பேரப்பிள்ளை களோட அளைஞ்சு விளையாடுறதிலயும் பார்க்க வேற என்ன இன்பம் இருக்கு?

**இனியும்** பிரியம் காட்டுறது வடிவில்லை.

என்ரை migration papers எல்லாம் ஆறு மாசத் துக்குள்ள process பண்ணப் பட்டு, resident visa குத்தித் தந்தோடனை எல்லாரும் ஆச்சரியப் பட்டவங்கள்.

**அப்ப** நான் அடிச்ச நடப்புகள் கொஞ்சமே?

கொழும்பிலை இறங்கின கையோட அவங்கள் கேக்கப்போற கேள்விகளுக்கு என்ன பதிலைச் சொல்லப்போறன்? தலை விறைக்குது. பிளேனிலைதான் இதுகளை யோசிக்க வேணும்.

www.padippakam.com



கவுண்டரில் நின்ற பாலாவின் மனம் பரநிரு பசிங்கம் அங்கிளின் கொழும்பு வாழ்க்கையை அசை போட்டது.

கொழும்பிலுள்ள அங்கிளின் வீடு மட்டும் பெரி சென்றில்லை. அவர் மனசும் மகா விலாசமானது. எந்தக் காக்கை குருவிகளுக்கும் அவர் வீட்டில் வர வேற்பு உண்டு. அவருக்கு அங்கு Inland Revenue Department தான் சம்பளம் கொடுத்தாலும், வேலை எல்லாம் பெரும்பாலும் வேறு கந்தோர்களிலேதான். வேறொன்றும் இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ஊரவர், உறவினர்களுடைய அலுவல்களைக் கவனிப் பதிலே அதிக நேரம் போகும். ஒரு சப்ஜக்ட கிளார்க் என்றாலும் சரி. போனிலே பேசி முடிப்பம் என்று நினைக்க மாட்டார். அவ்வளவு பவ்வியம்.

எந்த சீரியஸான விஷயத்தையும் சுலபமாக சீரணித்துக் கொண்டு எப்படித்தான் இந்த மனுஷனால் எந்த நேரமும் கலகலப்பாக இருக்க முடிகிறது என்று கொழும்பில் இவரை அறிந்தவர்கள் வியப்பதுண்டு. பெஞ்சாதி இறந்து ஒரு மாதத்திற்கிடையில்... அவரு டைய வீடு சத்திரம் போலதான். வெளிநாடுகளிலை இருந்து விடுதலைக்கு வந்து அந்தரிச்ச சனங்களுக்கு எல்லா உதவிகளும் செய்தார். இன்று?

அவருடைய குடும்பமே சர்வதேசியமாகச் சிதறிக் கிடக்கிறது.

சிட்னிக்கு வந்த காலத்தில், பரநிருபசிங்கம் அங்கிள் பழைய கலகலப்புகளுடன்தான் தோன்றினார். கடந்த ஆறு மாத காலமாக அவருடைய அந்த வடி வான குஞ்சிரிப்பு எங்கே மறைந்து விட்டது? என்னவோ தெரியாது. பாலாவுக்கு அப்படித்தான் தோன்றியது.

www.padippakam.com



இரண்டு ஸ்கூனர் பியரைக் கொண்டு வந்து மேஜையில் வைத்தான் பாலா.

Bar இன் தடுப்புக் கண்ணாடி ஊடாக அடுத்த பக்கத்தில் Arrival பகுதி தெளிவாகத் தெரிகிறது. பல நிற மக்கள்—பல மொழி பேசும் மக்கள்—அக்கம் பக்கமாகக் கூடி நிற்கிறார்கள்.

எல்லோருடைய கவனமும் பயணிகள் வெளிவரும் கதவுப் பக்கந்தான் குவிந்திருக்கிறது.

சில இந்திய முகங்களும் சீன முகங்களும் வந்து கொண்டிருக்கின்றன. அவுஸ்ரேலியாக்காரனுக்கு Asian என்றால், மஞ்சள் நிறமுடைய சப்பை மூஞ்சியர் மட்டுமே; சீனர்களும் அவர்களைப் போல சாயல் உடையவர்களும் மட்டுமே! தென்ஆசியர்-அவன் சுத்த ஆரிய ரத்தம் ஓடும் பௌத்த சிங்களவனேயானாலும், 'இந்தியர்கள்' என்றே அழைக்கப்படுகிறார்கள். அறுபதைத் தாண்டிய ஜோடி ஒன்று trollyயில் அடுக்கி வைத்துள்ள பொதிகளைத் தள்ள முடியாமல் தள்ளிக் கொண்டு வருகிறது. அவர்கள் தமிழர்களாகவும் இருக்கலாம். இங்கு உடையை வைத்து இனத்தைச் சொல்ல முடியாது. மகனைக் கண்டு விட்டார்கள். பாரத்தைக் கையேற்றுக் கதைத்துக் கொண்டே அவர்களை அழைத்துச் செல்கிறான்.

'போன கிழமை ஒவ்விஸிலை ஒரு patry கொடுத்தனான். அப்பதான் நான் வேலையை மட்டுமல்ல, leaving the country for good என்று சொன்னனான்.'

'என்ன? லஞ்ச் தானே?'

'லஞ்ச் தான். அண்டைக்கு நல்ல குடி. I paid all their bills.'

படிப்பகம்

www.padippakam.com



'எல்லாருக்கும் ஆச்சரியமா இருந்திருக்குமே?'

'ஓமோம். அவையவையின்ரை பில்லை அவையவை யள் கட்டுறதுதானே அவுஸ்ரேலிய முறை எண்டினம். I invited you for this party. I won't let you spend. That's sri lankan Style எண்டு சொன்னன். நான் செய்தது சரிதானே?'

'நல்ல வேலைதான் செய்தனிங்கள். அப்பதான் எங்கடை பழக்க வழக்கம் என்ன எண்டு இவங்களுக்கு விளங்கும். இவங்களிலை சில பேர் எங்களைக் காட்டு மிராண்டிகள் என்று நினைச்சுக்கொண்டிருக்கிறாங்கள்.'

'அன்றைக்குத்தான் சிலரோடை மனம் விட்டுக் கதைச்சன். ஒரு வருசம் வேலை செய்தும், அதுவரை ஒருத்தரோடையும் கந்தோர் அலுவல் தவிர வேறை ஒன்றும் கதைக்கேல்லை. எந்த நேரமும் வேலை தானே? என்ன இருந்தாலும் இலங்கை மாதிரி வருமே? What a wonderful time I had at the Inland Revenue Department!'

'நீங்கள் சொல்லுறது சரிதான். நானும் நியாய மான காலம் ஒரு ஒவ்விஸில வேலை செய்யிறன். இரண்டு சைனீஸை தவிர மற்றவையைப் பற்றி ஒண்டும் தெரியாது.'

'எனக்கு இந்த இடம் சரி வராது. This Land is not ment for me.'

அருகில் தனித்திருந்து விஸ்கி ஸிப் பண்ணிக் கொண்டிருந்த ஒருவன்—அவனுக்கு கிட்டத்தட்ட ஐம்பது வயதிருக்கும்— இவர்களையே பார்த்துக் கொண்டிருந் தான். பரநிருபசிங்கம் அங்கிள் அடிக்கடி பாவிச்ச ஆங்கில வாசகங்கள் அவனுக்கு விளங்கியிருக்கலாம்,

www.padippakam.com



**தம்பி, பாலா...** இந்த நாட்டிலை எத்தனை மொழி பேசுறவங்கள்... உலகத்திலை உள்ள அத்தனை நாட்டவங்களும் இங்கை பிரஜா உரிமை பெற்று வாழுறாங்கள். வெள்ளைத் தோல்காரனாக இருப்பான். பேசினால், Don't know Englisssh! எண்டு சொல்லுவான். பீத்தல் சிங்களவன் இரண்டு மொழி பேசுற மக்களை வைச்சுக் கொண்டு வாழேலாது எண்டு எல்லாத்தையும் போட்டு உடைச்சுக் கொண்டிருக்கிறான்... அவனோடை அடிபட்டுக் கொண்டு வாழலாம் போலவும் இங்கை உள்ளவங்களோடை அண்டலிக்க ஏலாது போல கிடக்கு! நான் வெள்ளைக்காரங்களையும் ஏசியன்களையும் சொல்லேல்லை. அவங்கள் தங்கடை பாடு. எங்கடை சோலி சுறட்டுகளுக்கு அவங்கள் வாறதும் இல்லை. சில பேருக்கு எங்கடை plight வடிவா விளங்கும். Sri Lankan Tamil என்றால் அடிபட்டு உதைபட்டு வந்தவை என்ற அநுதாபமும் சிலருக்கு இருக்கு. என்ர பார்ட்டியில ஒரு வெள்ளைக்காரன் எவ்வளவு வடிவா எங்கடை Problenகளை analyse பண்ணிச் சொன்னவன் தெரியுமா?

**ஆனால்,** எங்கடை சனங்கள் சிலரோடை அண்டலிக்கவே ஏலாது.

**வெள்ளத்தோட** அள்ளுப்பட்டு வாற வால்பேத்தையளைப்போல பல ஊத்தைகளும் இங்க வந்து கிடக்குதுகள். பாலா, உனக்கு ஆக்களைத் தெரியுமே?

**உன்ரை** வீட்டுக்கு வாற புழுகுப்பெட்டி. ஓம்; அவன்தான் ரட்ணராஜா, நைஜீரியாவை ஆண்டு

www.padippakam.com



போட்டு வந்தவரைப் போலதான் அவரின்ர கெப்பர் கதைகள், அவன் வாயைத் திறந்தாலே எனக்கு விசர்தான் வாறது... 'காப்பிலி'கள் தன்ரை காலைக் கழுவித் துடைச்சு விடுவாங்களாம்... என்ன சொன்னாலும் எசமானுக்குச் செய்து விடுவான்களாம்... அப்பிடி அடிமை குடிமைகளோட வாழ்றதுதான் சொர்க்கமாம். இந்த வடுவா எந்த நூற்றாண்டிலையும் எந்த உலகத்திலையும் வாழுறான்?... உவனைப் போன்றவங்களின்ரை list ஐ எடுத்து வைச்சு, வயித்துக்க இருக்கிற பீ வெளியால வாறதுக்குச் சிங்களவங்கள் மிதிச்சு எடுத்தாத்தான், இப்பிடிப் பட்ட பேய்க்கதையளை விட்டிட்டு இருப்பினம்... எந்த partyக்குப் போனாலும் காப்பிலிகள் கால் கழுவின கதை சொல்லுற இவங்களுக்கு மரியாதை குடுக்கிற சனங்கள் மத்தியில...This land is not ment for me!

இன்னொரு பீத்தலன். அவருக்கு நினைப்பு New South Wales Stateற்குத் தான்தான்Tax commissioner என்று! இத்தனைக்கும் என்ர departmentரில எனக்குக் கீழ தவண்டை அடிச்சிக் கொண்டு திரிஞ்சவன். 'அண்ணை, அண்ணை! யோனாலிவரைப் பிடிச்சு என்னை நைஜீரியாவுக்கு அனுப்பி வையுங்கோ' என்று கெஞ்சினவன். தெரிஞ்சவங்களுக்கு உதவி செய்யத்தானே வேணும்? இல்லாட்டில் என்ன மனுஷ ஜன்மம்? Sokoto stateஇல் உத்தியோகம் எடுத்துப் போனவன். பெரிசா thank பண்ணிக் கடிதம் எழுதினவன்...இவள் மிஸ் முருகேசு அந்த ரிச்சுப் போனாள், தகப்பன் திடீரென்று மண்டையப் போட்டிட்டான். பெரிய குடும்பம்.

www.padippakam.com



என்ர உதவியோட அவனுக்கு Sokotoவில் teacher வேலை கிடைச்சுது. இவனும் அங்க தானே? இவனுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து விட்டன். பொடிச்சி வேலையில சேரும் வரையிலும் உதவி செய்யச் சொல்லி. முருகேசுக்கு இவன்ரை மகளின்ர வயசுதான் இருக்கும். லீவில ஊரில வந்து நிக்கேக்க நடந்ததை அழுதழுது சொன்னவள்...இந்தப் போக்கிலி தன்ர மனுஷியையும் மகளையும் தந்திரமா வெளியால அனுப்பிப் போட்டு, இந்த அபலைப் பொடிச்சியைக் கோழி மிதிக்கப் பாத்திருக்கிறான்...அக்கம் பக்கமிருந்த காப்பிலியளாலைதான் அவள் மானம் காப்பாத்தப்பட்டதாம். இந்த நாய், 'இப்ப சாய் செண்டர் வாசலிலைநிண்டுகொண்டு இந்த இடத்திலை காரை நிப்பாட்டாதேயுங்கோ' எண்டு குலைக்கிறான். ஒவுஸ்ரேலியன் கட்டின றோட்டு, தன்னைப் போல வெள்ளை வேட்டிக் கள்ளருக்கு முதிசொம் எண்ட நினைப்புப் போல...

சாய் பகவான் செய்யும் அளப்பரிய மனித குல சேவை உலகமெல்லாம் வியந்து பூஜிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். மெய்யா எனக்குத் தெரியும். அடுத்த வருஷம் நானும் ஒருக்கா புட்டப்பத்திக்குப் போகவேணும். ஆனால், உவனைப் போல கேடு கெட்ட பெண்பிடியன்கள் தான் சாய் செண்டரிலை பெரிய மனுஷங்களெண்டால், சாய் பகவானுடைய பேர்தானே கேவலப்படும்?...This country is good for him!

**சாய்** செண்டரிலை இந்த அறுவான்ர மூஞ்சையைப் பார்க்கக்கூடாது என்று, வெள்ளிக்கிழமை முருகன் பூசைக்குப்போகலாம் எண்டா றோட்டே

www.padippakam.com



நாறுது! ஐம்பது வயசுக்கு மேல போன எங்கட காய்கள் இரண்டு ஒடிப் பிடிச்சு விளையாடினம். அவருக்குத் தான் எம்ஜிஆர் எண்ட நினைப்பு போல...உன்னாணை இவள் தன்னை எலிசபெத் டெய்லர் எண்டு நினைச்சுக் கொண்டுதான் கூத்தாடுறாள்,

டான்ஸ் ஆடுறது எண்டால் மேடையில டான்ஸ் ஆடலாம். இல்லாட்டில், வேறை ஆரேன் பழக்கின பொடிச்சியளை வளைச்சுப் பிடிச்சு அரங்கேற்றமும் நடத்தலாம். கோயில் நிதிக்கு டான்ஸ் என்று சொல்லிக் கொஞ்சம் காசைச் சுருட்டலாம். இதுகளை விட்டிட்டு, கொழும்புத் தொடுப்பு எண்டு சொல்லி சிட்னி றோட்டிலை டான்ஸ் ஆடுறவையளையும், சிட்னி யூனிவேர் சிட்டியிலை ஒரு தமிழ்க் கதிரையைக் கனவு கண்டு கொண்டு இந்த டான்ஸுகளுக்குத் தாளம் போடுறவையையும் நடுறோட்டிலை கிடத்தி வைச்சுக் குறி சுடவேணும்.

இந்த அசிங்கங்களையும் அவலங்களையும் காணும் பொழுது எனக்குள் ஒரு ஆவேசம். ஒரு மூர்க்கம். ஒரு சந்நதம். துஷ்ட நிக்கிரகம் நடத்த வேணும் எண்ட வெறி!

இந்த வெறியாட்டத்தை வீட்டிலை செய்ய முடியுமா? பியர் குடிச்சாலும் வெறிக்கும். இப்ப, beer is good for you and me...But this land is not ment for me!

மதுவின் போதையோ? மனத்தின் பாரமோ? இரண்டின் அழுக்கமோ?

www.padippakam.com



சடுதியாக எழுந்து, பாலாவுக்கு எதுவும் சொல்லா மல், பரநிருபசிங்கம் அங்கிள் 'பா'ரின் கவுண்டரை நோக்கி நடந்தார். தடுக்க யோசிக்கிறதுக்கிடையில் அவர் போய்விட்டார். கவுண்டருக்குப் போய் 'நான் தான் இதுக்கும் pay பண்ணுவன்' என்று சொல்றதும் வடிவில்லை. பாலாவும் எழுந்து போனால், வேறு யாராவது வந்து குந்தியும் விடுவினம். பரநிருபசிங்கம் அங்கிளுடன் இதுதான் கரைச்சல். அவர் மற்றவர் களின்ர காசில குடிக்கிறதுக்குக் கூச்சப்படுபவர்.

வரட்டும் என்று பாலா காத்திருந்தான்.

அங்கிளின்ரை மனசைப் போட்டு உலுக்கும் விஷயம் என்ன என்பதை பாலாவால் ஓரளவு ஊகிக்க முடிந்தது. ஆனால், தன் ஊகம் சரியாக இருக்குமோ என்கிற தடுமாற்றமும் அவனுக்கு இருந்தது. இரண் டாம் தரம் தனக்காக வாங்கி வந்த பியர் அப்படியே இருப்பதை பாலா கண்டான். இப்படி வைச்சிருக்கிறது வடிவில்லை என்ற நினைப்பில், பியர் கொஞ்சம் உறிஞ்சிக் குடித்து நிமிர்ந்தான்.

> **பாலா,** பேயாடிப் பந்தலைப் பிரிக்கிறது போலத்தான் என்ரை மனம் சந்நதமாடுவது. தமிழன், தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு எண்டு சொல்லிக் கொண்டு இவங்கள் செய்யிற சேட்டை களை நினைச்சுத்தான் இந்தக் கொதிப்பு. இவ் வளவு காலமும் இந்தக் கொதிப்பும்-கோவமும்- ஆத்திரமும்- ஆவேசமும் எங்க போனது?... ஓமோம், இப்ப விளங்குது. எல்லாம் என்ரை பிழை. எங்கடை பொட்டுக்கேடுகளை மூடி மறைக் கிறது, மற்றவங்கட பிழைகளைப் பற்றிக் கொக் கரிக்கிறதும் எங்கடை பழக்கம். பழக்கம்

www.padippakam.com



பெரிசோ? பரவணி பெரிசோ? ஊர் பனாயனை
விட்டிட்டு நாங்கள் குடிப்பம்.

பரநிருபசிங்கம் அங்கிள் கவுண்டரிலை நின்று மல்லுக் கட்டுகிறார்.

பாலாவின் புலன் இடப்பக்கமிருந்த Arrival பகுதியிலே மேய்கிறது.

இரண்டு குமரிகள்—Teenage ஆகவும் இருக்கலாம் early twenties ஸாகவும் இருக்கலாம்— வீடியோவுடன் யாருடைய வருகைக்காகவோ காத்து நிற்கிறார்கள். வெள்ளைக்கார 'ஒஸிகள்' போல நல்ல நிறம். இனத்தைக் கண்டு பிடிக்கிறதுக்கு மயிரின் நிறமும் முக அமைப்புந்தானே முக்கியம்... சற்றுத் தள்ளி நின்ற சேலைகட்டிய பெண் தாயாக இருக்கலாம். இவை மலேசியாவிலிருந்து, இல்லாட்டில் தென்னாப்பிரிக்காவிலிருந்து குடியேறியவர்களாக இருக்கவேணும். இவர்களுடைய Polish வேற மாதிரி.

தெரியாத முகத்தை வரவேற்கப் பெயர் தாங்கிய அட்டையுடன் சில வெள்ளைக்காரர்கள். அட்டையில் யப்பானிய மொழி, யப்பானுக்கு இங்கு நல்ல சந்தை. நிறைய invest பண்ணவும் யப்பான்காரங்கள் ஓடித்திரியிறானுகள்.

பல நிறங்கள். பல வகையான முகங்கள். தோட்டத்தின் ஒரே பாத்தியில் பல வகையான மலர்கள் இருக்குமே. வகைக்கு ஒன்று; வண்ணத்துக்கு ஒன்று! அதைப் போல, மக்கள் கூட்டத்தினர்.

கும்பலாகச் சிலர். சோடிகளாகச் சிலர். தனித் தனியாகவும் சிலர்.

www.padippakam.com



'Multi-culturism' என்று பேசப்படுகிற கோஷத்துக்கு ஓர் அர்த்தம் உண்டு என்பது இந்தக் கும்பலைப் பார்த்ததும் புலனாகின்றது.

இது இன்னொரு உலகம்.

'பாலா, அதை முடியுமன்... இஞ்சை கொண்டந் திருக்கிறன்.'

பரநிருபசிங்கம் அங்கிள் இரண்டு 'ஸ்கூனர்'களை மேஜையில் வைக்கிறார்.

'பார்'க்காரி வந்து மேஜை துடைத்து கிளாஸ்" களை அப்புறப்படுத்துகிறாள். முந்திய கிளாஸை அவசரமாகத் தன் வயிற்றுக்குள் empty செய்துவிட்டு, பாலா அவளிடம் கொடுத்தான்.

மேஜையில், இப்பொழுது அங்கிள் கொண்டு வந்து வைத்த நிரம்பிய இரண்டு கிளாஸ"கள் மட்டுமே. பாலா அவரை நிமிர்ந்து பார்த்தான். அங்களின் கண்கள் நன்கு சிவந்திருக்கின்றன. வெறியா? சே, அங்கிளுக்கு இரண்டு 'ஸ்கூனர்' பியர் என்பது மூக்குப்பொடி போட்டதுபோல!

'பாலா, நான் ஏன் இங்கை கிடந்து அவதிப்பட வேணும்? உம்மைப் போல இளவயசெண்டால் பிள்ளைகளின்ர எதிர்காலத்துக்காக இஞ்சை வாழலாம்...'

'ஏன் உங்கடை பேரப்பிள்ளைக்காக இருக்கலாம் தானே?'

அவருவடய மனசைக் கிளறி விட வேணும் என்பதற்காக பாலா இதைச் சொல்லவில்லை. பேரனின் பிஞ்சு முகத்தைப் பார்க்கும் கொள்ளை ஆசையிலேதான்

www.padippakam.com



அவர் அவசரப்பட்டு இங்கு வந்தவர் என்பது அவனுக்குத் தெரியும்.

'பேரனைப் பார்க்க இருக்கலாம்தான். இரண்டு பேரும் வேலைக்குப் போக, நான் பேரனைப் பார்க்கலாம் எண்டுதான் நினைச்சன்...'

பேச்சை இழுத்து, இடையில் முறித்து, விழிக்கோடியில் பொக்களமிட்ட கண்ணீரை மறைக்க முயல்பவர்போல, Arrival பகுதியைப் பார்த்தார்.

யப்பான் மொழியிலெ எழுதப்பட்ட அட்டை, யப்பான் கோஷ்டி ஒன்றை வரவேற்கக் காட்டியது என்பது இப்பதான் புரிகிறது. யப்பான்காரனுக்கு குள்ள உருவம். கூடி நின்று ஏதோ 'காச்சு மூச்சு...' அவங்கள் கைகளையும் கால்களையும் ஆட்டுறநிலகூட ஒரு சுறுசுறுப்பு...

**பாலா,** என் இளமைக் கால நினைவுகள் அப்புவைச் சுற்றிய நினைவுகளாகவே இருக்கின்றன. அவர் எப்பவும் சுறுசுறுப்பு. கலட்டியைக் கமமாக்கிய உழைப்பாளி என்பார்கள். செம்பாட்டு மண்ணுக்கு மரகதக் கம்பளம்விரிக்கும் புகையிலைத் தோட்டம் அமைத்து, விடியச் சாமம் எழும்பி அவற்றுக்குத் தண்ணீர் பாய்ச்சச் சென்றுவிடும் கமக்காரன். ஐயா ஜூனியர் கேம்பிரிஜ் இங்கிலீசுடன் கொர்ணமேந்து உத்தியோகம் ஒன்று பிடிச்சு, சிங்கள ஊர்களின் தண்ணீர் குடிக்கப் போனவர். அம்மாவையும் எங்களையும் அப்புவின் நிழலில விட்டுச் சென்றவர். கிராமத்துப் பள்ளியில் மூன்றாம் வகுப்புடன் கல்வியை முடித்துக் கொண்டு, சாணகக் கடகத்தைத் தலையில் வைத்து வாழ்க்கையை எதிர் கொண்

www.padippakam.com



டவர் அப்பு. வைராக்கியமான உள்ளம்; வைர மான உடம்பு சின்ன வயசில, அவருக்குச் சிண் போல நான்! அவர் எங்க போனாலும் அவரோட போக வேணும் எண்டுதான் சண்டை பிடிப்பன். என்ர சண்டித் தனத்துக்குத்தான் அவர் நல்லாப் பயப்படுவார். பனங்காய்க் காலத்தில பனை வள வுக்க பனங்காய் பொறுக்கப் போனாலும் ஒட்டிக் கொள்ளுவன். ஒரு தடவை இக்கிரி முள்ளுக் குத்திப் போட்டுது என்று அழத்துவங்கினன். என்னைத் தூக்கி அவர் இடுப்பில வைச்சுக் கொண்டு, குனியாமல், காலால எத்தி, பனங் காய்களைக் கையில பிடிச்சு, தலையில இருந்த கடகத்தில போடுற வடிவு... கமலா சர்க்கஸ் காரனாலும் இப்பிடிச் செய்யேலாது. அவரை மசிய வைக்கிறதுக்கு அழுகைதான் என் ஆயுதம். 'இவனுக்கு நீங்கள் வலுவாச் செல்லங் கொடுத் துப் பழுதாக்கிறியள்... அழுகுணியாய் வளரு கிறான்...' என்று அம்மா இடைக்கிடை புறுபுறுப் பாவு. 'ஓம், மேனை... நீ சொல்லித் தந்துதான் இனி நான் பிள்ளையளை வளர்க்கப் பழக வேணும்...' என்று அப்பு அனுங்கினால் போதும் அம்மாவின்ர வாய் அடைச்சுப் போகும். முற்றத் தில் வெண்மணல் பரப்பி, நிலவொளியில், என் பிஞ்சு விரல் தேய்த்து, அப்புதான் எனக்கு 'ஆனா... ஆவன்னா...' எழுதப் பழக்கினவர். இப்பவும் நான் பாடுற தேவாரங்களிலே பல, அப்பு சொல்லித் தந்து, நான் பாடமாக்கி வைச் சிருக்கிற தேவாரங்களே! வளரும் பருவத்தில் அப்புதான் என் இணைபிரியாத நண்பன்; ஆரு யிர்த் தோழன்... அவரோட திரியிறது வலுமுஸ் பாத்தி... எப்பவும் அவருக்குக் கூழ் உறைப்பும் புளியும் சுள்ளிட இருக்கவேணும்... அவரின்ர பலாவிலையிலதான் நானும் குடிப்பன் என்று

படிப்பகம்

www.padippakam.com



சண்டை போடுவன். என் சொண்டுகள் சிவந்து போகும். அவர் பருக்கைகளை எல்லாம் சூப்பி, உறைப்பு நீக்கி, எனக்குத் தீத்துவார்... அந்த இன்பம்! என் அப்பு என்னை வளர்த்தது போல, என் பேரனுக்கு நான் அப்புவாக இருந்து வளர்த்தெடுக்க வேண்டும்.... நான் பேரனாக, மகனாக, கணவனாக, தந்தையாக, குடும்பத் தலைவனாக... I have played many roles in life... நான் அப்புவாக... I too to play the role of a grand-father...

**எத்தனை** இனிமையான நினைவுகளை எல்லாம் இந்த நெஞ்சிலே சுமந்து கொண்டு அவுஸ்ரேலியாவுக்கு வந்தேன்...

**இங்க**... இங்க... எனக்கு அழுகை வரப் பார்க்குது... பாலா, நான் ஆண்மகன். நான் அழக்கூடாது. அதுக்காகத்தான் கொழும்புக்கு ஓடுறன்... இப்ப, குடியில பராக்குப் போனால் அழுகை வராது...

'என்ன இழுக்கிறியள்...'

Arrival இல் மேய்ந்த பார்வையை பரநிருபசிங்கம் அங்கிள் மேஜைக்குக் கொண்டு வந்தார்.

'என்ன கேட்டனீ பாலா?' என்று சுதாகரித்துக் கொண்டு பியரிலே கொஞ்சம் குடித்தார்.

'இல்லை. உங்கடை பேரனோடை இருக்கலாம் என்டு...'



படிப்பகம்

www.padippakam.com



'எங்கட விருப்பத்துக்குப் பிள்ளையள வளர்க்க ஆர் விரும்புகினம்? அவை பிள்ளையை Four dollers per hour படி ஒரு Australian lady baby sitterரிட்டைக் கொண்டு போய் விடுகினம்...'

'ஏன் நீங்கள் இருக்கேக்க வேறை இடத்திலை விடுகினம்? இங்கை சனம் பிள்ளை பார்க்க வீட்டிலை ஆள் இல்லை எண்டு அந்தரப்படுகினம். அநியாயக் காசெல்லே?'

'அதில்லை, பாலா. இப்பவே வெள்ளைக்கார ரோட வளர்ந்தாத்தானாம் பிறகு Schoolக்குப் போறது வசதியாக இருக்குமாம்...'

பாலா, குறுக்காலை கேள்வி கேட்டுப் போடாதை...இவள்—என் மகள்— நிம்மி செம் பாட்டு மண்ணில ஓடித் திரிஞ்சவள் தானே? பேத்தியை விட்டிட்டுக் கொழும்புக்கு வரப் பஞ்சிப் பட்டவள். அவளைக் கொழும்பு கொன்வெண்டில சேர்க்கும் பொழுது இங்கிலிஸ் கத்திப்பிடி... பேத்தி தமிழில தாலாட்டுப் பாடி, தேவாரம் பாடி வளர்த்தவ எண்டதினால இங்கிலிஸ் பிறகு வரலேல்லயோ?...கடுக்கண்ட பிறகும் ஈஸ்டர் விடுமுறை எண்டால், யாழ்ப்பாணத்துச் செம் பாட்டு மண்ணுக்குப் போக முதலில சூட்கேஸ் pack பண்ணுறது நிம்மிதான்...மாம்பழங்கள் குடிக்கிறதில அவ்வளவு கெடு. வயித்துக்க குத்து மெண்டாலும் பலாச்சுளைகள் முழுசு முழுசாக விழுங்குவாள்... இப்ப அவுஸ்ரேலியாவில தொண்டையில வழுக்கிற இங்கிலீசு பேசிக் கொண்டு காலத்தைக் கடத்தேல்லையோ?... எல்லாம் நான் வளர்த்தெடுத்து, நான் கொடுத்த

www.padippakam.com



கல்விச் செல்வம். இப்ப அவை எனக்குக் கதைக் கிற கதை உனக்கென்ன தெரியும்?

பரநிருபசிங்கம் அங்கிள் முறிமுறித்துச் சொல்லும் செய்திகள் பாலாவுக்குக் குழப்பமாக இருந்தது. பதில் சொல்லத் தெரியாமல் தவித்தான். அங்கிள்தான் மௌனத்தைக் கலைத்தார்.

'வீட்டிலை குழந்தையோட கொஞ்சினால், 'கர னோட இங்கிலீசில கதையுங்கோ' எண்டு சொல்லு றாள் மகள்...'

'கரன் நல்ல பேர். வெள்ளைக்காரர் கூப்பிடச் சுக மாயிருக்கும்...'

'எல்லாம் வெள்ளைக்காரன் விரும்பிற மாதிரிச் செய்யுங்கோ... ஆனால், இந்த இத்தாலிக்காரன் களும், யூகோஸ்லோவியாக்காரன்களும் வாயில நுழையாத பெயர் எல்லாம் வைச்சிருக்கிறான்கள். கூப்பிடுறதுக்குச் சுகமா இருக்கும் பேர் எண்டதை வைச்சுக் கொண்டோ வெள்ளைக்காரன இவையளுக்குக் கௌரவம் கொடுக்கப் போறான்? எங்கட ஆக்கள் வெள்ளைக்காரனை எப்படி எல்லாம் ஏமாத்தலாம் என்று திட்டம் போடுகினம் எண்டதை நினைச்சா சிரிப்பா இருக்குது...'

பரநிருபசிங்கத்தார் சிரிப்பு ஒன்றினை முகிழச் செய்ய முயன்றாராயினும், சிரிப்பு வரவில்லை.

பியர் கிளாஸை காலியாக்கி வைத்தார்.

Barக்குள் இப்ப ஆக்கள் இடம் இல்லாமல் தவிப்பது போலவும் தெரிகிறது... இவர்களுக்குப் பக்கத்தில ஒரு

படிப்பகம்

www.padippakam.com



ஜோடி. நின்று கொண்டே குடிக்கிறார்கள். காலியாக இருக்கும் அங்கிளின் கிளாஸை பார்த்து இவர்கள் சீக்கிரம் கிளம்பிவிடுவார்களோ என்று எதிர்பார்க்கிறார்களா? பரநிருபசிங்கம் சற்றே சங்கடப்படுவது போல நெளிந்தார்.

'இங்க அதிக நேரம் இருக்கிறது சரியில்லையோ?' அவரிடம் அசாதாரணத் தவிப்பு ஒன்று அலைமோதுவதை பாலா இனங் காணுகிறான்.

'இது Barதானே? இன்னொரு பியர் எடுத்தால் சரி' என்று கூறியபடி பாலா எழுந்து, கவுண்டரை நோக்கி நடந்தான்.

பரநிருபசிங்கத்தாரின் கண்கள் மீண்டும் Arrival ஐ துழாவின.

யப்பான்காரக் கோஷ்டி போய் விட்டது. வீடியோ பெண்களின் எதிர்பார்ப்பு அதிகமாகின்றது.

சிறுவனோ வாலிபனோ என்று மதிக்க முடியாத ஒரு மகனைத் தாய் நீண்ட நேரமாகக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு வரவேற்கிறாள். இதுகளை முத்தம் கொடுக்கிற சாங்கத்தை வைத்துச் சொல்லிப்போடலாம். உலகம் சுற்றி விட்டு வந்த மகனாக இருக்க வேண்டும்: வெளிநாட்டிலே ஏதோ சாதித்துத் திரும்பிய மகனாக இருக்க வேண்டும். அவர்கள் போக அவசரப்படவில்லை. அங்கேயே கதைத்துக் கொண்டு நிக்கிறார்கள்.

கவுண்டரிலே நின்ற பாலாவின் மனசைச் சுற்றி இப்பொழுது சில சந்தேகங்கள் வலம் வருகின்றன. கரன் விஷயமாக அங்கிளுக்கும் மகளுக்குமிடையில், அல்லது மருகமனுக்கும் இடையில் ஏதாவது தகறாரோ?

www.padippakam.com



அந்தத் தர்மசங்கடமான விஷயங்களைச் சொல்லக் கூடாது என்கிற தற்பாதுகாப்புக்காகத்தான் பியருக்குள் நுழைய நினைச்சாரோ? அண்மைக் காலமாக பாலா வுடன் நெருக்கமாகப் பழகுகிறார். அடிக்கடி சந்திக் கிறார். ஏதோ நெருக்கமான உறவு ஒன்றினைத் தேடு வதைப் போல... பியர் குடித்தால், மனம் relax ஸாக இருக்கும். மனம் விட்டுப் பேசலாம் என்று நினைத் தாரோ? அவருடைய இறுக்கம் இலேசாக நெகிழ்வதை பாலா உணர்ந்தான்.

பாலா ஒரு ஸ்கூனர் பியருடன் மேஜைக்குத் திரும்பி னான்.

'It is not fair. நான் மட்டும் குடிக்கிறதே?'

'அங்கிள் என்ர கிளாஸ் அப்பிடியே கிடக்கு. நான் drive பண்ணிப் போகவும் அல்லோ வேணும்? இப்ப fine மட்டுமில்லை. Driving licenceஸில் pointஸும் கழிச்சுப் போடுவாங்கள்...'

'இதைப் பற்றி நான் யோசிக்கேல்ல... இல்லாட் டில் உம்மைப் பழுதாக்கி இருக்க மாட்டன்...'

'அப்படி இல்லை அங்கிள். Companyக்கு இது இருக்கு... நீங்கள் பறந்த பிறகு, காரை Air port parkingகிலிருந்து இழுத்து, றோட்டிலை ஏத்துற நேரத்தில level கணக்கா இருக்கும்...'

அருகில் நின்று குடித்த ஜோடிக்கு வசதியாக ஒரு மேஜை கிடைத்துவிட்டது.

'சும்மா வீட்டிலை கிடக்க முடியுமே? ஊரிலை எண்டா பம்பலான பராக்குகள். இங்கை விசர்தான்

படிப்பகம்

www.padippakam.com



வரும். அதுதான் வேலைக்குப் போனனான். என்னோடை சேர்ந்து பிள்ளையும் கெடத் தேவையில்லை...'

'நீங்களும் வேலை செய்தால் கை நிறையக் காசு வரும்... அதுவும் ஒரு விதத்தில் நல்லது... ஒரு விதத்தில பார்த்தால் Social security என்கிறது pink படிதானே?... வேலையிலை இருந்தால் we are also tax payers...' ஏதோ வெல்லாம் பேசி விஷயத்தைச் சடையப் பார்த்தான் பாலா.

'நான் உழைக்காத காசோ? இப்ப இங்க உள்ளவை doller ரில உழைச்சு, rupees ஸுக்கு convert பண்ணிப் பார்த்தல்லோ பவிசு பேசுகினம்? என்ர கொழும்பு வீட்டை முப்பத்திரண்டு லட்சம் கேட்டும் நான்விற்கேல்ல... ஒரு கட்டத்தில விக்கலாமோ எண்டு யோசிச்சனான்தான்... அந்த நல்லூர்க் கந்தன்தான் அதை விற்காமல் காப்பாத்தினவன்... அதை விற்றிருந்தால், நான் இப்ப போய் றோட்டில அல்லோ கிடக்கவேணும்?... எனக்குப் பிரச்சினை வேண்டாம்'...

'வேலைக்கு நீங்கள் போனால், பிள்ளையின்ர பிரச்சினை இல்லைத்தானே?'

'பிள்ளைதான் பிரச்சினை என்றில்லை. எல்லாம் பிரச்சினைதான்... நான் ஒருத்தருக்கும் சொல்லேல்ல... ஊரிலை போய் ஆருக்கேன் சொன்னால் எனக்குத் தானே வெட்கக்கேடு? ஆருக்கேன் சொல்லாட்டில் என்ரை மனப் பூங்காரமும் அடங்காது...'

பரநிருபசிங்கம் அங்கிள் சடுதியாக உடைஞ்சு போனார்.

www.padippakam.com



'Now I'll tell you everything. Please keep it to yourself...'

'If you trust me...'

'I trust you.'

அங்கிள் பியர் குடித்தார். பாலா ஸிப் பண்ணி னான்.

'அதில்லை. நீங்கள் சந்தோஷமாத்தானே இருந்தனீங்க...'

'எல்லாம் வேஷந்தான். எவ்வளவைக் கொடுத்தன்? என்ரை பிள்ளையளுக்கு — அதுவும் உவள் நிம்மிக்கு கொடுத்ததை அங்கை யாழ்ப்பாணத்தில கஸ்டப்படுற சனங்களுக்குக் கொடுத்திருந்தால், கடைசி காலத்தில ஒருவாய்க் கஞ்சி எண்டாலும் பாசத்தோட தந்திருப்பாங் கள்...'

'மகள் உங்களை நல்லாக் கவனிச்ச மாதிரித்தான் எனக்குத் தெரிஞ்சுது.'

'சிரட்டையைக் கவனிச்சவை. கவனிச்சா நான் இப்ப ஏன் போறன்? பாலா, இனி நான் மறைக்கேல்ல. உன்ர வீட்டுக்கு வந்தாத்தான் நான் வயிறு நிறைய சோறு கறி சாப்பிடுறது. உன்ர மனுஷிக்கு அது வடி வாத் தெரியும். ஐம்பத்தைஞ்சு வயசுவரை அந்தச் சாப் பாட்டில வளந்த உடம்புக்கு இனி இந்தச் சாப்பாடு சரி வருமே?'

> **பாலா** நான் உனக்கு எதைச் சொல்லுவன்? எதை விடுவன்? என்ரை ஆத்திகேட்டுக்கு HOME BUSH இலேயோ Chinese Restaurant இலேயோ ஒரு change க்கு take-away எடுத்துக் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com



வந்து சாப்பிட்டால், நிம்மியின்ர முகம் நீண்டு போகும். சைனீஸ் சாப்பாடு புது Carpet இல் மணக்கும் எண்டு புறுபுறுப்பு. எதைச் சொல்லுவன்?

'நான் போற வீடெல்லாம் சோறுதான் சமைக்கினம். இவை மட்டும் கண்டறியாத ஒவுஸ்ரேலியன் எடுப்பு எடுக்கினம். சாப்பாடுகள் ஃபிரிட்ஜுக்கும் மைக்ரோவேவுக்கும் என்று மாறி மாறிப் போய் வரும். சோறு அவைக்கு விருப்பமில்லையாம். நேரமெடுக்குமாம். அப்பிடி என்ன அவசர வாழ்க்கை?'

'வீடு வாங்கினால் அப்பிடித்தான். ஓயாமல் உழைச்சாத்தான் லோன் கட்டி முடிக்கலாம்!'

**பாலா** நான் இங்க P.R.இலை வந்தனான். கொழும்பு வீட்டைத் தவிர மற்ற எல்லாச்சாமான்களையும் வித்துச் சுட்டு கொமியூட்டட் பென்ஷனையும் சேர்த்து இருபதினாயிரம் அமெரிக்கன் டொலர் கொண்டு வந்தனான்...அந்தக் காசு முழுவதையும் இந்த வீடு வாங்கவும், அதை renovate பண்ணவுந்தானே புதைச்சனான். பெத்த பிள்ளைக்குக் கொடுத்ததைச் சொல்லிக் காட்ட வெட்கமாக் கிடக்குது.

'பெரிய வீடுதான், பிரயாசைப்பட்டு renovate பண்ணிச்சினம். ஆனால், அதில் இருக்க அவைக்கு நேரம் இல்லை.'

'வீடு ஒரு investment தானே? அது appreciate பண்ணும். தேவையான நேரத்தில அதை நல்ல விலைக்கு விக்கலாம்...'

www.padippakam.com



'எல்லாம் வேஷம்... எல்லாம் Hypocrisy...நல்ல விலையில ஒரு Learher Lounge வாங்கிப் போட்டிருக்கினம். அது எப்பவும் sheet ஆல மூடிக்கிடக்குது. அவை இருக்கிறதில்லை. அதிலை தன்ரை சூத்தை வைச்சுத் தேய்க்க எப்ப ஒரு வெள்ளைக்காரன் வருவான் எண்டு, காத்துக் கொண்டிருக்கினம்... அவன் எப்ப வருவான்?

பாலாவுக்கு வாய் அடைத்துப் போய்விட்டதைப் போன்ற அவதி. பதில் சொல்ல முடியாது தவித்தான்.

'வீட்டை maintain பண்ண விழுந்து விழுந்து செலவழிக்கினம்.ஏன்? இதை எல்லாம் காட்டிப் புழுகிறதுக்கு மூன்று மாசத்திற்கு ஒரு Party. 'சமர்' எண்டா வசதி. வீட்டை பிசக்காமல் தோட்டத்திலBarbecue party!...car பற்றி... அதன் make பற்றி...அதன் year பற்றி...David Jones ஸிலோ Grace Brothers இலோ வந்திருக்கிற சாமான்கள் பற்றி...இலங்கை மறந்து போச்சு. தமிழ் மறந்து போச்சு. பூர்வீகம் மறந்து போச்சு...மேல் லோகத்தில இருந்து 'தொப்'பென்று இங்கே விழுந்து விட்டவை போலதான் கதையள்...இந்த எடுப்புகளும் Investment களோ?'

**இனி,** என்னால தாங்கேலாது... I can't also be a hypocrit...அவுஸ்ரேலியாவுக்கு good-bye சொல்லும் பொழுது, எல்லாத்தையும் போட்டு உடைக்கிறதுதான் என்ரை மனசுக்கும் நல்லது.

'நீ என்ன நினைச்சாலும் நினை...போன பொங்கல் அண்டைக்கு...வீட்டில பொங்கினாலும் carpet மணக்குமாக்கும். யாழ்ப்பாணத்தில—ஏன் கொழும்பில எண்டாப் போல என்ன—எவ்வளவு வடிவாப் பொங்கல் கொண்டாடுறனாங்கள்?...Bore அடிச்சாப் போல இருந்தது...மெல்பேனில் இருக்கிற

www.padippakam.com



friend ஒருத்தனுக்கு call எடுத்துக் கொஞ்ச நேரம் கதைச்சனான்...phone bill என்னாலை கூடிப் போகும் எண்டு நிம்மி எனக்குச் சொல்லுறாள்...அன்று காலமை தான் கைவியளமாக அவளுக்கு ஐநூறு டொலர் கொடுத்தனான்...அந்த 'கோ'லுக்கு ஐஞ்சு டொலர் போயிருக்குமே? என்னத்தைக் கொடுத்தும் என்ன பிரயோசனம்?'

எந்தக் காலத்திலும் அடுத்தவரைப் புழுகிக் கொண்டே இருப்பது பரநிருபசிங்கம் அங்கிளின் சுபாவம். எதிலும் si!ver lining கண்டு மகிழ்தல் அவர் சிறப்பு. ஆனால், இன்று? எல்லாவற்றிலும், எல்லோ ரிலும் குறை கண்டு பிடிக்கும் அளவுக்கு விரக்தி... 'நிம்மி' என்கிற நிர்மலாவை அவர் எவ்வளவு ஆசை பெருமையாக வளர்த்திருந்தார். இன்று?

பாலாவுக்குத் தன்னுடைய நாக்கைத் தேட வேண்டிய ஆக்கினை...

'இவ்வளவுக்கும் பொறுத்தன். என்ரை வளப்பில பிழையெண்டு நினைச்சன். நான் என்ன செய்தாலும் குறை.. அவையளின்ர எடுப்புகளைப் பார்த்துக்கொண்டு இனியும் என்னால சும்மா இருக்கேலாது!'

அவருடைய மனசு இலேசாகின்றது.

இமை விளிம்புகளிலே முட்டிக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிகள் சுகமாக விடுதலை பெறுகின்றன. இலேசான கேவல். பரநிருபசிங்கம் அங்கிள் பச்சைக் குழந்தையானார்! அவர் சுதாகரித்துக் கொள்வதற்கான அவகாசத்தைக் கொடுப்பவனைப் போல, பாலா தன் பார்வையை Arrival பகுதியிலே செலுத்தினான்.

அந்த இரு பெண்களின் விருந்தினர் வருகிறார் போலும். வீடியோவைச் சரி செய்து கொண்டு அருகில்

படிப்பகம்

www.padippakam.com



செல்கிறார்கள். தாய், தன் கையிலிருந்த பையிலிருந்து எதையோ எடுக்கிறார். ஓ அது ஒரு பூங்கொத்து! ஒருத்தி படமெடுக்க மற்றவள் அவர் அருகிலே சென்று வரவேற்கின்றாள். பிறகு அவள் வரவேற்க இவள் படமெடுக்கிறாள். வெளியில் வந்ததும், தாய் பூங்கொத்தைக் கொடுத்து, அவன் தலையிலும் நெற்றியிலும் முத்தமிடுகிறாள். ஏதோ ஆரவாரமாகக் கதைத்துக் கொண்டே வெளியேறுகிறார்கள்.

Arriva! பகுதி ஒரு கூத்து மேடை போலவும், பழையவர்களைக் காணவில்லை; புதியவர்கள் தோன்றுகிறார்கள். இரண்டு சிங்களக் குடும்பங்கள். ஜெயசேகரா குடும்பத்தை பாலாவுக்குந் தெரியும். அவன் ஸாம்பியாவில் வேலை செய்த காலத்தில் அடுத்த அடுத்த வீடுகளில் அயலவர்களாக வாழ்ந்தவர்கள். 'ஏயர் லங்கா flight லாண்ட் பண்ணி இருக்கவேணும்' என்று பாலா நினைத்துக் கொள்ளுகிறான்.

'நேரமாகுது...எழும்புவமோ?'

'பொறும். இதையும் கடைசியாக் கேளும். மகனைப் பாத்திட்டுப் போக பப்புவா நியூகினியிலிருந்து அம்பி வந்திருந்தவன். கண்டும் கன காலம். போய்ப் பார்த்தன். பழைய கூட்டாளிகள். வாயைப் புளிக்க வைச்சுக் கொண்டே பேசுறது? கொஞ்சம் பாவிச்சனாங்கள் தான். வீட்டை போக அதுக்கும் அவள் பேசுறாள். ''நீங்கள் வந்த பிறகு ஒரே பிரச்சினைதான். உங்களாலை நாங்களும் சண்டை. நீங்கள் வராமல் இருந்திருந்தால் நிம்மதியாக இருந்திருப்போம்'' எண்டு சொல்லுறாள். பிறகு இங்கை இருக்க முடியுமோ?'

பரநிருபசிங்கம் அங்கிள் கிளாஸை காலி செய்து வைத்தார். அவர் நல்ல composeஸாக இருந்தார்.

www.padippakam.com



கண்கள் செவ்வரியிலே பழுத்திருந்த போதிலும், பளபளத்தன. நிதானமாக எழுந்தார்.

'யோசியாதையுங்கோ...கனடாவிலே இருக்கிற மகனோடை கொஞ்சக்காலம் போயிருந்தால் எல்லாம் சரிவரும்...' அவருடைய மனதுக்கு ஒத்தடம் கொடுக்கும் முயற்சியில் பாலா ஏதோ சொல்கிறான்.

'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு! கனடாவிலும் ஒரு கரன் உருவாகிக் கொண்டிருக்கிறான்...' வஞ்சகமில்லாமல் சிரித்தார். பழைய பரநிருபசிங்கம் அங்கிள் துளிர்த்து விட்ட கோலம். நடக்கத் துவங்கினார்.

மூன்றாவது 'ஸ்கூன'ரில் பாதிக்கு மேல் மிச்சம் கிடந்தது. அதைக் திரும்பிக்கூடப் பார்க்காமல், 'பேக்'ஐ தூக்கிக்கொண்டு பின் தொடர்ந்தான். Departure தளத்துக்குச் செல்லும் escalator படியிலே அவர் நின்றார். அடுத்த படியிலே தாவி, பாலா பின் தொடர்ந்தான்.

கம்பியூட்டர் பலகை மின்ஜோடனை செய்த வண்ணம் இருந்தது. ஏயர் லங்கா Departure நேரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. lobbyயில் காணப்பட்ட வசதியான இருக்கையில் அவர் அமர்ந்தார். 'பேக்'ஐ அவர் காலடியில் வைத்தான்.

'தம்பி பாலா, நாங்கள் Barரில பேசின விஷயங்களை போற வழியில மறந்து போயிடு. நல்ல பியர். இப்ப என்ரை மூளை தெளிவா இருக்குது. சிங்களவங்களோட சண்டை பிடிச்சுக்கொண்டும் எங்கடை நாட்டில வாழ்றதில ஒரு அர்த்தம் உன்டு. ''சுவர்க்கத்தில் அடிமையாக இருக்கிறதிலும் பார்க்க, மயானக்கரையிலே மனிதனாய் வாழ்றது மேல்'' என்டு அன்றைக்கு அம்பி சொன்னவன். அர்த்தம் விளங்குதோ?'

www.padippakam.com



சில விஷயங்களை விளங்காமல் இருக்கிறதும் நல்லதுதான். ஒரு காலத்தில, இலங்கையின் நான்காவது இனமாக, பறங்கியர் பெருமையுடன் வாழ்ந்தார்கள். அந்த இனத்தைச் சேர்ந்தவர் தான்பீட்டர் கெனமன், கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அவர் எழுபதுகளிலே மந்திரியாகவும் இருந்தவர். அவங்களைப் பட்டம் தெளிச்சு, நாக்கு வழிக்கிறதில எங்களுக்கு ஒரு மஜா... 'Forsakan by the West and unwanted by the East they are the remnants of old glory and prostitution' என்று நாங்கள் அவங்களுக்குப் பின்னால பகிடி பண்ணுறனாங்கள்.

1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சந்நதத்தோட அநேகமான பறங்கிகள் ஒவுஸ்ரேலியாவுக்கு அள்ளுப்பட்டு வந்தவை. அவர்களுக்கு என்ன? அங்கு வாழ்ந்தாலும் பறங்கியர்; இங்கு வாழ்ந்தாலும் பறங்கியர். ஆனால், 1983ஆம் ஆண்டுக் கலம்பகத்துக்குப் பிறகு அள்ளுப்பட்டு வந்த தமிழர்...'

'சிங்களவனோட அண்டலிக்க ஏலாது எண்டு சொல்லிக் கொண்டுதானே எங்களில பலபேர் வெள்ளைக்காரர் நாடுகளில குடியேறி வாழ்றம்?... ஆனால் அந்த எளிய தமிழன்கள் இப்ப தமிழை மறந்து, மண்ணை மறந்து, தங்கள் வேர்களை மறந்து, தங்களையும் தங்கள் சுய கௌரவங்களையும் இழந்து, எக்காலத்திலும் வெள்ளையராக முடியாத, புதிய பறங்கிக் கூட்டம் ஒன்றை உருவாக்கும் கிலசகேட்டில இறங்கியிருக்கிறம்...'

www.padippakam.com



**இந்த** மோடன்கள் எங்கட பழமொழியைக் கூட மறந்து போனார்கள். காகம் உயரப் பறந்தாலும் அன்னமாக மாட்டாது.

அங்கிள் சொல்வது சாடை மாடையாக விளங்குது போலவும் இருந்தது பாலாவுக்கு.

'Passengers flying Air lanka UL 506 are requestad...'

இப்பொழுது ஒலிக்கும் பெண்ணின் குரல், மிருதுவான பட்டு உராய்வது போல வெளிவருகின்றது.

பரநிருபசிங்கம் அங்கிள் எழுத்தார். Hand luggage ஐ தூக்கினார். நடக்கத் துவங்கினார்.

பாலா பின் தொடர்ந்தான்.

'I sincerely tell you, பாலா! புதிய பறங்கிக் குட்டிகளுக்குத் தாத்தா என்று சொல்லிக் கொண்டு வாழ்வதிலும் பார்க்க, பிறந்த மண்ணிலே தமிழனாகச் சாகிறது கௌரவமானது...Thank you for all what you have done. good-bye!'

தடைக் கதவைத் தாண்டி நடக்கத் துவங்கினார்.

அவர் கண்ணிலிருந்து மறைந்த பிறகும் பாலா நகரவில்லை...யதார்த்த உலகை மறந்தவனாக, தான் பிறந்த மண்ணை நோக்கிச் செல்லும் விமானம் வானிலே பறந்து செல்வதைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை பாலாவைச் சிறைபிடித்து... □

படிப்பகம்

www.padippakam.com

# சுழி

அன்பு வாசகனே,

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரான ஓர் அதிபரின் கீழ் மூன்றாண்டுகள் பணிபுரிய நேர்ந்தது. அந்த அநுபவம் எனக்குச் சற்று வித்தியாசமானதாக இருந்தது. அந்த காலத்திலேதான் இந்த ஆசிரியர் இனத்துடன் மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிட்டிற்று. ‘எழுத்தறிவித்தவன் இறைவனாவன்’ என்று தமிழ் ஆசிரியர்கள் சுய முதுகுகளை வருடிச் சுகம் அனுபவித்தாலும், இவர்களுடைய செயல்களைப் பல தாழ்வுச் சிக்கல்கள் பாதிப்பதை இனங் கண்டேன். இவர்களுடைய சிக்கல்களையும் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு, குறுநாவல் ஒன்றினை எழுதவேண்டும் என்கிற ஆசையிலும் கற்பனையிலும் திளைக்கலானேன்.

எழுத்து வெறி என்னைக் குடைந்த ஒரு தினத்தில், அந்தக் குறுநாவலுக்கான பிள்ளையார் சுழியை-அதாவது முகப்பு வசனத்தை-எழுதி முடித்தேன். இடையில், வேறு பணிகள் குறிக்கிடவே, இக்குறுநாவலை எழுதும் பணியை ஒத்திப்போட நேர்ந்தது. தோதான நேரத்தை எதிர்பார்த்திருந்தேன்.

எதிர்பாராத வகையில், கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நான் ஒரு பரதேசியாக வாழ்கின்றேன். தமிழாசிரியர் என்னும் சாதி

படிப்பகம்

www.padippakam.com



யாருடன் கலந்து வாழும் உறவும் அந்நியமாகியது. அவர்களுடைய தனித்துவம் பற்றிய எனது தியானம் வேறு பூதாகரமான பிரச்சினைகளுள் அமுங்கிவிட்டது. இந்நிலையில், அக்குறுநாவலை எழுதி முடிக்கும் தோதும் வாய்ப்பும் கனியுமென்று எதிர்பார்க்கவும் ஏலாது.

என் மனத்திலே வீறுடன் சடைத்த இலக்கிய அவாஒன்று, சருகாகியமை துக்கமே. இந்த இச்சா பங்கங்களும் இணைந்ததுதான் எழுத்து ஊழியம். ஆனாலும், என் எழுத்து ஊழியம், இச்சா பங்கப் பட்ட எழுத்துக்களையும் உள்ளடக்கியதுதான் என்பதை ஆட்சேபிக்கவும் மாட்டேன். இருபத் திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இதனை வாசிக்கும் பொழுது, ஒரு தனிமத்தின் சாங்கம் அனைத்தும் ஓர் அணுவிலும் புதைந்துள்ளது என்பது போல, இந்தச் சுழியிலே ஒரு முழுத்துவமும் சிக்குப்பட்டுள்ளது என்கிற அதிசயத்தை அநுபவிக்கிறேன். இதனால், இதுவும் வாசகனின் வாசிப்புக்கும் சுவைப்புக்கும் உகந்ததே. இருப்பினும், இதனை ஒரு குறுநாவலுக்கான முகப்பு வசனம் என்கிற சேதநையுடன் வாசிக்க வேண்டும் என்கிற சலுகையை மட்டும் உன்னிடம் யாசிக்கலாமா?

'அப்பனே முருகா' என்று கொட்டாவி கலந்த இறை சேவிப்பிலே துயில் எழுந்து, சூடாக ஒரு 'பிளேன் டீ'யை வயிற்றிலே ஊற்றிக் கொண்டாற்றான் காலையின் கழிவுக் கிருத்தியங்கள் செவ்வனே நடைபெறும் என்று பழக்க தோஷத்திலே பிறந்த தேவை ஒன்று பிடர்பிடித்து உந்த, அரவம் எழுப்பாத பூனையாக அடுக்களைக்குள் நுழைந்து, அடுப்பை மூட்டித் தேநீருக்கான உலையை வைத்து, இரண்டு இலவசச்

www.padippakam.com



சீப்புகளுக்கு ஆசைப்பட்டு வாங்கிய பற்பொடியில் ஒரு சிட்கையை எடுத்துத் தந்த சுத்திசெய்து, வாய் அலம்பி, முகம் கழுவி, 'அவன் ஒரு பக்திமான்' என்று அயலவர் மெச்சுவதை மீண்டும் உறுதிப்படுத்தும் நோக்கமாக, மெய்கண்டான் கலண்டராகச் சில ஆண்டுகளுக்கு முன்னால் வந்து இன்று 'சுவாமிகளாக' உயர்ந்துள்ள படங்களுக்கு முன்னால் நின்று, 'தோடுடைய செவியன் விடையேறியோ'னை எட்டுக் கட்டை சுருதியிற்பாடி, நெற்றியில் விபூதிப் பூச்சு ஏற்றி, தமது அருமைத் திரு வாட்டி சினக்கக் கூடாதே என்ற கரிசனையுடன், அவளுடைய கொழுத்த நாரியைப் பிடித்துவிட்டு, 'எணேய், இண்டைக்குப் பள்ளிக்கூடமல்லே; உலையிலே தண்ணீர் மலமலத்துக் கொதிக்குது' எனத் திருப்பள்ளி எழுச்சி பாடி, 'அவன் அறுவான் பாடக்குறிப்பும் கேக் கிறான்' என்று முணு முணுத்தபடி அப்பியாசக் கொப்பி ஒன்றிலே ஏதோ கிறுக்கி, 'நேத்து முருகன் ஸ்ரோரில வாங்கியந்த தேயிலை பிழையில்லை; நல்லாத்தான் இருக்கு' என்று சுய முதுகில் ஒரு 'ஷொட்' வைத்து, அதேசமயம் இல்லாளையும் மகிழ்வித்தவாறே தேநீர் அருந்தி, சிறுவர்களை மிரட்டியும், மற்றவர்களிடம் 'பள்ளிக்கு நேரம் போட்டுது' என்று பல்லைக் காட்டியும் தமது திருவாட்டி 'நல்லா அம்பாளிக்க' பத்துத் தூக்குத் தண்ணீர் தெருவோரம் இருக்கும் குழாயில் எடுத்துக் கொடுத்து, தண்ணீர் 'பிடிக்கும்' பொழுதே முடுக்கி வந்ததை அடக்கிய அவஸ்தை தீரக் கழிவுத் தவமும் சுருட்டுப் புகையுமாக மாரடித்து, அடிக் கழுவி, இரண்டு புத்திரப் பாக்கியங்களை அழைத்துச் சென்று அவர் களைக் குளிப்பாட்டி, தானும் 'காக்கைக் குளி'ப்பை முடித்து, கன்ன வகிடு எடுத்துத் தலை வாரிக் கொள்ளும் பொழுது 'பம்பலாய்' உதிரும் தலை முடி குறித்துச் சற்றே கவன்று, எட்டு முழ வேட்டியை

அ—13

www.padippakam.com



விருத்தமாகக் கட்டி, பாலாமணி எறிசால்வை முதலிய வற்றுடன் அலங்கிருத்தியனாகி, 'பஸ் போயிடப் போகுது' என எச்சரிக்கப் போய், 'உங்களுடைய பள்ளிக்குடத்துக்கு ஒரேயொரு பஸ்தான் எண்ட வெறு வாக்கிலுங் கெட்ட கதய விட்டிட்டுத் தொண்டை வரளக் கத்துற மனுஷனல்லோ எண்டு முட்டைப் பொரியல் பொரிச்சால், சுடுகுது மடியைப் பிடி எண்ட கண்டறியாக் கதையோட கூத்தாடப் பாக்குது மனுஷன்' என்று மனைவியிடம் அர்ச்சனை பெற்று, அத்துடன் கூடவே முட்டைப் பொரியலுடன் வறுத்த 'கூப்பன்' மாவில அவித்த குழல் பிட்டில் நாலு வரிகளை விழுங்கி, தண்ணீர் குடிக்கும் சாட்டிலே வாயையும் கழுவி, 'பஸ் செலவு'க்கு என்று மனைவி கொடுத்த ஐம்பது சதங்களையும் பாலாமணிப் பையிலே போட்டு, மூலையிலே கிடந்த செருப்புகளைக் கால்களிலே கொழுவிக் கொண்டு, ஓட்டமும் நடையுமாக முனைத் தெரு பஸ் நிலையத்துக்கு வந்து, ஏழரை மணி பஸ்ஸை 'கோட்டை' விட்ட நிதர்சனத்தை உணர்ந்து, நேரம் கழித்துச் சென்றால் அதிபரும், அதிபருக்கு அதிபராம் வித்தியாதரிசியும் பாய்வார்களே எனப் புறுபுறுத்து, அந்தப் புறுபுறுத்தலையே உந்து சக்தியாய் உபயோகித்து எட்டு மணி பஸ்ஸில் ஒரே தாவாக ஏறி, வசதியான இடம் ஒன்றினை ஆக்கிரமித்து, அதிலே சிம்மாசன போகம் அனுபவித்து, முன்னாலும் பின்னாலும் அமர்ந்து பயணஞ் செய்த பிரயாணிகள் விரித்து வைத்திருந்த தினசரிகளிலே தமது விழிகளை மேயவிட்டுத் தலைப்புச் செய்திகளின் சமாசாரங்களைக் கிரகித்தும், அதே பஸ்ஸில் ஏறிப் பயணஞ் செய்த வேறு இரண்டு வாத்திமாருடன் 'அடுத்த பட்ஜட்டில் சம சம்பளம் வரும்' என்கிற உள்நாட்டு அரசியல் விவகாரந் தொட்டு, காந்திஜியின் பேத்தியான இந்திரா காந்தியை சென்னை முதலமைச்சரான காமராஜ

www.padippakam.com



நாடாரினால் ஒன்றுஞ் செய்து விடமுடியாது' என்கிற பிறநாட்டு அரசியல் வரை, தம்க்கிருக்கும் ஞானத்தை அன்றேல் ஞானசூனியத்தை விண்டு காட்டி. ஐந்து மைல் தூரத்திலிருக்கும் பாடசாலையைச் சமீபித்ததும் பஸ் பிரயாணத்தைத் துறந்து. முதல் மணி அடித்த பிறகே அவசர அவசரமாகப் பாடசாலைக் கந்தோருக்குள் புகுந்து, அதிபரைப் பார்த்து அசட்டுப் புன்னகை ஒன்றை உதிரவிட்டு, சிவப்புக்கோடு இன்னமும் இழுக்கப்பட வில்லை என்பதை உன்னி, உள்ளூர மகிழ்ந்து, வரவு டாப்பிலே தமது கையெழுத்தைப் பொறித்து, பஸ்ஸிலே விழி மேய்ந்து அவருடைய வாசிப்புத் தாகத்தைக் கிளறியிருந்த அதே தினசரியை 'இறாஞ்சி' எடுத்துக் கொண்டு தமது வகுப்பிற்குச் சென்று, அதனை 'மேலாலை'யும் சில சந்தர்ப்பங்களிலே வரிகளுக்குட் புகுந்து 'கீழா'லும் வாசித்து, மாணாக்கரின் டாப்பு அடையாளம் பண்ணும் நேரம் வந்ததும் அந்த கிருத்தியத்தினை உரிய சடங்கு முறைகளுடன் மேற்கொண்டு, முதல் நாள் பாடசாலைக்கு வராத மாணவரை அதட்டியும் மிரட்டியும் வரவு சராசரிக்கும் இந்தப் பாடசாலையிலே தமது வேலை ஸ்தரத்திற்கும் அத்திவாரத்தைப் பலப்பித்து, 'கல்கி'யும் 'குமுத'மும் வரவழைக்கப்படும் காரணத்தினால் 'லைப்ரரி' அந்தஸ்தைப் பெற்றுள்ள இடத்திற்குப் பேப்பரை அனுப்பிய பின்னர், இரண்டொரு எழுத்தறிவித்து-எண் அறிவித்து, பால்-பணிஸ் விநியோகிக்கப்படும்நேரத்திலேகண்டீனில் புகுந்து, குடிப்பது ஒரு பிளேன் டீயேயானாலும், கடையின் புனர் நிர்மாணத்திலிருந்து கல்வி அமைச்சரின் வெள்ளை அறிக்கை வரை ஒரு கலக்குக் கலக்கி, 'தம்பி, என்ர கணக்கில ஐந்து சதம்' எனக் கூறிக் கொண்டு 'திறிறோஸ்' சிகரெட் ஒன்றைப் பிய்த்துப் பாதியை உதட்டிலே வைத்து அதற்கு நெருப்புமிட்டு, ஆசிரியர் அறையென்னும் ஊர் வம்பு மடுவத்திற்குள்

படிப்பகம்

www.padippakam.com



புகுந்து, நாலு ஊர்க்கதைகளைச் சொல்லிப் புகை வளையங்களை மேலே உருட்டி, மணியடிக்க மீண்டும் வகுப்பிற்குட் புகுந்து, வகுப்புகள் மாறி மாறிப் புகுந்து அந்தப் புகுந்து விளையாடலிலே எப்பொழுது அக்கினேஸ் டீச்சருக்குப் பக்கத்து வகுப்பு வரும் என்று ஆவலாய்க் காத்திருந்து, வந்ததும் அகமகிழ்ந்து, டீச்சருடன் சில சரஸக்கதைகளும் சேட்டைப் பகிடிகளும் விட்டு, உரசல் இன்பம் சுகித்தவாறே ஒரு வாய்க்கு டீச்சரின் உபயத்தில் வெற்றிலை பாக்குப் போட்டு, அடுத்து வந்த வகுப்பிலே அக்கினேஸ் டீச்சரைக் கோழி மிதிக்க உபாயங்களைக் கற்பனை செய்து, சீக்கிரமே எல்லாவற்றையும் மறந்து மனத்தினை ஒரு நிலைப்படுத்தித் தமது ஏக பத்தினி விரதத்திற்குப் பங்கம் வராது காப்பாற்றி, ஒரு நேரப் பாடசாலையானபடியால் யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொள்ளும் பத்து நிமிட 'சோட் லீவ்' என்ற தகிடுதத்தத்தினால் 'கேகாலை' கடுகதி பஸ்ஸை குறி வைத்துப் பாய்ந்தேறி வீடு திரும்பி, மதிய போசனத்துக்கும் பின்னேரத் தேநீருக்கும் இடைப்பட்ட இரண்டும் கெட்டான் நேரத்திலே மதிய போசனம் உண்டு, பரிமாறப்படும் கறிவகைகளுக்கு திருவாட்டியாருக்கு முகமன் கூறி மகிழ்வித்து, பகல் நித்திரை கொள்வதான பாவனையிலே பாயிலே கிடந்து உருண்டு சோம்பல் சேவித்து, 'குதியன் குத்திய' புத்திரப் பயன்களுக்கு நாலு 'மண்டகப்படி' வைப்பதன் மூலம் 'குடும்பத் தலைவன்' என்கிற அதிகாரத்தை நிலைநாட்டி, 'கடைக்குப் போவது' 'பிட்டிஸம் எழுதுவது' 'பொடியளை ஆஸ்பத்தரிக்குக் கொண்டு போவது' 'வித்தியாபதிக்குக் கோள்காவுவது' ஆகிய பல்வகைத்துப் பணிகளையும் இயற்றி, மாலை சரிய மீண்டும் பாலாமணி எறிசால்வை சகிதம் 'காற்று வாங்கு'வதான சம்பிரதாயத்தில் கோட்டைமுனைப் பாலத்துக் கம்பிகளிலே தொங்கி, மாநகர சபையின்

படிப்பகம்

www.padippakam.com



நிர்வாகச் சீர்கேடுகள் பற்றிய விமர்சனத்திலே துவங்கி, 'கச்சேரியிலை வேலை பார்க்கிற அந்த யாழ்ப்பாணி தாண்டவன் வெளியிலை படிப்பிக்கிற யோசப்பின்ரை மகளிலை சீனி எறியிற' விடயத்தையும் தொட்டு, காளவாய்ச்சேனை அன்னம்மா தற்கொலை செய்யும் நோக்கமாக ஆற்றிலே குதித்தது வரை ஊர்வம்புகளை எல்லாம் ஒரு சுழற்றுச் சுழற்றி, வேறும் பாலாமணிச் சாதியாரின் வற்புறுத்தலுக்கு மசிந்து, சங்கரப்பிள்ளை அண்ணை கடையிலே ஒரு வாய்க்கு வெற்றிலை அன்றேல் ஒரு 'திறிறோஸ்' சிகரட் 'ஓசி'யிலே சுகித்து, அந்தச் சுகிப்புடன் சேர்ந்தே அடுத்த தினத்துக்குப் பாட சாலையில் அரட்டை அடிப்பதற்கு அநுசரணையான சில புதினங்களைப் பொறுக்கி, பாலத்துக் கம்பிகளிலே தொங்கும் மகாஜனங்களின் மெலிவினை வைத்து நேரத்தைக் கணித்து. 'இம்பீரியல் இறக்கம்' வரை ஒரு நடை நடந்து வலை வீசி 'இறால் பிடிப்பவர்'களை வேடிக்கை பார்ப்பது போல அதன் விலையை நோட்டம் பார்த்து, வாவியின் இரு மருங்கிலும் தோணி களிலே எரியும் விளக்குகளின் அழகிலே மயங்கி, 'எங்கட எம்பி சொன்னதுபோல எப்ப இந்த மட்டக்களப்பு கிழக்கின் வெனிஸ் நகராக மாறப் போகின்றது' என்று சமூகப் பிராணியாக ஏக்கப் பெருமூச்சு விட்டு, 'தியேட் டர்களில் முதல் ஷோ ஆட்டம் கலையப் போகுது' என்கிற நிதர்சனத்தை உணர்ந்து, வீடு விரைந்து, உண்டு, உறங்கி, உறங்கும் பொழுது திருவாட்டியின் காருண்யக் கசிவினாலே தோன்றும் அபூர்வ சந்தர்ப் பங்களிலே கலவிக் களியின் இன்பம் பெற்றும், நேற்றையப் போலவே இன்றையும், இன்றையப் போலவே நாளையும், அதனை அடுத்துவரும் நாளை களும் என்று காண்டாமிருகத்தின் வார்பட்டப் பாதைப் பயணம் போலத் தொடர்ந்து நடாத்தி, மாதத்தின் இருபதாவது நாளன்று ஊதியத்தைப் பெற்று, 'பிரியா

படிப்பகம்

www.padippakam.com



விடைக் கொன்றிபூஷன்' 'ஆசிரியர் சங்கச் சந்தாப் பணம்' 'கோயில் திருப்பணி நன்கொடை' என்று சம்பளத்தில் ஏற்பட்ட வெட்டுக் கொத்துகள் எல்லா வற்றுக்கும் விளக்கம் கொடுத்து, சதக் கணக்குடன் தமது சம்பளத்தைத் தமது திருவாட்டியிடம் ஒப்படைத்து, அமோக வாழ்வு அநுபவிப்பதான கற்பிதத்தில் பொன்னுத்துரை அவர்கள், புளியந்தீவின் சிங்களவாடிப் பகுதியிலே ஆசிரியப் பிரமுகராக வாழ்ந்து வருகின்றார். □

படிப்பகம்

www.padippakam.com

# வாசகனுக்கு

தன் கால்களை நீட்டி, தங்கப்பாக்கிய ஆச்சி அதிலே ஏணை சமைத்திருக்கிறாள்.

ஏணையில் என் கடைக்குட்டி மகன் இந்து.

ஆச்சிக்கு அவன் பேரன்.

கால்களை ஆட்டியவாறே அவள் தாலாட்டுப் பாடுகிறாள்.

ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்
என்னானை, அது பொன்னானை
எங்கள் குலத்துக் கரசானை
முத்துக் கொம்பன் ஆனையது
முதுகு சொறியு மானையது
சப்பட்டைக் காலன் ஆனையது.
ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்

ஆச்சியின் தாலாட்டிலே இந்து சயன உலகிற்குள் நுழைய......போலும்!

கைக்கு நேரே......புள்ளடி !
சாவிக்கு நேரே......புள்ளடி !
நட்சத்திரத்துக்கு நேரே......புள்ளடி !
யானைக்கு நேரே.....,பொல்லடி !
யானைக்கு நேரே......பொல்லடி !
யானைக்கு நேரே......பொல்லடி¡

www.padippakam.com



இத்தகைய கோஷங்கள் தேர்தல் களத்திலே எழுப்பப்பட்டதினாலும்...

முந்நூறு ஆண்டுகளாக வெள்ளை இனத்தாருக்கு அடிபடியாது சுதந்திரம் ஓம்பிய கண்டி ராஜ்யத்தை ஆங்கிலேயரிடம் கையளிக்க உதவியும், அதற்கான ஒப்பந்தத்திலே தமிழிலே கையெழுத்திட்டும் 'அரசியல்' பயின்ற ரத்வத்த திஸாவையின் கொள்ளுப் பேத்தியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையில், 1970இல், கூட்டணியினர் இலங்கைப் பாராளுமன்றத்திலே மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர்.

மார்க்ஸிஸ வேதத்தின் ட்றொஸ்கிய மத்ஹப்பினை ஏற்றுள்ள சமசமாஜ கட்சித் தலைவர்களான டாக்குத்தர் டாக்குத்தர் என்.எம். பெரேரா நிதி அமைச்சராகவும், கலாநிதி கொல்வின் ஆர். டி.சில்வா புதிய குடியரசு யாப்பினை உருவாக்கும் அமைச்சராகவும் பதவிகள் ஏற்றுள்ளனர்.

மார்க்ஸிஸ மார்க்கத்தின் மாஸ்கோ வழி கொம்யூனிஸ சித்தாந்த சிரோமணி பீட்டர் கெனமன் இலங்கையில் அமைச்சர் பதவி பெற்ற ஏக கம்யூனிஸ்ட் என்கிற வரலாறு படைத்துப் பதவியில் அமர்ந்துள்ளார்.

'மைய'த்திற்கு இடப்பக்க அரசியல் புரோக்கராக, இஸ்லாத்துக்கும் சோஷலிஸத்துக்கும் 'நிக்ஹா' செய்யும் முயற்சியாலும் கூட்டணிக்குள் முஸ்லிம் தலைவராக உயர்ந்துள்ள கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் மீண்டும் ஒரு முறை கல்வி அமைச்சர் பதவியைச் சுவீகரித்துள்ளார்.

www.padippakam.com



இலங்கை அரசியலிலே மார்க்ஸிஸவாதிகளின் செல்வாக்கு உச்சம் பெற்றுள்ளது போன்ற ஒரு தோற்றம். 'புத்திஜீவிகள்' என்ற 'கியாதி' பெற்ற மார்க்ஸிஸ தலைவர்கள் 'ரடல பலந்தியா' தலைவியின் முந்தானை முடிச்சிலே தொங்கியே பதவி சுகித்த போதிலும், தாங்கள் வகுத்த தேர்தல் வியூகத்தினால், முற்று முழுக்க முதலாளித்துவ நலன் பேணிய ஐக்கிய தேசியக் கட்சியை முறியடித்துள்ளதாக உரிமை பாராட்டிப் பூரிக்கிறார்கள்.

இந்தக் கோலாகலங்களுக்கு மத்தியிலே, ஸ்ரீமாவோவின் விசேட காருண்யத்தினால் தமிழரின் 'திடீர்' தலைவராக உருவாக்கப்பட்ட குமாரசூரியரின் காட்டிலும் நல்ல மழை!

இலங்கைத் தமிழர் அரசியல் தலைமைத்துவம் 'கோட்டடி'வியாபாரத்திலே சிக்காராக மாட்டியிருந்தது. இதனால் கலை-இலக்கிய அக்கறைகளைத் துறந்து, அவற்றின் நலன்களை பாக்கு நீரிணைக்கு அப்பால் வாழ்ந்த கலை-இலக்கிய வர்த்தகர்களிடம் ஒப்படைத்திருந்தது. இந்நிலையில், இலங்கைத் தமிழருடைய கலை-இலக்கியத் துறையின் தலைமைத்துவத்தை கம்யூனிஸ சித்தாந்தத்திலே குளிர்காய்ந்தும் 'புத்திஜீவிகள்' எனப் பெயர் பண்ணிய கைலாசபதி-சிவத்தம்பி கூட்டு அபகரித்திருந்தது. அவர்களுடைய காட்டில் அடைமழை!

இந்தச் சூழ்நிலையிலேதான், ஸ்ரீமாவோவின் இஷ்டகுமாரத்தியின் காதல் சீராளனாகிய குமார் ரூபசிங்க 'ஜனவேக'த்தை முடுக்கி, ஐக்கிய தேசியக் கட்சி உரிமை பாராட்டிய 'யானை' களை முற்றாக ஒழித்தல் வேண்டும் என்கிற கோஷத்தை முன் வைத்திருக்கிறார். அவருக்குத் துணையாக

www.padippakam.com



'தேசாபிமானி'யின் முன்னாள் ஆசிரியரானஎச்.எம்.பி. மூகைதீனும் கோதாவில் இறங்கியிருக்கிறார்...

யானைகளை ஒழிக்கும் முகமாக, அவற்றை வேட்டையாடுவது பற்றி இன்னோரன்ன தளத்திலுள்ள 'புத்தி ஜீவிகள்' அனைவரும் தமது மூளைகளைக் கசக்கத் துவங்கியிருக்கிறார்கள். உடலுழைப்புக்கு அப்பாற்பட்டவர்கள் அவர்கள்; தந்தக் கோபுரங்களிலே வாழும் தத்துவக்காரர்கள். யானைகளை வேட்டையாடுவது குறித்துப் பல நுணுக்கமான திட்டங்களை அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள்...கைலாசபதி-சிவத்தம்பி கூட்டு அதியற்புத திட்டத்தினை முன்வைக்கலாம் என அறிவுலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

'முத்துக் கொம்பன் ஆனையது...'
என்று முணுமுணுத்துக்கொண்டே செல்லப்பாக்கிய
ஆச்சி

சயன உலகிற்குள் நுழைந்துவிட்ட இந்து மகனுக்கு
முத்தம் பொழிகிறாள்!

புத்திஜீவிகளைப் போன்று என்றாலும் சிந்திக்க முடியுமா என்கிற ஒரு சுகமான கற்பனையில், புதிய நாட்டார் கதை ஒன்றிலே என் மனசு ஒன்றுபடுகிறது, அதுவே இந்த யானைக் கதை...

www.padippakam.com

# யானைக் கதை

**நம்** நாட்டிலே யானைகளின் தொகை அருகத் தொடங்கிற்று. இதைப் பற்றி விலங்குப் பிரியர்கள் வியாகூலம் அடையத் தொடங்கினார்கள். 'யானை பாதுகாப்பு இயக்கம்,' ஒன்றினை நிறுவி யானை களைப் பாதுகாக்கும் பாரிய பிரச்சினையில் அரசு அசிரத்தையாக இருக்கின்றது என்று மூலை முடுக்குகள் எல்லாம் பிரசாரஞ் செய்தார்கள். அவர்களுடைய பிர சாரத்திற்கு முதலாளித்துவ பத்திரிகைகள் எக்கச்சக்க மான முக்கியத்துவம் கொடுத்தன. விவகாரம் சூடு பிடித்து, மக்கள் பிரச்சினை என்ற பூத உருவில் வளர்ந் தது. இதனால் அரசுக்கு மக்கள் மத்தியிலே அபகீர்த்தி ஏற்படுவதாயிற்று.

மக்கள் தொண்டையே மகேசன் தொண்டாகக் கருதும் அரசாங்கம் வாளா விருக்குமா? மத்திரிசபை அவசர அவசரமாகக் கூடியது. பிரச்சினையை விரிவாக ஆராய்ந்தது. 'யானைகள் காட்டிலே சுதந்திரமாக அலைந்து திரிவதினாலேதான் வீணாக அழிந்து போகின்றன,' என்ற உண்மையை மந்திரிசபை ஏற் றது. ''நம் நாட்டிலுள்ள யானைகள் எல்லாவற்றையும் பிடிக்க வேண்டும். அவற்றை ஒரு பாதுகாப்பான இடத் திலே வைத்து வளர்த்தல் வேண்டும். அப்பொழுது தான் யானைகள் அழிந்து போவதைத் தவிர்க்கலாம். யானை பாதுகாப்புக் கூட்டுத் தாபனம் ஒன்றினை நிறுவி, இந்தப் பணியினை அதனிடம் ஒப்படைக்கலாம்'' என்று உதவிப் பிரதமர் கூறிய ஆலோசனையை மந்திரி சபை ஏக மனதாக ஏற்றுக் கொண்டது.

www.padippakam.com



''யானைகளைக் கட்டித் தீனி போடுதல் சாத்தியமா?'' என்று ஓர் அமைச்சர் ஐயம் தெரிவித்தார். (இவருடைய பெயரைத் தணிக்கை அதிகாரி வெளியிட மறுத்துவிட்டார். ஆனால், இந்த அமைச்சர் பிற்போக்கு அணியைச் சேர்ந்தவராகவே இருத்தல் வேண்டும் என்பது அரசாங்க அறிக்கையிலிருந்து சூசகமாகத் தெரிகின்றது.)

''மக்களுக்கே இலவச அரிசி கொடுக்கும் நம் நாட்டிலே, வாயில்லாச் சீவன்களான யானைகளுக்கு இலவச உணவு அளிப்பதைப் பெரிதுபடுத்த முடியாது. இப்படி யோசிப்பதே தவறு. நாம் பிரகடனப்படுத்தியுள்ள தர்மத்திற்கே இது முரணானது. மேலும், யானை பாதுகாப்புத் திட்டம், மக்களிடையே நமக்கு யானைப் பலத்தை உருவாக்கித் தரும்'' என்று பிரதமர் உருக்கமாகப் பேசினார்.

''நமது பிரதமரின் காருண்ய உள்ளத்தை உலகமே அறியும். மிளகாய் தின்பதினால் நம் மக்களிடையே எத்தனையோ நோய்கள் பரவுகின்றன. எனவே, மிளகாய் இறக்குமதியை முற்றாகத் தடை செய்யலாம். நீரிழிவு வியாதிக்குச் சீனிப் பாவனையே காரணி. சீனி இறக்குமதியை நாம் முற்றாகத் தடை செய்வதினால், இன்னொரு நன்மையும் உண்டு. இன்சுலின் இறக்குமதியிலே, முஸ்லிம் பாவனையாளருக்குப் பன்றிப் புரதஞ் சேராத இன்சுலின் இறக்குமதி செய்யவேண்டும் என்றெல்லாம் மண்டையைப் போட்டு உடைக்கத் தேவையில்லை. இந்த நடவடிக்கையாலே கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு யானைகளைப் பராமரிக்கலாம். ஆனால், யானைகளைப் பிடிப்பதிலே சிக்கனத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். இன்றைய நிலையில் அந்நியச் செலாவணியை விரயமாக்குதல் புத்தியன்று,'' என நிதி அமைச்சர் தெரிவித்தார்.

www.padippakam.com



நம் நாட்டிலே வழக்கிலுள்ள யானை பிடிக்கும் முறைகள் மிகுந்த செலவினை ஏற்படுத்தும் என்பதை மந்திரிசபை ஒருமுகமாக ஏற்றுக் கொண்டது. இதற் கான திட்டத்தினைத் தயாரிக்க ரஷ்ய நிபுணர் சிறந்த வரா அன்றேல் அமெரிக்க நிபுணர் சிறந்தவரா என்பது பற்றிக் கணிசமான அபிப்பிராய பேதம் நிலவியது. ஈற்றிலே, பிரதமரின் வேண்டுகோளின்படி அமெரிக்க நிபுணரை வரவழைப்பது என்று தீர்மானமாயிற்று.

□

**யானை**களைப் பிடிப்பதற்கு அமெரிக்க நிபுணர் விரிவான திட்டம் ஒன்றினைத் தயாரித்து முடித்தார். அவருடைய திட்டத்தினை ஆராய்வதற்கு மந்திரிசபை யின் உபகுழு பிரதமரின் இல்லத்திலே கூடியது. இந்தக் கூட்டத்திற்குப் பத்திரிகை நிருபர்கள் யாருமே அனு மதிக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்திலே அமெரிக்க நிபுணர் தம் முடைய திட்டத்தினை விளக்கத் தொடங்கினார்.

''யானைகளைப் பிடிப்பதற்கு இலங்கையிலே பயி லப்படும் வழிமுறைகள் மிகவும் பழைமையானவை. மேலும், அம்முறைகள் அரசாங்கத்திற்கு அதிக செல வினை உண்டாக்கும். சிக்கனமான, விஞ்ஞான ரீதி யான யானை பிடிக்கும் முறை ஒன்றினையே சிபார்சு செய்ய விரும்புகின்றேன். இத்திட்டத்தின்படி ஐந்து கருவிகள் நமக்குத் தேவை,'' என்று கூறிய அமெரிக்க நிபுணர் அமைச்சர்களுடைய முகங்களைப் பார்த்தார். அவர்கள் தமது பேச்சினை உன்னிப்பாகக் கேட்பதை அறிந்து மகிழ்ந்தார்.

''முதலில் ஒரு நெஸ்பிரே டின் தேவை...'' என்று நிபுணர் ஆரம்பிக்கவும், ''நெஸ்பிரே டின்னா? அந்தப் பெயரை மக்கள் மறந்துவிட வேண்டும் என்று நாங்கள்

www.padippakam.com



பிரார்த்தனை செய்கிறோம். நெஸ்பிரே டின்னை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணிக்கு நான் எங்கே செல்வேன்?'' என்று நிதி அமைச்சர் பிரலாபிக்க லானார்.

நிபுணர் முறுவலித்தார். ''நீங்கள் அவசரப்பட்டு விட்டீர்கள். இங்கு கிடைக்கும் மூல வளங்களைக் கருத்திலே கொண்டுதான் என் திட்டத்தினை நான் தயாரித்துள்ளேன். காலியான நெஸ்பிரே டின்கள்தான் தேவை. அவை நாடார் கடைகளிலே மலிவாகவும் ஏராளமாகவும் கிடைக்கும். அடுத்துத் தேவைப்படுவது வெண்கட்டி...'' என்று கூறிய நிபுணர் அமைச்சர்களைப் பார்த்தார். எவ்வித எதிர்ப்பும் எழவில்லை.

''மூன்றாவதாக கரும்பலகை தேவை,'' என்று நிபுணர் கணீரென்ற குரலிலே கூறினார்.

''யானைகளைப் பிடிப்பதை பாடசாலை லீவு காலத்திலே வைத்துக் கொண்டால், லட்சக் கணக்கான கரும்பலகைகளை என் அமைச்சு சப்ளை செய்யும். இல்லாவிட்டாலும் யப்பான் நாட்டிலிருந்து நன்கொடையாகக் கிடைத்துள்ள பத்தாயிரம் கரும்பலகைகள் அமைச்சிலேயே புத்தம் புதிதாக இருக்கின்றன. அவற்றை யானைகள் பிடிப்பு முயற்சிக்குத் தந்துதவலாம்,'' என்று கல்வி அமைச்சர் உத்஺ாகமாகக் கூறினார்.

அவருடைய கூற்றைக் கேட்ட பிரதமர் தமது கண்களைக் கல்வி அமைச்சர் மீது பதித்தார். பிரதமரின் கண்களிலே ஜொலித்த வினாக்குறியை ஒரு நொடியிலே புரிந்து கொண்ட கல்வி அமைச்சர், ''இந்தக் கரும்பலகைகளை எந்த விகிதத்திலே சிங்கள—முஸ்லிம்—தமிழ் மகா வித்தியாலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல்

www.padippakam.com



வேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கல்விமான் குழு ஒன்றை ஆறு மாதங்களுக்கு முன்னர் நியமித்தேன். தங்களுடைய முடிவினைத் தெரிவிக்கக் கல்விமான்கள் குழு இன்னும் ஆறு மாத காலம் அவகாசம் கோரியுள்ளது. அந்தக் குழுவிற்கு ஆலோசனை கூற அடுத்த மாதம் அளவில் யப்பானிய நிபுணர் ஒருவர் வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது,'' என்று விளக்கினார்.

அர்த்த புஷ்டியான முறுவல் ஒன்று பிரதமரின் முகத்திலே தவழ்ந்தது. கூட்டத்திலும் மகிழ்ச்சிச் சூழல் ஒன்று விரிந்து படர்ந்தது.

''நான்காவதாகத் தேவைப்படும் கருவி சாவணம்...'' என்று அமெரிக்க நிபுணர் கூறித் தயங்கினார்.

''பொற் கொல்லர் சிறிய பவுண் துணிக்கைகளை எடுப்பதற்கு உபயோகிக்கும் சாவணம்தகனே?'' என்று நிதியமைச்சர் கேட்டார்.

அமெரிக்க நிபுணர், ''ஆம்!'' என்று தலையசைத்தார்.

''அது வலு சிம்பிள். செட்டித் தெருவிலுள்ள வர்த்தகர்களுள் யார் யார் அரசாங்கத்திற்கு நூறு நூறு சாவணங்கள் நன்கொடையாக வழங்குவார்களோ, அவர்களுக்கு வாச பெர்மிட் ஓர் ஆண்டுகாலம் நீடிக்கப்படுமென அறிவித்தால் போதும். ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்குச் சாவணங்கள் வந்து குவியும்,'' என்று நிதியமைச்சர் சட்டென்று ஆலோசனை கூறினார். நிதி அமைச்சரின் மதி நுட்பத்தை ஏனைய அமைச்சர்களும் மெச்சினார்கள்.

www.padippakam.com



கூட்டத்திலே மௌனம் குடி கொண்டது.

''ஐந்தாவதும், மிகமுக்கியமானதும் தொலைகாட்டி'' என்று நிபுணர் கூறியதும் அந்த அறையிலே மகாம சானப் பெரு மௌனம் குடிகொண்டது.

''தொலைகாட்டிகளா? அந்நியச் செலாவணிக்கு எங்கே போவது? இந்த ஐயிட்டம் ஒன்றுக்காகவே இத் திட்டத்தைக் கைவிட நேரிடலாம்,'' என்று உதவிப் பிரதமர் கவலை தோய்ந்த குரலிலே கூறினார்.

''பயப்பட வேண்டாம். அமெரிக்க அரசாங்கத்துடன் நான் தொடர்பு கொண்டேன். தேவையான தொலை காட்டிகளை எவ்வித நிபந்தனையுமின்றிக் கடனாகத் தந்துதவ அமெரிக்க அரசாங்கம் தயாராக இருக் கின்றது. இழந்து விட்ட நன்மதிப்பினை இந்நாட்டு மக்களிட மிருந்து மீண்டும் பெறுவதற்கு அமெரிக்க அரசு ஆவலாக உள்ளது. தேவைப்படும் தொலைகாட்டி களை இங்கு கொண்டுவருவதற்கு ஏற்படுஞ் செலவு களையும் அமெரிக்க அரசாங்கம் ஏற்க முன் வந் துள்ளது,'' என நிபுணர் தெரிவித்தார்.

கூட்டத்திலே ஏகப்பட்ட மகிழ்ச்சி ஆரவாரம்.

''அது சரி, இந்தக் கருவிகளை வைத்துக் கொண்டு யானைகளை எப்படிப் பிடிப்பது? இத்திட்டத்தின் செயல் முறையைக் கூறுங்கள்'' என்று ஓர் அமைச்சர் கேட்டார், 'யானைகளைக் கட்டித் தீனி போடுதல் சாத்தியமா?' என்று ஐயம் தெரிவித்த அதே அமைச் சரே இந்தக் கேள்வியையுங் கேட்டார் என்று ஊகிக்க இடமுண்டு.

அமெரிக்க நிபுணர் பிரதமரைப் பார்த்தார். 'நீங்கள் அந்தச் செயல் முறையைப் பயப்படாமற் கூறலாம்.

படிப்பகம்

www.padippakam.com



இங்கு நடை பெறும் எதுவுமே வெளி உலகிற்கு லீக் ஆகமாட்டாது' என்ற மெய்யைக் கூறாமற் கூறினார்.

நிபுணர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, திட்டத்தின் செயல் முறையைக் கூறத் தொடங்கினார்.

''யானைகள் நடமாடும் காட்டுக்குப் போய், அவை வழக்கமாக நடமாடும் தடங்களை அறிந்து கொள்ள வேண்டும். வசதியான இடமாகப் பார்த்துப் பரண் ஒன்றை அமைத்துக் கொள்ளலாம். பரணுக்கு முன்னால் உள்ள பெரிய மரம் ஒன்றில், யானைகளின் கண்களிலே சட்டென்று தென்படக்கூடிய உயரத்திலே கரும்பல கையைத் தொங்க விட வேண்டும். வெண்கட்டியை உபயோகித்து, அந்தக் கரும்பலகையிலே கணக்கு ஒன்று போட வேண்டும். உதாரணமாக ஒரு கூட்டற் கணக்கு. ஐந்து சக ஐந்து சமன் ஒன்பது என்று எழுதி வைக்கலாம்...''

''ஐந்து சக ஐந்து பத்தல்லவா?'' என்று நிதிஅமைச்சர் முந்திரிக் கொட்டையாக முந்தினார்.

''பத்து என்பதுதான் சரியான விடை. யானை பிடிப்பு வேலையிலே ஈடுபட்டுள்ளோம் என்பதை நாம் மறந்து விடலாகாது...யானை பிடி ஒப்பரேட்டர் பரணிலே அமர்ந்திருக்கின்றார். அவர் முன்னால் தொலை நோக்காடி. விரல்களுக்கிடையில் சாவணம் இருக்கின்றது. யானைக் கூட்டம் ஒன்று அந்த வழியாலே வருகின்றது. யானைக் கூட்டத்தின் யூத பதி முன்னால் வந்து கொண்டிருக்கும். அதன் கண் களிலே கரும்பலகை தென்படும். கரும்பலகையை வாசித்ததுமே யூதபதிக்குச் சிரிப்பு வந்துவிடும். 'அடே இந்த மொக்கு மனிதனைப் பாரேன். ஐந்து சக ஐந்து

அ—14

படிப்பகம்

www.padippakam.com



ஒன்பது என்று எழுதி வைத்திருக்கின்றானே!' என்று கூறி, துதிக்கையை உயர்த்தி அட்டகாசமாகச் சிரிக்கத் தொடங்கும். யூதபதியைப் போலவே மற்றைய யானைகளும் சிரிக்கத் தொடங்கும். சிரிக்கும் பொழுது யானைகள் நிலை தளர்ந்து விடும்,-அப்பொழுது தொலைகாட்டியை முன் பின்னாகப்பிடித்துக் கொண்டு யானைக் கூட்டத்தைப் பார்க்கும் பொழுது, ஒவ்வொரு யானையும் மணற்குறுணி கணியம் தெரியும். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி, யானை பிடி ஒப்பரேட்டர் சாவணத்தினால் ஒல்வொரு யானையாகப் பிடித்து, நெஸ்பிரே டின்னிலே போட்டு அடைத்து விட வேண்டும்!'' என்று செயல் முறையை அமெரிக்க நிபுணர் விரிவாக விளக்கி முடித்தார்.

அந்த அறையிலே மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கி வழிந்தது. அமைச்சர்கள் சிரிப்பில் அலர்ந்த பற்களானார்கள்.

நன்றியுரை கூறுமாறு உதவிப் பிரதமர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

அவர் தமது உரையில் ''அமெரிக்க நிபுணர் இத்தகைய ஓர் அபூர்வ திட்டத்தைத் தயாரித்துத் தந்தமைக்காக நமது அரசு அவருக்கு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. எங்களுடைய உண்மையான நன்றியைத் தெரிவிக்கும் முகமாக அவருக்கு ஒப்பந்தப் பணத்திற்குப் புறம்பாக ஓர் இலட்சம் ரூபா நன்கொடை வழங்க நமது அரசு முன்வருதல்வேண்டும். மேலும் இந்தத் திட்டம் பரம இரகசியமாக பாதுகாக்கப்படுதல் வேண்டும். எதிர்வரும் மினித் தேர்தலுக்கு மூன்று நாள் முன்னதாக வானொலி மூலம் இத்திட்டத்தினை பிரதமர் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த யானை பிடிக்கும் திட்டம் ஐந்

www.padippakam.com



தாண்டுத் திட்டத்திலே எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை அழுத்தி, அதனாலேற்படக் கூடிய நன்மைகளைத் தொகுத்துக் கூற வேண்டும்,'' எனக் குறிப்பிட்டார்.

அவருடைய உரை ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. கூட்டம் முடிந்தது. அத்திட்டத்தின் வெற்றியைக் கொண்டாடும் விழா அந்த அறையிலே களை கட்டலாயிற்று. இருப்பினும், புதிதாக நிறுவப்படப் போகும் யானை பாதுகாப்புக் கூட்டுத்தாபனத்தின் பதவிகளிலே தமது இனியவர் யார் யாரைப் புகுத்தலாம் என்பது பற்றியே ஒவ்வொரு அமைச்சரும் தனித் தனியான அங்கலாய்ப்புச் சிந்தனையிலேயே ஈடுபடலாயினர். □

www.padippakam.com

# அவா

## பாகம் ஒன்று
## வழி

எழுவாயும் பயனிலையும்.

இவற்றைத் தொடுக்க ஒரு வழி ; தமிழ் வழி.

வழுவினைக் குண்டுச் சட்டியாக்கும் மரபு வேலி.
வேலியா?

கிடுகும் இல்லை; முள்ளும் இல்லை.

அஞ்ஞானிகளின் கனவுக் கற்பனையில் எழுந்த
இல்லையான ஆமை ஓடு !

இல்லாத ஒன்றை இருப்பதாகப் பாவித்து எழுந்த
கோஷ்டிச் சண்டை.

ஓடும் நத்தை ; வேகமும் நத்தை.

இந்த 'வேலை'யைத் தகர்த்தெறிந்து புது வழி காண வேண்டுமென்ற கோஷ்டியிலே கவர்ச்சி. பின்னோக்கிப் பார்க்காது, முன்னே முட்டும் ஒரு மூர்க்கம்.

'வாழ்க!' 'வீழ்க!' என்று விண்ணுலுப்புங் கூச்சல்.

கூச்சலிட்டவர்களுள் அவனும் ஒருவன்.

கூட்டத்தில் ஒருவன் என்றாலும், செம்மறிக் கூட்டத்திலே ஒருவனல்லன்.

பழைய வழியிலே நடந்து கற்பனை வேலிவரை முன்னேறியவன்.

அவன் துணிந்தவன். கூச்சலை நிறுத்தி எல்லையைக் கடந்தான். கடப்பதில் சிரமமில்லை. கிடுகுமில்லை; முள்ளுமில்லை.

www.padippakam.com



'இந்த வேலிதான் நமது முதுசொம்' என்பவர்கள்
அவனை எதிர்க்கின்றனர்.
'இந்த வேலியைத் தாண்டியே புதையல் எடுக்கலாம்'
என்பவர்களும் அவனை எதிர்க்கின்றனர்.

எதிர்ப்பா ? 'இந்திரியம்', 'விளங்குதில்லை',
'தனிநபர் போக்கு', 'கொள்கை சறுக்கியன்' என்ற
சொற்களின் வீச்சு. வலுவற்ற சொற்கள். அவன்
அறிந்தவன். அவன் அறிவான்.

திறமையையும் புலமையையும் எதிர்ப்பதிலேகூட ஒரு
மரபு.

புலமைக் காய்ச்சலினாலும் தாழ்வுச் சிக்கலினாலும்
எதையாவது எதிர்ப்பது ஒரு புது மரபு.

புது மரபினை அந்த மரபின் காவந்துக்காரர்
காப்பாற்றட்டும்.

அவனுடைய வழியிலே நடைச் சிரமம் இருக்கின்றது.

ஆனால், நடந்து பழகினால், இதமுமிருக்கிறது.

அவன் பயணம்.

அது அவனுடையதே.

வழியில் கல்லும் முள்ளும் பொறிக்கிடங்குகளும்
இருப்பது அவன் அறிந்தது. இட்டவர்களையும்
இடுபவர்களையும் அவன் அறிவான்.

பயணம், பயணந்தான்.

துணிந்தவனின் தனிவழிப் பயணம்.

புதியனவற்றின் அழகில் மோதும் மனம். சத்து
ஊறுகின்றது.

அசத்துகள் கடந்து சதசத்துகள் பற்றிய நினைவுகள்.

கற்பனையிலே சினைக்கும் ஓர் அவா.

www.padippakam.com



புரிந்தவன் அவன். சிரமமான வழிப்
பயணத்திற்கு, அஞ்ஞான பிரமையில் மனதிலெழுப்பிய
வேலியோரம் தடுமாறுபவர்களையும் அழைக்கின்றான்.
முன்முட்டி, பின் தங்கியவர்கள் பின் தொடர்வார்களா?
குண்டுச் சண்டிக்குள் குதிரை ஒட்டுபவர்கள் பின்
தொடர்வார்களா?
ஆனாலும், துணிந்தவனின்
பயணந் தொடர்கின்றது...

## பாகம் இரண்டு
## ஆறு

அகண்டாகாரமான நினைவுக் குதிர். மிருதிகள் உண்ணும் ஆகுதி எது? அதிலிருந்து குருத்துத் தள்ளி அனலக்கும் அக்கினிக் கொழுந்து என்ன? ஆசாபங்க முற்ற ஆசைகளைப் பற்றிய ஆதியந்தமற்ற ஆய்வு... மயானக்கரையின் மோனத்தில் அடங்கிவிட்டஆசைகள்; பழுத்தஇலைகளாகக் காற்றின் அசைவினைக் காரணம் காட்டி, பூட்டறுந்து உதிரத் தயாராக இருக்கும் ஆசைகள்; மரகதப் பசுமையை மறைக்கும் வாசியில் நகைச் சேந்தின் நுகும்பு கக்கும் ஆசைகள்; கர்ப்பக் கிரகத்தில் உருவம் பெறாது, சினைத்தல் வேளைக்குக் காத்திருக்கும் ஜனிக்காத ஆசைகள்... இச்சைகளின்- வேட்கைகளின்- எழுச்சிகளின், கல்லைகள்தான் ஆசைகளா? இவை எதிலே கருவுற்று, சிலிர்த்து, விகசித்து, வளர்ந்து கொழுக்கின்றன? உள்ளப் பசளையிலா? அல்லது உடற் புழுதியிலா? அநித்திய ஜீவிதம் பற்றிய நித்திய கடாக் கோவைகள். வினாவா? விடையா? எது எதற்கு? வினாவின்றி விடையுண்டா? விடையில்லாத் மலட்டு வினாவினால் பயன்? நெஞ்சின் உயிர் முடிச்

www.padippakam.com



-சைச் சுருக்கிடும் கேள்விகள். ஆசைகளை வேர் கல்லி யெறியும் நோன்பு பூண்டவனென்று ஞாபகம். அவற் றைப் பற்றிய சர்ச்சை வேண்டா! வினா, எதில் முளை கொண்டு, பற்றிப் படரும் சுருள் கம்பி க்க்கித் தளை கின்றது? அஞ்ஞானத்திலா? ஐயத்திலா? ஞானத்தின் பிரசவ நோக்காட்டிலா? சமுத்திரக் கரை இது. உன்னச் சாகரத்திற்குக் கரை எது? கரை ஏது? அதனை வகுத் தவன் யார்? இட்டவன் யார்? சீடரின் கேள்விகளுக்குச் சலிக்காது சளைக்காது தயங்காது, பதிலிறுத்துச் சவுங்கிச் சாரமிழந்ததனாலே சோர்வா? அது, அதற்கு விடை. இது, இதற்கு வினா. எல்லாம் வித்துவம். உண்மைக் கோலங்காட்டும் போலிகள். யதார்த்தமான கற்பனைகள்; கற்பனையான யதார்த்தங்கள். புரி கிறதா? யார் யாரோ, எவன் எவனோ,— அர்த்தம் தெரியாது அபிநயித்தோர்— கற்பித்த அர்த்தங்களுக்கு மகுடி ஆட்டமிடும் காளாத்திரிதான் அறிவா? அறியா மையின் கங்குப் பாம்பாட்டும், அல்லது நெருப்பு அலை காட்டும், தெளிவுப் பொறியின் ஸ்தூல வடிவந்தான் அறிவென நான் கற்பித்த தத்துவவிளக்கவுரை எங்கே? என் வித்துவம். என் செருக்கு, அறிவு ஆணவமா? போகத்தின் போதையிலே, அவாவின் ஆணிவேரே பட்டுச் செத்துவிடும் என்று கற்பித்தேனே. கௌரி புத்ர! நான் தோற்றேன். நீ தோற்றாய். சர்வ சகலருக்குமான சகல தோல்விகளும். தோல்வி வெற்றி யின் தூணா? அவ்வாறாயின், வெற்றி தோல்விக்கான பொறிக்கிடங்கா? தோல்வியின் அந்த ஜாலங்கள்... அதன் விளிம்பில் நான் நிஷ்டை கொள்ளுகிறேனா?

இது சமுத்திரக் கரை.
நுரை தள்ளி, ஊதல்
கொப்பளிக்கும் இரைச்சல்.

ஓர்மையின் ஆத்மா ஒடுங்குகின்றது.

www.padippakam.com



உன் சதசத்து அடங்கிவிட்டதா?

மரணம். துஞ்சிய தூக்கம். சந்தேகம்; பல
வற்றின் ஜனிப்பும்!
பின்?

யாருடன் பேசுகிறேன்?

விசும்புடனா? காற்றுடனா? சித்தம் அதன்
இயக்கங்களுடன் ஸ்திரமாக இருக்கின்றது.
கேள்வி.

என்னுள் நானாகிக் கலந்து நிற்கும் ஒன்றுடனா?
அது எது?

எது??

புலனுகர்ச்சிகள் எல்லாம் குறுகி, அருகி, ஆசைகள் ஒன்றேயாகி, நீயே ஆள்காட்டி விரலாகி, உன்னிலே பொதுக்கிப் பதுக்கி வைத்திருந்தேனே, கௌரி புத்ர! பிரிவும், அபரகிரியையும் நிகழ்ந்து விட்டனவாக இருந்தும், நீ என்னுள் நானாகக் கலந்திருக்கிறாய் என்ற மருட்சியா? மருட்சியில் பாசி பரப்பும் நிஜம்.

நிஜமாம்; உண்மையாம்... யாம்!
சொல் விளையாட்டின் நிகண்டு வேட்டை.

இவைதான் உண்மையானவையா? அநித்தியமானவை உண்மைகளாகுமா? மெய்யின் வலுவினை நம்பி உயிர்க் காற்றுக் கும்மாளம் இடுகின்றது. குமிழி வாழ்க்கையா? மனித வாழ்க்கையா? உடைந்ததும் எல்லாம் மாயையா? அனைத்தும் பொய்யா? வாழ்க்கை பொய்யென்றால், வாய்மைதான் வாழ்க்கையின் இலட்சிய இமயம் என நான் கற்பித்த பாடம்?

படிப்பகம்

www.padippakam.com



கற்பித்தேன். அதனாலும் போதமடைந்தேன்.

நீ என் சீடன், அஃது உன் ஊழ்.

கற்றாய், அதனாலும் போதம் அடைத்தாயா?

கற்போரிலும் கற்பிப்போர் உபரி. ஆசானாக இருப்பதில் சிரமமில்லை. அந்தஸ்து உண்டு; அதற்கேற்ற அதிகாரமும் உண்டு. ஆசிரியனாக இருப்பவன், நிச்சயம் எல்லாம் கற்றுத் தேர்ந்த நிபுணனா? அவன் கற்க வேண்டியவை இனி இல்லையா? ஆய்ந்தோய்ந்து அறிய வேண்டியவை ககனமாக விரிந்து, பரந்து, அநாதி அந்தமாக இருக்கும் பொழுது, ஏன் உபாத்தி வேஷமிட வேண்டும்? வாழ்க்கை கூத்துமேடை. அதில் அண்ணாவித் தொழில் கஷ்டமற்றது. ஒப்பக் கோலமிடும் வேஷ சிரமமற்றது. அனுபவஸ்தன் என்கிறான் ஒருவன்; இலக்கணப் பண்டிதன் என்கிறான் இன்னொருவன்; விஷய ஞான மேதை என்கிறான் வேறொருவன். அறிவு சூலிலே பொருந்தியதா? தேர்ச்சியிலே முதிர்ந்ததா? பொருளொடும் பொழுதொடும் புணராது உதிர்க்கப்படும் மழலையின் உந்நதம் கண்டு சிந்தை பறிகொடுக்கும் மானிடன், ஏன் அதன் இனிமையையும் இன்பத்தையும் சிதைக்கும் வாக்கில் இலக்கணம் கற்பிக்க விழைந்தான்? 'சோச்சி' என்றதும் சோறின் சுவை வேறாகி விடுகின்றதா? கேள்வி அரவங்கள் நெளிந்து சுருண்டு பாஷாணம் கக்கி...கார்க்கோடக விஷத்தின் நீலம் விரவி...கடுகதி விரவல்!

புத்ர! நீ இப்பொழுது எங்கே? சொர்க்கத்திலா?

சொர்க்கமும் என் கற்பிதமா?

www.padippakam.com



புத்ர

நீ இருக்கிறாயா? இல்லையா?
இருப்பது என்றால் என்ன?
இல்லை என்றால் என்ன?
இருப்பது என்பது ஒரு நிலை.
இல்லையென்பது இன்னொரு நிலை.
நீ ஒரு நிலையிலிருந்து இன்னொரு
நிலைக்கு மாறிவிட்டாய்.

இது என் ஸ்திதி.
என் நிலை சாஸ்வதமானதா?

நிலையற்ற ஸ்திதியென்று நீ வைத்துக்கொள். நீயும் நானும் கடைசியாக இந்தச் சமுத்திரக் கரைக்கு வந்தப்போ கன்னி நுதலாக இருந்த சந்திரன்—கள்ளா, நீ பலே சமர்த்து; அதனைக் கழித்தெறிந்த இராக்கத நகத்துண்டிற்கு உவமித்தாயே—இன்னும் அரை விட்டப் பொலிவுக்காவது வளரவில்லை. உன்னுடன் தத்துவக் கடைசலில் தும்புகளை கயிறாக்கி உண்மைகளுக்குச் சுருகு தடம் வைப்பதில் பொழுது போக்கிக் கொண்டிருந்த நான், இன்று, ஒண்டியாக இருக்கிறேன். ஏகாந்தத்தின் ஏக்கம் ஈன்றெடுக்கும் எரிச்சல். பல பிஜங்களுடன் கூட்டுச் சேர்ந்தே சிருஷ்டிப் பொந்திற் குள் புகுந்து, ஒரேயொரு உயிரணுவில் விகசித்து விளைந்து அம்மணக் கோலத்தில் ஒண்டியாக வெளியேறி, சமுதாயக் கூட்டுறவு நியமத்தில் ஜோடிகள் சேர்ந்து வாழ்ந்து, ஈற்றில் ஒண்டியாகவே மண்டையைப் போட்டு விடுகிறோம். பாசம்-வீடு-அன்பு-நட்பு-கூட்டுறவு-சமூகம், இவைதான் வாழ்க்கையென்ற பொம்மலாட்டத்தின் சூத்திர நாடகங்கள் என்ற நியமத்தில்...ஒண்டியாக வாழ்வதில் சுகமுண்டா?‘இல்லறத்தில் சிறப்பில்லை; பிரமச்சாரிய விரதந்தான் இறைவனுடன் இரண்டற ஒன்றும் பக்குவ நிலையைத் தரும்’

www.padippakam.com



என்று சொன்னேன். சொன்னேன், கௌரி புத்ர, சொன்னேன். பிரமச்சாரியம் என்பது ஒண்டி நிலை-தனிமை-என்று கற்பித்தேனா?

தனிமை!

பொல்லாத தனிமை.

ககனமெல்லாம் ஒளி இரேணுக்கள். விழிகளில் ஒளி உமிழ்ந்து, எங்கேயோ நின்று, விரகதாபத் தழலில் வெந்து, ஊடிய காதலனை நோக்கி, நாட்டிய முத்திரைகளுக்கு விரல்களை இசைவாக்கி, நேசக்கரம் நீட்டும் கற்பனை. நர விழிகளுக்குப் புலனாகாது, விசும்பில் நீந்தும் அந்த மீனினத்தின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கும் வியர்த்தத்தில் எத்தனை தடவைகள் ஈடுபட்டிருந்தோம்? எப்பொழுதும் தோல்வியே. ஆனால், தோல்வியை ஒப்புக்கொள்ள முடிகிறதா?

வெற்றி உனக்குமில்லை;
எனக்குமில்லை!
பின்?
யாருக்கு? எதற்கு?

கடல் குமட்டி வாந்தியெடுத்த கள்நுரைகள் விரல்களைச் சீந்துகின்றன. என் கால்விரல்கள் நனைகின்றன. காரணப் பிரமாணங்களில் சிக்காதவற்றில் நத்தை நகர்வு செய்கையில், என் காரணங்கள் கற்பிதமோ சிருஷ்டி நோக்கோ இன்றிச் சமைத்த குருத்து மணல் விடு, சரி பாதி அழிந்து...சமுத்திரப் பாவையிலே தங்கி, விங்கி, தலைச் சூலுற்றவளின் வயிறாக உப்பி, சர்ப்பத்தின் லயம் காட்டி, மூரலுடன் கிளம்பி வந்து, கரையை முத்தமிட்டுக் கட்டித் தழுவி அம்மணமாகப் புரளும் கோலம். வேட்கை தீருமுன்பே பிரியும் தாபம். மணலுக்கா? அலைக்கா? அவற்றின்

www.padippakam.com



உணர்வுகளும் பாஷைகளும் நான் அறியாதவை. ஒரு தடவை சரஸி கேட்டாள். வெள்ளப் பிரவாகத்துடன் கரைந்துவிடும் உடலிச்சை. மறுநாளும்-அல்லது மறு வேளையும்-அரும்பிப் போதாகி அலரும் விந்தை என்ன? சரஸி என்னென்னவோ சொல்லுவாள். அவை அவளுக்கே புரியும். குஞ்சு ஊமையாக இருந்தே சாதித்தவை? இருப்பினும், எல்லாம் தெரிந்தவனைப் போல—ஆய கலைகளனைத்தும் என் கைப்பிடிக்குள் ஆட்கொண்டவனாகப் பாவித்து—உன் குருதேவரா வேன். புத்ர, நீ ஒரு குறும்புக்காரன். குறும்பும் விவேகத்தின் ஒரு சாங்கமே. ஒரு சமயம் நான் கடற் கரை மணலை, இன்னமும் வெளித் தள்ளாது. வாழைத் தண்டிற்குள் ஒளிந்திருக்கும் குருத்திற்கு உவமித்தேன். நீயோ என் கேசத்திற்கு ஒப்பிட்டாய். என் கேசத்தில் மங்கிய இருள் நிறம் புரையோடி, கட்புலனுக்குச் சட்டென்று புலப்படாது கிளியந் தட்டாடிக் கொண்டிருக்கிறது என்பதைத்தானே சொல்லாமற் சொன்னாய், அப்பொழுது உன் முகத்தை-மேலுதட்டை வெட்டிக் குருகு காட்டும் குறுநகையைப்-பார்க்க வேண்டுமே! எல்லாவற்றையும் மழுப்பினேன். எனக்குத் தெரிந்தவற்றின் துணையினால்—மனனஞ் செய்து வைத்திருக்கும் அர்த்தமற்ற (அல்லது அர்த்தம் விளங்காத) சூத்திரங்களின் உதவியினால்—உன்னைச் சூன்யத்தில் வைத்திருந்தேன்.

இன்று கனற்சி அடங்கவில்லை. சொல்லித் தானாக வேண்டும்.

கௌரி புத்ர, நீ இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

இந்நேரத்தில், நான் இந்தச் சமுத்திரக் கரையிலேதான் நிற்பேனென்பது உனக்குத் தெரியுமல்லவா?

www.padippakam.com



ஔவியத்திற்குப் பஞ்சமில்லை. ஆணவம் என் கல்விச் செருக்குடன் கூடவே ஜனித்தது. பிரமச்சாரிய நோன்புதான், சோறு மண்டாத தூய அறிவில் துய்க்கும் மார்க்கமெனச் சதா உச்சாடனம் செய்தேன்; ஓதினேன். நீ பிறப்பதற்கு முன்-நீ அறியாத ஊரில்-, எனக்குப் பக்கத்தில் பிரணாவஸ்தையுடன் புரண்டு, ஜீவன் அகத்தையேயா புறத்தையேயா என்பதை நிதானிக்க இயலாது கிடந்த அதே பருவத்தில், நான் பயின்ற வாழ்க்கை என் நெஞ்சப் பரப்பிலே சுழியாடு கின்றது. எண்ணச் சுழியா? அல்லது கடந்த சம்பவங் களின் சுழற்சியா? அலைகள் கரை தொட்டுப் பின்னெ ழும் சாயலா?

அன்றொரு நாள். சந்தியா சரியைச் செய்யவா குளத்திற்குச் சென்றிருந்தோம்? பென்னம் பெரிய பளிங்குப் பாளமொன்று. ஆடாமல் அசையாமல் ஜீவத் துடிப்பு இற்ற நிலையிலிருப்பதைப் போன்று, என் பிரதி பிம்பத்தைப் பல காலத்திற்குப் பின்னர் தெளிவாகப் பார்க்கின்றேன்.

சமுத்திரக் கரையில் என் நிழல் நீள்கின்றது.
பிரதிபிம்பத்தின் துலக்கம் நிழலுக்கு ஏது?

நான் ஆஜாநுபாகுவானவன். ஒல்லி உடல் வாக்கு முத்திரையிட்டுத் தெரியும். காயான் கொள்ளி யான இந்த ஆகிருதியில், ஒரே மனையைப் புக்ககமாகக் கொண்டு ஒற்றுமையாகவாழும்மூன்றுமருமகப் பெண்கள் கூட்டாக ஏற்றிய பொங்கற் பானையளவு பெரியதலை. அதில் வேர் தள்ளி, தன் பாட்டிலே சிலிம்பிக் கிடக்கும் நறவத்தில் வெறுப்பேறியகேசம். அன்று...கன்னங்கரிய நிறத்தில், அடர்த்தியாக, வகிடின் வரம்பிற்குள் படியாது, சுருண்டு கிடக்கும் மயிர்த் தொகுதியைப் பார்த்து, அதன் ஒயிலில் சுய காமம் துளிர்க்கும்.

www.padippakam.com



முகத்தில் சுருக்கமா; வெடிப்பா; முதுதிரையா? பருவப் பிரயாணங்களில் நெக்கிவிட்ட சோர்வின் முத்திரையா? கிடையாது. நயனங்களின் நேர்த்தி! ஒளிர் தழலின் பிரகாசம்; கன்னிக் கோழி முட்டையில் நீலக்கல் பதித்த சௌந்தரியம். நேற்று-இன்று-நாளை என்றெல்லாம் பேசுகின்றேன். காலத்தைக் கடக்கவும், கர்மாவுக்குத் தப்பவும் நள்ளுவோர் பேசுவதா? புத்ர, லோகாயுத விவகாரங்களை அற்பமென்று ஒதுக்கி, தந்தக் கோபுரத் தின் கற்பனைகளில் தும்பி ஊதி வாழும் என் போன்ற வர்களுக்கு, போதனைகள் வேறு; வாழ்க்கை வேறு. அடிவானின் ரம்மியத்தில் மனம் பறி கொடுத்து, காலத்தை விழலாக்குகிறோம். அந்தப் பழமையை இரை மீட்டும் பொழுது என்ன இதமாக இருக்கிறது, தெரியுமா?

சரஸி! சரஸ்வதி என்ற பெயரை வெட்டிக் கழித்துத் தறித்தெடுத்துச் சரஸி என்றழைப்பதில் என் வாய் இனித்தது. பற்கள் வேருடன் பாறி, முரசு மட்டும் நீர் முறித்த வரம்பாகக் கிடக்கும் இந்தக் காலத்தில், விரக்தியின் பழுப்புப் பொட்டுகள் துளையிட்டிருக்கும் இன்றைய மனப்பாங்கிலும், சரஸி என்ற பெயர் இனிப் பதான பிரமை. ரஸனை வெறும் பிரமை; இல்லா விட்டால், பிரேமைக் கற்பிதத்தின் பாவனை. எது எப்படியோ? தெவிட்டாத தேனாக இனித்த சரஸியைப் பற்றி, இன்றுதானே மனம் பிளந்து பேசுகிறேன்.

உன்னிலும், என்னிலும், இரஞ்சிதங்களுக்கும் மேலாகக் கொண்டு, நான் சம்பாவனை செய்த உன் குருவின்குருவான சிரேஷ்டமுனியை நீ அறியமாட்டாய். பழைய ஓலைச் சுவடிகளும் எழுத்தாணியும்; பழைய நூல்களின் அச்சுப்படிகளும் புதிய பிரசுரங்களும்; எழுது தாள்களும் பாக்கர் 51 உம்; பகலும் இரவும புணரும் சந்தி நேரப் பாங்கில் புதுமைக்கும் பழைமைக்கும் பால

www.padippakam.com



மிட்ட போக்கில், அவருடைய வீடு (ஆச்சிரமமோ என்ற கோலமும் எழுப்பி) காட்சி தரும். அந்த வீட்டிற்குள் அவர் ஒதுங்கி ஓய்வெடுக்கும் நேரம் வெகு ஒறுப்பு. வெயிலின் தீக்கதிர்களைச் சதா வடிகட்டும்—அடர்ந்து சடைத்த கிளைகளைக் குடை விரித்திருக்கும்—ஆலமரம். நல்ல வயசாளி. வாயிருந்தால் (போறை யொன்று இருக்கிறது) புராதன காலத்துச் சமாச்சாரங்களை யெல்லாஞ் சொல்லியிருக்கும். ஆலமரத்தின் கீழ், நித்திய பிரமச்சாரியத்திலே குந்தியிருக்கும் விநாயக விக்ரஹம். பொழுதில்லை; வேளையில்லை. நமக்கு வாய்க்கும் வேளை—ஒழிந்த வேளை—விநாயகருக்குப் பூஜை. பூஜை முடித்து, மான் தோலிலே சம்மணமாக உட்கார்ந்து விட்டால், போதனை-இதோபதேசம்-இலக்கணக் கல்லல்- எல்லாமே தொடங்கிவிடும். இலக்கணமும் இலக்கியமும்! அவர் பாதத்தின் கீழ் ஆலிலைப் பரிமாணத்துப் பொய்கைகள். ஒரே எட்டில் நீந்தி மறுகரையை அடைந்து விடலாமென்ற அசாத்திய மான தன்னம்பிக்கை! நேரமாவது, தியாலமாவது. அவருக்கு எது வேளையென்று படுகிறதோ, அதுவே நமக்கும் வேளை. சில சமயங்களில், அவருடைய விழிகள் விடிவிளக்காகிவிடும். அதுஎன்னபக்தியோ? நித்திரைக் கணிகை என் நிமைகளை அளையவே மாட்டாள், எனக்கும் தாடி; அவருக்கும் தாடி. அவர் நினைவாக அவரை ஒப்பனை செய்துதான், நான் தாடி வளர்க்கின்றேன். என்னுடையதைப் போன்று நீளமல்ல; குறுந்தாடி. அதற்கு மேல் வளரவில்லை. கண்களில் எப்பொழுதும் எரிகொடி கதிர்க்கும் அகல் விளக்குகள். நெற்றியில், தசை அலையை மறைத்து, நீர் கலந்து குழைத்து அப்பிய விபூதிக் கோடுகள். அசல் பிராமணன். அந்தண நெறி அத்தனையும் ஆஸ்தி. அழுக்கே அணுகாது, வெள்ளிக் கொடி வாக்கில், புரண்டு துலங்கும் பூநூல். பத்து ஆண்டுகள்—நீயும்

www.padippakam.com



என்னைக் குருவாக அடைந்து பத்து ஆண்டுகள்தான்— பாத நிழலில், குருவாக்கே மறையாக, அவர் உருவே ஈசனாக, அவர்தம் நிழலே பேரின்பப் பேறாக, அவதானமாகவும், கவனம் நிறைந்த உன்னிப்புடனும் கற்றேன். தொல்காப்பியம் தொடக்கம், நேற்று மாடு விரட்டிக்கொண்டுபோன பையன் கத்திய நாடோடிப் பாடல் வரை மனப்பாடம். பழைமையில்-வைதீத்தில்-குரு சீடபோதனா முறையில்-மரபு காக்கும் மாண்பில்-அசையாத ஆணி வேர் ஊன்றி, வளர்ந்து வரும் இலக்கிய உலகைப் பார்ப்பவர்.

> கௌரி புத்ர! என்னிடம் வித்துவச் செருக்கு-ஆணவம்- அகங்காரம்... இவை உண்டு. நீ அவதானித்திருப்பாய். அது அதற்கு, அதனதன் ஆணவம் இருக்கத்தான் செய்யும். தெளிவிலே பிறக்கும் வீரிய ஆண்மை!

பரோபகாரக் குரு என்று நான் மிதப்புக் காட்டிக் கொண்டாலும், எனக்கு வாஸ்தவமாகக் காமியத்தில் கண். நீ என் கருத்துக்களைக் கனிப் பொருள்களாகக் கொண்டு, என் வித்துவ ஆணவங்களுடன் வாழும் பிரதியாக-வாரிசாக வாழவேண்டுமென்று நினைத்தேன். ஆனால், நீ? ஆயுஷ்மானாக வாழுவாயென்று நினைத்தேனே அற்பாயுசுக்காரா! கண்ணாடி இலை தள்ளும் பருவத்தில், பூ அடைத்தோ, மூச்சு அடைத்தோ, குருக் குத்தி பட்டுச் சாய்ந்துவிட்ட வாழையாகப் போய் விட்டாயேடா! தண்ணீருக்கும் பசளைக்கும் பட்ட பாட்டிற்கும் பயன்? பலன்? ஏமாற்றத்தைத் தாங்க மாட்டாத நிலையிலே, உனக்கு அபரக்கிரியை செய்து மனம் நுடங்கிய வகையிலே, என் மனக் குகைக்குள் நான் அடைத்து வைத்திருந்த பொக்கிஷங்களை (அல்லது கஞ்சலா? கோழி நகங்களில் வெளிவரும் கூளம் தானே?) பார்க்

www.padippakam.com



கிறேன். எது எப்படியாவது இருக்கட்டும். ஆனால் இன்று, என்னுள் நானாகி இரண்டறக் கலந்து விட்ட வற்றை அசை போடுகிறேன்.

நோயென்று சொல்லி ஒரு நாள் சுருண்டாய். மருந்து வகைகள் ஊற்றிப் பற்கள் கறுப்பதற்கு முன்னர், உயிரை இழுத்து வைத்திருக்கும் வலுவை இழந்து, உஷ்ணம் கழன்று, சீதளம் தழுவி, அடிமானாய். கட்டை!

உன் வேளை உனக்கு வந்தது. எனக்கு வேளை வரவில்லை; கண்டம் வந்தது. மூன்று நாள்கள் ஒரே புலம்பல். நோய் வாயின் பிதற்றல். பத்து வருடங்கள் மனத்தின் உள்ளறைகளில் சயனித்தவிட்டு ஞாபகங்கள்-புதுவேகத்தில்-உரமும் நீர்வளமுள்ள நிலத்திற் போட்ட விதைகளாக முளை கொண்டு விரல்நொடிப்பு நேரத்தில் இலைகளும் கிளைகளும் பரப்பும் மந்திர ஜால வாக்கில் விஸ்வரூபத்தில் சிந்தையைப் பற்றி அரித்துக் கொறித்தன... அலட்டுகிறேன்.

'நான் வீட்டுக்குப் போக வேண்டும்?'

'எது வீடு?'

'......'

'கருப்பையும் சுடலையுந்தான் வீடுகள். ஏனையவை தங்குமிடங்களே.'

'பிறந்த வீடு.'

'அதற்குள் மீண்டும் புக இயலாது. மனுஷ சாத்திய கருமமல்ல.'

'என் அன்னையைப் பார்க்க வேண்டும்.'



படிப்பகம்

www.padippakam.com



'சிசுசுருஷையிலும், வைத்தியத்திலும் குறைச்சலா?'

'பாசம் இழுக்கிறது.'

'பாசம்-பாசம்-பாசம்! என் சீடனா பேசுவது? பாசம் அஞ்ஞானத்தின் பிணைப்புக் கொடி. அறிவின் உள்ளொளியை அறுதியாக உறிஞ்சி, நம்மை இச்சக மண்ணிலே சிக்க வைக்கும் சுமை கல். பலவீனங்களினதும், கோழைத்தனத்தினதும் பதியந்தான் பாசம்... இன்னும் ஐந்தே ஐந்து ஆண்டுகள். ஏடுகளைப் புரட்டுவதில், வினாடியாக மறைந்துவிடும். நீ மேதையாவாய். என் சமதையாவாய். அசாதாரண அவதாரம் என்று மெச்சப்படுவாய். நீ நானாவாய். என் அறிவாவாய். திரண்டு வரும் பொழுது தாழியை உடைக்காதே!'

'சாவு என் நிமை விளிம்புகளிலே கூத்தாடுகின்றது.'

'சாவை வெற்றி கொள்ளும் வித்தை, நான் உனக்கு இறுதியாக உபதேசிக்க இருப்பது.'

'இடுகாட்டில், என் சிதைக்கா உபதேசம்?... அறிவின் முதிர்ச்சியினால், என் நாடிகளும் நாளங்களும் இரும்புக் குழாய்களாக மாறுவதற்கு முன்னர், என் இரு முது குரவரைப் பார்க்கப் போகின்றேன்... ஐயோ அவர்கள் உயிருடன் இருக்கிறார்களோ, இல்லையோ?...'

இரண்டு விழி மதகுகளையும் இடித்துடைத்து ஆக்ரோஷத்துடன் ... என் உக்கிருஷ்டமான வேளை நெருங்கி விட்டதான இருள். காற்றே

படிப்பகம்

www.padippakam.com



பிரணாவஸ்தைப்படுவதான மயல். உள்ளம் உருக்கிய கண்ணீர் மாரி. விசும்பல்.

'சென்று, திரும்பு. இதோ, நிபந்தனை! இந்தச் சுக்கில பட்சத்திற்குள் மீள வேண்டும். இல்லா விட்டால், உன் வித்தைகளைக் கற்று விளக்க ஒரு சீடனின்றி, உன் ஞானம் உன்னுடன் செத்து மடியும்.'

விந்தையான ஆசீர்வாதம்.

ஆணவமில்லாத வித்தையா !
கோபச் சடைப்புக் கலக்காத ஆணவமா?

கௌரி புத்ர! எனக்கு சரஸியைப் போல வெளுத்த பொய் சொல்லத் தெரியாது. என் கண்களிலே துளிர்க்கும் நீர் உனக்காகவா ? அல்லது எனக்காகவா ? உனக்காக உகுக்கப் படும் மணப் பித்துகள் என்றால் நீ நம்பு வாயா?

வீடு நோக்கிய பயணம்.

அந்தப் பயணம் என் வாழ்க்கையைத் திசை திருப்பு கின்றது. பயணமென்றாசொன்னேன்? மனிதன் பிறந்தது முதல், உன்னைப் போல சுடலை செல்லும் வரை— இல்லையில்லை, ஆன்மா ஒடுங்கி அடங்கு மட்டும்— நீண்ட பயணந்தான். நாம் ஓடா விட்டாலும், அசையா விட்டாலும், கட்டிலில் ஒரே கிடையாகப் படுத்துக் கிடந்தாலும், காலம் வினாடி நாழிகைகளாகக் கரைந் தொழுகி, தானே இயங்கி, நமது பயணத்தை முடித்து விடுகிறது. நமது வாழ்க்கைப் பயணம், நமது அவயங் களின் வேகத்தை விட்டு, காலத்தின் வேகத்துடன் இணைக்கப் பட்டிருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



என்னைப் பெற்றவள்- அன்னைத் தெய்வம்- வீட்டில் வரவேற்கின்றாள். மடிந்த சோகத்தின் புனர் ஜன்மம். ஒப்பாரியும் அழுகையும் ஓய வெகு நேரமா கின்றது. சந்தனமும் குங்குமமும் கலந்த அபூர்வ நிற மேனியாள், அவள். திலகமிட்டுப் புன்னகை பூத்தால், பூணாரம் காக்கப் பொன்னாகும் என்பார்கள். அவள் அழகில் அப்பாவுக்கு மகா கர்வம். இன்று, கைம்மை யில்...தலைக் கொள்ளி வைக்கத் தத்துவக்காரனான என்னைத் தேடி அலைந்தார்களாம்...வடக்கே வித்தை கற்கச் சென்ற சுவடு, காலத்தின் புழுதி இறைப்பாலே தூர்ந்திருந்தது. அப்புறம், ஊரார் பார்த்து...தங் களுக்கும்-அனாதை நிலையில்-ஊரார் பார்த்துச் செய் வார்கள் என்ற சுயநலத்திலே படர்ந்த பரிவுடன்... சிதையில் எரித்து...அஸ்தி கரைத்து...ஆண்டுத் திவசம் செய்து...என்னைப் பார்த்ததும் தந்தையின் ஞாபகம் வந்துவிட்டதாம். என் ஜீவிதத்திற்கு வித்தூன்றிய மூல கர்த்தாவின் அசல்வார்ப்பாம். படிசந்தம் வெகு பொருத் தமாம். தான் நல்ல சிவலை. என்னை மடியிலே தூக்கி வைத்துக் கொஞ்சும் பொழுதெல்லாம், தன் மனைவி யின் மூக்கையும் விழியையும் பிடிங்கி வைத்திருக்கிறேன் என்று அப்பா கொஞ்சுவார்...இப்பொழுது, அன்னைத் தெய்வம், ஏதோ வெல்லாம் சொல்லுகிறாள். வடிவும் வாகும் அவரவர் மனோபாவனை. விசனமும் அப்படித் தான். அவள் வருத்தம் அவளுடன்; என் வருத்தம் என்னுடன். துக்கம் விசாரிப்பதெல்லாம் வெறும் அர்த்த மற்ற சம்பிரதாயங்கள். முடிகின்றன. முடிவா? ஓய் கின்றன...

அலைகள் மடிகின்றனவா? ஓய்கின்றனவா?

பாசம் பசையாக ஒட்டுகிறதா? அல்லது சேறான அதில், கால் புதைந்து சிக்கி விடுகிறோமா? சேற்றில்,

www.padippakam.com



செந்தாமரை பறிக்க இறங்கி, கிழங்கு வளையங்களிலே சிக்காராக மாட்டி விடுகிறோம். பாண்டித்தியம்-இலக்கண இலக்கிய ஞானம் - சோறு போடுகிறதா? இவற்றைக் கணிகையின் சரஸ உபாயங்களுடன் விலையாக்கத் தெரிந்தவன் பிழைக்கத் தெரிந்தவன். இல்லாவிட்டால், நாலு போக்கற்றவர்கள்-பொழுதை வேறு வழிகளிலே சொல்ல வக்கவற்றவர்கள்- சதுரங்க ஆட்டமாகக் கொள்ள வேண்டியதுதான். வெற்றியா? தோல்வியா? வாழ்க்கையைப் பகடைக் காயாக்க வேண்டாமென்று ஈன்றவளின் நச்சரிப்பு. தெங்கிள நீரின் தண்மை அவள் பேச்சு. மானுஷீக இலட்சணம் பொருந்திய இயற்கைசால் வாழ்க்கையில் ஈடுபடும்படி என் உயிரைப் பிசைந்தெடுக்கிறாள்.

> என் பிரிய மாணாக்க! வாய்மையைக் காப்பாற்றும்படி போதித்துக் கொண்டே புளுகுகிறேன். அறிவில் திளைக்க—உள்ளொளியைக்காண-ஜீவன் முக்தியடைய!- இல்லறத்தைத் துறப்பதுவே சீல மார்க்கமென்றேன். என்னிடம் மாமுனியின் தேஜஸை காண்பதாக மருண்டாய். உனக்குப் பவனத்து நீர் நிலையாகவும், இந்திர சாபமாகவும் அமைந்த அதைப் பற்றிய உண்மை முடிச்சுகளைக் கட்டவிழ்த்துக் காட்டுகிறேன்.

> நீ சொர்க்கத்திலா இருக்கிறாய்?
> என் உள்ளொளி உன்னை
> எட்டுகிறதா?

மனையை அலங்கரிக்க, தன் மணாளனின் மறைவுடன் கழற்றி வைத்த ஆபரணாதிகளைச் சாத்தி அழகு பார்க்க, மனை விளக்காய் வீட்டிலே குத்து விளக்கேற்றி வைக்க, அவள் ஈன்றெடுக்கக் கூடிய குருத்தின் பாட்டி

www.padippakam.com



யாகி, அதன் பாசப் பிறாண்டலிலே தன் தனிமையைப் போக்க, கண்டகுளமெல்லாம் அடிக் கழுவிப் புண்ண னாக வாழாது, நெறியாளனாக சீவிக்க, என்னை மண வாழ்க்கை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துகிறாள். இதந் தரும் நச்சரிப்பு. அத்தி நாத்தி தெரிவிக்காமல் இருப்பதில் ஒரு குதூகலம். ஏடுகளைப் புரட்டி, வித்து வத்தின் முடிச்சுகளை அவிழ்க்கும் அறிவுத் தாகமும், இறைவனுடன் இரண்டற ஐக்கியமாகும் வேதாகம ஓதல்களும் என் சிந்தையெல்லாம் நிரவியிருந்த பொழுது, துச்சமாக வெகு வெகு அற்பமாக, அற்பத்தி லும் புல்லியமானது என்று என்னாற் கற்பிக்கப்பட்ட பசி யொன்று, நகப்பொட்டைக் கூடப் பாக்கி வைக்காது, உடம்பின் தசைப் பிரதேசம் எல்லாம் வியாபித்து, என் பின் குழலட்டையின் மையம் வரை நுழுத்து படாதபாடு படுத்துகின்றது. உடலை கயிறாக முறுக்கி, அதன் எந்தத் துகளிலும் ஒட்டிக் கிடக்கக்கூடிய இனக் கவர்ச்சி எழுச்சிகளைப் பிழிந்தெடுக்க, ஊனைப் பிழியும் நேம நிஷ்டைகளை அநுட்டானமாக்கிய காலத்தில் புகத் தயங்கிய இந்த இச்சை, அபின்னமான விச்வரூபம் கொண்டு என் மனத்தினை அலைக்கழிப்பது ஏனோ? கசாக்கிரம் கூடச் சிலிர்த்துச் சன்னதம் கொள்வது எதனால்? பெண் வேட்கை என்பது, மானிட உடலங் களில் மோக மாயையாக உறைந்து, நர விழிகளுக்குச் சிக்காது பதுங்கியிருக்கும், அமானுஷ்யத்தை அழிக்கும் புல்லிய எழுச்சி என்று சொன்னேனே! பெண்களின் மாயமோகனப் பாசவலை உண்மையின் ஒளிப் பிழம்பை நாம் அடையாது நித்திய புழுதி வாழ்க்கையைத் தர விரிக்கப்படும் அசத்து வலையென்று சொன்னேனே!! ஜீவன் முக்திக்குக் கடுஞ் சோதனையாக இறைவன் வஞ்சனையுடன் வைத்தனுப்பிய சுரங்கப் புழைதான், பெண்மைத் தசையின் மறைவிடத்தில் பொங்கிக் கிடக் கும் சிருஷ்டி வெடிப்பு; உடலூழ் வசப்பட்டு, இளமை

www.padippakam.com



யின் வெள்ளப் பிரவாகத்தினை வடிகால் வழியே போக்குவதை இலட்சியமாகக் கொண்டு அதற்குள் அமிழ்ந்து விட்டால், 'இக வாழ்வில் உழன்று, ஆயிரம் ஆயிரத்தில் அநாமதேயமாக மறைந்து விட வேண்டு மென்று அலங்காரமான வார்த்தைகள் உதிர்த்தேனே, என் உள்ளத்தில் உலைவினைப் புகுத்தி, பயத்தின் பருந்து நகங்களுக்குள் உடலின் சுய இச்சைகளை அடக்கி வைத்தேன்.

ஆனால், இன்று சொல்லுகிறேன். புத்ர, சில உண் மைகளைச் சொல்ல இந்த வேளையை நான் தேர்ந் தெடுத்தேனா? அறிவின்- அதனுடன் பிரியா நுகர்ச்சி செய்யும் ஆணவத்தின்-ஏதேஷ்டம், ஒண்டி வெப்பத்திலே உலர்ந்து போக, கபாடம் தானாகத் திறந்து கொள்ளு கிறது. மதன் மோகப் பாலெழுச்சி—ஊளைச் சதை யிலே சுரந்து வழியும் புலாலிச்சை-சுரப்புகளின் சங்கம மான கலவி வேட்கை, கவிஞனின் கொச்சையிலே காதல்-வெகு இயல்பானது. ஒரு பருவத்தில்—இந்த இச்சை அமர் கொண்டு தினவுடன் உறுத்தும் பருவத் தில்—இந்த இன்பங்களிலே சுகித்துத் திளைத்துச் சுயத்தை இழந்த நிறைவு அலைகளில் மிதப்பதற் காகவே பிரமன் பெண்களைப் படைத்திருக்கிறான். ககனத்தின் கண்கவர் வனப்பு—எத்தனையோ வகை யான, விதமான, ஜீவராசிகளுக்கு உயிரூட்டிகளைத் தன் வயிற்றிலே சுமந்து வளைய வளையச் சதுராடி வரும் நதிகள்—அவற்றின் நீருண்டு எழில் கூட்டும் மரக தப்பசுமைகள்—இரவு நங்கையை அணி செய்யும் ஒளித் துளிகளைப் பரிகசிக்கும் நவரத்தினங்கள்-புள்ளினத்தின் இசை- காற்றின் சூக்கும இயக்கம்- கள்ளினத்தின் போதை-இவையெல்லாமே, பெண்கள் மட்டுமில்லா விட்டால், தங்கள் சௌந்தர்யங்களையும் பயன்களை யும் இழந்து... அன்பின்- இனிமையின்- தாய்மையின்-

www.padippakam.com



பசுமையின்— தியாகத்தின்-வாழும் பற்றின், உந்நத உருவந்தான் பெண். அவளை ஒதுக்குபவன் வாழ்க்கையின் சகலவற்றையும் இழக்கின்றான். ஆண்மையை உரைத்துப் பார்க்காத வீரமா? வாழ்க்கையா?

இஷ்ட சீடா!
உன்னை உத்தர பூமிக்கு
அனுப்பிய பின்
நான் சரமம் பாடுவதாக
நினைக்கிறயா?

இல்லையடா, புத்ர!

இன்று, இத்த வேளையில், (அது அதற்கு அந்தந்தவேளை; இதற்கு இது தான் வேளையோ?) சரஸியின் நினைவுகள் புதுப் பொலிவுடன் குதிருகின்றன.

மரபின் காவந்துக்காரரும், அழகு வெறிக் கவிஞர்களும் அமைத்திருக்கும் அழகு வடிவத்திற்கு அவள் இசைவாளா? கருஞ் சாந்தின் அழகு, அதன் கருமையிலேதானிருக்கிறது. அதனதனழகு, அதனதன் தனித்துவத்திலிருக்கிறது. ஒப்ப, போல என்று பிரதி அல்லது சாயல் கற்பிப்பது வெறும் மருள். வார்த்தைகளினால் சமைந்த கோபுரத்தில் வாழ்ந்து, காமம் செப்புவதில் பொழுதைப் பாழடிக்கும் கவிஞர்கள், கீறிறங்கி, அந்த ஆனானப்பட்டபிரமனையே தருவித்து, மான் விழிகளையும், வேலையும், கார்முகிலையும், முழு மதியையும், முத்துக்களையும், கொவ்வைப் பழங்களையும், மது கலசங்களையும்— உடுக்கையும் கொடுத்து, இவற்றை வைத்தே ஒரு பெண்ணைப் புதிதாக வகுத்தமைக்கட்டும் பார்ப்போம். இவையெல்லாம் பாமரனை எட்டியிருந்து விரட்டியடிக்கும் சொற் புரட்டு! (நானும் அதிலேதான் ஈடுபட்டிருக்கிறேனா?) சரஸியின் அழகு

www.padippakam.com



சரஸிக்குத்தான். சாந்தின் அழகு சாந்திற்குத்தான். அவள், அவளே! சிற்றின்ப விவகாரத்திற்கு வேண்டிய தெல்லாம் ஒருபெண்- அவள் சுமக்கும் புழை! விரசமா? உண்மையான விரசங்களும்; விரசமான உண்மைகளும்! இதனாலேதான், உண்மையைக் கற்பனை யென்ற பொய்ப் போர்வைக்குள் மறைத்துக் கலாரசனை மிக்க வர்களென்று கற்பித்து ஏமாறுவதையும்-ஏமாற்றுவதை யும் வாழ்க்கை அடித்தளங்களாக வரித்திருக்கலாம். இளமை குலையாத- கன்னிமை அழியாத-குமரி சரஸி. அசங்கதமோ, அசுகியோ கிடையாது. சுபதினத்தில், பெரியோர்கள் (முஞ்சியே இல்லாத, சம்பிரதாயத்தின் காவந்துகாரராய் நியமிக்கப்பட்ட சில கிழடுகள்?) நிச்சயித்த சுப தினத்திலே, எழுதி வைத்த ஆசார கிருத் தியங்களுக்கு ஒப்ப, அக்னி சாட்சியாக, என் இல்லாளாக ஏற்றுக் கொள்ளுகிறேன்.

> அது எப்பொழுதோ நடந்தது.
> அப்பொழுது நான் உன் குருதேவ
> ராவேன் என்று கருதியது கூடக்
> கிடையாது.
> இன்று, நீ...

சமுத்திரக் கரையின் தரை தட்டி மடியும் அலைகள். காற்றுச் சிமிழ்களை அடைத்து, உப்பி அழகு காட்டிய குமிழ்கள் உடைகின்றன. அவற்றின் மரணம்—அல்லது இருப்பதாகக் காட்டி இல்லாமல் மறையும் மாயம்— இயற்கை! இறப்பு வெகு இயல்பானது. இறப்புத் தவிர்க்க இயலாத நியதி என்றால், நமது வித்தைகளை யும்- ஞானங்களையும்- அநுபவங்களையும், சந்ததி சந்ததியாகப் பெருக்க, புதிய தலைமுறையின் மானிட எண்ணிக்கை அருகி விடாது பாதுகாக்கப்படவேண்டும். சிருஷ்டி உற்பத்தியும்; கலவி விதைப்பின் பெறுபேறும்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பாடங்களாக இருக்கின்றனவா? பக்கத்திலிருந்தால், செவிகளின் ஒலிப் பறைகள் பொய்க்கின்றனவோ என்று கூடச் சந்தேகப்பட்டிருப்பாய். இந்த நிதர்சனங்களை மறைக்க, நான் மனனஞ் செய்து வைத்திருந்த அத்தனை வார்த்தைகளையும் பிரயோகித்தேன். பந்தம்- தொந்தம்- மாயை- மனம்- வாக்கு- காயம்- கர்மா- அநுத்திய யாக்கை- நித்திய ஆன்மா- காமகுரோதமோக மதமாச்சரிய உட்பகைகள்- புல்லிய புலால் வேட்கை- ஜீவன் முக்தி- இத்தியாதி, இத்தியாதி...சொச்சமும் சொச்சமும்! இன்று இதே வார்த்தைகள் என்னைச் சூன்யத்தில் நிறுத்துகின்றனவா? நீ கோயில் மாடு மாதிரிச் சென்னியை ஆட்டினாயே. உனக்குப் புரிந்ததா? இவன் புரிந்து கொள்ளாததை அவன் எப்படி விளங்கிக் கொண்டான் என்பதைப் பரிசோதிக்கப் போய், இவன் அறிவின் எல்லைக்கட்டைப் பறைசாற்றி, இவன் 'பெருமை'யை இழக்கும் வம்பில் மாட்டிக் கொள்வானோ என்ற பயமும். கோலாட்டும் ஒரு குரு; குரு பக்தியுடன் அவருக்குத் தலையாட்டும் சில சீடர்கள். இப்படித்தான் வித்துவக் கோஷ்டிகள் தோன்றுகின்றன. அது அதற்குப் பொருந்தும்; இது இதற்குப் பொருந்தும். ஆனால், எது எதற்குப் பொருந்தும் என்பது மட்டும் எவருக்கும் சரியாகத் தெரியவில்லை.

> என்னை மன்னித்துக் கொள். கதை அளக்கிறேன். அளக்கிறேனா? என் எண்ணங்களை வார்த்தைகளில் வடித்து உருவங் கொடுக்க இயலாது தத்தளிக்கிறேன். உலக வார்த்தைகள் அத்தனையையும் கொட்டி, வருடக் கணக்காகப் பொறுக்கினாலும், என் எண்ணங்களை உள்ள படி பிரதிபலிக்க இயலாத கிளிஞ்சல்களே அகப்படும்.

www.padippakam.com



நான் ஏதோ சொல்லுகிறேன். அதன் அர்த்தங்கள் எனக்கு மட்டும் புரிவதாகத் தோன்றுகின்றது. புரிகிற அளவுக்கு அவரவர் அர்த்தங்கற்பித்துக் கொள்ளட்டும். கௌரி புத்ர! என்னைப் போன்ற இதே வாக்கில், அல்லது எமனின் பாசக் கயிற் றினைக் கற்பிக்கும் கயிற்றரவு வாக்கிலா வது, இல்லறத்தைப் பற்றிய இந்த உபதேசங்களைக்கேட்டால்,ஏன் சரஸியைப் பிரிந்து, மண வாழ்க்கை துறந்து, பிரமச் சாரிய மேன்மைகளைப் போதிக்க வந்தே னென்று நீ நிச்சயம் கேட்பாய். அததற்கு அந்தந்த நியமமுண்டு.

நீ தோற்றாயா ? நான் தோற்றேனா?

சரஸி விவகாரம் ஒரு கதை.

எல்லாவற்றிற்கும் எழுவாய் நான். காரணன் நான். ஆண்டு தோறும் பருவ மழையைக் காணாது, வெப்பத்தின் காங்கையில் சுருண்டு கிடக்கும் மணற் பரப்பு தன் மீது பொழியும் மழை முழுவதையும் தன்னுள் உறிஞ்சிக் கொள்ளுகின்றதல்லவா ? அது யார் குற்றம்? நான் சிற்றின்ப விவகாரத்தில் முற்றாகத் தோய்ந்தேன். என் ஊனே உருகி வெள்ளமாகப் பிரவகிக்க ஈடுபட்டேன். இப்பொழுதும், வேளை யென்றும் இல்லை; தியாளம் என்றும் இல்லை. எல்லாம் அதுவாக, அதுவே சகலதுமாக விரிந்து நீல விதானமாகிவிட்ட ஒரு விநோத பிரபஞ்சத்தின் சூட்சும இயக்கம். நான் ஆச்சிரமத்தில் கற்றவையெல்லாம் வெறும் எழுத்துக்கள் எனவும், அவற்றைக் கோத்துப் பதங்களாக்கி, அவற்றினை அடுக்கி வாழ்க்கையைக் காவியமாக்கும் அநுபவத்தின் வாயில் காதலின்பம்

www.padippakam.com



என்ற வெறியில்...வெறியல்ல. தாவகத்தில் வெந்து பொசுங்கும் தவிப்பு. மிகுந்த பசி. நான் பசித்தவனா? பசிக்கே பசியா? தாரனை இழந்து தறிகெட்டாடும் உள்ளம். சிருஷ்டியைத் தடுக்கலாகாது என்ற பிரக்ஞை யுடன் இல்லறம் புகுந்தேன். சரஸியை அளைந்து சல்லாபித்து ஸப்த ஸ்வரங்களும் இறுக்கமாக இழை யோடிய சொரூபம் ஐயிரு திங்கள்களில் விளைந்து கனியு மென்று எதிர்பார்த்த பொழுதெல்லாம், அல்லிப் பிஞ்சுகளாக உதிர்கின்றன! தோல்வியா?

தோற்றுவன் யார்?
நானா?
பிரம்மாவா?

பரேர் தழுவிய குமரி வனப்பு எங்கே? சாயம் வெளுத்து, வண்ணான் கல்லின் மோதலிலும், உபயோ கத் தேய்மானத்திலும் நைந்து, கிழிந்து, நூல்களின் பிரிகள் கூட முறுக்கு மாறிய துணியாகிறாள் சரஸி... எதற்கும், எப்பொழுதும் மறுப்புச் சொல்லாது படுப்பதும் ஒப்புக் கொடுப்பதுமே பதிவிரதை தர்மம் என்று அந்த 'மொக்கிச்சி' நினைத்திருந்தால் போலும். உடல்நோவை யும் மன விகாரத்தையும் மறைத்து, ரஸனை இற்றுப் போன ஒரு பழக்கத்திற்குத் தன்னைப் பழக்கப்படுத்தி, நாக்கைக் கிட்டியில் மாட்டி, 'தீயவற்றைப் பாரேன்' எனக் கண்களை மூடி, மரக்கட்டையாகிறாள். என் சுமையைத் தாங்கும் படுக்கையாகவும், என் வீரியத்தை உறிஞ்சும் ஒற்றுத்தாளாகவும், எனக்காகச் சர்வ பரித்தி யாகமுஞ் செய்ய ஏற்றுக் கொண்ட சத்தியப் பிரமாணத் தினைக் காப்பாற்றி வாழ்கின்றாள். ஒத்துழைப்பின் சுகம் இல்லாது போகவே எரிச்சல். அருவருப்பு. பானகமா? உப்பு நீரா? விலகுகிறேன். மரக்கட்டை மீது ஈடுபாடு சலித்து...இயைபு வேட்கைதணியவில்லை. அது என்ன பசியோ? தீரவில்லை. என் அத்தியின்

படிப்பகம்

www.padippakam.com



வெப்பத்தில் உருகி, நோயாளியாகிவிட்ட சரஸிக்குப் பரிகாரம் பார்க்க, அவள் தங்கை 'குஞ்சு' வந்து சேருகிறாள்.

குஞ்சு!

நீ அட்சய பாத்திரமா?

அக்கை செய்த சில பணிவிடைகளைக் குஞ்சு செய்கிறாள். அவள் வந்ததிலிருந்து பசிக்குப் புது வேகம்... சறுக்கும் சமயத்தைத் தேர்தெடுத்து, அவளை இரையாக்குகின்றேன். அம்மண வெட்கம் முதற்பாடத்துடன் இற்று விடுகின்றது...அறியாத புதிய இன்பத்தில் குஞ்சுவுக்கே நாட்டம் குதிர்கின்றது ..புதிய பொலிவு. சமுசயம். உதரம் இலேசாக வீங்குவதைக் கவனிக்கிறாள். உதய காலங்களிலே தலை கனத்துக் கஷ்டப்படுகிறாள். ஓங்காள உணர்வுகளைக் கட்டுப் படுத்த எலுமிச்சம் பழத்தை நாடுகிறாள். இவற்றின் மத்தியில் சாம்பல் மீதும், மண்ணின் மீதும் உணவார்த்தப் பற்று வைக்கிறாள்...சந்தேகம் நெய்யுண்டு வளர்வதைக் கூட நினைத்துப் பார்க்காத ஒரு சிவப் போக்கிலே என் தாண்டவங்கள். ஒரு நாள். குஞ்சுவையும் என்னையும் பார்க்கக்கூடாத இணக்க நிலையில் சரஸி காண்கிறாள்...பேச்சில்லை. முகத்தில் ஒரு சுழிப்பு. அந்த அபிநயத்தின் ஆழம்?... வெந்தழலா? பெண்மை தியாகத்தின் இலக்கணம்- தாய்மையின் இலக்கியம்- என்று நினைத்திருக்கக் கூடிய அவள், இந்திரனும் சந்திரனும் பரிவமடைந்த விழிகளில், ஓர் அமானுஷ்ய ஜொலிப்பு. வானில் அறுந்து விழுந்த நட்சத்திரங்கள் இரண்டு அந்த விழிகளுக்குள் விழுந்தனவா? ஞானச் சுடரா? இறுதி மருளா?

அன்றே...

www.padippakam.com



சுருக்குப் போட்டுத் தன்னுயிரை மாய்த்துக் கொண்டாள் சரஸி. ஏன்? எதனால்?? ஒரு பெண் தன்னை கணவனைப் பங்கிட விரும்பாத ஏக பாத்தியத்தின் ரௌத்ரமா? தோல்வியை ஒப்புக் கொள்ளாது சாவை வரித்துக் கொண்டாளா?

தோற்றது யார்?

சரஸியா? குஞ்சுவா?

சுகச் செல்வம் இழந்த நோயாளி, ஏன் கணவனுக்குப் பாரமாக இருக்க வேண்டுமென்ற நினைவில் வெதும்பி மாண்டு போனாள் என்பது சமாதானம். அவளுடைய தற்கொலையைக் கண்ட குஞ்சுவின் சிந்தையில் பித்தமேறியதா? அவள் விளைந்த அதே கர்ப்ப உறையில் உருவாகிய பரிவா? பாசமா? அவள் அழிவின் காரணத்தைத் தன் தலையிலே போட்டாளா? அவள் திடீரென்று வீட்டை விட்டு மறைந்தாள். தேடியதற்குக் கிடைத்த ஆதாயம் அலைச்சல். எத்தனையோ மர்மங்களையும் பொக்கிஷங்களையும் மறைத்து வைத்திருக்கும் சமுத்திரந்தான் விழுங்கியதோ என்று மனம் உலைஞ்சதுதான் மிச்சம்.

குஞ்சு வாழத் தெரிந்தவள்.
பிழைத்திருக்கிறாள்.
எங்கே?

ஆனால், பசி அடங்கவேயில்லை.

சரஸி தோற்றாளா?
குஞ்சு தோற்றாளா?
தோல்வி என்றால் என்ன?

நிழல் தரும் சோலைகள் நிறைந்ததாக, நுங்கின் தன்மை கூட்டிய என் ஊர், மருதநிலமாக உள்ளத்தைச் சுடுகிறது. அன்னையின் தொந்தங்கள் வேரருகி மடி

www.padippakam.com



கின்றன. மௌனம் இருவரையுப் பிரித்து வேலியிடுகின்றது...புரிந்தும் சொல்லத் தெரியாத உண்மைகள். 'இரண்டு பெண்களை உயிரோடு விழுங்கிய பாதகா!' என்று சதா குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கும் கண்கள். எந்திரப் பொறியில் சிக்கிச் சிதறிக் கழன்று உதிரும் நாள்கள். இன்றுகள் நேற்றுகளாகின்றன; நாளைகள் இன்றுகளாகின்றன. சமுத்திர இரைச்சலோ, ஆரண்ய விலங்கொலியோ என் மனத்தைக் குடைகின்றன. இளைது பற்றியே கிடக்கும் பசியின் ஆவேசம் தணிந்ததா? அமைதியில்லை. அலைவு. சமுத்திரக் கல்லைகளின் அலைவுகள் எம்மாத்திரம்?

> நேற்று உன் ஆவி அலைந்ததை என் உள்ளொளி பின் தொடர்ந்தது.
>
> ஆத்மா அலைந்ததா?
>
> அலைச்சலென்ற வார்த்தையே செல்லாக் காசாகின்றதே,என் கருத்துப் புழக்கத்திற்கு!

ஊர் நீங்கி, தேசாந்திரியாக அலைகிறேன். வலியோ ? விரக்தியோ ? தாகம் அடங்காத தவிப்போ? காணும் பெண்களிட மெல்லாம் மயல். வயதோ, பக்குவமோ, உருவோ பெரிதாகத் தெரியவில்லை. கடம்பியா? கயத்தியா? கணிகையா? கொழுநனையாளா? கைம்மைக் கிழமா? வித்தியாசமற்ற- பருவபேதங்கள் மரித்த - சீலம் சுக்கிலமாகிவிட்ட சின்னம் நிறைந்த இம்மை இன்பங்களில் குழகுகிறேன். சூறையர் கூட்டுறவில் சம்பத்தும் சுகமும் இழக்கும் தறுவாயில், உலைவின் உரோதனத்துள் சிக்குகிறேன். மெய்ஞ்ஞான வேட்கை புகுகிறது. ஒரு பசி இன்னொரு பசியைப் புசிக்க, புதிய பசி ஏமாப்புடன் வளர்கின்றது, கியாதி பெற்று வாழ வேண்டுமென்ற தாகம். ஔச்சித்தியம் உண்டா என்ற ஐயம் மனத்தைக் கிண்டுகிறது. சீரழிந்

படிப்பகம்

www.padippakam.com



தைப் புனரமைப்புச் செய்வதா? தோல்வியை வெற்றி யாகப் புரட்டி வாழ வேண்டுமென்ற வெறியா? மேனகை யின் குடிலையின் இந்திரிய ஒழுக்கத்தினைச் சோரம் போக்கிய விஸ்வாமித்திரன் சளைத்தானா? ஈற்றில் தவவலியை இழந்தானா? நினைத்ததை முடித்தானா? எட்டாப் பழம் புளிக்கும் என்ற தத்துவத்தில் மறுகி னேனா? எண்ணப் புயல்களை அடக்குகிறேன். உணர்ச்சிப் பிரவாகத்தைக் கட்டுப்படுத்துகின்றேன். வனங்களின் எல்லைகளையும் அடர்த்திகளையும் மேய்ந்து பார்க்கும் கால்கள். எத்தனையோ துறவிகளின் பாத நிழல்களைச் சேர்ந்து. ஞானிகளின் பாதார விந் தங்களில் அமர்ந்து, அறிவுப் பசிக்குத் தீனியிடு கிறேன். முதன் முதலில் நான் வரித்த குருதேவர் இட்ட சாபம் என்னைக் குணாம்புகிறது...

சூன்யமா? அறிவுத் தெளிவா? சூன்யம் என்றால் பூஜ்யமா? பூஜ்யங்களுக்கு மதிப்பில்லை. தானாக இயங்காத எண். ஆனால், ஒன்றை முன்னுக்குப் போட்டுக் கொண்டு, இந்த பூஜ்யங்களை அடுக்கிக் கொண்டே போனால் எத்தனை கோடி அக்குரோணி மதிப்புகள் தோன்றுகின்றன? வித்தையா? ஜாலமா? பூஜ்யமென்றால் என்ன? அதற்கு மதிப்பை ஊட்டும் அந்த ஒன்று எது? அவனவன் மூளைக்கு எட்டியது தான் விளக்கம். ஒன்று ஆண்மையை உருவகப்படுத்தும் என்றும், பூஜ்யத்தின் அண்ட வடிவம் பெண்மையைக் குறிக்கும் என்றும், இவற்றின் புணர்ச்சிச் சேர்க்கை களைச் சிருஷ்டி மதிப்புகள் என்றும் வியாக்கியானம் கொடுக்கும் உள்ளப் பக்குவத்தை இழந்து விட்டேன். அறிவுப் பசி...அந்த ஒன்று நான்தான் என்ற அகங் காரம்... ஒன்று, வெறும் தனி- ஒண்டி. பூஜ்யங்களின் மேன்மையால் அதன் மதிப்பு உயருகின்றது. ஆகவே, பூஜ்யங்களை- சீடர்களை- எனக்குப் பக்கத்தில் போட்டு, என் மதிப்பினை உயர்த்தும் வெறி. இந்தக்

www.padippakam.com



'கதையே' நினைத்து, கிழக்குக் கரையை வந்தடைகிறேன்.

என் பரம சீடா! என்னுள் ஒட்டி, என் மதிப்பை உயர்த்த நான் தேர்ந்தெடுத்த பூஜ்யமே! இவ்வளவு நேரம் கதையா சொல்லிக் கொண்டிருக்கிறேன். என் சித்தம் கூதலில் சன்னி கண்டதா? அல்லது சேந்தின் நாக்குத் தீண்டும் உஷ்ணமா? கதையைச் சொல்லாமல் உபாக்கியானத்தில் சிணுக்கம் செய்கிறேனா?

உன் கதை; என் கதை; சேர்ந்தது நம் கதை!

கௌரி புத்ர! நான் சரமம் பாடுவதாக வைத்துக்கொள். அல்லது என்தோல்வியை— என் குரு உன் குருவுக்கு இட்ட சாபத்தை— தோல்வியடையச் செய்து, ஒற்றின் மதிப்பினை உயர்த்தும் பூஜ்யத்தை அடைய இயலாத என் கையாலாகாத்தனத்தை அசை போடுவதாக வைத்துக் கொள்.

சமுத்திரத்தின்
குமிலம்.
என் உள்ளப் பொய்கையிலும்
பேரொலியா?
தோல்வியின் எதிரொலியா?
புத்ர!
தோல்வி என்றால் என்ன?
அவாவின் பங்கமா?
உனக்கா? எனக்கா?

நேற்று...,

அ—16

www.padippakam.com



அதற்கிடையில் நேற்றாகிவிட்டதா? கால ஓட்டத்தை இழுத்துத் தடுத்து நிறுத்த முடிகிறதா? இம்மையில் மறுமையை ஊடறுத்துப் பார்க்கும் என்னாலும் முடிவதில்லை. நேரம் யாருக்காக நிற்கிறது? அசையும் சக்கரத்திலே ஓர் அசையாப் புள்ளியாம். அசையும் காலத்திற்கு இந்த அசையாப் புள்ளி எங்கே? பின்னர் சோர்வுற்று, கால ஓட்டமே நமது ஆயுள் ஓட்டம் என்று 'சரிக்கட்டி' வாழ்வதும் நமது நியதியாகி விடுகின்றது.

உன் பிரிவினால், வெறுமையே நானாகிவிட்டேனோ என்ற பயத்தின் அவலத்திலே, ஆல மரத்தின் கீழ் குந்தியிருக்கிறேன். மாலைக் கொழுநனை, இருள் இதழ்களை விரித்து மலர்கின்றது. இரவும் தனிமையும். காற்றும் அசைவும் இற்ற சிலை நிலை. அருட்டுணர்வின் கந்தழி ஊர்கின்றது. அந்நேரம், என் நிமை மயிரினைக் கொட்டுவது போல, கச்சோதப் பரிமாணத்தில், ஆனால், அதனிலும் பார்க்கப் பிரகாசமான மரகத ஒளியைப் பீச்சிய வண்ணம், ஒளிக் கல்லை வட்டமிடுகிறது. என் ஞான சிருஷ்டியில், உண்மையின் இரகசிய முடிச்சுகள் அவிழ்கின்றன. கருவி நானா, நீயா? உன்னை என் அத்தியந்த சீடனாகப் பெற்று அடைந்திருந்த கர்வம், பங்கமுறுகிறதா? நீ அவாவினை வெல்லவில்லை. உன் ஆன்மாவுக்குச் சொர்க்க வாசல் அடைபட்டுக்கிடக்கும்.உன் உயிர் அலைந்து திரிகிறது. அந்த இஷ்டத்தினை— உலைவுடன் உன்னை உழலுறுத்தும் ஆசையை—நிறைவேற்ற வேண்டும். உடனே, அவசரம், காலதாமதம் கூடாது. அப்புறம்...? என் குருவின் சாபம் முற்றாகப் பலித்துவிடுமா?இப்பொழுது மட்டும் பலிக்கவில்லையா?

நீயானாலென்ன? நானானாலென்ன? என் குருவானா லென்ன? அறிவுச் சக்கரச் சுழற்சிகளில் மனத்தைக் கவிக்காத கிராமி

www.padippakam.com



யனானாலென்ன? தோல்வியை நேர்மை யாக ஒப்புக் கொள்ள முடிகிறதா?

அந்த அவாவை— என் உள்ளொளிக்குக்கூட மறைத்து— எப்படிப் புதைத்து வைத்தாய்?

'மகரிஷி!'— உடற்கொட்டை அக்கினிக்கு இரை யாக்கிய பின்னரும், உன் இதம் குலையவில்லை. இருப்பினும், எளிதம் அந்த அழைப்பில் நெளிந்து சுருள்வதை அனுமானிக்க முடிகிறது.

'என் பிரீதியனே! மதுரனே! கௌரி புத்ர! என்ன தேவை? உந்நதமடைவதில் இடர்ப்பட்ட வீழ்ச்சியா?'

'நீங்கள் மஹா பொய்யன்.'

'நீ மீண்டும் என்னை அறிவுச் சிக்கலில் மாட்டுவது எனக்குச்செம்மாப்பைத் தருகின்றது. பொய் என்றால் என்ன?மெய் என்றால் என்ன?'

'பொய் என்றால் ஏட்டுப் படிப்பு!'-பிரதியுத் தரம் சொல்லும் துணிவு உனக்கு எப்படி வந்தது?

'மெய்?'

இப்பொழுது என் சிரசிலே கிளம்பும்யுக்தி என்ன? கோயில் மாடு கொம்பு நிமிர்த்துவதா, வளர்த்த கடா நெஞ்சில் பாய்வதா என்ற வகையில் ஆதங்கம்.

'அநுபவம்...அதிலும் இம்மை அநுபவம்!'

'அநுபவம் ! நெருப்புச் சுடும் என்று அநுபஸ்தன் சொல்வதை மறுத்து, நமது விரலைப் பொசுக்கி அல்லற்படுவதுதான் மெய்யா? யார் உனக்கு இந்தப் புதிய பாடத்தைப் புகட்டியது, சரீரி?

www.padippakam.com



தசைக் கோள இச்சைகளிலே நயப்பும் நாட்டமுமா?'

'போதும். என் இன்பங்களைச் சூன்யமாக்கியது போதும்...சொற்சிலம்பங்களிலே அர்த்தங்களைப் புதைத்துக் கழைக் கூத்தாடியது போதும். இத்தனை வருடங்களாக. என் உணர்ச்சிகளைத் தத்துவச் சட்டியில் வறுத்தெடுத்தது போதும்... என் அவாக்களை உடனேயே பூர்த்தியாக்க வேண்டும். என் குருதேவரே! என் உள்ளத்தை உருக்கி அஞ்சலி செய்கிறேன். நான் அவாக் களிலே மிதந்து அல்லலுறும்கணமாகவேண்டுமா? இதற்காகவா உங்கள் பாத நிழலை அடைந் தேன்?'

உன் அழுகுரல் என் என்பின் மையத்தையே பொடியாக்குகின்றது. என் அறிவுச் செருக்கு அகன்று, நான் அநாதையாகிறேன். இரக்கம் மட்டுமல்ல, உன்னைத் திரிசங்கு சொர்க்க நிலை யிலிருந்துமீட்க வேண்டுமென்றஆவேசமும்பற்றிக் கொள்ளுகின்றது.

'எஃது என்னவானாலும், உன் இறுதியான இச்சையை நிறைவேற்றுவதற்கு ஒத்தாசை செய்வேன். பேருக்கு என் மீது பழி முடிக்காதே!'

'நான் தங்களைச் சம்பாவனை செய்து யாசிக்கும் வரம் இது.'

'யூகித்தேன். நீ சிற்றின்ப விவகாரத்தில் ஒரே யொரு தடவையாவது சுகித்து, இன்புற்று, அநுபவிக்க விரும்புகிறாய்.'

'...'

www.padippakam.com



'உன் உயிரின் வெப்பம் கனற்றிக் கொண்டிருக்கிறது. நான் உனக்குப் போதித்துள்ள உயிர்புகும் வித்தையை, குரு தியானத்துடன் ஓதினால், ஒரு கூட்டிற்குள்—உடற் கொட்டிற்குள்—உன்னாலே புகுந்து கொள்ள முடியும்... உடலின்றி உன் இச்சை பூர்த்தியாகாது என்பது தெரியுந்தானே?'

'புரிகிறது, குருதேவரே!'

'என் வாஞ்சைகளின் திரட்சியே! இதனையும் மனத்தில் வைத்துக் கொள். வைகறைப் பொழுதாகும் வேளையில், உடலில் புகுந்து, அதனை இயக்கவல்ல அகவையை—அல்லது வெப்ப நிலையை—இழந்து விடும்.'

'தன்யனானேன். விடை பெறுகிறேன்'— குதுகுதுப்பில் மலரும் குஞ்சிரிப்பினை முகமிருந்தால் பார்த்திருப்பேன்.

உன் உயிர் விடை பெற்றுச் செல்கின்றது.

பலாப்பால் நூலாக என் உள்ளுணர்வு உன்னைப் பின் தொடர்ந்ததை நீ அறிந்தாயா? காம மனக் கவிகை, உன்னை ஒற்றை வழிப்பாட்டில், இழுத்துச் செல்வது எனக்குத் தெரியும்.

காற்றிலும் கடுகதி.

உன் வேகத்தினைத் தடுப்பது எதுவோ? அவலக் குரல்...மெல்ல மெல்ல அந்த வீட்டில் கூரைக்கு இறங்குகின்றது. அப்பொழுதுதான், ஆத்துமா பிரிந்து, சீதளம் முழுமையாகப் பரவாத ஒரு சவம். ஒரு ஆண் சவம். (பார்த்தாயா? உன் நிலையில், சவத்திலேகூட ஆண் என்றும், பெண் என்றும் வித்தியாசமிருக்கிறது.) அப்பிணத்திற்கு மிக நெருக்கத்தில், தலைவிரி கோலமாக, ஒரு பெண் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்

www.padippakam.com



கிறாள். இன்னமும் பூப்பெய்தாத சிறுமியின் கையில்—சடலம் மகளென்று சொந்தம் கொண்டாடிய உருவத்தின் கையில்—குத்து விளக்குக் கொடுக்கப்படுகின்றது. குத்து விளக்கின் தலைமாடு நோக்கிய நகர்வு. 'மஞ்சளும் குங்குமமும், மாங்கல்ய நிறைவுடனும், நான் போக, கிரியை செய்ய நீரிருப்பீர் என்றிருந்தேன்...' அந்தப் பரிதாபக் குரல் உறை உதிரத்தையும் கரைக்கிறது...உற்றம் சுற்றத்தின் அவலப் பிரலாபம், அனுகூலமாகப்படுகின்றது. ஏனையோருக்குத் தெரியாது, குளிர் தாவிக் கொண்டிருக்கும் பிரேதத்திற்குள் உன் ஆன்மா புகுகின்றது...எல்லா விழிகளும் இமைக்காது லயிக்கின்றன... விழிகள் (சவத்தின் விழிகளா? உன் விழிகளா?) விழித்த விழிகளை விழிக்கின்றன. ஆச்சரியச் செய்தி ஒரே சுழற்சியில் பரவி, விரிகிறது.

''நான் சொனனெணை...மூச்சு அடங்கிக்கிடக்கு... சூடாறேல்லை எண்டு. கிழவிக்கு அறளை பிடிச்சிட்டுது எண்டு விண்ணாணம் கொட்டியள் சிரிச்சாளுகள். புருஷனைக் கொள்ளியள்!''—இந்த வசை மூலமே மூதாட்டி தன் அநுபவ ஞானத்தின் இசையைப் பரப்புகிறாள்.

ஞானச் செருக்கு யாரைவிட்டது?
என்னையா?
அல்லது கிழவியையா?

நாக்கு அண்ணத்தில் ஒட்டிய வாக்கில் அவஸ்தைப் படுகிறாய். திருட்டுப் பயமா?குற்றத்தின் குறுகுறுப்பா? சைகை மூலம் நீர் கேட்கிறாய். பிராட்டி பணிவுடன் பால் பருக்குகிறாள். களைப்பு மரித்துத் தென்பு பெறுகிறாய்.

எல்லாவற்றையும்- எல்லோரையும்- மிரள மிரளப் பார்த்து அளவெடுக்கும் பிரயத்தனம். அவனை

www.padippakam.com



அழைக்க உன்னுகிறாய். உன் சிந்தனையின் ஒவ்வொரு இரேணுவையும் என் உள்ளுணர்வு உணர்கிறது.

'புத்ர, அவள் பெயர் பாக்கியம்.'

செவிப் பறை கிரகிக்கிறது.

''பாக்கியம்.''

அவள் விழி நீரைத் துடைத்து நிற்கிறாள். துக்கத்தில் விநோத சுந்தர ஜாலம் காட்டும் அவளிடம் உனக்கு அமர் எழுகின்றது.

''என்ன ?''

''உன்னுடன் தனிமையில் கொஞ்சம் பேச வேண்டும்.''

'ஆஸ்தி-முதுசொம் விவகாரமாக்கும்...'— எல்லோரும் விலகுகிறார்கள்.

அறை,

தனிமை.

நீ.

அவள்.

பற்றி இழுத்து, அவளை உன் மார்பிலே கிடத்துகிறாய். சுகமாகத் தலையைப் படுக்க வைத்திருப்பவளாகக் காணப்படுகிறாள். இது சகசம் என்ற நினைவு.

பின்னர் உன் கரங்கள் துணிவும் வலுவும் பெற்று... நசிந்து கொடுக்கும் கொங்கைமேட்டின்இதத்தினை ஸ்பரிசிக்கும் வேட்கையில்... நெருப்புச் சுட்டதுவோ? அரவம் தீண்டியதோ?

''இறப்பதற்கு முன்னர்... ஒரேயொரு... இஞ்ச பாரும், பாக்கியம்!''

www.padippakam.com



''நீங்கள்தான் பேசுவதா? அல்லது உங்களுக்குள் புகுந்திருக்கும் ஏதாவது பிசாசு பேசுகிறதா?''

'நீ தான் புத்ர,பேசுகிறாய்.ஞாபகமிருக்கட்டும்.'

''பாக்கியம், கண்ணே!''

''இதென்ன மனித உடம்பா, இராக்கத உடம்பா? என் இளமையைக் குடித்தது போதாதா? அன்று... சீயக்காய் அரப்பு வைத்து முழுகிய பின்னர் வேண்டா மென்று சொன்னன். உடம்புக்கு ஆகாது என்று கெஞ்சிக் கேட்டன்.''

'ஆமடா, ஆமா. பூர்வ வரலாறு தெரியாது புகுந்து கொண்டு விழிக்கிறாய். இப்பதான் எனக்கும் உண்மை தெரியுது. ஆபத்து.'

'நான் உயிர் மட்டுமே! அப்படியான எனக்கு என்னதான் ஆபத்து வரப் போகிறது? உஸ், போதும் உன் தொண தொணப்பு.'

''அதற்கு என்ன?''

''என் உடம்பை முறிச்சு, உங்கள் விருப்பத்திற்கு வெறிக் கூத்தாடினீர்கள். பலன்? சன்னியில் படுத்த படுக்கையானீர்கள். பிழைக்க மாட்டீர்கள் என்று வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள். ஒரு வாரமாகத் தண்ணீர், அன்ன ஆகாரம் இல்லாத உடம்பு.''

''நீ என்ன சொன்னாலும், ஒரேயொரு முறை. ஒரு பத்தினிப்பெண், கணவன் இஷ்டத்திற்கு மறுப்புச் சொல்வாளா?''

''நீ மனுஷனில்லை...பிசாசு!...தூ! நீ ஏன் உயிருடன் பிதற்றிக் கொண்டிருக்கிறாய்? செத்தது போல செத்துத் தொலையேன்.யாருக்கு இடி விழுந்துவிடும்?''

www.padippakam.com



''என்ன பிள்ளை?''-உறவினக் கிழவி வருகிறாள்.

''துராசைகள் சொல்லிப் பிதற்றுகிறார்.''

''உந்தச் சன்னியின் குணம் உப்பிடித்தானாம் பிள்ளை...'' என்று தன் அளவிலே கூறிக் கொண்டு, ''தம்பி வைத்தியரைவரச்சொல்...''என்றுவெளியேயும் குரல் கொடுக்கிறாள்.

மேலும் சில உறவினர்கள் முந்திரிக் கொட்டை களாக அறைக்குள் நுழைகிறார்கள்.

''உஹும்; நம்பிக்கையில்லை!''—உன் நாடிகளைப் பிடித்துப் பார்த்து வைத்தியர்கள் உதடுகள் பிதுக்கு கின்றார்கள்.

'கௌரி, புத்ர! புறப்படு...இங்கு நேரம் அதமே கழிகிறது. சூழல் நிலை பிரதிகூலம். காலம் கரைகிறது...'

உன் ஆத்மா கூடுவிட்டுப் பெயர்கின்றது.

பிணம் பிணமாகிறது.

வீடு, மீண்டும் சாவீட்டுக் கோலம் கொள்ளுகிறது.

'மறுகாதே!'

'நீ சள்ளை தராதே!'

கடுகதி வேட்கை, விட்ட இடத்தில் தொடங்கு கின்றது.

கௌரி, புத்ர!

பழமா? காயா?

பழத்தைநினைத்துக் காயைக் கடிக்கிறாய்.

படிப்பகம்

www.padippakam.com



'தருமாஸ்பத்தரி' என்று பொதுமக்கள் உரிமை பாராட்டும் அரசாங்க மருத்துவ மனை. சவ அறை, அதற்குள் புகுகிறது உன் உயிர்.

வசதியான இடத்தான்.

புத்ர!

வசதி வேறை; அதிர்ஷ்டம் வேறை.

ஒரு பெண் பிரேதம். அதற்குப் பக்கத்தில் ஆண் பிரேதம். கிடைத்த வரையில் — இல்லை, கிட்டிய வரையில்—சம்பத்துத்தான். உன் ஆன்மா எங்கே? ஆன்மாவுக்கு முகமுண்டா? சிம்மாளம் கொள்ளு கிறாயா ? சிமிட்டுதல் பொழுதில், பிணம் உயிர் பெறு கின்றது.

'என் புத்ர! ஏனிந்த அவஸ்தை?'

'கைகளையும் கால்களையும் நீட்ட முடியவில்லை. முட்டிகளும் பூட்டுகளும் மகா துன்பந் தரு கின்றன.'

'முயன்று பார்!'

'ஐயோ, நெஞ்சை நிமிர்த்த முடியவில்லை.'

'இது கூடத் தெரியவில்லையா? இந்த உடலின் கிழானாக வாழ்ந்தவன் ஒரு கிழவன், உடல் வாக்கிலேதான் உடலின்பம் நுகரலாம். இது கூடத்தெரியாத கற்றுக் குட்டியா?'

'குருவாக வரித்தேன். என்னைக் குஞ்சுதப் படுத்துதல் சுவையோ ? என்னைக் கற்றுக் குட்டியாகவே வைத்திருந்தது உமது திறமைக்கு எடுத்துக்காட்டு. மகாமேதை!'

படிப்பகம்

www.padippakam.com



'யாரோ வருகிறார்கள். புரளி பண்ணாதே!'

சவமாக ஒடுங்குகிறது ஆத்மா. இரண்டுஉருவங்கள். திருட்டுப் பாவனை. பெண்ணின் பிரேதத்தைப் பிளக்கிறார்கள். நர மாமிசக் கசாப்புக் கடைக்காரரா? வேகமாக வேலைகள் நடைபெறுகின்றன. பிணத்திற் குள் என்ன தேடுகிறார்கள்? சிறு ஒளிக் கற்றை. ஈரல். அதன் துணுக்கொன்று நறுக்கிப் பொட்டலமாக்கப்படு கின்றது. வெளிச்சம் பிரேதத்தின் சவக் குழியில் மட்டும். முகங்களிலே இருட் போர்வை, மெலிந்த சுருதிக் குரல்கள். பேசுகிறார்கள். சித்தர் பாஷையா?

''ஐயா!''

''ம்...?''

''கன்னித் தேங்காயுள் வழலைப் பாம்பைப் போட்டுக் காய்ச்சி விட்டேன். கன்னிக் கோழிமுட்டை, சலக்குழி மண், வண்ணான் துறைத் தூமை, இப்ப இதுவும் கிடைத்துவிட்டது. ஒரு வாரத்தில் எண்ணெய் உங்கள் கைக்கு வரும்...அப்புறம் நீங்கள் கையால் தொடும் எந்தப் பெண்ணும் உங்கள் காலடியில் தாஸியாகப் படுப்பாள். கற்பின் செல்வியேயானாலும் உங்கள் காலடி யில் நிர்வாணமாகச் சுருண்டு கிடப்பாள்.''

''சத்தம்...பார்ப்போமே உன் சமர்த்தையும், வித்தையையும்.'' வந்தவர்கள், நடமாடிய சுவடு மறைத்து மறைகிறார்கள்.

'என்ன இது? செப்பிடி வித்தையா?'

'அவன் ஒரு பூஜாரி. பெண்களை வசியம்செய்யும் மருந்து செய்து பெரும் பணம் சம்பாதிப்பவன். நாக்கின் சாதுர்யத்தினால் பெண்களை வசீகரிக் கத் தெரியாத கோழைகள் வாழுமட்டும், அவனு டைய பொருள் தேட்டத்திற்கு என்ன குறைச்

www.padippakam.com



சல்?... ஆ, இது நமக்கு சம்பந்தமில்லாத விவகாரம்?'

'வசிய மருந்துக்கும் ஈரல் துணுக்கிற்கும் என்ன சம்பந்தம்?'

'இவள் தலைச் சூலில் மரித்தவள். இவளுடைய ஈரல்தான் வசிய மாந்தீரிகத்தின் மையம். அது கிடக்க, இவள்மீது உனக்குப் பச்சாதாபம் தோன்றவில்லையா? இவள் சிற்றின்ப விவகாரத் திற்குப் பலியானாள். எத்தனை இனிய கனவுகள் அவள் நெஞ்சை அடைத்தனவோ? முன்னர், சாவீட்டில் நீ புகுந்த ஆண் கொட்டு ஞாபகம் இருக்கிறதா? அதீத சிற்றின்ப வேட்கைக்குப் பலியானான் அவன். இகலோக இன்ப உபாயங் களெல்லாம் நம்மை அழிவை நோக்கியே அழைத்துச் செல்லுகின்றன, என்றுதானே போதித்தேன். இப்பொழுது நீ என் வாச கத்தின் உண்மையை எதார்த்தமாக அறிந்து கொள். பைத்தியக்காரா! அக்கினிக் குண் டத்தின் வெப்பத்தைக் காலைப் பொசுக்கியா அறிந்து கொள்வது?'

'ஹஹ்ஹா...'

'இந்த உலகத்தில் பைத்தியக்காரரும் அஞ்ஞானி களுந்தான் எதற்கெடுத்தாலும் சிரிக்கிறார்கள். புத்ர, சிரிப்பு என்பது அறியாமையின் கவச மென்பதை உன் குருவான நான் அறிய மாட்டேனா.?'

துள்ளிக் குதித்து உன் ஆத்மா வெளியேறுகிறது. அதன் மரகதக் கதிர்கள் என்னை அந்தகாரத்தில் அழுத்தக் கருதியவையா?

www.padippakam.com



'ஹஹ்ஹா!...ஹா, ஹா!'

'இவ்வளவு சொல்லியும்...'

'மாணாக்கனிடம் படிக்கும் சந்தர்ப்பம் ஒரு தடவையாவது குருதேவுக்கும் கிடைக்கட்டும், உடலூழிதான் உடலழிவைக் கொண்டு வருகின்றதென்றால், இவற்றிற்கு அப்பாற்பட, மேன்மை மிக்க, சீல நோன்பு வழி மருவிய, மறைசேர் வாழ்க்கையை மேற்கொண்ட என் சரீரம் மட்டும்...பொய்யன்! பொய்யன்!!'

'அது என் சாபம்.'

'எட்டுச் சொற்களை நிவேதனப் படுத்தி விட்டால், எல்லாம் ஆகிவிடுகிறது என்று அர்த்தமா?'

> நான் சொல்பவை உனக்கேபுரியவில்லையா? எனக்குப் புரிகிறது. புரிந்தவர் புரிந்து கொள்ளட்டும்.

'...'— வார்த்தைகளுக்குப் பஞ்சமேற்பட்டதா?

'என்னுடன் வீண் பேச்சுகள் கொடுத்து, எனக்கு அவகாசம் தரப்பட்ட கால எல்லையைச் சுருக்கி, என் ஏடைகளைத் துவம்சம் செய்வது உன் எண்ணமா?'

> என் கைகள் சமுத்திரக் கரையின் மணற் குறுணிகளைத் துழாவுகின்றன. இந்தக் கைப்பிடிக்குள் சிக்கிய மணல் எத்தனை என்று எண்ணிப் பார்க்க முடியுமா? நீ கெட்டிக்காரன்; கூர்த்த மதியினன். மெச்சாத நாளில்லை.

www.padippakam.com



ஒரு சமயம்.

இந்தக் கடற்கரையில், சூரிய அஸ்தமனத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கவிதைகளிலே சலிப்புத் தட்டினாலும், இந்த அந்தி நேரச் சயன விநோதத்தை ரஸிந்து ரம்மியம் கொள்வதில் அலுப்பே ஏற்படுவதில்லை. நான் ஒரு பிடி மண்ணை எடுத்து, 'புத்ர, இதற்குள் எத்தனை மணற் குறுணிகள் இருக்கின்றன. சொல் பார்ப் போம்...?' என்கிறேன். நீ அதற்கு 'சரியாக நான்கு கோடிக்கு ஒன்பது குறைவு' என்று பதில் தருகிறாய்.

'எப்படி அவ்வளவு திட்டமாகச் சொல்ல முடியும்?' என்று வினா முனையை மீண்டுந் தீட்டுகிறேன்,

'என் விடையில் சந்தேகமிருக்குமாயின், எண்ணிப் பாருங்கள் நிதர்சனத்தை' என்ற வாறே குறுநகை பூக்கின்றாய். குறும்பு செய்வது தனிவழி; தனிப்பாவனை. ஊமைக் குழல் ஊதுவாயா? நெல்லிக் கனி மெல்லுவாயா?

பிடிமண்ணிலே சிக்கும் குறுணிகளிலும் பார்க்க அனந்தமானவைமானிடஆவாக்கள். உருப்படியான உருவம் பெறுபவை வெகு சிலவே...அத்தி நாத்தி காட்டாது, விரய விந்துகளின் உயிரணுக்களாக மாய்ப வையே ஏனையவை. அவற்றை அயர் வின்றிச் சாங்கோ பாங்கமாகக் கணக்கெடு க்கக் கூடிய அபியுக்தன் தோன்றவில்லை. இருப்பினும், நீ உன் அவாவினையே முழு

www.padippakam.com



மையாக வரித்து, நான் உன்னை அஞ்ஞானத்தில் ஆழ்த்தி வைத்திருப்பதாகக் குற்றஞ் சாட்டுகிறாய்!

ஞானமும், அஞ்ஞானமும் வெறும் வார்த்தைகள். இரண்டும் ஒன்றே.

இல்லை; ஒன்றின் கரை மற்றையது. இதுதான்...

உண்மை?

உன் ஆத்துமாவின் ஆத்திரை தொடர்கின்றது.

நடுநிசி.

மங்கையின் அரவணைப்பில் ஆண்கள் சுகித்திருக்கும் இன்ப வேளையென்று கவிஞர்கள் வர்ணிக்கிறார்கள். ஆனால், உன் உயிர் அலைகிறது.

'எங்கே?'

'உனக்கு ஏன்?'

என்னிடம் வைத்துள்ள உபசார மரியாதை வழுவுவதை உணருகிறேன்.

ஊரின் மயானத்திற்கு வந்து விட்டாய்.

என்ன தயக்கம்?

'வந்து விட்டாய், என்ன தயக்கம்?'

'.......'

உதோரண சுருதி கேட்கிறது.

உன் சிறுபிள்ளைத்தனத்தில் என் மனம் இளகுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



'புதிதான அந்த மண்மேட்டைப் பார்த்தாயா? அதற்குள் இன்றிரவுதான் ஒரு பிணம் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கின்றது.'

'இப்பொழுதாவது உண்மையைப் பேசு கிறாயா?'

வார்த்தைப் பரிவர்த்தனையில் சமத்துவம் பிறக்கிறது. சாவக நிலையைத் துறக்கிறாய்.

'சத்திய வாக்கு.'

சிறு வரையில், அந்தப் புதைகுழியிலிருந்து, புது உடல் பெற்று நீ வருகிறாய். சரிகை வேட்டிக்கும், பட்டு அங்கிக்கும் குறைச்சலில்லை. பணக்காரனாக வாழ்ந்திருக்கக் கூடிய உடல். இம்மையில் நீ அடைந்திருந்த சரீரக் கூட்டிலும் பார்க்க அழகு. உன் பார்வை கீழே மேய்கிறது.

வேஷ்டியின் கீழ் அந்தலை கத்தரிக்கப்பட்டிருப்பதை நான் அவதானிக்கிறேன்.

'வலம் மாறிக் கீழ் மேலாகக் கட்டு. திருடர்கள் எடுத்து விடுவார்கள் என்ற எண்ணத்தில், இவ்வளவு முன் ஜாக்கிரதையாகக் கத்தரித்திருக்கிறார்கள்...'

சுடலைக்குச் செல்லும் அழத்திற்குச் செய்யும் அறுதித் தானத்திலும், மானிடனின் லௌகீக தர்க்கப் பிரகரணங்கள் புகுந்து கொள்ளத் தவறுவது கிடையாது.

தயக்கம். தயக்கமா? பயமா? ஆசாபங்கமா?

நேரம் ஊரவில்லை...அது, முகில் நீர் உண்ணும் வேட்கையுடன் மேலெழும் சகோரமாகப் பறக்கிறது.

www.padippakam.com



'என்ன?'

நீ தேம்பியழுகிறாய்.

'வில்லங்கத்தை விளக்கு. நான் சரளமாகத் தீர்க்கின்றேன்.'

செற்றம் செறிந்த முனிவு.

'சிற்றின்ப லீலைகளுக்கு உகந்தபெண்ணொருத்தியை எங்கே தேடுவது என்ற யோசனையா?'

'......'

'இந்நேரத்திலே சிரித்த முகத்துடன் ஒப்புதல் தரக்கூடியவள், 'நாமார்க்கும் குடியல்லோம்' என வாழும் கணிகையைத் தவிர வேறு யார்? மணப்பெண் ஒருத்தியைத் தேடியலையலாம் என்று நினைத்தாயா?'

'க...ணி...கை!'

உன் ஆக்கினையை உணர்ந்து, ஆலோசனை நல்கிய எனக்கு ஒரு உபகார வார்த்தையாவது சிந்த வேண்டுமென்று தோன்றுகிறதா?

இல்லவே, இல்லை.

இப்பொழுது, காலின் வேகத்திற்கு, ஓட்ட சக்தியினைப் பூட்டுகிறாய். கடற்கரையில், ஒல்லிக் கேணிக்கு அப்பாலும், சில சமயம் சுத்த பவனம் உறிஞ்சி நடப்போமே. அவ்வேளைகளில், அங்கே நாம் காணும் மீனவச் சிறார்கூட இப்படி ஓடமாட்டார்களே! ஆசைக்கு எப்பொழுதும் ஒரு வெறி வேகம் உண்டு. ஆனால், இப்படிப் பேயாட்டம் ஆடுவதா?

'ஆம். இதுதான் கணிகையின் விடுதி. தட்டு திறக்கப்படும். கேள் கொடுக்கப்படும். துணிவே பாதி காரிய சித்தி.'



படிப்பகம்

www.padippakam.com



கதவு தட்டப்படுகிறது.

ஒரு பெண் வாசலுக்கு வருகிறாள்.

> அவள் யார்? உள்ளுணர்வு ஏதோ உறவு கொண்டாடுகிறது. அசிங்கிதம் எழுப்பிய முள்வேலி. நிதானம், நிதானிக்கத் தடுமாறுகிறது.

அவள் தூக்கக் கலக்கத்தில் தள்ளாடுகிறாளா? அல்லது, மதுபோதையில் நிதானம் வழுவும் ஆட்டமா? உன்னால் நிதானிக்க முடிகிறதா?

''என் வாடிக்கைக்குப் புதிய ஆசாமியா? என் வீட்டின் கதவுக்குப் பூட்டுக் கிடையாது. நான் அட்சய பாத்திரம். பசித்தவனுக்குக் காலம் நேரம் பார்க்காது அன்னமிடும் சத்திர மென்பது ஊரிலுள்ளவர்களுக்குத் தெரியும். வா, உள்ளே!''

நீ துணிந்தவன். புலிக் குகைக்குள் நிராயுத பாணியாக நுழையும் ஆண்மை, கட்டிலில் அமரும்படி சமிக்ஞை செய்கிறாள்.

''நீ புதிசுதானே?''

பாஷைக்குள் பாஷைகள். கலைக்கும் தொழிலுக்கும் பொதுவான வார்த்தைப் பிரயோகம்.

> 'ஆமென்று சொல்லண்டா!'—மிகுந்த பிரயாசையுடன் அப்பொழுதுதான் உட்புகுந்த உள்ளுணர்வின் யோசனை.

''ஆம்.''

''அதுதானே ? பார்க்கத் தெரிகிறதே...''

''சுணக்காதே !''

www.padippakam.com



''மற்றும் மற்றும் வேசைகளைப் போல எனக்கு அணாப்பத்தெரியாது. நேர்மையாச் சொல்றன் கேள்...''

'கேட்டாயா சீடா? கற்பு நெறியில் மட்டுமல்ல நேர்மை. விபசாரத்திலும் நேர்மை இருக்கிறதாம்!

'உன்னைக் கரங் கூப்பிச் சேவிக்கிறேன். பேசாதே!'

''எல்லோரும் வெளியே சென்று விட்டார்கள். எங்கே சென்றார்களோ? யார் யாருடன் சென்றார்களோ? விடியற் காலையிலேதான் திரும்புவார்கள். அவர்களுடைய வாழ்க்கையே உடலுழைப்பு. தேவைக்கும் ஆற்றலுக்கும் ஏற்பச் சுகத்தைப் பங்கிடுவார்கள். சமவுடமைவாதிகள்...''

'ஐயோ, கௌரி புத்ர! இப்படியா உன் அதிர்ஷ்டம்?'

''இருப்பினும்...'' விளக்கில் நம்பிக்கை நெய் ஊற்றும் வார்த்தை.

''ஒருத்தி இருக்கிறாள். அவள் என் மகள். இந்த வியாபாரமே அவளுக்குக் கட்டோடு பிடிக்காது. மகரிஷியைப் போல நியாயம் பேசுவாள். நீ புதிசாக வந்திருப்பதாலும், பூஞ்சனம் பிடித்திருக்கும் பசிக்களையைப் பார்த்தாலும், ஒரு வேளை ஒப்பினாலும் ஒப்பலாம். அது உன் அதிர்ஷ்டம்.''

''என் அதிஷ்டம்?''

''ஆ...பரியம் ஐம்பது. விடிவதற்குச் சற்று நேரந்தான் இருக்கிறது என்பதினால் இந்தச் சலுகை.''

படிப்பகம்

www.padippakam.com



''ஐம்பது!''

'ஐம்பது ரூபாவுக்கு நான் எங்கு செல்லுவேன்?'

''சம்மதமா? கஷ்டம் என்றால் விடு, நானிருக்கிறேன். உன் இஷ்டம்.''

''நீயா?''

''பழைய மதுவே சுவையானது. பழைய வயலின் நல்லா இசைக்கும். அநுபவமுதிர்ச்சியினால் பழசுக்கும் ஒரு மதிப்பு இருக்கிறது. இளையதுகளுக்காக நீங்கள் கஷ்டப்பட வேண்டும். பழசுகள் உங்களுக்காக கஷ்டப் படும்...'

'ஐயோ!'

நீ கைகளை மடக்கி, கபாலத்திற்குத் தூண் களாக்கி, யோசிக்கிறாய்.

'இந்த உதிரலிடமா? கிழந்திடமா?'

'இவள் மகளுக்கே நல்ல வசயாக இருக்குமே?...

ஆ, உன் வலக்கை மோதிர விரலை நீட்டிப்பார்'

விரல்களை விரித்து நீட்டிப் பார்க்கின்றாய்.

அதில் மின்னும் மோதிரம் உன் கட்புலத்திலே படுகிறது.

'இனி என்ன யோசனை? அதனைக் கழற்றிக் கொடு. அது தான் கடைசிக் கந்தாயம்.'

சொன்னது தான் தாமதம். விரலை பிய்த்தெடுப் பதைப் போன்று...என்ன சிரமம்...என்ன அவஸ்தை... பொடிவெட்டி கிடைக்காத அவசரமா? அல்லது சடலத் திற்குப் பிரீதியான அதுவும் சுடலைக்குச் செல்லட்டும் என்று விட்டார்களா? மோதிரம் கையில் வருகிறது. இந்த அசுரப் பலம் உன்னிடம் எப்படி வந்தது?

படிப்பகம்

www.padippakam.com



அதை அவளிடம் நீட்டுகிறாய்.

''பவுண் தானே?''

அவள் வலுத்த கட்டை.

அதனை வெளிச்சத்தில் பரிசோதித்துப் பார்க்கிறாள். உரைத்து பார்க்கிறாள். சந்தேகம் நிவர்த்தியாகின்றது.

அவளை எங்கேயோ
பார்த்திருக்கிறேன்.

''துளஸீ...துளஸீ!''

நிறுத்தி, மீண்டும் குரலுக்குச் சுருதி சேர்த்து,

''துளஸீ!...துளஸீ!''

கதவொன்று திறந்து கொள்கிறது.

''யாரது?'

என் குஞ்சுவா? அவள் சாயலே! நினைவுப் பூனை, ஈர மனச் சுவரிலே தாவுகிறது. இருப்பினும், பாசக் கண் தூர்ந்துபோன ஊசியில், தொடர்ந்து நூலைக் கோர்ப்பதற்கு உள்ளுணர்வு கஷ்டப்படுகிறது.

ஆள்காட்டி விரலை உதட்டில் வைத்து அழுத்திக் கொண்டே, ''எத்தனை தடவை சொல்லுறதுஎன்னைத் தொந்தரவு பண்ண வேண்டாமென்று? இதெல்லாம் எனக்குப் பிடிக்காது.''

''உன் ஒருத்தியைக் காப்பாற்றத்தான் நான் இந்த ஈனத் தொழிலில் இறக்கினன், இப்பொழுது நீயே எனக்குப் புத்தி சொல்லுகிறாய். முந்தின செவியைப் பின்னர் முளைக்கும் கொம்பு மறைக்கிறது.''

www.padippakam.com


துளஸி வெறுப்புடன் திரும்பும் எத்தனம்.

''மகளே, இதுவே கடைசியாக இருக்கட்டும்...'' என்று அவள் செவிகளைக் கடித்து, மோதிரத்தைக் காட்டிக் குசுகுசுக்கிறாள்.

''பையனுக்குப் புத்தி தெரியுது. என்னை வெறுக்கிறான்...நீ இங்கே பாவம் பார்க்கிறாய்...'' குரல் இறங்குகிறது. சம்மதம் நெருங்குவதைத் தாய் உணருகிறாள்.

''தம்பீ! உனக்காக மட்டும். சட்டு புட்டென்று முடிச்சிட்டுப் போ...பையன் எழும்பினால் வீண் வம்பு...''

> சமுத்திரக் கரையில் அடித்து ஓயும் அலைகளை எண்ணிக் கொண்டிருக்கிறேனா?

அசுகில் வெறுத்துப் பிதுங்கிய உள்ளுணர்வு தீட்தண்யத்தைப் பெறுகிறது.

> ஆம்.
>
> கிழவி குஞ்சுவேதான். இந்த அவளுடைய வாழ்க்கைக்கு நானே காரணனா? என் சிற்றின்ப அவாவின் பலி...
>
> துளசி, என் மகள்.
>
> கௌரி புத்ர! என் சீடன்.
>
> மகளும்-சீடனும்...

நான் என் செய்வேன்?

முழுவதையும் அறிந்ததாகப் பீறு கொள்ளும் ஞானச் செருக்கு என்னை விடுவதாக இல்லை. உள்ளுணர்வு, மௌனக் கோலம் பூண்டு, பின் தொடர்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



நீ சல்லாபத்தில் ஈடுபடுகிறாய். அவா கிட்டும் புண்ணிய வேளை என்ற கற்பிதத்திலே சுயத்தை இழக்கிறாய்.

''சீக்கிரம். புண்ணியமுண்டு. உனக்குத் தாயில்லையா? சகோதரங்கள் இல்லையா? ஏன் ஒருத்தியை... இல்ல, கேக்கிறன். ஒருத்தியோட வாண்டா என்ன?''

நீ பதில் பேசாது கருமத்தில் கண்ணாயிருக்கிறாய். அவள் உடலை ஒல்லிக் தேங்காய்ப் பிணைச்சலாகக் கற்பித்து நீந்தப் பழகுகின்றாயா?

''அம்மா...அம்மா!...''—அவலக் குரல்.

பையன் வீறிட்டுக் கத்துகிறான்.

இந்திரிய வலு இறங்கி உன்னுடைய அவா இறங்குவதற்கு முன்னரோ உருட்டித் தள்ளப்படுகின்றாய்.

நீ என்ன பசி கொண்டாயோ? என்ன வேகம் கொண்டாயோ? அவளைப் புரட்டி உன் ஆண்மையின் வியூகத்திற்குள் வசப்படுத்தி விட வேண்டுமென்ற அவஸ்தை.

முழு மூச்சுடன், குஞ்சினைப் பருந்திடமிருந்து காப்பாற்றும் பேடையின் ராங்கியுடன் உன்னைத் திமிறி எறிந்து, அந்தக் கணையாழியை உன் முகத்தில் வீசி, ''மிருகம்! பெரிய விலை கொடுத்துவிட்டார். இதுதான் வாசல்!''

எதிர்பாராத சமயத்தில் இடி, உன் சென்னியின் உச்சியில் விழுகிறது.

திகைப்பிலிருந்து விடுபடுவதற்கு முன்னரே, பக்கத்து அறைக்கதவொன்று திறந்து கொள்ளுகின்றது. பன்னிரு வயது மதிக்கலாம். துளஸியின் மகன்.

www.padippakam.com



''யாரம்மா இவன்?''

சிறுவனைத் துளஸி ஆதரவுடன் அணைத்துக் கொண்டே, ''துப்புக் கெட்டவன். இங்கு திருட வந்திருக்கிறான்.'' துக்கம், அறிவு அணையை உடைக்கிறது. அவளுடைய விழிக்குள் சிந்துவது உறைகையா? கண்ணீரா?

''ஒவ்வொரு இரவும், புதுப் புதுக் கள்ளன், ஏதோ திருட இங்கேதான் வருகிறானா?''

குஞ்சுவும் வருகிறாள்.

''சொன்னேனே கிழவி கேட்டியா? உன் பேரன் கேட்கிறான் கேள்விகள். இப்ப நீயா, நானா பதில் சொல்லுற?''

''நான் என்ன சொல்வது? விளையும் பயிர் முளையில தெரிகிறது. சரியாகப் பாட்டனைப் போல. ஒரே அச்சு; ஒரே சமர்த்து...''

''பாட்டன், பாட்டன்! உன்னைக் கெடுத்து, இந்நிலைக்கு ஆளாக்கி, உன் சுவட்டில் நானும் கெட்டு, நம் பரம்பரையே கேவலமான தோல் வியாபாரக் கூட்டமாக மாறிவிட்டது. இந்தக் குடும்ப சாபம் என்னுடன் மடியட்டும். இவனை ஒரு படிப்பாளியாக-தத்துவ ஞானியாகப் பார்க்க வேண்டுமென்ற என் எண்ணம் ஈடேறுமா?''

''அம்மா, அம்மா!''—இமை கசக்கி அழுகிறான்.

என் உள்ளுணர்வு மரணாவஸ்தைப்படுகிறது.

இதனை என்னாலே தாங்க முடியவில்லை. சுமை தாங்கி பிளந்து விட்டது. எந்தச்

www.padippakam.com



சம்பத்தை என் ஆணவத்தினால் மூடி மறைத்து வைத்திருக் கலாமென்று நினைத் தேனோ, அதே...

குஞ்சு! நீ செத்திருக்கலாம்.

உயிர் வாழும் ஆசை எதனாலே துளிர்த்தது?

வயிற்றிலே வளர்ந்த சிசு துளஸி யினாலா?

நான் வாழுகிறேன்.

ஏன் நீ மட்டும் வாழக்கூடாது?

கலவிக் களியின் பசையினாலே ஒருத் துவம் பெற்ற நாம், இன்று இரு துருவங்கள்.

நான் வருகிறேன்.

என்னை மன்னித்துவிடு.

உன் மகளின்- என் மகளின்— இல்லையில்லை; நம் மகளின் இனிய கனவை ஒரு வேளை நான் பூர்த்தி செய்து வைப்பேன்.

வரட்டுமா?

என் ஒலி கேட்கிறதா?

இம்மையில் உழலும் உன் அழுக்குச் செவிகளிலே என் அந்தராத்மாவின் குரல் எப்படித்தான் விழும்?

'கௌரி புத்ர!'

'என்ன என்னை விடமாட்டாயா?'

படிப்பகம்

www.padippakam.com



'வைகறைக் கோழி கூவுவது உன் காதில் விழவில்லை? உன் ஆத்மாவின் வெப்பம் தணிகிறது. ஓடு... சவக் குழிக்குள் இந்த உடலைப் புதைத்துவிடு...'

'என் அவா...?'

'ஒரு வேலைக் காம நுகர்ச்சிக்கே ஆயுளை இழக்கும் தேனீக்களைப் பற்றி நான் சொன்ன தில்லையா?'

> காம விகாரத்தின் இன்பத்தை நிதர்சன மாகப் பார்த்தாயே! இதனைக் கலை யென்றும், இன்ப மென்றும் மருளும் அஞ் ஞானத்தை என்னவென்று விஸ்தரிப்பது? பிரமனும், தேவேந்திரனும் பெண்ணிச் சையினால் துன்புற்று அடைந்த அவமானத் தைக் கற்பித்தேனே. நீ நல்ல ஞாபக சக்தி யுள்ளவன். அதற்கிடையில் மறந்து விட்டாயா?

'என்னை வஞ்சித்து விட்டாய்.என் இச்சைகளைப் பூர்த்தி செய்வதாக ஆசை காட்டி மோசம் செய்துவிட்டாய்.'

'அது அதற்கான தகுதியும், ஊழும் இருக்க வேண்டும். தேகம் என்ற கருவி இல்லாமல், எப்படி அநுபவ சுகம் கிடைக்குமென்று நீ நம்பலாம். இல்லை யென்றால், மறந்துவிடு...'

நீண்ட மௌனம்.

போதனை தைக்கிறதா?

'பேரின்பப் பேறு உன் காலடியிற் கிடக்கிறது. மறுமை இன்பத்திலே நீ பூரணமாகத் துய்க்கப்

www.padippakam.com



போகின்றாய். காம-குரோத–லோப-போக-மத-மார்ச்சாரிய உட் பகைகளை வெற்றி காணுதல் வேண்டும். இவற்றின் விதையும் வேரும் ஆசைகளே, அவாக்களை வேர் கல்லியெறியும் கிடங்கிலிருந்து, பேரின்ப வீட்டின் திறவுகோல் அகப்படுகிறது. சிலர் மனோ வைராக்கியத்தினால், நேம நிஷ்டைகளினால், தவத்தினால் அவாக்களை அடக்கித் தங்கள் ஆத்மாவுக்குத் தாங்களே எஜமானராகின்றனர்... சந்தர்ப்பச் சூழலினாலாயினும் சில துர்அவாக்கள் நிறைவேறாது போயினும், அவற்றை விலக்கி வைத்த புண்ணியம் நமக்குக் கிடைக்கிறது...இம்மை இன்பங்களை உன் ஆன்மா இச்சித்திருப்பினும், அவற்றைச் சுகிப்பதினால் விரவும் தூசு உன்மீது படியவில்லை. தாமரை இலை நீரின் வாழ்க்கை வாழ்ந்து விட்டாய். நீ புண்ணியன்-புனிதன்... தோல்வியே தோற்றது. மோட்ச சுகம் உன்னை அணுகிவிட்டது. காலதாமதம் செய்யாது புறப்படு.?'

'மகரிஷி! ஏகபாவத்துடன் இருக்க வேண்டுமென்று போதித்து, ஏகபாவமாக்கி விட்டீர்கள்'- மீண்டும் என்னைக் குருவாகச் சம்பாவனை செய்யும் குரல்.

தளர் நடை.

மயானம் அண்மையில்.

இயற்கைச் சக்கிலியன் கரைகிறது.

எழுவான் வெளுக்கிறது.

வேரறுந்த மரமாகிறது உடல்,

மாணிக்க நிறத்தில், உன் ஆவி மேலெழுகின்றது.

நர விழிகளைக் குருடாக்கி, ஜோதிப் பிழம்பாக, மேலே மேலே எழுகிறது.

www.padippakam.com



'புயல் ஓய்ந்தது. வேளை வந்துவிட்டது. அத தற்கு அந்தந்த வேளை.

மன நிறைவுடன் விடை பெறுகிறேன், குரு தேவரே!'

மிக மங்கலாகக் கேட்கிறது. என் செவிப் புலன் எட்ட முடியாத ஓர் உயரத்திலிருந்து கேட்கிறது.

என் உள்ளுணர்வு உன்னைத் தொடர இயலாத, அயனி மண்டலத்திற்கு அப்பாலும், கர்மாவுக்குத் தப்பிய பரமஹம்ஸ முக்தி நிலையில் புகுந்து கொள்ளுகிறது.

கௌரிபுத்ர! நீ எங்கே? சொர்க்க போகம் எப்படி?

சமுத்திரக் கரையில் வந்து மடியும் அலைகளை எண்ணும் வியர்த்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன என் புலன்கள். நீயடைத்த நிலைபற்றிய மிருதி ஆழிக்குள் அமுங்குகிறேன்.

ஒண்டியாக இருக்கிறேன்.

உடலின்ப உவமைகளே முருகு வைக்கின்றனவா?

கடலலைகள் வந்து, கரையைக் கட்டித் தழுவும் கலவிக் காட்சியில் வெறுப்பு,

இதனாற் பயன்?

கர்ப்ப நிகழ்ச்சியுண்டா?

...கங்கை நீர் வண்டலைப் பரப்பி, நில மங்கைக்குச் சூலாக்கி, எத்தனையோ உயிர்களை ஊட்டி வளர்த்து...

இது சமுத்திர கரையா? சூன்யப் பிரபஞ்சமா?

www.padippakam.com



## பாகம் 3

### சுரை

நான் ஆச்சிரமம் நோக்கி நடக்கிறேன்.

மணலிலே புதையும் பாதங்களின் சுவடுகள்.

அவற்றை அழிப்பதில் உவகை கொள்ளும் அலைகள். பரத்தையர் உள்ளத்திற்கும், அலைகளுக்கும்-தங்கள் மீது நடந்துசென்றவர்களின் நினைவுச் சுவடுகளை அழிப்பதில்-எவ்வளவு ஒற்றுமை.

> கௌரி புத்ர! நீ பக்கத்திலிருந்தால், இந்த உவமைக்கு எதிர்ப்பாக இன்னொரு புதுமையான உவமை கண்டு பிடித்து...
>
> நான் குரு.
>
> நீ சீடன்.
>
> ஆனால், எத்தனையோ விஷயங்களில் நீ என் ஆசான்.
>
> மழலை சிந்தும் குதலைகள் அவ்வளவு பாரிய தத்துவச்சிக்கல்களையும் சட்டென்று அவிழ்ப்பதை 'பெரிய மனிதத்தனம்' அல்லது வித்துவ அகங்காரம் மறுக்கின்றது.
>
> நானும், என் வித்துவச் செருக்கும்.

இரவென்ற வரைவின் மகள், பகலென்ற ஆணைத் தன்பாவாடைக்குள்சிக்காராகச்சிக்கவைத்துவிடுகிறாள். இருப்பினும் புஷ்பவதியின் லயம் காட்டி வானிலே புஷ்பித்துத் துலங்கும் ஒளித்துகள்கள் கண் சிமிட்டிலே ஜாலம் காட்டுகின்றன. வசமிழக்கிறேனா?

நான் ஒண்டி.

www.padippakam.com



நீ போய் விட்டாய்.

தாபத்திரயங்களால் வெதுப்புற்ற மானிடர் என்னை நாடலாம் என்ற, 'நான் உளன்' ஆணவமா?

அருட்டுணர்வா?

ஆச்சிரமம் ஏக வேண்டும் என்ற நியதி.

நானே இட்ட நியதி.

பழக்கத்திற்கு இயங்கும் மனம்-வாக்கு-காயம்!

நடக்கிறேன். நடக்கிறேனா? அல்லது எதனாலோ இயக்கப்படுகிறேனா?

'யாரது!'

உப்பு நீரை உண்ணவா அந்தத் தலை நீருக்குள் அமுங்குகின்றது.

மனப் பிராந்தி, நயன மணிகளில் கற்பிக்கும் கானல் நீர் ஜாலமா?

இல்லை.

ஒரு சிறுவன். அலைகளைப் பிளந்து கடலன்னையை மண்டியிட்டு...உலக ஜீவன்களின் ஆதரவை இழந்து, நீர் மடியின் கோரக் குளிர்மையில் வெப்பம் பெற விழைகின்றானா ?

கால்களின் இயக்கமா ? அல்லது பாசத்தின் இழுப்பா? அவனை இழுத்துக் கரைக்குக் கொண்டு வருகிறேன்.

www.padippakam.com



யாரிவன் ?

ஆனந்தன்.

என் மகள் துளஸி.

அவள் மகள் இவன்.

என் பேரன்.

தாய் எங்கே?

பாட்டி எங்கே?

என் அவாவின் உரு.

இவனுக்குத் தேவை:

மரணமா?

ஞானாசிரியனின்

பாத நீழலா?

அவன் அழுகின்றான்.

விக்கல்; மனக் குழியின் கக்கல்.

''என்னை யார் காப்பற்றச் சொன்னது? நான் சாக வேண்டும்.''

''அறியாச் சிறுவனே! அதற்கு முதல் இதற்குப் பதில் சொல்: நீ ஏன் பிறந்தாய்? எப்படிப் பிறந்தாய்?''

''......''

''உன் இஷ்டப் பிரகாரம் பிறந்தாயா?''

''......''

''உன் இஷ்டப் பிரகாரம் பிறக்காத நீ, எப்படி உன் இஷ்டப் பிரகாரம் சாகத் துணியலாம்?''

என் தர்க்கப் படிகளில் ஏறி, உயரத்தை அடையும் மார்க்கம் அறியாது பையன் மிரள மிரள விழிக்கின்றான்.

''உன் அன்னை - துளஸி என்ற உத்தமி-எங்கே?''

படிப்பகம்

www.padippakam.com



''உத்தமியா, அவளா? அவள் நடத்தை கெட்டவள். ஊரிலுள்ளவர்கள் அவளைப் பற்றி ஒரு நல்ல வார்த்தை சொல்லமாட்டார்கள் ... இப்பொழுது 'திருடி' என்ற பழிக்கும் ஆளாகியிருக்கிறாள்.''

''அந்த மகராசிக்கா? விளக்கமாகச் சொல்.''

''எங்கள் வீட்டுக்குக் கிட்ட ஒரு சுடலை. இரவு, அதில் ஒரு பிணத்தைப் புதைத்தார்களாம். அந்தப் பிணத்தை யாரோ வெளியாலே கிளறி எடுத்து, அதன் விரலிலிருந்த மோதிரத்தைத் திருடி விட்டார்களாம். தொலைந்து போன அந்த மோதிரத்தை அம்மாவிட மிருந்து மீட்டார்களாம். அவளுடைய திருட்டு நீதி மன்றத்திலே எண்பிக்கப்படும் என்ற நம்பிக்கையிலே அவளைச் சிறைச்சாலையிலே அடைத்து வைத்திருக் கிறார்கள். தான் அதைத் திருட வில்லை என்று உள்ள கடவுள் எல்லாத்தையும் சாட்சிக்கு இழுத்துச் சத்தியம் செய்து விட்டாள்...''

''அவளே அதைத் திருடியிருக்கலாம் என்று நீ நம்புகிறாயா?''

''அவள் திருடவில்லை. அதே பிணம், உயிருடன் வந்து அம்மாவிடம் அந்த மோதிரத்தைக் கொடுத்ததை நான் கண்ணாரப் பார்த்தேன். நான் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா?''

''நான் நம்புகிறேன். நானும் அந்த உண்மைக்குச் சாட்சியே. உண்மையை மட்டும் உரைப்பதாகவே காமஞ் செப்பும் இலக்கியகாரர்களுக்கு இந்த உண்மைகள் சிக்குப்படுவதில்லை...அவள் திருடவில்லை. அவள் உத்தமி என்பது என் கட்சி.''

www.padippakam.com



''அவள் திருடவில்லை என்றால், யாராவது திருடன் அதைத் திருடி,இந்தத் தேவடியாள் முண்டைக்குப் பரியமாகக் கொடுத்திருப்பான்' என்று ஊரார் கேலி செய்வதை என்னாலே தாங்க முடியவில்லை. அவள் மூஞ்சையிலே இனி விழிக்கவே மாட்டேன். உறவே தேவையில்லை.''

இந்தப் பிஞ்சு உள்ளத்திலே, இவ்வளவு கடினமான வைராக்கியம் எப்படிப் புகுந்தது? உடல் வாக்கில் எண்ணங்கள் எழுகின்றன என்பதைப் பொய்ப்பிக்கிறான்.

''குஞ்சுப் பாட்டி இருக்கிறாளே...''

''அவள்தான் அம்மாவைக்கூடக் கெடுத்தவளாம். அவள்கூட நாங்கள் இருக்கும்வரை உருப்பட ஏலாது என்று சொல்லிச் சொல்லி அம்மா கண்ணீர் சிந்துவாள்...''

இதைச் சொன்னவன், எதையோ, நிதானமாக நிறுத்து யோசிக்கிறான்.

''தாத்தா...'' அவனுடைய தயக்கம்.

''தாத்தா என்று தாராளமாக அழை. வயதுகள் அப்படி...''

''அம்மா- பாட்டி எல்லோருடைய பெயர்களும் எப்படித் தாத்தா உங்களுக்குத் தெரிகிறது?''

''ஞானம்...நான் திரிகாலத்தையும்அறியும் ஞானி''

என் வார்த்தைகள் அர்த்தம் காட்டும் சக்தியற்றவை.

அ—18

படிப்பகம்

www.padippakam.com



''என்னுடன் வா.''

''எனக்கு இந்த உலகத்தில் எவரும் இல்லை. நான் சாகப் போகிறேன்.''

''உன்னைக் காப்பாற்றுவதற்குத்தான் ஈசன் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார்.''

''ஈசன்?''

''நீ மாம்பழம் சாப்பிடுவதில்லையா?''

''சாப்பிடுவேனே...''

''நன்றாகப் பழுத்த மாம்பழத்தை வெட்டும் பொழுது, கொட்டையிலிருந்து வண்டு வெளியேறுவதைப் பார்த்திருக்கிறாயா?''

''பாத்திருக்கிறேன். அப்படி வண்டுள்ள பழந்தான் மிகச் சுவைக்கும் என்று அம்மா சொல்லுவாள்.''

''மாம்பழம் மாம்பழமாகவே இருக்க, அதனை கொட்டைக்குள் இருக்கும் அந்த வண்டிற்கு உணவளித்து வளர்த்தது யார்?''- விஞ்ஞான உண்மைகள் இவனுக்கு எங்கே விளங்கப் போகிறது என்ற நினைப்பில் அவசரமான ஒரு கயிறு திரிப்பு.

''யார்?''

''ஈசன்! அவர் நம் எல்லோருக்கும் மேலானவர். அம்மை அப்பனாக இருந்து நம்மை ஆட்கொண்டருளுபவர். அவருடன் இரண்டறக் கலப்பதுதான் இன்பம்-பேரின்பம்.''

விழிகளை மூடி, உள்ளத்தைத் தொடும் கனிவுக் குரலிலே பேசுகிறேன்.

''எனக்கு விளங்கவில்லை.''

www.padippakam.com



''உன் வயதும் பக்குவமும் போதாது. வளர வளர எல்லாம் தானாகவே விளங்கும்... அம்மையப்பன் என் உருவில் உன்னை அழைக்கின்றான். என் ஆசிரமம் உன் புகலிடம். என் முகத்தைப் பார். வா!''

என் மனோவசிய ஆகர்ஷிப்பிற்குள் சிறுவன் முற்றாக வளைகிறான்.

நீண்ட நேர மௌனம்.

குஞ்சிரிப்பு ஒன்று வதனத்தில் ஊர்கின்றது.

''நீ நல்ல தாத்தா!''

''புறப்படு.''

இருவரும் நடக்கின்றோம்.

நான் முன்னால்.
சிறுவன் பின்னால்.
அது வயசின் வரிசையும்.
என் பெரிய தடக்களில்,
தன் பிஞ்சுக் கால்களை
ஊண்டித் தெத்தித் தெத்தி நடக்கிறான்.
பிராமணோத்தமா!
உன் சாபம் பலிக்குமா?
கௌரி புத்ர!
உன் வாய் மணக்க அழைக்கும் எழுச்சி.

''கௌரி புத்ர!''

உன் பெயரே,
என் மந்திர
உச்சாடணம் ஆகியதா?

''தாத்தா, என் பெயர் ஆனந்தன். நீங்கள் யாரைக் கூப்பிடுகிறீர்கள்?''

படிப்பகம்

www.padippakam.com



''உன்னைத்தான். இன்று உன் புது வாழ்க்கை தொடங்குகின்றது. பழைய எண்ணங்களைக் துற! பூர்வாச்சிரமப் பெயரை மற! குப்பையிலே கிடந்த இந்தக் குன்றி மணி, குவலயம் போற்றும் அறிவு ஜோதியாக ஒளிரப் போகின்றது."

புத்ர, தோற்றது யார்?
நீயுமல்லன்;
நானுமல்லன்!
மனிதனுடைய இலட்சியங்கள்
தோற்பதில்லை.
அவன் சாகலாம்.
ஆனால், அவன்
தோற்றுப்போவது கிடையாது.
சிலருக்குச் சாவுதான்
வெற்றி நுழைவாயில். என்
ஆணவம்-வித்துவச் செருக்குத்
தோற்கமாட்டாது.
நான் தோற்கமாட்டேன்.
தோல்வியை
ஒப்புக்கொள்ளவும்
மாட்டேன்.

என் குருவின் சாபம்?
மீண்டும் மரணம்.
அதுவே வெற்றியா?
அது தோல்வியின்
தோல்வியே!

''தாத்தா! இது தான் ஆச்சிரமமா? நீங்கள் நுளம்பும் வளர்க்கின்றீர்களா?''

படிப்பகம்

www.padippakam.com



என் குருதியை உறிஞ்சும் ஒரு நுளம்பின் மீது என்பார்வை மேய்கின்றது. இந்த அற்ப ஐந்து-சின்னாட்களையே ஆயுட் காலமாகக் கொண்ட ஜீவன்— என்னைத் தத்துவ விசாரத்திற்குள் மாட்டுகிறது.

ஆண் துளம்பு, காம வசப்பட்டு, பெண் துளம்பைக் கூடி இன்ப ஸ்கலிதம் பெற்ற மறு கணமே மரித்து விடுகிறது. சிற்றின்ப நுகர்ச்சியின் முதல் எத்தனமே அதன் எமன். ஆனால் மனிதன்?

அநுபவிக்க, அநுபவிக்க மீண்டும் அதனையே நாடி, அதிலே திளைத்து வாழ விழைகின்றான்.

மனிதனும் துளம்பும் கலவி விவகாரத்திலே சமமானால்...பிரமச்சாரியத்தைச் சீலத்துடன் காப்பாற்றுவதையே ஆண் தன் பிரமாணமாக வரித்துக் கொள்ளுவான்.

வேடிக்கையான நினைவுகள்.

'மூடா!'

'யார், யாரை அழைப்பது?'

'உன்னைத் தான். கற்பனையில் வாழாதே!'

ஆலமரத்துக் குறுந்தாடியின் குரல்.

குருவின்
சாபமா?
அசுரக் கற்பிதங்கள்
மனத்தில் வலம் வருகின்றன.

www.padippakam.com



''என்ன தாத்தா! ஆழ்ந்த யோசனை? இப்படி யோசிப்பவர்கள் கோட்டையைப் பிடிப்பார்களாம்.''

பயல், வெகு சுட்டி-சூடிகை.

''என்னைத் தாத்தா என்றழைக்கக்கூடாது.''

''அப்படியாயின்?''

''குருதேவர் என்றழைக்க வேண்டும்''

''சரி.''

''எப்படி?''

''குருதேவா!''

''உன்னை நான் எப்படி அழைப்பேன் தெரியுமா?''

''ஆனந்...''

''ஆ...''

''இல்லை; கௌரி புத்ர...''

''சமர்த்து. நாளைக்குப் பாடம் தொடங்கும்.''

நாளைக்கு?

நாளைக்கும் சமுத்திரக் கரைக்குச் செல்வேன். அலைகள் கரையிலே பாற்குடங்கள் சரிந்து, நுங்கின் கண்களை விசிறி, கரையில் மோதிக் கொண்டே இருக்கும்.

நான்
ஒண்டியல்லன்.

பக்கத்தில் வழக்கம் போல என் சீடன் கௌரி புத்ர இருப்பான். அவனுடைய அவாக்களை என் தத்துவ விசாரத்தில் பொசுக்கி எடுப்பேன்.

www.padippakam.com



எனக்கு வாரிசு தேடும் அவா மாளாது.

குருசாபத்தை வெல்ல வேண்டுமென்ற வித்துவ ஆணவம் மடியாது.

நான் குரு...

'கௌரி புத்ர'கள் சீடர்கள்.

சாவு?

அவா?

அலைகள்?

நான் குரு என்ற ஆணவத்திலே பிரசவமான அவா தனி! என் வழி தனி...எனக்கு மட்டுமே புரிந்த வழி. அந்த வழியும் என் ஏக போகம். அந்த வழிக்கான மார்க்கத்தினை மட்டுமே வார்த்தைகளிலே பரிவர்த்தனை செய்கின்றேன். மற்றவர்கள், புரிந்த வரையிற் புரிந்து கொள்ளட்டும்...புரியாது போனாலும், ஏதோ விளங்கிக் கொண்டதாக நடிக்கட்டும். 'புரியவில்லை' என்று முகம் சுருங்குபவர்களையும்-சுருக்குபவர்களையும் பார்த்து, 'அஞ்ஞானிகள்... மூடர்கள்' என்று எள்ளி நகையாடுவேன். அது என் வழி. ஆணவ மார்க்க மூலமே அந்த வழியின் நுழைவாயிலை அடையலாம்.

அலைகளுக்கு

அழிவில்லை.

**ஆணவத்திற்கு- என் ஆணவத்திற்கு-அழிவில்லை. மரணம் சிருஷ்டிக்கான இன்னொரு ஆரம்பமே...**

★

www.padippakam.com

## எஸ். பொ. வின்

மணிவிழாவை முன்னிட்டு
இவ்வாண்டு-1992-
மூன்று நூல்கள்

### வீ

வகைக்கும் வண்ணத்திற்குமான
சிறுகதைகள்

### நனவிடை தோய்தல்

இளமை நினைவுகளூடே
மண்ணின் நேசிப்பும், கலாசார-
பாரம்பரியத்தின் விழுமையும்
பறைசாற்றும் புதிய இலக்கியம்

### அவா

நடைக்கும், சித்திர வகுப்புக்கும்,
எண்ணச் சிதறல்களுக்குமான
கதைக் கோவை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## எழுத்து நடை கைவந்த வல்லாளர் எஸ். பொ.



எஸ். பொன்னுத்துரையை அணுகும்போது புதிய பரம்பரைக்கு மட்டுமே உரிய பல கோணங்களைக் கொண்ட ஒரு பேர்வழியைச் சந்திக்கிறோம். பல நிறம் காட்டும் பல கோணங்கள். முந்திய பரம்பரையிலிருந்து இவரை ஒத்த ஒருவரைக் காணமுடியாது. புதிய பரம்பரையை முந்திய பரம்பரையிலிருந்து சிருஷ்டி இலக்கிய ரீதியில் வேறுபடுத்துவதற்குப் பெரும்பாலும் இவர் ஒருவரையே எடுத்துக்கொண்டால் போதும் ... 56க்குப் பின்வந்த பரம்பரையையும் அதன் சாதனைகளையும் நிரந்தரமாக நிலைத்து நிற்கச் செய்யக்கூடிய ஒரு சிலரில் இவர் முக்கியமானவர். தன் இலக்கியத் திறமையைப் பொறுத்தவரையில் தன்னை ஒரு மன்னனாகவே நினைத்துக்கொள்ளுகிறார். சமூகத்தில் அவர் ஒரு proletarian ஆக இருப்பினும் இலக்கியத்தில், சிருஷ்டித் திறனில், தான் ஒரு aristocrat என்ற எண்ணம் அவருக்கு. அது ஓரளவுக்கு நியாயமானதுங்கூட. தன் எழுத்து நடையைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவிதத்தில், கதைகளுக்கு ஏற்ற முறையில், மாற்றக்கூடியவர். மற்ற எந்த ஈழத்து எழுத்தாளனுக்கும் இல்லாத அந்தத் திறமை அவருக்குண்டு.

பொன்னுத்துரை புதிய பரம்பரைக்குரிய ஒரு பெரிய எழுத்தாளர்தான் ... ஒரு major எழுத்தாளர். நாடகம், உருவகக் கதை, நாவல், கட்டுரை, சிறுகதை போன்ற எல்லாத் துறைகளிலுமே தன் கைவரிசையைக் காட்டக்கூடியவர். சாதாரண வாழ்க்கை விசயங்களையும் அவற்றிலுள்ள உண்மைகளையும் பற்றிய அவருடைய அவதானம் மிகப் பிரமாதமானது. அப்படிப்பட்ட கதைகளை அவர் எழுதும்போதுதான் உண்மையாக அவர் தன் உச்சங்களைக் காட்டுகிறார். சாதாரண மக்களின் பேச்சு வழக்கைக் கையாள்வதிலும் அவருக்கு நிகர் அவராகவே இருக்கிறார். 'பங்கம்' போன்ற கதைகள் பிரதேசப் பேச்சு வழக்கைக் கையாள்வதிலும் சமகால சமூக ஓட்டங்களைக் கலையோடு படம் பிடித்து நிரந்தரமாக்கி விடுவதிலும் நம் ஈழத்து இலக்கிய உலகில் நிகரற்றவையாக நிற்கின்றன. பொன்னுத்துரை உலக இலக்கியத் தரத்தைத் தொடுவதற்கு ஓடிக் கொண்டிருக்கும் ஓர் எழுத்தாளன்.

'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி'யில் மு. தளையசிங்கம்

WRAPPER PRINTED AT: AR PRINTS, 375-8, ARCOT ROAD, MADRAS -24

படிப்பகம்